உ

கடவுள் துணை.

# பெண்மதிமாலை
# பெண்கல்வி
# பெண்மானம்.

இவை

நீதிநூல், சித்தாந்தசங்கிரஹம் முதலிய

கிரந்த கர்த்தாவாகிய

மாயூரந்தாலூக்கா டிஸ்டிரிகட் முன்சீப்


ச. வேதநாயகம் பிள்ளை,

அவர்களால்


இயற்றப்பட்டதை,


ஜீவகாருண்ய விலாசம் பிரஸ்தலைவர்,

கோ. செல்லப்ப முதலியார்,

அவர்களால்

திருவள்ளூர்,

ஆனந்தா பிரின்டிங் ஒர்க்ஸ் அச்சுயந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1926.

# விளம்பரம்.

இதனால் சகலமான கனதனவான்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்.—

அடியில்கண்ட விலாசத்திற்கு தமிழ், தெலுங்கு, கிரந்தம் முதலான பாஷைகளில் இதில் காணாத தங்களுக்கு வேண்டிய புஸ்தகங்களுக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| போகர் 7000 பாடல் சப்தகாண்டம் 1-க்கு | ... | 4 | 0 | 0 |
| ஷை கிளேஸ் | ... ... ... | 6 | 0 | 0 |
| நைடதம், மூலமும், உரையும் | ... ... | 4 | 0 | 0 |
| பட்டணத்தார்பாடல் ஞானார்த்ததீப உரை | ... | 2 | 0 | 0 |
| பாக்கெட்சோதிடம் | ... ... ... | 1 | 8 | 0 |
| அகஸ்தியர் பாலவாகடம் | ... ... ... | 0 | 12 | 0 |
| பச்சிலை மூலிகை அகராதி | ... ... ... | 0 | 12 | 0 |
| சோதிடபாலபாடம் | ... ... ... | 0 | 12 | 0 |
| தசாவதாரம் 10திரு உருவப்படத்துடன் டிராமா— 2 பாகம சேர்ந்து | ... ... ... | 0 | 8 | 0 |
| மார்க்கண்டேயர் புராணம் | ... ... | 1 | 8 | 0 |
| பெரிய மாட்டுவாகடம் | ... ... ... | 0 | 12 | 0 |
| ஷை அஸ்வ சாஸ்திரம் சேர்ந்து | ... ... | 1 | 8 | 0 |
| அகஸ்தியர் தேவாரத்திரட்டு | ... ... | 1 | 8 | 0 |
| சூடாமணி நிகண்டு (12 தொகுதி) | ... ... | 2 | 0 | 0 |
| ஷை 11, 12 நிகண்டு | ... ... ... | 0 | 12 | 0 |
| சோதிட பிரஞ்ஞான தீபிகை | ... ... | 2 | 0 | 0 |
| ஷை கிளேஸ் காலிகோ பைண்டு | ... ... | 3 | 0 | 0 |
| அனுபோகஜாதக ரகசியம் | ... ... | 0 | 12 | 0 |
| இராமயண கும்மி | .. ... ... | 0 | 5 | 0 |
| வைத்திய குரள் | ... ... ... | 0 | 10 | 0 |
| வைத்திய கைமுறை | ... ... ... | 0 | 12 | 0 |
| சோதிட நவக்கிரகமாலை | ... ... ... | 0 | 12 | 0 |
| ஜாதக தெளுவானந்தமணி | ... ... | 1 | 0 | 0 |
| திருவள்ளுவர் நாயனார் வைத்திய நவரத்தின சிந்தாமணி 800 பாடல் | ... ... | 1 | 4 | 0 |
| பாலிகா பூஷணமாதர் நீதி | ... ... | 0 | 6 | 0 |

எமது விலாசம் ;—

கொ. செல்லப்ப முதலியார்,

நெ. 19 முத்துகிருஷ்ணன் வீதி,

மின்ட்பில்டிங் போஸ்டு சென்னை.

# பொருள் அட்டவணை.

## பெண்மதி மாலை.


| பெயர். | | பக்கம். |
|---|---|---|
| தெய்வபக்தி | ... | 1 |
| குருவணக்கம் | ... | 2 |
| மாதாபிதா வணக்கம் | ... | 3 |
| புத்தி | ... | 3 |
| புருஷபத்தி | ... | 6 |
| கற்பு | ... | 7 |
| பாலரைவளர்த்தல் | .... | 8 |
| பரோபகாரம் | .... | ௸ |
| ஞானம் | .... | 8 |
| பாவம் | .... | 11 |
| புண்ணியம் | ... | ௸ |
| பெண்பார்க்கத்தூதனுப்பல் | .... | 12 |
| தூதன்பெண்பார்த்து வந்துசொல்லல் | ... | 14 |
| தங்களுக்குப் படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல் | ... | 18 |


## பெண்கல்வி.


| | | |
|---|---|---|
| பெண்களுக்குக்கல்வி ஆவசியகம் | ... | 23 |
| படித்தவர்களுக்கும் படியாதவர்களுக்கும் உள்ள பேதம் | ... | 24 |
| கல்விபெண்களைக் கெடுக்காது | .... | 25 |
| கடவுளை உணரக்கல்விவேண்டும் | ... | 26 |
| கல்லாதஸ்திரீகள் பிரசங்கம் கேட்கும்விதம் | ... | 28 |
| பூர்விகசாம்பிரதாயநிஷேதம் | ... | 29 |
| முற்காலத்தில் பெண்கள் படித்தார்கள் | ... | ௸ |

| பெயர். | பக்கம். |
|---|---|
| பெண்கள் படிக்கலாமென்பதற்குப் பூர்வீக கிரந்தங்களிலுள்ள ஆதாரங்கள் ... | 30 |
| கல்வி அழகே அழகு ... | 31 |
| கல்வியேகண் ... | ஷை |
| பெண்கள்கற்றால் புருஷருக்குதவி ... | 32 |
| பெண்கள்கற்றால் பிள்ளைகட்குதவி ... | 33 |
| கல்வியே கற்புக்குக் காவல் ... | 35 |
| ஸ்திரீகள் புருஷருக்குக் கீழ்ப்பட்டவர்கள் ... | 36 |
| குணமில்லாதவனுடைய ஞானம் அஞ்ஞானமே ... | 37 |
| படியாப்பெண்கள் பாலருக்குச்சத்துரு ... | ஷை |
| ஒருமூடஸ்திரீ புத்தகங்களைககிழித்தல் ... | 38 |
| ஞானதேகத்தைப்போலவே ஸ்தூலதேகத்தை வளர்ப்பதற்கும் கல்விவேண்டும் ... | 39 |
| வித்தியாபூஷணம் விசேஷம் ... | 40 |
| செல்லப்பொருளிலும் கல்விப்பொருள்சிறந்தது .... | 41 |
| வித்வான்களுடைய பெருமை ... | ஷை |
| கல்வியின் பெருமை ... | 42 |
| படித்தவனுக்கு உலகமேபுத்தகம் ... | ஷை |
| கிரந்தகாலக்ஷேபம் ... | 43 |
| பயனில்லாப்பாடல்கள் ... | 44 |
| பாலபருவமே படிப்புக்குத்தகுதி ... | 45 |
| ஒரு புண்யவதியின் சரித்திரம் .... | 47 |
| புண்ணியவதிக்குப் புருஷனைபாக்கியம் .... | 50 |
| புண்ணியவதியே புவனோபகாரி ... | 52 |
| ஒரு கெட்டவனுடைய துர்க்குணங்கள் ... | 54 |
| தெய்வஸ்வரூபம் ... | 58 |
| கடவுளுடைய மகிமைப்பிரதாபம் ... | 56, 57 |
| பூதபௌதிகங்களெல்லாம மனுஷருக்கு ஊழியஞ்செய்கின்றன ... | 58 |
| தெய்வசகாயம் ... | 59 |
| உலக முழுவதும் ஒரு குடும்பம் ... | 61 |
| சகலமனுஷர்களும் ஸமானஸ்தர்கள் ... | 62 |

| பெயர். | | பக்கம். |
|---|---|---|
| புண்ணியோபதேசம் | .... | 63 |
| சிஷ்டதுஷ்டதாரதம்மியம் | ... | 64 |
| உத்தமகுணமே உலகரஞ்சிதம் | ... | 65 |
| துற்குணமே யாவற்கும்வெறுப்பு | ... | ஷை |
| பாவம்செல்வமேதகஷ்டம் | ... | ஷை |
| புண்ணியம்செல்வமே எளிது | ... | 66 |
| மனோசாக்ஷி | .... | 67 |
| நாம்செய்வதையே உலகம் நமக்குச் செய்கின்றது. | | ஷை |
| துஷ்டர்களுக்கு அவர்களுடைய துர்க்குணமே தண்டனை | ... | 68, 69 |
| புண்ணியவான்களுக்குப் புண்ணியமேசம்மானம்.. | | 70 |
| உலகபாக்கியமேதிரணம் | ... | 70 |
| கள்ளஞானம் | ... | 68 |
| சரீரநிலையாமை | ... | 72 |
| காலத்தின் ஓட்டம் | ... | ஷை |
| பிரபஞ்சநாடகம் | ... | 73 |
| பாவமே நமக்குபகை | ... | 74 |
| சகலமும் கடவுளுக்குப் பிரத்தியக்ஷம் | ... | ஷை |
| பதிவிரதா தர்மம் | ... | 75 |
| கற்புநெறி | ... | 77 |
| பதிவிரதாபங்கம் | .... | 79 |
| ஜீவகாருண்ணியம் | .... | 81 |
| தன்னைப்போற்பிறரைநேசித்தல் | ... | 82 |
| ஏழைகள் படுங்கஷ்டங்கள் | ... | 83 |
| உலகமேதர்மசரித்திரம் | ... | 85 |
| பரோபகாரமில்லாத ஜென்மமேபாழ் | .... | 87 |
| பரோபகாரம் பரமனுக்குப்பிரியம் | ... | ஷை |
| பாத்திரமரிந்து பிக்ஷையிடவேண்டும் | ... | ஷை |
| உள்ளன்போடு உபகரித்தல் | ... | 89 |
| தன்னுயிர்போல் மன்னுயிரை ஓப்பாத அரசர்கள் | | 90 |
| சமயத்வேஷம் | ... | 91 |
| பரஸ்நேகமில்லாத பட்டப்பகற் கள்ளர்கள் | ... | 92 |

| பெயர். | | பக்கம். |
|---|---|---|
| ஜீவஜெந்துக்களின் அபிமானம் | .... | 93 |
| ஜீவஹிம்சை | ... | 95 |
| மாம்ஸபக்ஷண விலக்கு | ... | 97 |
| போதகர்களுக்குப் போதகம் | ... | 98 |
| அநுஷ்டானமில்லாத உபதேசம் | ... | ஷை |
| பெண்களுடைய பரிதாப நிலைமை | ... | 101 |
| மாமியாருடைய நிஷ்டூரம் | ... | ஷை |
| புருஷனும்பெண்சாதியும் ஒருதேகம் | .... | 102 |
| சாஸ்திரமும் லோகாநுஷ்டானமும் | ... | 103 |
| தேவர்களும் ரிஷிகள் முதலானவர்களும் ஸ்திரீகளை நடத்தும் விதம் | ... | 104 |
| பெண்கள்செய்யும் நன்மைகள் | ... | 105 |
| பெண்கள்படுங் கஷ்டங்கள் | ... | ஷை |
| ஸ்திரீகளுடைய கௌரவம் | ... | 107 |
| பரஸ்திரீகமனமும் தாசிகமனமும் | ... | ஷை |
| பெண்சாதியின் அருமைபெருமை | ... | 109 |
| புருஷர்கள் நடக்கவேண்டியநடை | ... | 111 |
| புருஷன் ஸ்திரீயை நடத்தவேண்டியவிதம் | ... | 113 |
| ஸ்திரீதனம் | ... | 115 |
| விதந்துக்களுடைய நிர்ப்பாக்கியம் | ... | 117 |
| மாம்சவிக்கிரயம் | ... | 119 |
| கன்னியாசுல்கமேகஷ்டம் | ... | 121 |
| அதிபால்லியவிவாஹம் | ... | 123 |
| நூன்முடிவு | .... | ஷை |

கடவுள் துணை.

# பெண்மதிமாலை.

காப்பு.

விண்மதி மாலை விலக்கல்போன் மெய்தோன்றப்
பெண்மதி மாலையான் பேசவே—தண்மதிசூழ்
அண்டபகி ரண்டமும் மகண்டமுமே யுண்டெனமெய்
கண்டவரி ரண்டுகழல் காப்பு.

இராகம் - நாதநாமக்கிரியை - மிசிரதாளம்.

## கண்ணிகள்.

1 மதியிது, மகியிது, பெண்ணே-புண்ணிய
வதியல்ல வோநல்ல மகராசி? கண்ணே (மதி)

## தெய்வபக்தி.

2 நித்தியங் கடவுளை வாழ்த்து-பய
பத்தி யுடனேநீ பணிந்துன்னைத்தாழ்த்து (மதி)

3 தூயதே வாலயம் நாடு-பிள்ளை
தாயைத் தேடுவதுபோற் சாமியைத்தேடு (மதி)

4 கர்த்தாவை மறக்குசல் தாழ்வு நாளைச்
செத்தால் தெரியுமே செட்டியார்வாழ்வு (மதி)

5 எண்ண வொண்ணுவுப சாரம்-செய்த
புண்ணிய மூர்த்திக்கு புரிநமஸ்காரம் (மதி)

6 உலகெல்லாம் பட்டமாண் டாலும்-தெய்வ
பலமில்லார்க்கில்லையே பாக்கியமேக்காலும் (மதி)

7 தலைமேலே மலைவிழுந் தாலும்-தெய்வ
பலமுடையார்க்குண்டோ பயமொருக்காலும் (மதி)

8 உடலுயிர் பலபல வுடைமை-எல்லாம்
திடமுட னீந்தோனைச் சேவித்தல் கடமை (மதி)

9 பரவச மாகவுள் ளுருகு-ஐயன்
திருவருள் நினைந்துநீ-தினங் கண்ணீர்பெருகு (மதி)

10 சூதான பாயப் பிரபஞ்சம்-இதில்
நாத னல்லாது நமக்குண்டோ தஞ்சம் (மதி)

11 முன்னம் பொருளெல்லாந் தந்து-பின்பு
தன்னையுந் தந்தவனை தாள்தொழு முந்து (மதி)

12 மாதா, பிதா, குரு தெய்வம்-ஆன
நாதனார் கைவிடில் நாமென்ன செய்யும் (மதி)

13 துக்கசாகரஞ் சமுசாரம்-கரைப்
பக்கமே றிடப்பரன் பாதமா தாரம் (மதி)

14 நீரை விட்டாற்கெடும் மீனை-ஈச
னாரைவிட்டால் நமக் கார்துணை மானே (மதி)

15 நாஞ்செய்வ தெல்லாம் விகாரம்-கர்த்த
தாஞ்செய்வ தெல்லாம் தகுமுபகாரம் (மதி)

16 தேவனை நினையாத வுள்ளம்-பெரும்
பாவமும் பழிகளும் படிந்திடும் பள்ளம் (மதி)

17 ஈசனைப் போற்றாத வாயே-ஒரு
காசுக் குதவாக் கசப்பெட்டிக்காயே (மதி)

18 சத்திய மார்க்கத்தைக் கூடு-தெய்வ
பத்தியே பாக்கியம பந்தபமபோடு ( ிதி)

19 ஜெபமின்றி நீபடுக்காதே-நாளும்
ஜெபமின்றி யொருவேலை நீதொடுக்காதே (மதி)

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்ல வேறல்ல மகராசி கண்ணே. }

குருவணக்கம்.

20 குருமாரை வணங்கிக்கொண் டாடு-அவர்
திருவாக்குக்கெதிர்வாக இல்லாமலேநாடு (மதி)

21 நித்தமும் குருவின்க டாக்ஷம்-பெற்ற
சுத்தருக் கல்லவோ சூட்சதினமோக்ஷம (மதி)

22 ஞான குருவுப தேசம்-இல்லா
ஈனருக் கில்லையே யென்றும் பிரகாசம் (மதி)

23 பூலோக வாழ்வெல்லாம் நீங்கி-வந்த
மேலோரைக் கைதொழ வேண்டும் நான் சாக்கி (மதி)

24 அற்பருக் கூழியர் நாமே-ஆதி
தற்பரனாழியர் சாமிகள் தாமே.

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்ல வேறல்ல மகராசி, கண்ணே. }

## மாதா, பிதா, வணக்கம்.

25 மாதா, பிதாவை வணங்கு-நாளும்
ஆதாரமாகவே யவர்சொல்லுக்கிணங்கு (மதி)

26 தந்தை தாய் சாபம் பொல்லாது அவர்
சிந்தை நொந்தால் மக்கள் செல்வம் நில்லாது (மதி)

27 மாதாபிதாவுக்குத் துரோகம்-செய்யும்
பாதகரை சுற்றும் பாவமநேகம் (மதி)

28 பெற்றவர் நேசத்தைத் தேடு-அவர்
குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கொண்டாடு (மதி)

29 தாய்தந்தைக்குதவாத பிள்ளை-தன
தாயுசும் வாழ்வு பாடியோடே கொள்ளை (மதி)

30 கட்டியுனை வளர்க்க நாமே-முன்பு
பட்டபாடுகள் சொல்ல பாரதமாமே (மதி)

31 உள்ள தாய் தந்தைக்குத் தீங்கு-செய்யும்
பிள்ளையைத் தன்பிள்ளை யேபழிவாங்கும் (மதி)

32 கடலைப்போல் மாதா சகாயம்-அதற்
குடல் செருப்பாத் தைத்துப் போடுதல் ஞாயம்.

{ மதியிது, மதியிது பெண்ணே - புண்ணிய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே. }

## புத்தி.

33 அடுக்குப்பானையை யுருட்டாதே-வெகு
துடுக்காகப் பலகாரங் களை சுருட்டாதே (மதி)

34 தங்கையைத் தொடையிற்கிள் ளாதே-தம்பி
பங்குப்பணியாரத்தைப் பறித்துக்கொள்ளாதே (மதி)

35 உன்னைப்போற் பிறரையும் நேசி-தினம்
பொன்னே ஞானபுஸ் தகங்களை வாசி (மதி)

36 கற்றவனை துரைசாணி கல்லா
மற்றவளே சுத்த மடையச்சாம்பிராணி (மதி)

37 தாழ்வோரை நீ சிறியாதே-மிக
வாழ்வோரைக்கண்டுநீ வயிறெரியாதே (மதி)

38 நாட்டி லெவரையும் வையாதே-உந்தன்
பாட்டிசொன்னலுநீ பாவஞ்செய்யாதே (மதி)

39 பூச்சியைப் பிடித்துக் கொல்லாதே-உநதன்
ஆச்சிசொன்னாலுநீ யபத்தஞ்சொல்லாதே (மதி)

40 பிக்ஷயிடாம லுண்ணாதே-மிருகம்
பக்ஷிக்குமே துன்பம் பண்ணவொண்ணாதே (மதி)

41 இஷ்டமாய் நல்லோரைக் கூடு-பொல்லாத்
துஷ்டரைக்கண்டால்நீ தூரத்திலோடு (மதி)

42 ஊரார் பொருளைத் தொடாதே-நாலு
பேரறியும்படி பிக்ஷைபிடாதே (மதி)

43 நித்தமும் நீரிலே முழுகு-வீடு
சுத்தமாகும்படி தோகையே மெழுகு (மதி)

44 புழுநிறை யூத்தைச் சரீரம்-இதைக்
கழுவாவிட்டால் நாறும் காதவிஸ்தாரம் (மதி)

45 அழுக்கு வஸ்திரங்கள் கட்டாதே-உடல்
கொழுக்க வுண்ணுந்தீனி குடலிலொட்டாதே (மதி)

46 சூதும் வாதும் படியாதே-நாளும்
தீதுசெய்தால் தரித் திரம் விடியாதே (மதி)

47 கோட்சொல்லிக் குடி கெடுக்காதே-தப்புச்
சாட்சி சொல்லுங்குடி தலை யெடுக்காதே (மதி)

48 கோளும் புறணியுங் கேளாதே-எந்த
நாளும் புறணிபேச நாக்கு நீளாதே (மதி)

49 வந்ததுன்பத்தி லழாதே-மிகச்
சந்தோஷம் வந்தாலுந் தலைகீழ்விழாதே (மதி)

50 வேலைக்கு நீ சிணுக்காதே-ஒரு
மூலைக்குட் புகுந்துநீ முணு முணுக்காதே (மதி)

51 வேலைசெய்வோரை வாட்டாதே-தினம்
ஆலைக்கரும்புபோ லவரையாட்டாதே (மதி)

52 நெடுநேரம் படுத்துத் தூங்காதே-தூங்கும்
விடியாமூஞ்சுகளுக்கு விசனம் நீங்காதே (மதி)

53 ஆரையுஞ் சீறி யேசாதே-வேலைக்
காரர்களுடனே சக் கந்தம்பேசாதே (மதி)

54 புருஷர்கள் பார்க்க நில்லாதே-கோடி
வருஷம்வாழ் வதுபோல்தன் மார்க்கங்கல்லாதே (மதி)

55 தங்கை, அக்காள், அண்ணன், தம்பி—மேலே
சங்கையு மன்புள் ளவன்தங்கக்கம்பி (மதி)

56 சற்றுங் கூலியைக் குறைக்காதே-செய்த
குற்றத்தைப் பொய்சொல்லி நீமறைக்காதே (மதி)

57 பண்டங்களை யழிக் காதே-சும்மா
கண்டபடிசேலை களைக்கிழிக்காதே (மதி)

58 உன்னைநீ புகழ்ந்து கொள்ளாதே-பிரர்
நன்னயப் புகழ்ச்சியை நம்பித்துள்ளாதே (மதி)

59 குஞ்சின செலவு செய்யாதே-செய்து
கஞ்சிக்குக்காற்றாகப் பறந்துநையாதே (மதி)

60 மெய்சொல்ல மேன்மையுண் டாமே-தினம்
பொய்சொல்லும் வாய்க்குப் புசிப்பற்றுப்போமே (மதி)

61 நகைதுணியிரவல் வாங்காதே வாங்கில்
சகலருமேசுவர் தாழ்வுநீங்காதே (மதி)

62 மங்களமாகநாள் போக்கு-கைக்குக்
கங்கணம் போடவே காய்கறியாக்கு (மதி)

63 வீட்டுக்கணக்கெலா மெழுது-நல்ல
ஏட்டுக்கணக்கருக் கில்லையே பழுது (மதி)

64 மட்டின்றிக் கடன் வாகால்தீது-ஐயோ
குட்டிச்சுவரில் முட்ட வெள்ளெழுத்தேது (மதி)

65 கடன்களைத் தீர்க்கத் தப்பாதே-கண்ட
இடமெல்லா முன்குறை யெடுத்துச்செப்பாதே (மதி)

66 வெள்ளமா யாசைப் படாதே-கையில்
உள்ளதுபோது முறிதிவிடாதே (மதி)

67 எல்லாங் கை கூடிவராதே-நமக்
கில்லாவாழ்க்கைக்கண் ணாடிதராதே (மதி)

68 எவராலுமேயிசை யூரதே-செய்த
அவனசையாம லணுவசையாதே (மதி)

69 ஈன ராலும் காயாதே-சிறு
பூனைபோலிருந்துநீ புலிபோற் பாயாதே (மதி)

70 கண்டெடுத்த பொருளை நீயே-சொந்தப்
பண்டங்காரரைத்தேடிப் பரிந்தளிப்பாயே (மதி)

71 கள்வர்கைப் பொருளைவாங் காதே-வாங்கும்
உளவரில்லா விட்டாற் களவேது மாதே (மதி)

72 அநியாயவட்டி வாங்காதே-வாங்கில்
இனியகைம் முதலும்போம் ஏக்கம் நீங்காதே (மதி)

73 அளவு நிறைவைக் குறைக்காதே-ஒரு
சுளகாலே யானையை நீமறைக்காதே (மதி)

74 அகவிலைதன்னை யேற்றாதே-நாளும்
தகலேசெல்லாப்பணந் தனைமாற்றாதே (மதி)

75 புண்ணியஞ்செய்யக் கூசாதே-இந்த
மண்ணிலிருந்துவாழக் கோரம் பேசாதே (மதி)

76 நடக்குஞ் சந்திராதித்தர் மாதே-தெற்கு
வடக்காகுலுநீ வார்த்தைதப்பாதே (மதி)

77 ஒன்றுக்குமஞ்சி நில்லாதே-பாலைக்
கன்றுக் கில்லாமற் கறக்கச்சொல்லாதே (மதி)

78 தீயர் சொல்லைப்பொருப் பாயே எட்டிக்
காயென்றுசொன்னாற் கசக்குமோ வாயே (மதி)

79 தீயென்று சொன்னால்வாய் வேமோ-கெடு
வாயென் றொருவர் சொலலில் வாழ்வெல்லாம்போமோ (மதி)

80 புகழு மிகழும் வாய்க் கற்று-இதில்
மகிழ்வும் வருத்தமும் கொள்ளாமல் மாற்று (மதி)

81 சதிக்காரர் வலையிற் படாதே-கல்வி
மதியில்லாதவனுக்கு வாழ்க்கைப்படாதே (மதி)

82 குணவா னெளியனு னாலும்-அவன்
மணவாளனாவது மாசெல்வம்போலும (மதி)

83 புகழுடையோனை விடாதே-துஷ்டன்
மகராஜ னானாலு மாலைவிடாதே (மதி)

84 அடக்கம் பொறுமைதயை சாந்தம்-என
நடக்கும் நற்குணங்களே நாரிக்குப்பாந்தம்.

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்லவோநல்ல மகராசி கண்ணே. }

## புருஷபக்தி.

85 புருஷன்மே லொழியாத பத்தி-உள்ள
தருமதேவதைக்கல்லோ சகலமுஞ்சித்தி (மதி)

86 கர்த்தாவே முதல்தெய்வம் மானே-பின்பு
பர்த்தாவல் லானுண்டோ பாக்கியம் தானே (மதி)

87 துரைமக ளானாலும் பாரி-கொண்ட
உரியவ னுக்கவ ளூழியக்காரி (மதி)

88 காதமன் பக்ஷமே ஏதுமில்லாதவ — லக்ஷணம்-குணம் ளெட்டிவிருட்சம்; (மதி)

89 ஆவித்துணைவன்மேற் பாவியைக கண்ணுலே — கோபம் செய்யும் பார்த்தாலும் பாபம் (மதி)

90 புருஷன்நல் வார்த்தை எருதுபோல் நீசண்டைக் — தட்டாதே-முட்டும் கிடுப்புகட்டாதே (மதி)

91 தேகமுஞ் சீவனும் மாகணவ னுடன் — போலே—கொண்ட வாழ்வது மேலே (மதி)

92 செய்த நன்றி வைதாலு படித்தாலும் — மறவாதே-பர்த்தா வாய்திறவாதே (மதி)

93 கணவனுன் மேற்பகை குணமாகப் பேசிக் — மூர்க்கம்-செய்யில் குலாவுதல் மார்க்கம் (மதி)

94 அருந்துணை வன்றனைத் திருந்தும் படி நினை — தூண்டு-அவன் தேவனை வேண்டு (மதி)

95 மாமிமேல் வன்மம் சாமிக்கு மாமிக்குஞ் — காட்டாதே-உந்தன் சண்டை மூட்டாதே (மதி)

96 தலைவ னெஞ்சைக் தலைமேலே நீமிளா — கரைக்காதே-மாமி காயரைககாதே (மதி)

97 நாத்திமேற்கக்ஷி க்ஷாத்திர மாயவள் — கட்டாதே-வெகு தலையை வெட்டாதே (மதி)

98 தலையணை மந்திரங் கலகக்காரி களுக்குக் — தீது-கெட்ட கஷ்டம்போகாது (மதி)

99 வீட்டுக்கதிபதி நாட்டுக கதிபதியுன் — நீயே-வெளி ஞயகன் சேரே.

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியலல வேளநல்ல மகராசி கண்ணே. }

---

## கற்பு.

100 கற்பு நிலையேசிங் தபயினு பழுத — காரம்-அது சவ அலங்காரம (மதி)

101 சீவன்போற் கற்பைக் சாவு தலைமேலே — காப்பாற்று-யார்க்கும் சாமியைப்போற்று (மதி)

102 அரைக்காசுக் கழிந்திட்ட மரக்காறபொன் கொடுத்தாலும் வருமோ — கற்பு-நூறு நீ-செடபு (மதி)

103 அந்நிய னழக ஞானும்-கற்பின்
மின்னிடை யார்க்கவன் விஷநாகம் போலும் (மதி)

104 கணவன் குரூபியா னானும்-கொண்ட
மணமக ளுக்கவன் மன்மதன் போலும் (மதி)

105 பேரைக்கெடுப்பவள் பெண்ணோ-இந்த
ஊர்வாய் மூட வுலைமூடியுண்டோ (மதி)

106 சரசங்கள் பேசிக் கெடாதே-புவி
அரசனை நம்பிப்புரு ஷனைக் கைவிடாதே (மதி)

107 வாசற் படிகட வாதே-பிறர்
ஆசைப்பட வொலி வாய் நடவாதே (மதி)

108 சிற்றின்பந் தானரை நொடியே-வரும்
குற்றமும் பழிகளுங் கோடிபொற்கொடியே.

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே. }

பாலரைவளர்த்தல்.

109 மக்களுக்கோரம் பண்ணாதே-உந்தன்
சககளத்திபிள்ளைக்குச் சதிகளெண்ணாதே (மதி)

110 பலபிள்ளை பெற்றென்ன பாக்கியம்-நன்மை
இலையெனில், மலடியா யிருப்பதுயோக்கியம் (மதி)

111 புத்திரர்க்கன்புபா ராட்டி-தெய்வ
பத்தியும் புத்தியும் பாலைப்போலூட்டு (மதி)

112 இளந்தையி லேகல்வி போதி-மிக
வளர்ந்தபின் னழுதாலும் வருமோ நந்நீதி (மதி)

113 இளக்காரம் பாலற்குத் தீமை-பின்பு
வளர்த்த கடாமார்பிற் பாய்ந்ததொப்பாமே!

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்லவோநல்ல மகராசி கண்ணே. }

பரோபகாரம்.

114 ஆருக்குஞ் செய்யுமுப காரம்-பல
ஊருக்கும்நல்லவட் குண்டோ விசாரம் (மதி)

115 ஈயும் பிச்சையைத் தடுக்காதே-உன்னைப்
பேயன்றொருவர் சொல்லப் பேரெடுக்காதே (மதி)

116 துக்கமுள்ளோரைநீ தேற்று-வரும்
அக்குருடர் மூட வர் பசியாற்று (மதி)
117 தாய்போ லெளியவரைத் தாங்கு வெறும்
வாயுற வும்மன வைரமும் நீக்கும் (மதி)
118 பிணியுடையோரைநீ தேடு-கட்டத்
துணியுடன்காய் கறி சோறு, நீபோடு (மதி)
119 பாத்திர மறிந்திடு பிட்சை - தப்புத்
தோத்திரஞ்செய்வோரைத் துரத்துதல்சிட்சை (மதி)
120 புத்தியில் லார்க்குநீ போதி-தெய்வ
பத்தியில் லார்க்குநீ படிப்பித்தால் நீதி (மதி)
121 நன்மையி னற்குறை யேது-பெருந்
தின்மைசெய் தோர்க்கும்நீ செய்யாதேதீது (மதி)
122 பூமியி லேழைபோல் வேஷம்-கொண்டு
சாமியே வருவானீ தள்ளுதல்தோஷம் (மதி)
123 நகர மோக்ஷங்கொண்டு வருவார்-தீனர்
தருவோர்கொன்றீவார் தாரர்க்கொன்று தருவார் (மதி)
124 பல்வகையேழைகள் நிமித்தம்-அத்தன்
செல்வரைப்படைத்தனன் ஜெகத்தில் பிரசித்தம் (மதி)
125 யாசகர்களையும் சரியே-ஸ்வர்க்க
வாசலில் தொண்டமானுந் தோட்டியுஞ்சரியே.

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்ல வோநலல மகராசி ? கண்ணே. }

---

## ஞானம்.

126 பூதல வாழ்வெல்லாம் பொய்யே-இங்கே
ஏதுமில்லாம லிறப்பது மெய்யே (மதி)
127 எத்தனைபேர்புவி யாண்டார்-முன்னம்
ஏதுமில்லாம லிறப்பது மெய்யே (மதி)
128 பாட்டனார் பூட்டனா ரெங்கே-போக
மாட்டோமென்றாலு மரணம் நம்பங்கே (மதி)
129 பூமியே நாடக சாலை-இதில்
சாமிதந்தாரே சகலர்க்கும் வேலை (மதி)
130 வாவென்று தேவன்கை யோலை-வந்தால்
கோவென் றழுதாலுங் கூடுமோமேலை (மதி)
131 ஆவியென்பதொரு மூச்சு-இது
மேவியொடுங்கினால் வேறென்ன பேச்சு (மதி)

132 எட்டிப்போ, போ வென்னும் வீடு-கையைக்
கொட்டிவா, வா, வென்று கூப்பிடுங்காடு (மதி)

133 பாழுடல் மாமிச மூட்டை-இது
வீழப் பலஜெந்து வுக்குநல்வேட்டை (மதி)

134 கும்பி யுடல்புகை போட்டம்-இதை
நம்பியிருக்குமே நாய்நரிக் கூட்டம (மதி)

135 தங்கமும் வெள்ளியு மண்ணே-என்றும்
மங்காத மோக்ஷத்தின் வாழ்வைநீயெண்ணே (மதி)

136 தனமிருந்தா லிற வேரமோ ?-தூங்கும்
கனவிற் கண்டவாழைக் காய்கறிக்காமோ ? (மதி)

137 இலைபோலவயிறொரு சாணே-பொருள்
மலைமலையாய்சேர்த்து வைக்குதல் வீணே (மதி)

138 நவமணிபலவகைக் கல்லே-இந்தப்
புவன சுகங்களெல் லாஞ்சிறு புல்லே (மதி)

139 ஆஸ்தியுன்கூட வராதே-கட்டிக்
காத்திருந்தாலுமுன் கையிலிராதே (மதி)

140 உண்பது காற்படி சோறு-பூதம்
எண்பது போல்வேலியேனிரு நூறு (மதி)

141 இருக்கு மிடமுழந் தானே-நாலு
தெருக்க ளினும்பலவீடுகளேனோ? (மதி)

142 பிழைப்புக் குரியபிண்டத் துண்டம்-அன்றிப்
பழிப்புக்கிடமல்லவோ பலபலபண்டம் (மதி)

143 நகையில்லாக் காது கேளாதோ? பல
வகைபட்டில்லாவுடல் வளர்ந்துநீவாதோ (மதி)

144 குச்சு வீட்டின்பங் காட்டாதோ? பெரு
மச்சுவீட்டிலேதுன்பம் வரமாட்டாதோ ? (மதி)

145 பணங்கண்டால் நமனஞ்சு வானோ? நல்ல
குணமாகப்பணக்காரருடன் கொஞ்சுவானோ? (ம[illegible]

146 தோலுமெலும்புஞ் சரீரம் ? இதை
மேலெமினுக்குவ தாலென்ன சாரம் ([illegible]

147 செட்டி தட்டான் செக்கானுலே-வந்தமாழி
ஒட்டமுகன்றி உள்ளது வெறுந்தோலே.

{ மதியிது, மதியிது, பெண்ணே - புண்ணிய
வதியல்ல வோநல்ல மகராசி கண்ணே. }

148 மாற்றுவாய் பாவத்தை நீயே-நல்ல
காற்றுள்ள போதேநீ தூற்றிக்கொள்வாயே (மதி)

149 அகங்காரம் மோகம் உலோபம்-பகை
மிகுங்கோபம் பெருண்டி சோம்புதல்பாபம் (மதி)

150 மண்ணிலுண்டாங்கொல்லு றஞ்சி-நெஞ்சில்
எண்ணிடக்கொல்வது பாவமென் நஞ்சு (மதி)

151 எவரையும் பாவம் விடாதே-நிலம்
அவரை விதைக்கத்துவரை கோடாதே (மதி)

152 பாவஞ்செய்ய விரும்பில் அம்மா-ஆதி
தேவனருளொழிந்தியங்குவாய் சும்மா (மதி)

153 தீதுசெய்தால் நன்மை தருமோ-வேம்பை
நீதான் விதைக்கக் கரும்பு வருமே (மதி)

154 தையலே யுலகங்கண் ணாடி-நாம்
செய்வதை யேயது செய்யுமே தேடி (மதி)

155 வைவாரை வையுமே யுலகம்-இன்மை
செய்வாருக்கேயது செய்யுமேகலகம் (மதி)

156 தன்வினை தனைச்சுடும் மயிலே பாம்பை
முன்வளர்த் தவர்க்கமு தீயுமோ குயிலே (மதி)

157 இங்குமே துஷ்டனிக் கிரகம்-மாவே
அங்குமே பாவத்துக் கவியாத நரகம்.

{ மதியிது, மதியிது, பெண்ணே புண்ணிய }
{ வதியல்லவோ நல்ல மகராசி? கண்ணே. }

---

## புண்ணியம்.

158 " புண்ணியஞ் செய்யலாம் நாளை-என
எண்ணி யிராதே; இதுநல்ல வேளை (மதி)

159 புண்ணிய பாவ மல்லாது-இந்த
மண்ணில் நமயிடமொன்றும் வந்துநில்லாது (மதி)

160 நன்மையி லேசலஞ் சாதி-செய்யுஞ்
தின்மைகளை நீ தினம்பரி சோதி (மதி)

161 தர்மத்தைப் பாவம் வெல்லாதே-துஷ்டர்
கர்மத்துக் கஞ்சிக் கலங்கி நில்லாதே (மதி)

162 அகந்தைகள் செய்யப் படாதே-பிறர்
புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் புண்ணியம் விடாதே (மதி)

163 நற்குருவேமனே சாட்சி-அதன்
சொற்படி நடந்தாற் சுகமிலை யாட்சி (மதி)

164 மேலழ கேகுண வழகு-வெறுந்
தோலழகாலென்ன சுகுணத்திற்பழது (மதி)

165 உத்தமகுணமேயா பரணம்-தங்கக்
கொத்து நகைகளெல்லாங் கோதையேதிரணம் (மதி)

166 ஆரியக்கூத்தாடி னாலும்-நல்ல
காரியத்திற்கண்ணை வைப்பாய் மேன்மேலும் (மதி)

167 புண்ணிய மெவர்க்கு மனோக்கியம்-உயர்
விண்ணினு மண்ணினும் வேறுண்டோ பாக்கியம (மதி)

168 சிஷ்டரைத் துஷ்டரும் புகழ்வார்-பெருந்
துஷ்டரைத் துஷ்டருந் துதியாம லிகழ்வார் (மதி)

169 இவ்வுலகத்தினுங் கன்யம்-தரும்
அவ்வுலகத்தையு மடைவிக்கும், புண்யம் (மதி)

170 அருமையா நான்பெற்ற மாதே-வாழ்த்து
திருவேதநாயகன் சேவடிப்போதே,

{ பதியிது; மதியிது, பெண்ணே புண்ணிய }
{ வதியல்ல வோநலல மகராசி ? கண்ணே. }

# கீர்த்தனைகள்;

பேண்பார்க்கத்தூதனுப்பல்.

உசேனிராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நல்லபெண்ணைப்பார் நீ தூதா
நல்லபெண்ணைப்பார் நீ தூதா
நல்லபெண்ணைப்பார் நீ

அநுபல்லவி.

அல்லடாகேளிந்தப் பூமியின்மேலே
ஆயிரங்காலத்தும் பயிராகையாலே

நல்ல,

சரணங்கள்.

1 அதிகப்பேச்சுக்காரி    பெரும் வம்பி
ஆயிரமானாலும்    அவள் வேண்டாந் தம்பி
நிதநிதமுமெல்லாம்    நீட்டுவாள் கம்பி
நிச்சயமவளாகாள்    நீயென்சொல் நம்பி

நல்ல.

2 எழுத்துவாசகம்    அறியாதவள் மட்டி
ஏதுமறியாளவள்    சுரண்டுவாள் சட்டி
கழுத்திலேயவளுக்குத்    தாலியைக் கட்டிக்
காரியமில்லை அது    காசுக்கு நஷ்டி

3 அழுதக்குணமுமுள்ளவள்    நல்ல ஜோடு
அழகில்லையாயினுங்    குணத்தையே தேடு
பழகுநற்குணமில்லா    அழகியின் வீடு
பாம்பு, புலி, கரடி    வாழ்ந்திடுங் காடு

நல்ல.

4 வீட்டுவேலைதெரி    யாதவள் வேம்பு
மினுக்கும் அவள்குலுக்குமே    வெறும் வீம்பு
கூட்டுநற் குணமில்லாக்    கொடியவள் பாம்பு
குலத்தைக்கெடுக்கவந்த    * கோடாலிக்காம்பு

5 நகைகளை தரித்து மஞ்சள்    வாடைகள் பூசி
நாடெங்குந் தெரியவே    நகைத்துக்கை வீசி
சொகுசுட னடப்பவ    ளாயிரந்தாசி
சும்மாவந்தாலுமவள்    வேண்டாஞ் சீ சீ

நல்ல.

6 தேவதா பத்தியில்    லாதவள் கள்ளி
திருட்டுக்கும் புரட்டுக்கு    மவளொரு பள்ளி
தாவில் புருஷன்குடிக்    கவள்பெருங் கொள்ளி
சனியனை விலக்கு    வாங்காமல் நீ தள்ளி

நல்ல.

7 உடைமைகளுடன் பணங்    காசின்மேலிச்சை
உள்ளவள் சண்டைக்குக்    கட்டுவாள் கச்சை
இடைவிடாம லிவளாற்    கெடுமே என்லச்சை
இவளைக்கொள்ளுவதிலும்    எடுக்கலாம் பிச்சை

நல்ல.

8 சந்ததங் கணவன்மே லொழியாப்பத்தி
சாந்தம், பொறுமை தயைதானப், நற்புத்தி
எந்தவே ளையுமுட லாத்தும சுத்தி
இல்லாதவளவன் கழுத்துக்குக் கத்தி

நல்ல.

9 நல்லவ ளேழை யானாலுந் தொடாதே
நாலூறுபோனாலும் நீபின்னிடாதே
பொல்லா தவள்கையிற் காட்டிக் கொடாதே
புலியைக்கொண்டுவந்தென்னைத் தெருவில்விடாதே

நல்ல.

10 சகலகா ரியங்களுந் தெரிந்தவள் சிலாக்கியம்
தரித்திரர் கையிலு மவள்பெரும் பாக்கியம்
இகபரமிரண்டுக்கு மவளே யோக்கியம்
என்றுசொன்னான் வேதநாயகன்வாக்கியம்

நல்ல.

---

## தூதன் பெண்பார்த்து வந்துசொல்லல்.

சௌராஷ்டிரராகம்-அடதாளசாப்பு.

பல்லவி.

பஞ்சவர்ணக் கிளிபோ லொருபெண்ணை நான்
பார்த்து வந்தேன் சுவாமி.

அநுபல்லவி.

கொஞ்சமுஞ் சந்தேகமில்லாமலே அந்தக்
கோல மயிலைநீர் கொள்ளும்-அது
கூடம் வநதென்று துள்ளும-நல்ல
காலங் கவலையைத் தள்ளும்

பஞ்சவர்ணக்

சரணங்கள்.

1 பூரணசந்திரன்போலுமுகத்துக்குப்
பூமியி லுண்டோச மானம்—தெய்வப்
பூவையர்சுந்தரம் வேண்டில் அவளிடம்
போய்வாங்க வேண்டுமே தானம்-அந்த
நாரிகண்வாய்செவி மூக்குக்குவமையை
நாட்டுவதுமதி யீனம்-அவள்
நடையழகுக்குஞ் சடையழகுக்குமே

நானென்சொல்வேனுப மானம் அந்த
மானின்சொல்லை தேவ கானம்-இடை
தானுண்டென்பதனு மானும்-நாறு
மீனங்கண்ணெனி லவ மானம்

பஞ்சவர்ணக்

2 பாக்கியவதியவள் பக்கத்திருந்தாலும்
பாவமெல்லாம்பறந் தோடும்-அவள்
பால்வடியுமுகம் பார்த்தாலும் போதும் சௌ
பாக்கியம் வந்துவிளை யாடும்-திரு
வாக்காலவள் மழைபெய் யென்றாற் பெய்யுமே
வர்ணிக்க யாராலே கூடும்-கிட்டி
வந்ததுமக்குத் துரந்தரயோகம்
வருத்தத்தை நீர் தள்ளிப் போடும்-இனிக்
கருத்தில்லவளையே நாடும்-மிகு
திருத்தமாகக் கவி பாடும்-நல்ல
பொருத்தம் ஆனந்தக்கூத் தாடும்

பஞ்சவர்ணக்.

3 வெள்ளியுந் தங்கமும் அள்ளிக் கொடுத்தாலும்
வேறொருவர்முகம பாரரள்-நல்ல
மேன்மைத்துரைமக ளானாலும் வீட்டு
வேலைக்குபின்னிட்டுச் சோரரள்-நிதந்
தள்ளிநீர்வைதடித் தாலுங், “கைநோகுமே,
சாமி யென்றுதொழுஞ் சீரரள்-பெற்ற
தாய்தகப்பனழைத்தாலும் உம்மைவிட்டுச்
சற்றும் பிரிந்திட நேரரள்-பழு
தற்ற நவமணி நேரான்-நாளுக்
குற்றமுள்ளோரர் சபை சோரரள்-செய்த
நற்றவத் தாலன்றி வாரரள்.

பஞ்சவர்ணக்.

4 காரியம்பார்ப்பள் கணக்குமெழுதுவள்
காய் கறி யாக்கவுங் கெட்டி-அவள்
கைபட்டால் வேப்புங் கரும்பல்லவோ ? ருசி
கண்டு நீர் மண்டுவீர் சட்டி-அவன்
ஊரிலேமாமியார் நாத்திமார் எல்லாம்
உவந்திடு கற்கண்டுக் கட்டி-தினம்
ஓயாவிருந்துவந்தாலுஞ் சலியாமல்
உண்ணச்சொல்வாள் அன்னங் கொட்டி-அந்த
வண்ணக்குயிலைநீர் கிட்டி-இரு

கண்ணிற்கண் டாற்படுந் திருஷ்டி-தாரைப்
பெண்ணைக் கொள்ளவென்ன அட்டி ?
பஞ்சவர்ணக்

5 சிந்தாமல் பங்காமல் வீட்டுப்பொருள்களைச்
சிவன்போற் காக்குமிர் வாகி-தினம்
செலவுக்குறைத்து வரும்படியில் மிச்சஞ்
சேர்த்துவைக்குமதி யூகி-நிதம்
கந்தமுறவே தன்வீட்டையுந் தன்னையுங்
கனசுத்தஞ் செய்நாக ரீகி-காணும்
கனவில் நனவிலெப்போதுந்தெய்வத்தைக்
கணவனைத் தியானிக்கும்ஸ் நேகி-நகை
மனம்விரும் பாதவி வேகி-சாந்த
குணமுடைய் கனி யாகி-நல்ல
உணர்வுடைய வுப யோகி
பஞ்சவர்ணக்.

6 ஆபத்துவேளையி லறிவுசொல் மந்திரி
அரும்பிணிக்கவலைசஞ் சீவி-துன்பம்
அணுகும்போதாறுதல் தரித்திரகாலத்தில்
அருநிதியாம் அந்தத் தேவி-உம்மைப்
பாபத்திற் வீழாமற் போதிக்குஞ்சற்குரு
பாடவும் வலலமே தாவி-தெய்வ
பத்தி நற்புத்தி யிரக்கம் பொறுமை
பரவியசற்குண வாமி-கொள்ளும்
ஒருவருக்கே யவ ளாவி-மற்றப்
புருஷருக் கவள்வற்ச நாவி-அவள்
பெருமைக்கோர்குறை சொல்வோன் பாவி.
பஞ்சவர்ணக்.

7 சங்கீதம்பாடியும் இங்கிதம்பேசியுந்
தாள்பிடித் துந், துயர் தீர்ப்பாள்-நாளும்
தன் வேலைக்காரர் பலரிருந்தாலுஞ்
சகலமும் தன்கண்ணாற் பார்ப்பாள்-வீட்டில்
அங்குமிருப்பாள் பின்னிங்குமிருப்பாள் உம்
அண்டையிலுங் கட்டிக் காப்பாள்-உப
கற்பவருத்த மில்லாமற்கவலைகள்
அத்தனையுந் தலை யேற்பாள்-சி
சித்தமென்னவென்று கேட்பாள்-செ
புத்தமுதைச் செவி வார்ப்பாள்-உ
உத்தமமார்க்கத்தில் சேர்ப்பாள்
பஞ்சவர்ணக்.

8 நீர்மகிழ்ந்தால் அவள் தான்மகிழ்வாள் துன்பம்
நீர்கொள்ளில் அவட்கும்வி        சாரம்-அன்னம்
நீருண்ணில் அவள்பசி தீரும் இருவர்க்கும்
நிச்சய மேக        சரீரம்-இந்த
ஊரில்நீரில்லாதபோ துறங்காள் அன்னம்
உண்ணாள் பண்ணாளலங்        காரம்நீர்
ஊமைகுருடரா னாலுஞ்செய்வாளுமக்
குரிமையாய் ராஜோ        சாரரம்-ஆனால்
பரமாதருடனீர்சஞ்        சாரம்-செயில்
வருமவ ளுடையநிஷ்        டூரம்-அதற்
கொருநாளுமில்லைபரி        காரம்.

பஞ்சவர்ணக்.

9 பாவம்நீர்செய்யச்சொன்னாலுஞ் செய்யாள் வேறே
பண்ணாளுமக் கப        சாரம்-பெறும்
பாலர்க்குநல்வழி காட்டித் தினமும்
படிப்பிப்பாள் வேதாந்த        சாரம்-வந்து
தாவுமெளியவர்க் கில்லையென்னாமலே
தாய்போற்செய்வாளுப        காரம்-செல்வங்
தாழினும் ஏழைக்குத் தானுண்ணுமன்னத்தைத்
தந்து மெலிவாள்        சரீரம்-தம
யந்தியு மேகமஸ்        காரம்-செய்யும்
சுந்தரி சீலம் விஸ்        தாரம்-உமக
கந்தமின் னோநல்ல        தாரம்

பஞ்சவர்ணக்.

10 பாயும்படுக்கையு மாகநோய்கொண்டாலு
பர்த்தா வேலைகுப்பின்        வாங்காள்-உந்தம்
பக்ஷமொன்றேகோடி லக்ஷமென்றெண்ணிப்
பலதுன்பம்வந்தாலும்        ஏங்காள்-பெற்ற
தாயும் பிதாவும் நிகர்வேதநாயகன்
தாமரைப் பாதத்தை        நீங்காள்-நல்ல
சத்தியநிரந்தரை புத்தியின்மந்திரி
சட்டக் குடித்தனம்        பாங்காள்-வேலை
முட்ட முடியுமுன்        வாங்காள்-என்றுந்
கெட்டவ ளென்றுபேர்        தூங்காள்-உமக்
கிஷ்டமுள்ளாள் பழி        யோங்காள்.

பஞ்சவர்ணக்.

## ,தங்களுக்குப் படிப்பிக்கும்படி ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல்.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

வித்தையைப்படிப்பியுங்கள்-தயைசெய்து
வித்தையைப்படிப்பியுங்கள்.

அநுபல்லவி.

உத்தமவான்களே சத்தியபிமான்களே
உங்கட்குக்கண்களான பெண்களாமெங்களுக்கு.

வித்தை.

சரணங்கள்.

1 திருத்தமாவேலைகளெல்லா முடிப்போம் வேலை
தீர்ந்தபின் புஸ்தகங்களை படிப்போம்
வருத்தம் நீர்படக்கண்டால், மனந் துடிப்போம்கீத
வண்ணங்கள் பாடிக்கொண்டுகால் பிடிப்போம்-பாட
மாட்டோமே வீணை
மீட்டோமே நயங்
காட்டோமோ சுகம்
ஊட்டோமோ நல்ல

வித்தை.

2 வரவுசெலவின் கணக்கெழுதி வைப்போம்-பல
வகைவகையுடுப்புகளுமக்குத் தைப்போம்
பரவும்பலதொழில் நீர்பண்ண வொப்போம்-நல்ல
பக்ஷணங்கறிகளுஞ்செய்ய தப்போம்-நாங்கள்
படியோமோ இருள்
விடியோமோ மருள்
முடியோமோ அருள்
பிடியோமோ நல்ல

வித்தை.

3 வாணியும் நீரும் ஒரு கோத்திரமா? அவள்
வரப்பிரசாதம் உமக்கு மாத்திரமா?
வீணி லைவட் கெங்கண்மேல் க்ஷாத்திரமா? நாங்கள்
மெய்ஞ்ஞானமார்க்கத்துக்காக பாத்திரமா? உம்மை

வெல்லோமோ சுல்வி
கல்லோமோ கல்வி
சொல்லோமோ புத்தி
இல்லோமோ நல்ல

வித்தை.

4 கொஞ்சம் நீர் கோபம் செய்யில் அஞ்சிடுவோம் எங்கள்
குற்றம்பொருக்கச்சொல்லிக் கெஞ்சிடுவோம்
தஞ்சமதாக உமை நமபிடுவோம் உம்மேல்
சாகித்தியம் செய்து தினம் கும்பிடுவோம் நாங்கள்

தாழ்ந்தோமோ துயர்
ஆழ்ந்தோமே உம்மைச்
சூழ்ந்தோமே காலில்
வீழ்நதோமே நலல

வித்தை.

5 அடித்தாலு மிகழ்ந்தாலுங்கதி நீரே உம்மை
அன்றி எங்களுக் கினித்துணை யாரே?
படிததாற்பிழைததுப்போவோம்பெரி யோரே? இந்தப்
பஞ்சைகள் முகம் பாருநதுரை மாரே உங்கள்

பதம் பூண்டோம் அபி
மதம் நீண்டோம் உங்கள்
இதந தாண்டோம் அசங்
கதம்வேண்டோம் நல்ல

வித்தை.

6 படியாத ஆண்களுடனே நேசம் சற்றும்
பண்ண நீர் சம்மதியீர் லவ லேசம்
மடமுறு மெங்களுடன் சக வாசம் செய்ய
மடடு முமக் கில்லையோ சங் கோசம்? இது

மதிமோசம் வரும்
அதிஹாசம் மனம்
பதிபாசம் அற
இதிகாசம் உடன்

வித்தை.

7 வித்தையில்லாப் புருஷன் செய்கையைப் பாரும் அந்த
விதமல்ல வோபடியா பட வாரும்
உத்தமியையே விரும்புவீர் நீரும் கல்வி
உணராவிட்டாற்குணமெப்படிச் சேரும் இதை

ஓரீரோ முகம்
பாரீரோ துயர்
தீரீரோ தயை
கூரீரோ நல்ல

வித்தை.

8 படித்தால் மிருகம்போல்நாள் கழிப்போமோ என்றும்
பரபுருஷர் முகத்தில் விழிப்போமோ
அடித்தாலுமுகங்கோணிச் சுழிப்போமோ கல்லா
தவர் கணவரானாலும் பழிப்போமோ பல

அணிவேண்டோம் நல்ல
துணி வேண்டோம் நவ
மணி வேண்டோம் காயப்
பிணி வேண்டோம் நல்ல

வித்தை.

9 உத்தியோகந் தந்தாலு மொருசை பார்ப்போம் தினம்
உதவி செய்துங்கள தொழில்களைத் தீர்ப்போம்
பத்தியாய்க்குடித்தனந் தலை யேர்ப்போம் கல்வி
பாலர்க்குப் போதித்து நல்வழி சேர்ப்போம்எங்கள்

பதிநீரே சர்வ
நிதிநீரே தினம்
கதிநீரே கண
மதிநீரே நல்ல

வித்தை.

10 இரவில் நீர்தூங்கின பின்நாம் படிப்போம் நீங்கள்
எழுமுன் எழுந்துவேலைகளைத் தொடுப்போம்
தருமவதிகளென்று பெய ரெடுப்போம் நாங்கள்
கந்ததம் வேதநாயகனை அடுப்போம் மிகத்

தழையோமோ கல்வி
நுழையோமோ உமை
அழையோமோ ஜீவன்
பிழையோமோ நல்ல

வித்தையைப்படிப்பியுங்கள் தயைசெய்து
வித்தையைப்படிப்பியுங்கள்.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

கேளும் பூமான்களே கிருபைவைத்
தாளும் சீமான்களே.

அநுபல்லவி.

நாளுங் கதி யில்லா எங்கள்மேல் வர்மமோ
தாளுறுந் தூசிபோல தள்ளுதல் தர்மமோ
கேளும்

சரணங்கள்.

1 காலைக்குமாலைக்கு மூலைக்குள் எங்களை
ஆலைக்கரும்புபோல் தேய்த்தீர் பாக
சாலைக்கு மணமத வேலைக்கு மேவின
வேலைக்கும் எங்களை மாய்த்தீர்
மூலைக்கல்விநாங்கள் வாசித்தா லா பத்தோ
மூடப்பெண் கொள்வீருமக்குப் பெரும் பித்தோ
ஓலைக் கிரந்தங்களுங்கள் பாட்டன் சொத்தோ
உமக்கென்ன காணுந் தலைமேற் றலை பத்தோ
கேளும்.

2 ஆதியிற் பெண்ணாலே மேதினியோர்களுண்
டானவகை மறந்தீரோ பெண்
சாதி புருஷனிற் பாதியென்ன மனு
நீதியையுந் துறந் தீரோ
பாதி யுடலைப்பறக்க விடலாமோ
பாவ புண்ணியந் தெரியாமற் கெடலாமோ
நீதி யில்லா தெம்மை நிந்தித் திடலாமோ
நிந்தித்தும்பின் னெங்களை நீர் தொடலாமோ
கேளும்.

3 நாரியரை ஒரு காரியமில்லா
நடைபிணமென் றெண்ணி னீரே தேவர்
ஊரிற் பெண்கள் கொண்ட சீரினை யாகிலும்
உற்றுப்பாருமைய மாரே
பாரி தனை நாவில் வைத்தான் பிதா மகன
பாகஞ் சீரம் வைத்தாற் சிவன்மா சுகன்
மார்பில் வைத்தான் ஹரி யெந்திருடன் குகன்
மங்கை தேடிச்சந்தி வந்தான்கரி முகன்
கேளும்.

4 உங்கட்குதவியா யெங்களைத் தேவனுண்
டாக்கியதைத்தறி — யீரோ செல்வ
மங்கையுடன் கல்வி நங்கை முதலானோர்
மாதரென்று குறி — யீரோ
எங்களை யலலாமல் நீங்கள் — உதித்தீரோ
ஏறி யாகாயத் திருந்து — குதித்தீரோ
அங்கப்பா லுண்ணாமல் தேகம் — உதித்தீரோ
அடிமை யென்றெங்கள் தலையில் — விதித்தீரோ

கேளும்.

5 போதகயூரோப்பு மாதர்களைக்கண்டு
பொங்கிப் பொறுமைகொண் — டோமே என்றும்
பேலமில்லா இந்தியா தனில்நாங்கள்
பிறந் தென்னலாபங் — கண்டோமே

நாதக் கல்விக்கு நகைஎந்த — மூலையே
நாளகள் விரும்பேம் நவரத்ந — மாலையே
வேதநாடகன் செய் பெண்கதி — மாலேமே
வேண்டினோம் தாரும் விடோம் உங்கள் — காலையே

கேளும் பூமான்களே கிருபைவைத்
தாளும் சீமான்களே.

# பெண்கல்வி.

இந்தத் தேசத்துப் பெண்கள் கல்வியில்லாமையினால் அஞ்ஞான இருளில் ஆழ்ந்திருக்கிறார்களென்பது யாவருக்குந் தெரிந்த விஷயமா யிருக்கின்றது. பெண்களுக்குக்கல்வி ஆவசியகமென்பதைச் சிலர் ஒப்புக்கொண்டாலும் அநேகர் பெண்கள் படித்து என்ன உத்தியோகஞ்செய்யப் போகிறார்களென்றும் அவர்கள் படித்தால், புருஷருக்கடங்கி நடவாமல் வித்தியாகர்வத்தினால் கெட்டுப் போவார்களென்றும் துராக்ஷேபஞ் செய்கிறார்கள். தெய்வ பக்தியும் விவேகமும் நற்குணங்களும் உண்டாவதற்காகக் கல்விகற்பதே யல்லாது உத்தியோகமே செய்வதற்காகவோ அல்லவே நெல்லுக் கிறைக்கிற தண்ணீர் புல் முதலிய பூண்டுகளுக்கும் உபயோக மாவதுபோலவும் பானத்துக்காக வெட்டுகிற குளம் ஸ்நாந முதலியவற்றிற்கும் உதவுகிறது போலவும். பழத்துக்காக வைக்கும் விருக்ஷம் நிழல் முதலியவற்றிற்கும் உபயுக்தமாவது போலவும், புத்தியின் அபிவிர்த்திக்காகப் படிக்கப்படுங்கல்வி உத்தியோக முதலியவற்றிற்கும் சாதனமாகிறதே தவிர படிப்பதற்கு உத்தியோகமட்டும் காரணமென்று சொல்வது குல்லாவுக்காகத் தலையேயல்லாமல் தலைக்காகக்குல்லா அல்லவென்று சொல்வதற்குச் சமாமான மாயிருக்கின்றது.

சரீரத்துக்கு ஆகாரம் எப்படியோ அப்படியே கல்வியானது புத்திக்கு மிகவும் ஆவசியமாக இருக்கின்றது நாளுக்குநாள் வளர்கின்ற சரீரத்தைச் சுவாமி நமக்குக் கொடுத்திருந்தாலும் அதற்குத் தகுந்த ஆகாரங்களைக் கொடுத்துச் சௌக்கியத்துக் கடுத்த காரியங்களை யெல்லாம் நாமே தேடிக் கொள்ளாவிட்டால், சரீரம் வளரமாட்டாதே அப்படியே கடவுள் நம்மை ஞானாத்மாவாகச் சிருஷ்டித்திருந்தாலும், நம்முடைய சுபாவஞானம் எவ்வளவும் போதாமலிருப்பதால் கல்வி யென்கிற ஆகாரத்தைக்கொடுத்துப் புத்தியை அபிவிர்த்திசெய்ய வேண்டியது நம்முடைய கடமையா யிருக்கிறது.

'செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப்படும்.'

என்று திருவள்ளுவ நாயனாருஞ் சொல்லியிருக்கிறார்.

நம்முடையமனம் எப்படிப்பட்ட தென்றால், ஒரு கணப் பொழுதாயினும் சும்மா இராமல் பூமண்டலம், ஆகாச மண்டலம்

முழுவதும் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றது. நாம் சும்மா யிருந்தாலும், வேலைசெய்தாலும், படுத்திருந்தாலும், நித்திரை செய்தாலும், தன்னுடைய சஞ்சாரத்துக்கு எப்போதும், ஒய்வில்லை, தனக்குக் களைப்புமில்லை, இளைப்புமில்லை, என்னும் இத்தன்மையது. இப்படிப்பட்ட மனத்துக்குக் கல்வியென்கிற துணைவனில்லா விட்டால், கடிவாளமில்லாத குதிரைபோலவும் கண்டபடி திரியுங் குரங்குபோலவும் கரைகடந்த வெள்ளம் போலவும் கட்டுக்கடங் காக் காளைபோலவும் அது தேச மெல்லாந்திரிந்து நம்மைத் துர்க் குணமாகிய காட்டிலும் மேட்டிலும், கல்லிலும, முள்ளிலும், இழு த்து முடிவில் நரகமென்கிற பாதாளத்தில், தள்ளிவிடுமென்பதற்கு எவ்வளவும் சந்தேகமில்லை, இந்த காரணத்தைப்பற்றியே ஆண் பிள்ளைகள் உத்தியோகஞ் செய்யவிரும்பினாலும் விரும்பா விட்டா லும், அவர்களுக்குப் படிப்பிப்பது வழக்கமா யிருக்கின்றது.

பெண்களுடைய மனமும், புருஷர்களுடைய சித்தமும் ஒரே தன்மையா யிருப்பதால், பெண்களுக்குமட்டும் கல்வியை போதியா விட்டால், அவர்களுடைன் சித்தம் எப்படி நயமார்க்கத்திலே-நிலை கொள்ளும் காசுக்கொரு குதிரையும் வேண்டும், காற்றைப் போலப் பறக்கவும் வேண்டும், என்பதுபோலவும் புல்லுண்ணாத பசுவும் வேண்டும் பூரணமாகக் கறக்கவும், வேண்டும் என்பதுபோலவும், ஸ்திரீகள் படிக்காதவர்களாயிருக்கவும் வேண்டும், உத்தமிகளாய் நடக்கவும் வேண்டும் என்றால், எப்படி நம்முடைய மனோரகம் நிறைவேறும் மாவுக்கும் ஆசை பணியாரத்துக்கும் ஆசையா ?

விளங்கொடு மக்களனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனையவர்.

மனிதர்களுக்கும் மிருகங்களும் எவ்வளவு பேதமே அவ்வளவு பேதமுண்டு கற்றவர்க்குங் கல்லாதவர்க்கும், என்று திருவள்ளுவ நாயனார் சொல்வதுபோல ஆண்பிள்ளைகளுக்குள் படித்தவனுக்கும் படியாதவனுக்கும் உள்ளபேதத்தை நாம் நாள் தோறும்காண்கி றோம் படித்தவன் கூடியவரையில் தன்னுடைய படிப்புக்குத்தகுந்த புத்தியும் நல்லொழுக்கமும் யாதொருமானமான ஜீவனஞ்செய்யத் தகுந்த திறமையும், உள்ளவனாயிருக்கிறான், படியாவனோ என்றால், பரமசண்டனாய் மாடுமேய்க்கவும் விறது தூக்கவும் மண்முதகெல் லியவைகளை வேட்டிக்சுமக்கவும் மற்றும்பலகஷ்டமான வேலைகள் செய்யுமே உபயோகப் படுகிறான்மேலும், கொலைதிருட்டு, கன்னம், பருங்கொள்ளை முதலான குற்றங்களைச் செய்கிற வர்களெல்லாம்,

படியாதவர்களே அன்றி படித்தவர்கள் அந்தக் குற்றங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்வது மிகவும் அரிது, ஆடவர்களுக்குள் கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் ஏணிவைத்துப் பார்க்கும்படியான இவ்வளவு பாரதூர வித்தியாசமிருக்கும்போது, பெண்களுக்கு மட்டும்படியாமலே சகல சுகுணங்களும் உண்டாகுமென்று நினைப்பது வீணே படியாத ஸ்திரீகள் ஏதோ கடவுளுடைய கிருபையால் இவ்வளவாவது நல்லவர்களாயிருப்பதற்கு நாம் ஆச்சரியப்பட வேண்டியதைவிட்டு, அவர்களில் சிலர் துர்க்குணமுள்ளவர்களா யிருப்பதற்கு ஆச்சரியப்பட இடமேயில்லை கல்லாத ஸ்திரீகள் விவேகிகளாயிருப்பது எவ்வளவு ஆச்சரிய மென்றால், முடவர்கள் ஆடவும், குருடர்கள் அந்த ஆட்டத்தைப்பார்த்துச் சந்தோஷிக்கவும், ஊமைகள் பாடவும், செவிடர்கள் அந்தப் பாட்டைக்கேட்டு மகிழவுங்கண்டால் எவ்வளவு அதிசயமோ, அவ்வளவு அதிசயந்தான.

பெண்கள் கல்வி கற்பதினால், அவர்களுக்குப் பதிவிரதா தர்மம் முதலிய சுகுணங்கள் அதிகரித்து, புருஷன்மேல் உண்மையான பக்தியும் விசுவாசமும், உண்டாகுமேதவிர அவர்கள் ஒருநாளும் புருஷத்துரோகிகளாக மாட்டார்கள். நாம் இப்படிச் சொல்வது உண்மையென்பதற்கு எல்லாக்கல்வியும் உணர்ந்து புருஷர்கள்மேல் மாறாதநேசமும் அன்புமுள்ள ஐரோப்பிய ஸ்திரீகள் சாக்ஷிகளாயிருக்கிறார்கள். புருஷர்களில் சிலருக்கே கல்விகற்றும் நற்குணமுண்டாகாமலிருப்பது போல, ஸ்திரீகளிலும் சிலர்வித்தையை அப்பியசித்தும் பிரயோஜன மடையாமற் போனாலும் போகலாம், அந்தக் காரணத்தைக்கொண்டு ஸ்திரீகளுக்குப் படிப்பிக்கக் கூடாதென்று சொல்வது முற்றும்பொருத்தமில்லாததா யிருக்கிறது.

ஒருவன் தன பெண்சாதிக்குக் கண்ணிருந்தால் அந்நியபுருஷர்களைப் பார்ப்பாளென்று கண்ணில்லாத குருடியைக் கலியாணஞ் செய்துகொள்ளச் சம்மதிப்பானா சில சமயங்களில் பிள்ளைக்குத் தாய்பால் கொடுக்கும்போது பால் புரையேறிப் பிள்ளை இறந்து போவதினால் பிள்ளைக்குப்பால் கொடுக்கக் கூடாதென்று சொல்லலாமா சகல பிராணிகளுக்கும் ஜீவாதாரமாயிருக்கிற மழை வெயில், காற்று முதலியவைகள் சிலசமயங்களில் சிலருக்குச் சேதத்தை வுண்டுபண்ணுவதினால், மழை, வெயில், காற்று, முதலியவைகள் வேண்டாமென்று ஆணையிட்டு மறிக்கலாமா? அப்படியே வித்தி

யாப்பியாசத்தினால் ஆயிரத்திலொரு ஸ்திரீ அகங்காரங்கொண்டு கெட்டுப்போனாலும், அதனால் மற்ற ஸ்திரீகளையும் படிக்கக் கூடாதென்று விலகருவது யுக்தமல்ல மத்தியானகாலவெயில் மஞ்சள் நிறமாகத்தோன்றுவது, காமாலைக்கண்ணின் குற்றமேயல்லாது வெயிலினகுற்றம் அல்ல சர்க்கரைகசப்பது வாய்க்குற்றமே அல்லாது சர்க்கரையின குற்றமல்லவே குறாணி மையிட்டாலும் குருட்டுக்கண் நல்ல கண்ணாகாதது போல், சிலர் படித்துந்திருந்தாமலிருப்பது சுபாவதுர்க்குணமே தவிர, கல்வியால்வந்த குற்றமென்று சொல்வது அசங்கதம்.

> பொருந்துநற்கலை தெரிபூவைகற்பது
> திருந்தியேமிகுமலாது தேய்ந்துபோமெனல்
> வருந்திடாதுயிர்தரு மருந்தைமானுடர்
> அருந்திடிற்சாவரென் றறைதலொக்குமே.

நல்ல கல்வியை உணருகிற ஸ்திரீயினுடைய கறபானது திருந்தி வளருமல்லாது, கெட்டுப்போமென்று சொல்வது சாகும் உயிரை நீடித்திருக்கச்செய்யும், தேவாமிர்தத்தை மனிதர்கள் புசித்தால், இறந்துபோவார்களென்று சொல்வதற்குச் சமானமென்று நீதிநூல் மாதரைப்படிப்பித்த லென்னும் அதிகாரத்திற் சொல்லப்படுகிறது.

சர்வலோக கர்த்தாவும், சர்வஜீவதயாபரரும், சர்வாந்தரியாமியாயும் சர்வவிபுவும் தர்மஸ்வரூபியும், அகிலாண்டகோடிப் பிரம்மாண்டநாயகரும், ஆதியந்த மில்லாதவரும், மனோவாக்குக் கெட்டாதவரும் பஞ்சேந்திரியங்கட்கு அதீதரும், தேவாதிதேவரும், கோடிசூரியப்பிரகாசரும், பூதங்களுக்குக் காரணபூதரும், சூரியனுக்குச் சூரியனும் உடலுக்கு உடலும், உயிர்க்குயிருமாய், இந்த உலகத்தைப்போல அநந்தகோடி உலகங்களையும் அநந்தகோடி சநதிர சூரிய நக்ஷத்திரங்களையும் உண்டுபண்ணி அவைகளை ஆதாரமின்றி அந்தரத்தில் நிறுத்திக் காப்பவரும், கற்பகோடி காலங்களை நிமிஷமாகக்கழிக்கிறவரும் நித்திய நிர்மலநிர்விகார நிர்த்தொந்த நிஷ்பிரபஞ்சப் பொருளும் ஆகியபகவானைக் கல்வி அறிவினால் அறியலாமே அல்லாமல் வேறொன்றினாலும் அறியக்கூடாதே.

நம்மை ஞானத்மாவாகப் படைத்து, நமக்காக அஸ்திபாரம் தூண்சுவர் முதலியவைக ளில்லாமலே பூமியாகிய பெரிய அரமனையைக்கட்டி, ஆகாசமண்டபம் வளைத்து, நக்ஷத்திரங்களாகிய முத்துமேற்கட்டித்தூக்கி, செப்பும்நெய்யும் திரியும் தூண்டுகோலுமில்

லாத சந்திர சூரியர் முதலிய தீபங்களையேற்றி, புல் பூண்டு முதலிய பச்சை ரத்நகம்பளங்களைக் கீழேவிரித்து, ஸ்வர்ணகொடிகளாலும் நவரத்நங்களாலும் நானாவித விநோத விசித்திரமாகச்சித்திரமண்டபத்தை அலங்கரித்து, மதுரமான கனிவர்க்கங்களும் பரிமளபுஷ்பங்களும் நிறைந்த சோலைகளையும், சிங்காரத் தோட்டங்களையும், மலைகளாகிய உன்னத சிங்காசனங்களையும், நதி ஏரி குளமுதலிய நீராடுதுறைகளையும், தாமரைத் தடாகங்களையும், ஆனை, குதிரை, ரிஷபம், முதலிய வாகனங்களையும் கொடுத்து, சமுத்திரங்களும் மேகங்களுமாகிய மேளவாத்தியக்காரர்களையும், அன்னம் மயில் முதலிய நாடகசாலைப் பெண்களையும் குயில் முதலிய பக்ஷிகளாகிய சங்கீத வித்வான்களையும், மேககடங்களால் நீரிறைக்கிற ஆகாசப் பெண்ணையும், வாயுவாகிய ஆலவட்டக்காரனையும், அக்கினியாகிய சமையற்காரனையும், சம்பளமில்லாத ஊழியக்காரர்களாக நியமித்து, பின்னும் எண்ணிமுடியாத நன்மைகளையும் சுக போக்கியங்களையும் நமக்குத் தந்தருளிய பரமதயாள மூர்த்தியைக் கற்றறிந்த ஞானிகள் உணர்வார்களேயன்றி, கற்றறியாத மூடஜனங்கள் எப்படி உணர்வார்கள்.

பூகோளம், அண்டசாஸ்திரம் முதலிய நூல்களைப் படியாவிட்டால் கடவுளுடைய பெருமையும், சருவசத்தியம், மகிமைப் பிரதாபமும், ஸ்திரீகளுக்கு எப்படி விளங்கும். சுவாமியினுடைய மகிமையை அறியாத ஸ்திரீகளுக்கு அவர்மேல் எப்படி பக்தியுண்டாகும், அக்ஷரரூபமாயிருக்கிற வேதவிதிகளையும், நீதி சாஸ்ரங்களையும், படித்தறியாத பெண்கள் எப்படி நல்ல வழியில் நடக்கக்கூடும், கோவிலில்தான் தெய்வமுண்டென்றும், கோவிலிருக்கிற விக்கிரகங்களைத் தவிர, வேறே தெய்வமில்லையென்றும், நினைக்கிற பாமரஸ்திரீகள மேற்படி விக்கிரங்களிலலாத வீடுகளிற் பாவங்களை செய்ய அஞ்சுவார்களா,

ஸ்திரீகள் படியாவிட்டால், யானையையும் மலையையும் பார்த்த குருடர் கதையாகவல்லவோ முடியும் அக்கதைகள் வருமாறு:—
சில குருடர்கள் யானையை அறிந்துகொள்ள ஆசைகொண்டு, யானைக்காரனுடைய அனுமதியால் யானையைக் கைகளால் தடவிப் பார்த்தார்களாம், வாலைத்தடவி அறிந்தவன், யானை விளக்குமாறு போலிருக்கிறதென்றும், காலைத்தடவி அறிந்தவன் யானை உரல் போலிருக்கிறதென்றும், காதைத்தடவி அறிந்தவன் யானை முறம்

போலிருக்கிறதென்றும், துதிக்கையைத்தடவி அறிந்தவன், யானை உலக்கை போல யிருக்கிற தெனறும், தங்களில் தர்க்கித்து கொண்டார்களாம், ஒரு குருடன் மலையைப் பார்க்க விருப்பங் கொண்டு மலைக்குப் போகிறவர்களைத் தொடர்ந்துபோய், தன்கை யெட்டினவரையில் மலையைத் தடவிப்பார்த்து, தன்கையெட்டின உயரந்தான் மலையென்று சாதித்தானும், அப்படியே கல்லாத பெண் களுக்கு ஈசுர நிச்சயமும பிரமஞானமும் உண்டாவது அசாத்திய மல்லவா,

கடவுளினுடைய திவ்விய ஸ்வரூபத்தைக்குறித்தும் வேதாந்த விஷயங்களைக் குறித்தும் கல்லாத பெண்களுக்கு எவ்வளவு தான் போதித்தாலும் செவிடன் காதில் சஙகை ஊதினதுபோலவும், குருடனுக்குமுன் பந்தத்தைப்பிடித்தது போலவும், கல்லில் மழை பெய்தது போலவும், காட்டுக்கெறித்த நிலவுபோலவும், அப்பே தனை வியர்த்தமாய்ப போலவேதயொழிய, உபயோகமாகாது.

குருமார் முதலானோர் சொல்லுகிற சாதாரணமான பிரசங்க ங்களுக்குக் கூடக்கல்லாத ஸ்திரீகள் அர்த்தங் கண்டு பிடிப்பது வருத்தமாயிருக்கிறது, அவர்கள செய்கிற அர்த்தமெல்லாம் அநர்த்தமே அவர்களுக்குப் பெரியவர்கள் சொல்லும் ஞானப்பொரு ளோ தாலாட்டாக முடிகிறது, எப்படியென்றால குருமார் முதலா னோர் பிரசங்கம் ஆரம்பித்த வுடனே கல்லாத ஸ்திரீகள் அப்பிர சங்கத்தின் பொருளை அறிந்து கொள்ளக் கூடாமையால், மனஞ் சோம்பித் தூங்கிவிழ ஆரமபிக்கிறார்கள், தாலாட்டு முடிந்தவுடனே பிள்ளைகள் விழித்துக் கொளவது போல, பிரசங்கம் முடிந்தவுட னே ஸ்திரீகளுடைய நித்திரையும் முடிந்து விழித்துக் கொள்ளுகி றார்கள், கல்லாத ஸ்திரீகள் வீண்பிரயோஜன மொன்றைத்தானே கேள்வியின் பிரயோஜனத்தையுமிழந்து, இரண்டுங் கெட்டவாக ளாய்ப் போகிறார்கள், புருஷர்களே ஸ்திரீகள் இப்படிப்பட்ட ஸ்தி தியிலிருப்பதுதானா உஙகளுக்குச் சந்தோஷம்,

கல்விக்குத்தெய்வமாகிய சரஸ்வதியே பெண்ணென்று சொல் லுகிற இநதத் தேசத்தார்கள, பெண்ரூபமாயிருக்கிற கல்வியைப் பெணகள படிக்கக்கூடாதென்று சொலவது பூர்வாத்தர விரோ மாயிருக்கிறதே. புருஷர்களுடைய நாவுகளிலே வசிக்கிறதென்றும்; நனனைப்போன்ற ஸ்திரீகளுடைய நாவுகளில பிரவேசிக்கிறதில்லை யென்றும், சரஸ்வதி பிரதிக்ஞை செய்தாயிருக்க, பெணகள் கல் விப்படித்தால் தோஷமென்ன.

உலகத்திலிருந்த பலகல்விமான்கள் பலபலகாலங்களில் பல விஷயங்களைப்பற்றி அவர்களுடைய ஆயுளெல்லாம் செலவழித்துக் கிரந்தரூபமாகச் செய்திருக்கிற விஷயங்களே, கல்வியென்று சொல்லப்படுகின்றன. அந்தப் புஸ்தகங்களைப் படிக்கிறவர்கள் அத்தனை வித்வான்களுடைய புத்தியையும் ஞானத்தையும் சுலபமாகக்கிரகித்துக் கொள்ளுகிறார்கள் இப்படிப்பட்ட பரமப்பிரயோஜனத்தைப் புருஷர்கள் மட்டும் அடைவதுதான் நியாயமோபெண்களையும் அடையச்செய்வது நியாயமல்லவோ இதென்ன அநியாயம்.

பெண்கள் படிப்பது பூர்வீகசம்பிரதாய மல்லவென்பதாகச் சிலர் துர்வாதம் செய்கிறார்கள் பாட்டனும் தகப்பனும்படியாத மூடர்களாயிருந்தால், பிள்ளையும் மூடனாய் இருக்கவேண்டுமா தகப்பன் உத்தியோகம் செய்யாமல் இருந்தால், பிள்ளையும் உத்தியோகஞ்செய்யக் கூடாதா பிராமணர்கள் வேதம் ஓதுதலையன்றி மற்றொரு தொழிலும் செய்யக்கூடாதென்றும், அப்படியே மற்ற வர்ணத்தார்களும் தங்கள் தங்களுக்குரிய தொழில்களைச் செய்ய வேண்டுமென்றும், மனுநீதியிற் சொல்லப்பட்டிருக்க, இப்போது பிராமணர்கள் வேதத்தை உபேக்ஷையாக விட்டு விட்டு, மற்ற வர்ணத்தார்களுடைய தொழில்களை ஆக்கிரமித்துக்கொண்டு செய்யவில்லையா, வேதபாராயணத்துக்கு பதிலாகச் சட்டபாராயணமும், வைதிக ஜீவனத்துக்குப் பதிலாக லௌகிக ஜீவனங்களும் செய்கிறார்களே, கலப்பை ஆயுதத்தைக் கொண்டு பூமியை உழுது கிருஷிதொழில் செய்யவேண்டிய சூத்திரர் இறகென்கிற ஆயுதத்தைக்கொண்டு கடிதமாகிய பூமியை உழுது ஜீவனம் செய்யவில்லையா.

இங்கிலீஷ்காரருடைய தர்மராஜரீகத்தில் நம்முடைய பூர்வீக வழக்கங்களெல்லாம் விட்டு, நாள்தோறும் சீர்திருத்தத்தையும் நாகரீகத்தையும் அடைகிற நாம் ஸ்திரீகளுடைய பாவத்தைக்கட்டிக் கொள்வதற்காக மட்டும் அவர்கள் விஷயத்தில் பூர்வீக வழக்கத்தை அனுசரித்து அவர்களை அஞ்ஞானக்கடலில் அமிழ்த்துவது நீதியா.

பெண்கள் படிப்பது புராதனவழக்கமல்லவென்று சொல்வது அபத்தமே தவிர யதார்த்தமல்ல, திருவள்ளுவருடைய சகோதரிகளாகிய ஔவை, உப்பை உருவை, வள்ளியம்மை முதலானவர்கள் கல்விகற்று அனேக பிறபந்தங்களைச் செய்யவில்லையா, சைவர்களுடைய பெரிய புராணத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நாயன்மார்களில் ஒருவராகிய காரைக்காலம்மையும் வைஷ்ணவர்களுடைய

குருபரம்பராபிரபாவத்தில் கூறப்பட்ட ஆழ்வார்களில் ஒருவராகிய சூடிக்கொடுத்த நாச்சியாரும் பெண்களாயிருந்துங் கல்வி கற்று அநேகம் ஸ்தோத்திரப் பாடல்களைச் செய்யவில்லையா, அன்றியும் சீதை! திரௌபதி, சந்திரமதி, தமயந்தி சகுந்தலை முதலானவர்களும், மற்றுஞ்சில ரிஷிபத்தினிகளும் பாண்டியன் மனைவியும், கம்பர்வீட்டு வெள்ளாட்டியும், படித்தவர்களென்பது விசிதமாகத் தோன்றுகிறதே. இம்மட்டோ தற்காலத்திலும் தஞ்சாவூர் முதலான நகரங்களில் வசிக்கிற ராஜஸ்திரீகளும் படித்தவர்களென்பது ஜகப் பிரசித்தமல்லவா.

நாலடியார், காரிகைமுதலிய நூல்கள் மகடூ முன்னிலையாகச் செய்யப்பட்டிருக்கின்றன ஆதலாலும், திருக்குறள், நாலடியார் காசி காண்டம் முதலிய நூல்களில் பெண்களுக்கிருக்க வேண்டிய கற்பு லக்ஷணம், முதலிய குணங்கள் சொலலப்பட்டிருக்கின்றன ஆதலாலும், புருஷர்களைப்போலப் பெண்களும் படிப்பதற்காகவே அந்த நூல்கள் செய்யப்பட்டனவென்பது திருஷ்டாந்திரமாயிருக்கிறது பெண்கள் படிக்கக்கூடாதென்பது மேற்படி கிரந்தகர்த்தர்களுடைய சித்தாந்தமாயிருந்தால், அவர்கள் பெண் முன்னிலையாகப் பாடவும் கற்பு லக்ஷணங்களைப் பேசவும் நிமித்தமில்லையே ஆகையால் நம்முடைய கக்ஷியை ஸ்தாபிப்பதற்கு மேற்சொன்ன கிரந்தங்களே பிரத்தியக்ஷமான லிகிதபூர்வ சாக்ஷிகளா யிருக்கின்றன,

ஸ்ரீமத் கம்பராமாயண பாலகாண்டத்தில், நாட்டுப்படலத்தில்,

“ பெருந் தடங்கட் பிறைநுதலார்க் கெலாம
பொருந்து செல்வமுங் கலவியும பூத்தலால்
வருநதி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே,

என்று சொல்லியிருக்கிற விருத்தத்தைக் கொண்டு, கோசல நாட்டு ஸ்திரீகள் படித்தவாகளெனபது விளங்குகிறது, சீவகசிந்தாமணி, நாமகளிலம்பகத்தில்,

“ வண்டுயொய்த்தாற்றும்பிண்டிவாமனுல்வடித்தநூண் ணூல்
வுண்டுவைத்தனைய நீயு முணர்விலாநீரை யாகி
விண்டு கணணருவி சோர வியமுயிர்த்தினையை யாதல்
ஒண்டொடி தகுவதன்று வொளுக நின்கவலையென்றான்”

என்ற செய்யுளால், சச்சந்தன மனைவியும், ஜீவகன் தாயுமாகிய விஜயை யென்பவள் படித்தவளென்று தோன்றுகிறது. மேலும், நாலடியாரில,

குஞ்சியழகுங் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் மழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமென்னு நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு,

என்றுசொல்லி யிருப்பதால், மயிரழகும் வஸ்திர அழகும் மஞ்சளழகும், அழகல்ல, கல்வியழகே அழகு என்பது தெளிவாய்த் தோன்றுகிறது, குஞ்சியென்பது ஆண்மயிராதால், மயிரழகை வேண்டுமானால் புருஷர்க ளெடுத்துக் கொள்ளட்டும் சேலைகட்டுவதும், மஞ்சள் பூசுவதும், பெண்களுக் குரிய அழகாதலால் அந்த அழகு தங்களுக்குரிய தென்று, புருஷர்கள் சொல்லத் துணியார்களென்று நம்புகிறோம். ஆகையால், பெண்கள் படிக்க வேண்டு மென்பது மேற்படி நூலாசிரியருடைய கருத்தென்று பட்டப்பகல்போல வெளியாகிறது.

பெண்களுக்குக் கற்பிக்கக்கூடாதென்று ஒருநூலிலும் விலக்கப்படவில்லை. கணக்கும், எழுத்தும் கண்ணுக்குச்சமானமென்று ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாகப் பலவித்வான்கள் பாடியிருக்கிறார்கள் அப்படியே.

“ எண்ணுமெழுத்துங்கண்ணெனத்தகும், என்று ஔவையும்
“ எண்ணென்ப, வேனையெழுத்தென்ப, விவ்விரண்டும்
கண்ணென்பவாழுமுயிர்க்கு,

என்று திருவள்ளுவ நாயனாரும், சொல்லி யிருக்கிறார்களே பின்னும்.

“ கண்ணுடைய ரென்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர் ;

என்ற குறளில் கற்றவர்களே தண்ணுடையவர்கள், கல்லாதவர்கள் முகத்தி லிரண்டு புண்ணுடையவர்களென்று திருவள்ளுவ நாயனார் ஸ்திரீ புருஷர்களுக்குப் பொதுவாகச் சொல்லுகிறாரே யல்லாமல், புருஷர்களுக்குமட்டும் சொல்லவில்லையே, குருடனைச் செந்தாமரைக் கண்ணன் என்பது போலும், அஷ்டதரித்திரம் பிடித்தவனை அன்னபூரணி என்பதுபோலும், படியாத பெண்களுடைய கண்களை நீலோற்பல மென்றும், வண்டென்றும், மானென்றும், மீனென்றும், மற்றவித்வான்கள் எவ்வளவுதான் வர்ணித்தாலும், நாமொரு நாளுமொப்பமாட்டோம், புண்ணென்றே

சாதிப்போம், ஏனென்றால் திருவள்ளுவருக்கு மற்றப்புலவர்கள் அஜகஜாந்திர மல்லவா, கல்வி யென்னும் ஔஷதப் பிரயோகஞ் செய்து மேலே சொல்லப்பட்ட புண்களைக் கண்ணாக்காத வரையில் நாம் நம்முடைய கக்ஷியைவிடோம், "கற்பு" என்கிற பதத்துக்குக் கல்வியென்று அர்த்தமாகிற படியால். பெண்களுக்குக் கற்புவேண்டுமானால் கல்வியும் வேண்டுமென்பது அந்தப்பதத்தினுலேயே விளங்குகிறது.

ஸ்திரீயும் புருஷனும் ஒரு தேகமென்பது சர்வமதசம்மதமானதால் புருஷன்மட்டும் படித்துப் பெண்சாதிபடிக்காமலிருப்பது, பாதியுடலிற் பிராணனும் பாதியுடலிற்பிராணன் மில்லாமலும் செய்கிற பாரிசவாயு போலும் பாதிஉடலை அலங்கரித்துப் பாதியுடலை அலங்கரியாமல் விடுவதுபோலுமிருக்கிறது, இது எவ்வளவு வெட்கக்கேடும் சக்கிலியக் கூத்துமாயிருக்கிறது.

பெண்கள் படித்தால் அவர்களுக்குச் சகலவிவேகமு முண்டாகுமானதால், அவர்கள் புருஷர்களுக்கு மந்திரிகளைப் போலச் சமயத்தில் புத்திசொல்வார்கள், காரியஸ்தர்களைப்போலக்கிரககிருத்தியங்களை யெல்லாமம் நடப்பித்துக் கொள்வார்கள், கணக்கர்களைப் போல வீட்டைச்சேர்ந்த கணக்குகளை யெல்லாம் எழுதிக் கொள்வார்கள் தாய்போலப் புருஷர்களைச் சம்ரக்ஷிப்பார்கள் காவற்காரரைப்போல வீட்டுப்பண்டங்களை யெல்லாங்காத்துக் கொள்வார்கள், நல்ல சுயம்பாகிகளைப் போலப் புருஷர்களுடைய நாவுக்கிதமான பக்ஷணங்களை செய்து கொடுத்து உபசரிப்பார்கள், வைத்தியர்களைப்போலப் புருஷர்களுடைய தேகசௌக்கியங்களுக்கடுத்த காரியங்களைத் தேடிச்செய்வார்கள், சங்கீத வித்வான்கள்போல இன்பமான பதங்களைப்பாடியும், இங்கிதமான வார்த்தைகளைப் பேசியும் புருஷர்களுடைய வருத்தங்களைத் தீர்ப்பார்கள், உத்தம சிநேகிதர்களைப்போலப் புருஷர்களுடைய ஆபத்துக்கு உதவுவார்கள் புருஷர்கள் பிசகிநடந்தால் அவர்களுக்குக் குருவைப்போல உபதேசஞ் செய்வார்கள் பெண்களுக்குப் படிப்பியாமையினால் இவ்வளவு நன்மைகளையும் புருஷர்களிழந்து போவது எவ்வளவு மதியீனம், இப்போது பெண்கள் படியாதவர்களாயிருப்பதினால் புருஷர்கள் தங்களுடைய தொழிலைச் சேர்ந்த வெளிவேலைகளுடனே கூட வீட்டைச்சார்ந்த காரியங்களையும், வகித்துக் கொண்டு இரண்டு குதிரைகள் கட்டியிழுக்க வேண்டிய பண்டியை ஒரு குதிரைமட்டு மிழுப்பதுபோலத் தாங்கள் சிரமப்பட வேண்டியியிருக்கிறது,

பெரிய குடும்பங்களில் அநேக பந்துக்களும், பிள்ளைகளும் வேலைக்காரர்களும் இருக்கிறபடியால் அடிக்கடி கலகங்களும், மனஸ்தாபங்களும் உண்டாகுமே, குடும்பத்தலைவி படியாத அவிவேக சிரோமணியாயிருந்தால், அவள் அந்தக் கலக சண்டைகளை நிவர்த்தி செய்யவும், மற்றவர்களுக்குப் புத்தி கற்பிக்கவும், எப்படிச் சாத்தியமாகும். குருடனுக்குக் குருடன் வழிகாட்டவும், மூடவனுக்கு மூடவன் சிலம்பங் கற்றுக்கொடுக்கவுங் கூடுமா. நிரக்ஷரகுக்ஷியாயிருக்கிற தலைவியானவள் வேலைக்காரர்கள் செய்கிற திருட்டுகளையும், புரட்டுகளையும், மோசங்களையுங், கண்டுபிடித்துப் பொருட் சேதமில்லாமல் குடும்பத்தை எப்படிப்பராமரிக்கக்கூடும். மூடன் ஆஸ்தி முழுவதும், நாஸ்தி, என்பதுபோலப் பெண்களுக்குப் படிப்பில்லாமையினால், திரவிய நஷ்டம் சம்பவிக்கவும் இடமுண்டாகின்றது.

பெண்கள் படித்திருந்தால் அவர்கள் வீட்டுவேலைகள் செய்கிற நேரம்போக மற்றநேரங்களில் நல்ல புஸ்தகங்களை வாசித்துத்தங்களுடைய புத்தியை அபிவிர்த்திசெய்யவுங், குழந்தைகளுக்குப் படிப்பிக்கவும், தக்கவர்களாயிருப்பார்கள் அப்படியில்லாமையினால் ஸ்திரீகள் வீண்பேச்சும், வம்புவார்த்தைகளும், கோளும், புறணியும் பேசி, துன்மார்க்கங்களைக் கற்றுக்கொள்ள இடமுண்டாகிறது சிறுகுழந்தைகளுக்குத் தகப்பனைவிடத்தாய் மார்களிடத்தில் அதிக பழக்க மிருப்பதினால், பிள்ளையாரைப்பிடித்த சனியன் அரசமரத்தையுங் கூடப்பிடித்ததுபோல படிப்பில்லாத தாய் மார்களுடைய அறியாமையுந் துர்க்குணமும் பிள்ளைகளையுஞ் சாரும்படியாயிருக்கிறது. புருஷர்களைப் பார்க்கினும் பெண்களுக்கு அதிக அவகாசமான நேரமிருப்பதால் அவர்கள் படித்தவர்களாயிருந்தால், ஒளவை முதலானவர்களைப்போல அநேக பிரபந்தங்களை யுண்டுபண்ணவும் நூதனமான காரியங்களைக் கண்டுபிடித்துச் செய்யவும். அதனால் இந்தத்தேசம் யூரோப் தேசத்தைப் போலச் சீக்கிறத்தில் நாகரீகம் அடையவும், இடமுண்டாகு மென்பதுகரதலாமலகம் போல விளங்கவில்லையா.

பிள்ளை பெற்றவளைப் பார்த்து மலடிபெருமூச்சு விட்டது போல யூரோப்தேசத்து நாகரீகத்தைப்பார்த்து, நாம் பெருமூச்சு விடவேண்டியதேயல்லாமல் பெண்கள் கல்வி கல்லாத வரையில், நம்முடைய தேசம் திருந்தவேமாட்டாது. பெண்களுடைய கல்வி

யினால் புருஷர்களுடைய கல்வியும், அதிகரிக்குமென்பது பிரகாசமா யிருக்கிறது எப்படியென்றால், பெண்கள் தங்களைக்கல்வியில் வெல்லாம லிருக்கும் பொருட்டும், பரிகாசஞ் செய்யாமலிருக்கும் பொருட்டும் புருஷர்களுக்குக்கல்வியில் அதிக கவனமும், முயற்சியும், உண்டாகுமென்பதற்கு எவ்வளவும் ஐயமில்லை.

கல்விகல்லாத பெண்கள் எவ்வளவோ அழகுள்ளவர்களாயிருந்தும் அவர்களுடைய அழகானது எட்டிமரம் பழுத்ததுபோலும் பிரேதத்தை அலங்கரித்ததுபோலும்; சுத்தநிஷ் பிரயோசனமா யிருக்கிறது. உயிரில்லாத மண்பாவைக்கு நகைகள்பூட்டினாற்போல கல்லாத பெண்களுக்குண்டாகிய அழகினால்பிரயோசனமென்ன. அவர்களுடைய வாயைத் திறந்தால் அவர்களுடைய வார்த்தை புத்திமான்களுக்கு எவ்வளவுங் கேட்கச்சகிக்காமல் கர்ணகடோரமாயிருக்கின்றது :

அவர்களிடத்திற் பேசினால் நமக்கிருக்கிற புத்தியும் மழுங்கிப் போமென்று பயப்படவேண்டியதா யிருக்கின்றது சிலபுருஷர்கள் தங்கள் பத்தினிகள் எவ்வளவோ சுந்திரமுள்ளவர்களா யிருந்தும், அவர்கள் படியாதவர்களாயும் மதுரமான சம்பாஷணைஞ் செய்யத்தகாதவர்களாயும் இருப்பதால், " வீட்டுப் பெண்சாதிவேம்பும், நாட்டுப் பெண்சாதிகரும்பும், " என்பதுபோல, சொந்தஸ்திரீகளை விட்டுவிட்டு அழகில் மூதேவிக்கு மூத்தாளா யிருக்கிறதாசிகள் பாதமே கதியென்று ஓடுகிறார்கள், தாசிகள் கல்விகற்றுமதுரமாய்ப் பேசுவதேயிதற்குக் காரணமாயிருக்கிறது, பெண்கள் கல்விகற்றிருந்தால், அவர்கள் அழகில்லாதவர்களா யிருந்தாலும் அவர்களைப் புருஷர்கள் விரும்புவார்க ளென்பதற்கும், பெண்களுடைய கல்வியானது, புருஷர்கள் தாசிகள் வீட்டுக்குப் போகிறவழியை அடைக்கு மென்பதற்கும். இதுவே சாட்சியமா யிருக்கிறது.

ஒரு புருஷனுக்குத் தன்பெண்சாதிமேல் சந்தேகமுண்டாகி, அவளைக்கண்டித்துத் தலைமண்டையுள்ளவரையில் சோரநாயகனைச் சேருகிறதில்லை யென்று சத்தியம் பண்ணும்படி, கேட்டானும், அவள் புருஷனுக்குத் தெரியாமல் ஒரு மண்டையோட்டை யெடுத்துத் தலைமேல் வைத்துக்கொண்டு 'தலைமண்டை யுள்ளவரையில் வியபசரிக்கிறதில்லை யென்று பிரமாணஞ் செய்து கொடுத்து, பழையபடியே நடந்து வந்தாளாம் இப்படிப்பட்ட படியாத ஸ்திரீகளுடைய கற்பைப் புருஷன் தடியெடுத்துக்கொண்டு காக்கவேண்

டியதாயிருக்கின்றதே. பெண்கள் படித்தால், அவர்களுடைய கலவியேகற்புக்குக் காவலாயிருக்கு மென்பது நிச்சயமே.

“சிறை காக்குங் காப்பெவன் செய்யும், மகளிர்
நிறை காக்குங் காப்பே தலை.

என்று திருவள்ளுவநாயனர் சொல்வது உண்மைதானே.

புருஷர்கள் தூரமான ஊருக்குப் போயிருக்கும்பொழுது அவர்கள் அனுப்புகிற அந்தரங்கமான கடிதங்களைப் பெண்கள் வாசிக்கத்தெரியாமையினாலே அந்நிய புருஷர்களிடத்திற் கொடுத்து வாசிக்கச்சொல்வதும் அவர்களைக் கொண்டேபதில் எழுதுவதும் வழக்கமாயிருக்கின்றது பொருளுக்குத் திருடனைக் காவல்வைத்தது போலவும். கிளிக்குப்பூனையையும், பசுவுக்குப் புலியையுந் துணைவைத்தது போலவும், ஸ்திரீபுருஷர்களுடைய அந்தரங்கங்களை அன்னிய புருஷர்கள் அறிவது எவ்வளவு பிரமாதமான காரியம்? படித்திருந்தால அவர்கள் சுயமாகக் கடிதங்களை வாசிக்கவும் மறுமொழி யெழுதவுங் கூடுமாயிருக்கு மல்லவா?

ஸ்திரீகள் படித்தால் புருஷர்களுக்கு அடங்கமாட்டார்களென்று சிலர் சொல்லும் ஆக்ஷேபத்திற்குச் சமாதானஞ் சொல்லுகிறோம், பக்ஷி எவ்வளவு உயரப்பறந்தாலும் ஆகாசத்துக்கு உட்பட்டிருப்பது போல ஸ்திரீகள் எவ்வளவு படித்தாலும் புருஷர்களுக்குத் தாழ்ந்தவர்களே தவிர மேற்பட்டவர்களல்ல சிருஷ்டிக் கிரமத்தில் ஸ்திரீயைப் பார்க்கிலும் புருஷன் சிரேஷ்டனென்பதற்கு அநேகசாக்ஷியங்கள் உண்டு, சகல சமயத்தார்களும் தெய்வத்தை ஆண்பாலாகப் பேசுகிறார்களே யல்லாது பெண்பாலாக ஒரு சமயத்தாரும பேசவில்லை கடவுள் முந்தி ஆணை உண்டுபண்ணிப்பிறகு பெண்ணை உண்டுபண்ணினதாகச் சகல மதஸ்தர்களும் நிராக்ஷேபமாக அங்கீகரிக்கிறார்கள் சரீரபலம், தைரியம், பராக்கிரமம், விவேகம், அறிவு முதலிய சாமர்த்தியங்களில் ஸ்திரீகளைப்பார்க்கிலும் புருஷர்கள் விசேஷித்தவர்களென்பது நிஸ்ஸந்தேகமா யிருக்கின்றது சில ஸ்திரீகள் மேற்கண்ட சாமார்த்திய விஷயங்களில சில புருஷர்களுக்கு மேற்பட்டிருந்தாலும் இருக்கலாம் ஆனால் அப்படிப்பட்ட சாமர்த்தியமுள்ள பெண்களையும் புருஷர்களையும் எண்ணிப் பார்க்குமிடத்தில்புஜபலபராக்கிரமமும்புத்திதீக்ஷண்யமும் விவேகமும் உள்ள புருஷர்களுடைய தொகை அதிகரிக்குமென்பதற்கு

அற்பமும் சந்தேகமில்லை, ராஜர்கள் மந்திரிகள் பிரதானிகள், தன கர்த்தர்கள், படைவீரர்கள் முதலிய சகல அதிகாரிகளும் மற்ற உத்தியோகஸ்த்தர்களும் புருஷர்களே தவிரப் பெண்கள் அல்லவே.

இங்கிலீஷ் தேசமுதலிய சிலதேசங்களில் தவிர இதரதேசங் களிலெல்லாம் பெண்கள் பட்டாபிஷேகத்துக்கு அநருகர்களெ ன்று திரஸ்கரிக்கப்படுகிறார்கள் இங்கிலீஷ் தேசத்திற்கூட ராஜ குடும்பங்களில் புருஷசந்ததி யில்லாமற்போனால் மட்டும் ஸ்திரீ களுக்குப் பட்டங்கட்டலாமென்கிற விதியிருக்கின்றது.

சத்துருக்களுடன் யுத்தஞ்செய்து செயித்தல் துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்தல், சட்டசாஸ்திரங்கள் உண்டுபண்ணுதல் பாலம் இருப்புப்பாதை முதலியவைகளைக் கட்டுதல், ஆறு, குளம் ஏரி, முதலியவைகளை வெட்டுதல், காடுவெட்டிக்கரம்பு திருத்தி பயிரிடுதல், தேசாந்தரங்களில் தீபாந்திரங்களில் சென்று வியா பாரங்கள் செய்தல், நாட்டிலும் காட்டிலும் கடலிலும் கரையிலும் பலவிதமாகப் பாடுபடல் இவைமுதலிய தேகவன்மைக்கடுத்த சகல காரியங்களும் புருஷர்களால நடத்தப் படுகின்றனவே யல்லாமல் பெண்கள் அந்த வேலைகளுக்குத்தக்க அசமர்த்தர்களா யிருக்கிறார் கள் அவர்களுக்குச் சகஜமான தூர்ப்பலம் அதைரியம், பேதமைத் தனம், நாணம், அச்சம முதலியகுணங்களாலும் கர்ப்பம், பிரசவம் முதலிய துன்பங்களாலும அவர்கள் கஷ்டமான தொழில்களுக்கும் மற்றை உத்தியோகங்களுக்கும் அசக்தர்களென்பதை அவர்களே நிர்விவாதமாக ஒப்புக்கொள்வார்கள்.

ஒரு தேசத்துக்கு இரண்டு அரசர்க ளிருந்தால் தேசகாரியம் எப்படிச் சரியாக நடக்கமாட்டாதோ அப்படியே ஒரு குடும்பத்து க்கு இரண்டு எஜமான்களிருநதால குடும்பகாரியம ஒரு போதும் செவ்வையாக நடக்கமாட்டாது ஆகையால் ஒவ்வொரு குடும்பத்துக் கும் ஒரே எஜமானிருக்க வேண்டியது முக்கியம சரீரசக்தியிலும் புத்தியிலும் வித்தையிலும் தேசகாரியங்களை நடப்பிக்குந்திறமையி லும், குடும்ப சம்ரக்ஷணை செய்வதிலும் விசேஷசமர்த்தர்களான புருஷர்களே எஜமானத் துவததுக்கும் யோக்கியர்களானதால் ஸ்திரீகள தெய்வத்துக்குப் படிந்துநடப்பது போலப் புருஷர் களுக்கும் படிந்து நடக்கவேண்டு மென்பது வேதவாக்கியமா யிருக்கின்றது.

மேலும் ஆதியில்பெண்ணானவள் முந்திப்பாவஞ்செய்து புருஷனையுங்கெடுத்தவளாதலால் அவள்மேல் புருஷன் அதிகாரஞ்செலுத்தவும் அந்த அதிகாரத்துக்கு அவள் உட்பட்டிருக்கவும் பிரசவவேதனை முதலிய துன்பங்களை அனுபவிக்கவும் தெய்வசாபம்பெற்றுக்கொண்டவளாயிருப்பதால் அவள் எவ்வளவு படித்தாலும் புருஷனுக்கு அடங்கி நடக்கவேண்டியவளேயல்லாது, அதிக்கிரமிக்ககூடாது.

ஆத்தும சுத்தியாகிய நெஞ் சிலக்கணந் தெரியாதவளுக்குப் பஞ்ச லக்கணந் தெரிந்து பலனென்ன? புருஷன்மேல் இலக்ஷியமில்லாதவளுக்கு லக்ஷியம் (இலக்கியம்) தெரிந்து பிரயோஜனமென்ன? இங்கிதந் தெரியாதவளுக்குச் சங்கீதந்தெரிந்து சபலமென்ன? வீட்டுக்காரியந் தெரியாதவளுக்கு நாட்டுக்காரியந் தெரிந்து நன்மையென்ன? பாக சாஸ்திரந் தெரியாதவளுக்கு லோக சாஸ்திரந் தெரிந்துலாபமென்ன பிண்டசாஸ்திரந் தெரியாதவளுக்கு அண்டசாஸ்திரந்தெரிந்து காரியமென்ன? ஆகையால் குணமில்லாதவளுடைய வித்தையெல்லாம் அவித்தையே அவளுடைய ஞானமெல்லாம் அஞ்ஞானமே. அவளுடைய விவேகமெல்லாம் அவிவேகமே.

சகல புருஷருக்கும் மேலான பரமபுருஷனும், பரமாத்மாவுமான கடவுளுடைய கட்டளை சர்வோத்திருஷ்டமானதால் அந்தக் கட்டளைக்கும் ராஜநீதிக்கும் தர்மத்துக்கும் விரோதமில்லாமல், புருஷன் சொல்லுகிற சகல கட்டளைகளுக்கும் பெண்சாதி கீழ்ப்படிய வேண்டியவளாயிருக்கிறாள் சிலவிஷயங்களில் ராஜாவைப் பார்க்கிலும குடிகள் விசேஷ புத்திமான்களாயும், கல்விமான்களாயுமிருந்தாலும், ராஜாவினுடைய ஆக்கினைக்குக் குடிகள் எப்படி உட்படவேண்டியவர்களோ அப்படியே புருஷனைப்பார்க்கிலும், ஸ்திரீ புத்தியிலும் வித்தையிலும் விசேஷபாண்டித்தியமுள்ளவளாயிருந்தாலும் அவள் புருஷனுக்கு அடங்கி அவனுடையமனோபீஷ்டப்படி நடக்கப்பாத்தியப் பட்டிருக்கிறாள் அப்படியிருக்க ஸ்திரீகள் படித்தால், தங்களுக்கு அடங்கமாட்டார்களென்று புருஷர்கள் பயப்படுவது வியர்த்த பிராந்தியே தவிர உண்மையலல.

புருஷர்களுக்கு உபகாரார்த்தமாகச் சிருஷ்டிக்கப்பட்ட பெண்ஜன்மம் பிரியகரமாயிருக்கின்றது இராத்திரிகாலங்களில் பிரகாசிக்கிற தீபங்கள்போல சமுசாரமாகிய அந்த காரத்துக்கு ஸ்திரீகளே

தீபங்களாயிருக்கிறார்கள் விருக்ஷஜாதிகளுக்கு அழகைக் கொடுக்கிற புஷ்பங்கள் போலவும், ஸ்திரீகள் விளங்குகிறார்கள் ஆனால் கல்வியில்லாமையால் வாசனையில்லா புஷ்பங்கள் போலவும் குடத்தி லிட்ட விளக்கைப் போலவும் சாணைபிடியாத ரத்தினங்கள் போலவு மிருக்கிறார்கள் சில ஸ்திரீகள் தெற்கு வடக்கு தெரியாமலும் சூரியன் இன்னதிக்கில் உதிக்கிறானென்பது தெரியாமலும், தங்களுடைய கையிலிருக்கிற விரல்கள் இத்தனையென்று தெரியாமலும் தீர்க்கமௌட்டிய முள்ளவர்களாயிருக்கிறார்கள் இப்படிப்பட்ட அவிவேகமுள்ள ஸ்திரீகளே நமக்குத் தாய்மார்களாயும், சகோதரிகளாயும், பத்தினிகளாயு மிருப்பதால் நமக்கு எப்போதும் மூட சாவகாசமே நிலைத்துவிட்டது ஒரு புருஷன் படியாதவனாயிருந்தால் ஒரு நிமிஷமாயினும் அவனுடன் நாம் சேர்ந்திருக்கமாட்டோம். நம்முடைய ஆயுசு முழுவதும் மூடஸ்திரீகளுடன் சாவகாசஞ் செய்யநாம் சம்மதித்திருப்பது சகவாசதோஷமோ அல்லது வேறென்ன காரணமோ தெரியவில்லை.

கல்லாத ஸ்திரீகளுக்குக் கல்வியின் அருமை தெரியாதபடியால் அவர்கள் பிள்ளைகளின்படிப்புக்கும் விக்கினமாயிருக்கின்றார்கள் படிக்கும்படி, பிள்ளைகளைத் தகப்பன்மார்களும் உபாத்தியாயரும் கண்டிக்கும்போது, அவர்களைத் தாய்மார்கள் கண்டித்தும்படிப்புக்கு விகாதஞ்செய்கிறார்கள், புருஷனை யிழந்த ஒரு ஸ்திரீயினுடைய பிள்ளை கல்வியில் அதிகமுயற்சி யுள்ளவனாய்த் தர்மபாடசாலைக்குப் போய்ப் படித்துக்கொண்டு வருவான் அவன் வீட்டிலும் பூகோளம், வானசாஸ்திரம். முதலிய புஸ்தகங்களை ஓயாமல வாசித்துக் கொண்டிருப்பான். அவனைப் படிக்க வேண்டாமென்றும் கூலி வேலை செய்யும்படிக்கும் அவனுடைய தாய்சொல்லியும் அவன் கேட்கவில்லை ஒரு நாள அவன்வெளியே போயிருந்த சமயத்தில் அந்தப் பரமசண்டாளி பிள்ளைமேலிருந்த கோபத்தைப் புத்தகங்களிடத்திற் காட்ட ஆரம்பித்தாள் அவள் பூமிசாஸ்திரத்தைக் கிழித்து பூமியின்மேல் எறிந்துவிட்டாள் வானசாஸ்திரத்தைக் கிழித்து வானத்திற் பறக்கும்படி எறிந்து விட்டாள். அக்கினி சாஸ்திரத்தைக் கிழித்து அக்கினியிற் போட்டுவிட்டாள் கூட்டல் கழித்தல் பெருக்கல் கொடுத்தல் முதலிய விதிகளடங்கிய கணித சாஸ்திரத்தைக் கிழித்துத்துண்டுகளாக்கி அவைகளைக் கூட்டிப், பெருக்கிக் கழித்துக் குப்பைக்குக் கொடுத்துவிட்டாள், இலக்கண

மென்கிற நல்லபெயரைவைத்துக் கொண்டு விகாரம், வேற்றுமை விகற்பம் ஐயம் திரிபு, மயக்கம், வழி, அல்வழி, முதலிய அவ குணங்கள் அடங்கிய அந்த நூலேக்கிழித்து, ஒருமையைப் பன் மையாக்கி நெடிலேக்குறிலாக்கி வல்லினத்தை மெல்லினமாக்கி ஆண்பாலேப் பெண்பாலாககி, பெண்பாலேயும் அலியாக்கி விகாரப் படுத்தி, வேறுபடுத்தி அந்த நூலின் குணத்தை அவனிடத்திலே யே காட்டினுள் நியாயசாஸ்திரத்தைக் கிழித்து அநியாயஞ்செய் தாள் தர்க்கத்தைக் குதர்க்கஞ் செய்தாள் இவ்வகையாக ஒரு நிஷ த்தில் தன் பிள்ளேயின் படிப்பைப் பூர்ணஞ்செய்து விட்டாள் அந்த ஸ்திரீபடியாமையினுல் பிள்ளேக்குச் சத்துருவாளுளென்பது பிரசன்னமல்லவா?

ஞானதேகத்தை வளர்ப்பதற்குக் கல்வி எப்படி அவசியமோ அப்படியே ஸ்தூலதேகத்தை வளர்ப்பதற்கும் கல்வி உபயோகமா யிருக்கின்றது, கல்வியினுல் உண்டாகிற மனேர்ச்சாகமும் ஞான சந்தோஷமும் நற்குண நற்செய்கைகளும் வியாதிக்குப் பிரதிபந்தங் களாக இருக்கின்றன அப்படியே தேகசுத்தமும் கிரகசுத்தமும் கிரமமான அகாராதிகளும், தேக சௌக்கியத்துக்கு முக்கிய சாத ங்களா யிருக்கின்றன ஸ்திரீகள் படியாமையினுல் தேகசுத்தம் இல்லாமலும் கிரகசுத்தமில்லாமலும் சமயோசிதமான பரிபக்குவ ஆகாரங்களேச் செய்யத்தெரியாமலும் பரம்பரைவழக்கப்படி ஒரே தன்மையான ஆகாரங்களேச்செய்து வருகிருர்கள் அதனுல வியா திக்கிடமாகிய நம்முடைய தேகங்களே வைத்தியர்கள் கையில் ஒப்பு விக்கும்படி சம்பவிக்கின்றது இந்த தேசத்து வைத்தியர்களில் சிலர் இந்தலோகத்து மனுஷர்களேப் பரலோகத்துக்குப் பிரயாணப் படுத்தி அனுப்புவதில் கைதேர்ந்த பண்டிதர்கள் அவர்களில்லா விட்டால் பரலோகம் குடியில்லாமல் பாழாய்ப் போய்விடும் இந்த உலகத்திலும் ஜனங்கள் திரளாயதிகரித்து நெருக்குண்டு துன்பப் பட ஹேதுவாகும் அந்த வைத்தியர்கள் கொடுக்கும் கைகண்ட மாத்திரை வைகுண்டயாத்திரை-அவர்கள் மருந்து எமனுக்கு விரு ந்து அவர்களுடைய சூரணமே மாரணம் அவர்களுடைய வைத்தி யே சைத்தியம் அவர்களுடைய கிருதமேமிருதம் அவர்களுடைய பஸ்பமே விஷமமாயிருக்கு மழை எப்படியோ அப்படியே பிற ருக்குவருகிறபேதி சுரம் முதலிய ரோகமே வைத்தியர்களுக்கு யோகம்மற்றவர்களுக்குத் தேகத்திலுண்டாகிற ரணமே வைத்தியர் களுக்குப்பணம் இப்படிப்பட்ட வைத்தியர்களுக்குத் தப்பமன

முடைய புருஷர்கள் அகத்தியம் பெண்களுக்குக் கல்வி போதிப்பார்களென்று நம்புகிறோம்.

படியாத ஸ்திரீகளுடைய அறியாமையால் தங்களைப் பலசித்திராக்கினைகளுக்கு உட்படுத்திக்கொள்ளுகிறார்கள் நியாயாதிபதிகள் குற்றவாளிகளுக்குக் கால்விலங்குமட்டும் போடுகிறார்கள் ஸ்திரீகளோவென்றால் உலக்கைக்குப் பூண்கட்டினதுபோல பாடகம் பாதசரம், தண்டை, சிலம்பு, கொலுசு முதலிய பலகால் விலங்குகளையும் காப்பு, தோடா, வளையல் கங்கணம் என்று பெயர்கொண்ட பலவகைவிலங்குகளையும் முத்துமாலை சந்திரஹாரம் கண்டசரம் முதலிய பலகழுத்து விலங்குகளையும் தலைசிங்காரமென்று பெயர்பெற்ற தலைவிலங்குகளையும் ஒட்டியாணமென்று சொல்லப்பட்ட இடுப்புவிலங்கையும் மோதிரங்களாகிய விரல்விலங்குகளையும் தரித்துக் கொள்ளுகிறார்கள் காதுகளிலும் மூக்குகளிலும் சல்லடைக் கண்கள் போலபல துவாரங்களைச் செய்து பலநகைகளை மாட்டுகிறார்கள் அஞ்ஞான வடிவமாகிய ஸ்திரீகளுடைய தேகங்களையும் ஞானோபதேசம் நுழையாத அவர்களுடைய காதுகளையும் பலவிலங்குகளிட்டுச் சிக்ஷிப்பது கிரமந்தான் புஸ்தகங்களைப் பாராத கண்களையும் வாசிக்காதவாயையும் விலங்கிட்டு சிக்ஷியாமல் வெறுமையாய் விட்டுவிட்டகாரணந் தெரியவில்லை பூர்வீகத்தில் ஒருவன் குற்றவாளியென்று தெரியும்படி அவனுடைய நெற்றியில் அரசர்கள் பச்சை குற்றிவிடுவது வழக்கமாம் இந்தக்கொடிய தண்டனையையும் ஸ்திரீகள் தங்களுக்குத் தாங்களே செய்து கொள்ளுகிறார்கள் ஸ்திரீகள் நெற்றியிலும் கரசரணுதிகளிலும் பச்சை குற்றிகொள்ளும் பொழுதும் தேகத்தில் பல ஆபரணங்களைத் தரித்துக்கொள்ளும் பொழுதும் உண்டாகிற உபத்திரவத்தைச் சகிக்கமாட்டாமல் பல்லைக் கடித்துக்கொண்டும் முகத்தைச் சுழித்துக்கொண்டும், அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாயிருக்கிறார்கள் இப்படிப்பட்ட உபத்திரவத்தை யநுபவிக்கும்படி அவர்களையார் அடித்தார்கள்? சுயமாகவே அழகுள்ளவளுக்குப் பூட்டப்பட்ட நகைகள் அவளுடைய அழகை மறைக்கின்றன அழகில்லாதவளுக்குத் தரிக்கபபடுகிற நகைகள் அவளுடைய அங்கவிகாரத்தை அதிகமாயெடுத்துக்காட்டுகின்றன ஸ்திரீகளுக்குக் கல்வியென்கிற ஞானுபரணங்கிடைத்தால் ரத்நாபரணங்களென்று சொல்லப்பட்ட துன்பத்துக்குரிய விலங்குகளை அவர்களே வெறுத்துத்தள்ளுவார்களென்பது உண்மையே.

கல்வியின் பெருமை வாசாமகோசரமா யிருக்கின்றது பிரகாசத்திற்கும் அந்தகாரத்திற்கும் புண்ணியத்திற்கும், பாவத்திற்கும், சுத்தத்திற்கும அசுத்தத்திற்கும் எவ்வளவு பேதமோ அவ்வளவு பேதம் செல்வப் பொருளுக்கும் கல்விப் பொருளுக்கும் உண்டாயிருக்கின்றது. செல்வம்புத்தியைக்கெடுக்கும் கல்வி புத்தியைக்கொடுக்கும் செல்வம் கொடுக்கக் கொடுக்கக்குறையும் கல்வி கொடுக்கக் கொடுக்க நிறையும் செல்வம் சிலநாளில் நாஸ்தியாம் கல்வி அழியாத ஆஸ்தியாம் செல்வம் திருடர்களால் அபகரிக்கப்படும் கல்வி யாவராலும் உபசரிக்கப்படும் செல்வம் நம்மைத் துஷ்டர்கையில் ஒப்புவிக்கும் கல்வி நம்மை ஆபத்திலிருந்து தப்புவிக்கும் செல்வம் காமாதிகளை உண்டாக்கும் கல்வி காமாதிகளை நாசமாக்கும் செல்வர்களுடைய பேர் அந்நிய தேசங்களில் அப்பிரசித்தம் கல்விமான்களுடையபேர் ஜகத்பிரசித்தம் கல்வியேதனம் கல்வியேகனம் அழகில்லார்க்குக் கல்வியே அழகு ஆபரணமில்லார்க்குக்கல்வியே பூஷணம் பலமில்லார்க்குக் கல்வியே பலம் துக்கமுள்ளார்க்குக் கல்வியே சுகம், தரித்திரர்களுக்குக் கல்வியே பாக்கியம் ஆபத்துவேளையிற் கல்வியேகவசம் கல்வி நினைத்த தெல்லாம் தருஞ் சிந்தாமணி.

ஆற்றின்மணலை யெண்ணினாலும் நக்ஷத்திரக் கூட்டங்களை யெண்ணினாலும் உலகம் உண்டானதுமுதல் வர்த்தமானகாலம் வரையில் இறந்து போனவர்களுக்குத் தொகை சொல்லக்கூடுமா? அவர்களுடைய பெயர்களெல்லாம் அப்பிரகாசமாய் மறைந்து போய்விட்டன, வித்வான்களுடைய பெயர்களும் அவர்களுடைய கிரந்தங்களும் என்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன பூர்வீக சரித்திரங்களை யெழுதிப் பூர்வீக அரசர்களுடைய பெயர் விளங்கும்படி செய்தவர்களும் கல்விமான்களே - கல்விமான்களுடைய கிருபையில்லாவிட்டால் அந்த அரசர்கள் இறந்த நிமிஷத்தில் அவர்களுடைய பெயர் அப்பிரகாசமாய்ப் போயிருக்குமென்பது சந்தேகமா? இங்கிலாந்து பிரான்சு முதலான ஐரோப்பாகண்டத்திலுள்ள நாகரீகமும் நீதியுமொழுங்கும் செல்வமும்அபூர்வமான வேலைகளும் அந்தத்தேசத்தாருடைய கல்வித்திறத்தினாலும் அவர்கள் அநுசரிக்கிற சத்தியவேதக்கொள்கையினாலும் உண்டாயினவே, யல்லாமல், மற்றவைகளாலல்லவேசமுத்திரத்தைக் கிணறு விழுங்கியதுபோல இந்த இந்துதேசத்திலுள்ள கோடாநுகோடி ஜனங்களைச் சில இங்கிலீஷ்காரர்கள் ஆளுவது கல்வியின் பலத்தினாலே யல்லாமல் சரீரபலத்தினாலல்லவே.

படியாதவர்கள் தங்கள் சுதேசகாரியங்களையே அறியாதவர்களாயிருக்கிறார்கள் படித்தவர்கள் பூமண்டலமெல்லாம் சஞ்சரிக்கிறவர்கள்போல பூதபவிஷ்ய வர்த்தமானங்களையெல்லாம் பலபத்திரிகைகள் மூலமாகத்தெரிந்து கொள்ளுகிறார்கள் படியாதவர்கள் இப்போதிருக்கிற வித்வான்களையே அறியார்கள் படித்தவனோவென்றால் தற்காலவித்வான்களை மட்டுமல்ல பூர்வீகவித்வான்களையும் முகமுகமாகத் தரிசித்துச்சம்பாஷணைஞ் செய்கிறவன்போல் அவர்களுடைய கிரந்தங்களிலுள்ள நீதிகளையும் அலங்காரங்களையும் வேதார்த்தங்களையுங் கற்றுக்கொள்ளுகிறான் எப்படியென்றால் திருவள்ளுவரையும் ஒளவையாரையுங்கண்டு தண்டம்சமர்ப்பித்து ஓ ஐயரே ஓ அம்மையே உங்களுக்குத் தெரிந்தநீதியைக்கற்பியுங்கள் என்றுகேட்பதுபோலக்குறள் மூதுரைமுதலிய நூல்கள் மூலமாகச் சகலநீதிகளையும் கற்றுக்கொள்ளுகிறோம் கம்பருக்கு நமஸ்காரஞ் செய்து ஓ கவிசிரேஷ்டரே உமது கம்பசித்திரங்களையும் அபார கற்பனைகளையும் உல்லேகங்களையும் எங்களுக்குப் படிப்பியும் என்று யாசிப்பதுபோலக் கம்பராமாயணமூலமாகச் சகல கற்பனைகளையும் கற்றுக்கொள்ளுகிறோம்காளமேகப்புலவரை மடிபிடித்துக்கொண்டு ஓ கவிராயரே நீர் எங்கள் மேல்வசைபாடினாலும் உம்மைவிடோம் நிந்தாஸ்துதிபாடுந்திறமையை எங்களுக்குப்போதியும் என்று வழக்காடுவதுபோல அவருடைய பாடல்களை கற்றுக்கொள்ளுகிறோம் வீரமாமுனிவருக்குச்சரணஞ்செய்து குருசிரேஷ்டரே தேமபாவணி தொண்ணூல் சதுரகராதிமுதலிய நூலகளைக்கற்பித்தருளும் என்று விண்ணப்பஞ்செய்து கற்றுக்கொள்வதுபோல் அந்த நூல்களைப் படிக்கிறோம் இப்படியே பூர்வீகவித்வான்களெல்லாம் ஆசாரியர்களாகவும் நாம்மாணாக்கர்களாகவும் இருக்குந்தன்மைபோல், இலக்கண இலக்கியங்களையெல்லாம் கற்றுக்கொள்ளுகிறோம்.

படித்தவனுக்கு உலகமே ஒருபெரிய புஸ்தகமாயிருக்கின்றது பஞ்சபூதங்களும் பூமியிலுள்ள மலைகள் மரங்கள் கடல்கள் நதிகள் முதலியவைகளும் வானத்திலுலவும் சந்திரசூரிய நக்ஷத்திரங்களும் மேகங்களும் தத்துவஞானத்தையுபதேசிக்கிற குருமூர்த்திகளாயிருக்கின்றன பூமியிலுள்ள நாநாபேத ஜீவாத்மகோடிகளையும் விருக்ஷாதிகளையும் அநத விருக்ஷங்களிலுள்ள மரகதத்தகடுபோன்ற இலைகளையும் நவரத்தினத்தையொத்த பரிமள புஷ்பங்களையும் கற்கண்டுக் கட்டிபோன்ற மதுரக் கனிகளையும் பலவர்ணமுள்ள அழகிய பக்ஷிகளையுங் கல்விமான பார்த்துப் பார்த்து நேத்திராநந்தத்தை யடைகிறான் வானம்பாடி, குயில், கிளி, பூவை, முதலிய பக்ஷிகள் பாடும் சங்கீதத்தைக் கேட்டு சுரோத்திராநந்தத்தை யநுபவிக்கிறான், அந்த ஆநந்தங்களைக் கொடுத்தரம கிருபாநிதியை உடனே

தியாநித்து ஆத்மாநந்தத்தையும் அடைகிறான். படியாதவனோவென்றால் அந்த ஆநந்தங்களை அனுபவிக்கத் தெரியாமல் சஞ்சாரப்பிரேதம்போலக் கண்ணிருந்தும் பாராதவனாகவும், காதிருந்துங்கேளாதவனாகவும், மனமிருந்தும் நினையாதவனாகவுந் திரிகிறான்.

நல்ல புத்தகங்கள் படிக்கப்படிக்க எவ்வளவோ பிரியமாயிருக்கின்றன அவைகளைப் படிக்கும்போது பசிதெரியவில்லை. பொழுது போவதுதெரியவில்லை. ஆகாரநித்திரைகளில் அபேக்ஷையில்லை மன்வருத்தங்களெல்லாம் நீங்கிப்போகின்றன. அந்த காரணங்களைப் பற்றியே ஐரோப்பியர்கள் எப்போதுங் கிரந்த காலக்ஷேபஞ் செய்கிறார்கள். இந்தத் தேசத்துப் பிள்ளைகள் பாடசாலைகளை விட்டவுடனே படிப்பையும் விட்டுவிடுகிறார்கள். குற்றஞ் செய்கிறவர்களைக் கட்டித் தூக்குவதுபோலப் புஸ்தகங்களைக் கட்டுத்தூக்குப் பலகையில் வைத்து விடுகிறார்கள் பின்பு அந்தப்புஸ்தகங்களின் சாரம் எலிக்கும் கறையான் முதலிய பூச்சிகளுக்கும் உபயோகமாகிறதே தவிர நம்முடைய பிள்ளைகளுக்கு உபயோகமாகிறதில்லை பிள்ளைவரத்துக்குப் போய்ப் புருஷனைச்சாகக்கொடுத்ததுபோலும் தாதுபுஷ்டிக்கு மருந்து சாப்பிட உள்ள புஷ்டியும்போய் விட்டது போலவும் சிலர் இங்கிலீஷ் முதலிய அன்னிய பாஷைகளைப்படிக்க ஆரம்பித்து அந்தப்பாஷையுந தெரியாமல் சொந்தப்பாஷையுந் தெரியாமல் எந்தப் பாஷையுந் தெரியாமல் அபாஷிகளாய்ப்போய் விடுகிறார்கள் சிலர் அன்னிய பாஷைகளில பூரணவிற்பன்னர்களாயிருந்தும் சொந்தப் பாஷையைப் படியாமல் அந்தரத்தில் விட்டுவிடுகிறார்கள். சுயபாஷையில் பிழைப்பிலலாமல் இரண்டுவரி சேர்த்தெழுதத்தெரியாமலும் தங்களுடைய பெயரையே சரியாயெழுதத் தெரியாமலும் வைத்தியநாதன் என்பதற்குப் பைத்தியநாதன் என்று கையெழுத்து வைத்துக்கொண்டு சிலர் ஜீவிக்கிறார்கள் ஐரோப்புகண்டத்தில் சுயபாஷையில் தனனுடைய கையெழுத்தையே பிழையற எழுத்தெரியாதவனுக்கு ஒரு அற்ப உத்தியோகமுங் கிடைக்கமாட்டாது. இநதத்தேசத்தில் அந்நிய பாஷையைக் கற்றுக்கொண்டு சுயபாஷை தெரியாமலிருப்பவர்களுக்கே பிரபலமான உத்தியோகங்கள் கிடைக்கின்றன. அதற்காக நாம் பொறாமை கொள்ளவில்லை. இங்கிலீஷ் பிரான்சுமுதலிய அந்நிய பாஷைகளில் பலவிஷயங்களைப்பற்றி அருமையான அநேககிரந்தங்களிருக்கின்றமையால் அந்தப் பாஷைகளைப் படிக்கிற இந்தத்தேசத்தார்

அந்தக்கிரந்தங்களிலுள்ள அருமையான பொருள்கள் இந்தத்தேசத்து ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் உபயோகமாகும் பொருட்டு சுதேச பாஷைகளில் வசனகாவியங்கள் எழுதவேண்டுமென்பதே நம்முடைய மனோரதமாயிருக்கின்றது.

காவியரூபமாயிருக்கிற இந்தத்தேசத்துக் கிரந்தங்கள் அநேகருக்கு அப்பிரயோஜனமாயிருக்கின்றன. சிலவித்வான்களுடைய பாடல்களை நாம் நாள் முழுதும் பார்த்தாலும் அர்த்தம் விளங்கவில்லை. அவர்களுக்குத்தான பயன் தெரியுமோ தெரியாதோ அதுவும் சந்தேகம். அவர்கள் எந்தத் தெய்வத்தின்மேலே பாடியிருக்கிறார்களோ அந்தத் தெய்வத்துக்குத்தான் அர்த்தம் தெரியுமோ தெரியாதோ அந்தத் தெய்வத்தைக் கேட்கவேண்டும். அந்தக்கவிகளைச் சிறந்த வித்வான்களிடத்திற் காட்டினாலும் அவர்களுக்கும் பொருள் தெரியவில்லை. அந்தப் பாடல்களிற் பிரயோகிக்கப்பட்ட அருமபதங்கள் அகராதியிலும் அகப்படவில்லை. சிறு நூல்களுக்கு சிலவித்வான்கள் செய்திருக்கிற உரைகளும் சில இங்கிலீஷ் புஸ்தகங்களுக்குச் சிலர் செய்திருக்கிற மொழிபெயர்ப்புகளும் தமிழோ பிரமலிபியோ, அல்லது வேறென்ன பாஷையோவென்று தெரியாமல் பிரமிக்கும்படியாயிருக்கின்றது. மூலத்தைப் பார்த்து அந்த உரைக்கு அர்த்தஞ் செய்ய வேண்டியதாயிருக்கின்றது. கலியாணஞ்செய்தும் சந்நியாசம் கடன்வாங்கியும் உபவாசம் என்பதுபோல ஒரு நூலுக்கு உரையிருந்தும் அநுபோகமாயிருப்பது ஆச்சரியமல்லவா.

கண்குருடானாலும் நித்திரைக்குக் குறைவில்லையென்பதுபோல ஸ்திரீகளுக்குப் படிப்பில்லாவிட்டாலும் அவர்களிடத்தில் சிலவித்வான்கள் தாங்கள் கற்றவித்தையைக் காட்டுகிறார்கள். குண்டுச்சட்டியிற் குதிரையோட்டுவதுபோலும் சப்பாணிக்கு நொண்டி சண்டப்பிரசண்டனென்பதுபோலும், அந்த வித்வான்கள் தங்கள் பெண்சாதிகளிடத்திற் பேசும்பொழுதும் கடினபதப்பிரயோகஞ் செய்கிறார்கள். ஒரு கவிராயன் ஒரு பிரபுவினிடத்தில் ஒரு குதிரை பரிசு பெற்றுக்கொண்டு வீட்டிற்கு வந்தான். அந்த விசேஷத்தை அறியாத அவனுடைய பத்தினி வெளியேபோய் வந்தீரே என்னசுபமென்றாள். அவன் குதிரை வந்ததென்று சொல்லாமல் அசுவம், கோரம், மா, வாசி என்கிற குதிரைக்குள்ள பலபெயர்களைத் தனித்தனியே சொல்ல ஆரம்பித்தான். என்ன சுபமென்று கேட்டமனைவிக்கு அசுவம் வந்ததென்று முந்திகாணவன் சொன்ன

னவுடனே ஏதோ துக்ககாரியம் சம்பவித்ததென்று மனைவிமயங்கினாள். உடனேகோரம் என்றவேற்றுரு பெயரை புருஷன் சொன்னான் கோரமான துக்கம் வந்ததென்று பத்தினி அதிகமாகக்கலங்கினாள். அதுகண்ட கணவன் மா, மா, என்று ஒருதரத்துக் கிரண்டுதரமாக வசனித்தான் மாமாவுக்குப் பெரிய ஆபத்து வந்ததென்று பெண்சாதி நினைத்துக் கூக்குரலிட்டழுதாள் அந்த ஓசை கேட்டு ஊராரெல்லாம் ஓடிவந்து கூடினார்கள். அந்த வித்வான் இன்னுந் தனபெண்சாதிக்குத் தெரியவில்லையே யென்று கோபித்து வாசி என்றான், அதுகேட்டு மாமாவுக்குப் பெரிய வியாதிகண்டு வாசியானதாகப் பெண்சாதி நினைத்து மனந்தேறினாள். கடைசியாய் வித்வான் வெளிப்படையாகக் குதிரைவந்ததென்று சொல்லப்பெண்சாதி நாணத்தையும் பயத்தையும் அடைந்தாள் இவ்வகையாகப் புருஷனுக்கும் தனக்கும் நடந்த சல்லாபத்தைப் பெண்சாதி தன் தோழிக்கு சொன்னதாகப் பாடிய விருத்தம.

சுந்தரியேபுறமேகிவந்ததுணைவரைநோக்கிச்
 சுபமென்னென்றேன்
வந்ததோரசுவமென்றார்கோரமென்றார்மயங்கி
 நின்றேன்மாமாவென்றார்
நொந்தழுதேன்பலர்மொய்த்தார்வாசியெனத்
 தேறினேனுவன்றயாவும்
அந்தமுறுங்குதிரையொன்றுசொலிச்சினந்தார்
 நாணமிகுந்தஞ்சினேனே.

நம்முடைய கருத்தைப்பிறர் அறியவும் பிறருடைய கருத்தை நாம் அறியவுமே கடவுள் நமக்கு வாக்கையும் பாஷைகளையுங் கொடுத்திருக்கிறார். நாம் பேசுகிற வார்த்தைகளிலும் செய்கிற கிரந்தங்களிலும் நம்முடைய கருத்து நன்றாகப் பிறருக்கு விளங்காவிடடால அந்த வார்த்தைகளைப் பேசாமலும் அந்தக்கிரந்தங்களைச் செய்யாமலும் ஊமைபோல் மௌனமாயிருந்து விடுவது சர்வோத்தமம குருடனுஞ் செவிடனுங் கூத்துப்பார்க்கப் போய் குருடன் கூத்தைப்பழித்தானும் செவிடன் பாட்டைப் பழித்தானும அதுபோல சிலவித்வான்களும், குருவேஷமபூண்டு கொண்டவர்களும் வாசகருடையரன பிரபந்தங்களைத் தாங்களும் செய்கிறதில்லை பிறர் செய்கிற பிரபந்தங்களையும் அங்கீகரியாமல் தோஷாரோபணம் பண்ணுவதே அவர்களுடையசுபாவகுணமாயிருக்கின்றது பண்டிதர் பாமரர் முதலியயாவர்க்கும் உபயோகமாகும்படி கல்விமான்கள்

பத்தியரூபமான பிரபந்தங்களுடன் கத்தியரூபமானபிரபந்தங்களையுஞ்செய்து சத்தியரூபம் விளங்கச் செய்யவேண்டுமென்பது நமது பிரார்த்தனையாயிருக்கின்றது.

சிறுபிள்ளைகளுடைய மனம் இளக்கமாயும் மிருதுவாயுமிருப்பதால், இளமைப் பருவத்தில் அவர்களுக்குப் போதிக்கும் கல்வியும் சுகுணங்களும் அவர்களுடைய புத்தியில் பதிந்து நன்றாய் வேரூன்றிக்கொள்ளும் பெரியவர்களானபின்பு போதிப்பதினால் பிரயோஜனமில்லை. பொன் வெள்ளி முதலிய பஞ்சலோகங்களையும் மெழுகு, ஸ்படிகம் முதலியவைகளையும் உருக்கி இளகியிருக்கும் பொழுதும், வேண்டிய விக்கிரகங்களையும், நகைகளையும், பாத்திரங்களையும், செய்துகொள்வது போலவும், பச்சை மண்ணைக்கொண்டு பலகடாதிகள் செய்வது போலவும், உழுதுதிருத்தி இளக்கமாயிருக்கிற நிலத்தில் வேண்டிய தானியங்களை விதைப்பதுபோலவும், இளமைப்பருவத்திலே வித்தையையும், நற்புத்தியையும் கற்பிக்க வேண்டும். விளையும் பயிர்முளையிலே தெரியுமென்பதுபோல நற்குணமுந் துர்க்குணமும் சிறுபிராயத்திலே உண்டாகித் தேகத்துடன் வளருகிறபடியால் பயிரிட்டவன் அடிக்கடி களை பிடுங்கிச் சர்வஜாக்கிரதையாகப் பயிரைக் காப்பாற்றுவதுபோல சிறுவர்களுடைய புத்தியில் துர்க்குணமாகிய களைகள் வளராதபடி தாய் தகப்பன்மார்கள் எப்போதும் எச்சரிக்கையா யிருக்க வேண்டும் சிறுபிள்ளைகளுடைய ஒவ்வொரு வார்த்தையையும் செய்கைகளையும் நடைகளையும் கவனித்து அவர்களிடத்தில் நன்மையைக் காணும் பொழுது பிரியத்தைக் காட்டியும், தின்மையைக்காணும்பொழுது தகுந்த புத்திசொல்லியும் நயமும பயமுமாகப் பிள்ளைகளை வளர்க்கவேண்டும், பிள்ளைகளை அதிகமாய்க் கண்டிப்பதனால் அவர்கள் தாய் தகப்பன்மார்களுக்குப் பயந்து பலபொய்களைச் சொல்லவும், கபடம், வஞ்சகம் முதலான துர்க்குணங்களைக் கற்றுக்கொள்ளவும் ஆஸ்பதமுண்டாவதுமா தவிரத் தாய்தகப்பன்மார்களிடத்தில் வெறுப்பு உண்டாகுமானதால் பிள்ளைகளை அதிககண்டிப்பு செய்வது தகுதியல்ல பிள்ளைகள் குற்றஞ்செய்தாலும் அதைப் பொய் சொல்லி மறைக்காமல் உண்மையை ஒப்புக்கொள்வார்களானால் மெய் சொன்னதற்காக அவர்களிடத்திற் பிரியத்தைக் காட்டவேண்டுமே தவிர அவர்கள் செய்த குற்றத்தைப் பாராட்டக்கூடாது தாய் தகப்பன்மார்கள் நல்வழியில் நடக்காத பிள்ளைகளும் நலவழி

யில் நடப்பார்கள். அவர்கள் துர்வழியில் நடந்தால் பிள்ளைகளும் துர்மார்க்கத்தில் நடப்பார்களானதால் தாய் தந்தைகள் எப்போதும புண்ணிய வழியிலேயே நடக்க வேண்டும்.

பிள்ளைகள் விளையாடுவதினால் சரீரசௌக்கியம் முதலான நன்மைகள் விளைகிறபடியால் பிள்ளைகள் சிலநேரம் விளையாடவும் இடங்கொடுக்க வேண்டும் கெட்டவர்களுடைய பழக்கம் பாம்போடு பழகுவதற்குச் சமானமானதால் துர்ஜனசகவாசத்தை விலககி எப்போதும் சஜ்ஜனசகவாசம் பண்ணும்படி ஆக்ஞாபிக்க வேண்டும் அநேகர் பிள்ளைகளைப் பெறுகிற கடமைமட்டுமேயன்றி அவர்களை நல்லவர்களாக்குகிற விஷயத்தில் எவ்வளவும் கவலைவைக்கிறதில்லை நிர்மானுஷியமான காட்டில் தானேவளர்ந்து தானே ஜீவிக்கிற மரம்போல பிள்ளைகளுடைய நடக்கையை கவனியாமல் நிர்விசாரமாய் விட்டுவிடுகிறார்கள் இப்படிப்பட்ட மாதாபிதாக்கள் மக்களுக்குச் சத்துருக்களாயிருக்கிறார்கள் பிள்ளைகளை மாதாபிதாக்கள்தங்களுடைய ஸ்வேச்சையாப் பெறுகிறார்களே யன்றித்தங்களைப் பெறும்படி மாதாபிதாக்களைப் பிள்ளைகள் கேட்டுக்கொண்டதேயில்லை அறையிலிருக்கிறவனை யிழுத்து அம்பலத்தில்விட்டு வேடிக்கை பார்ப்பதுபோலவும் விருந்துக்கழைத்து விஷத்தைக் கொடுப்பதுபோலவும் உருவில்லாமலிருந்த பிள்ளைகளை உருவாக்கி உலகத்திற் கொண்டுவந்த தாய் தகப்பன்மார்கள் அவர்களுக்குச் சிறுபிராயத்திலே நற்குணங்களைப் போதியாமல் அவர்கள் ஆயுசுள்ளவரையில் துஷ்டர்களாய்க் கஷ்டப்படும்படி விடுவது பெரிய புத்திரத் துரோகமாயிருக்கிறது.

பிள்ளைகளை நல்லவர்களாக்குவதும் தீயவர்களாக்குவதும் தாய் தந்தையர்களுடைய ஸ்வாதீனத்திலிருப்பதால் பிள்ளைகளுடைய துஷ்டத்தனத்துக்குப் பெற்றவர்களே முக்கிய காரணகர்த்தர்களாயும் உத்திரவாதிகளாயுமிருக்கிறார்கள் இப்படிப்பட்ட தாய்தந்தையருக்கு ராஜதண்டனை யில்லாவிட்டாலும் தெய்வதண்டனையவர்களைவிடாது ஆண்பிள்ளைகளாயினும் எப்போதும் தாய் தந்தையர் வீட்டிலிருக்கத்தக்கவர்கள் பெண்பிள்ளைகள் வேறொருவன் வீட்டிற்குப்போக வேண்டியவர்களானதால் அவர்களை உத்தமிகளாக்கி யனுப்புவது அவர்களுக்கே நன்மையாகவும் அப்படியில்லாவிட்டால் அவர்களுக்கே எப்போதும் துன்பமாயிருக்குமே நற்குணங்களை ஸ்திரீகளுக்குப் போதியாமல் அவர்களைப் புருஷன் வீட்டுக்கனுப்புவது நீந்தத்தெரியாதவனைக் கடலில் பிடித்துத் தள்ளுவது போலும், யுத்தசாஸ்திரந் தெரியாதவனை சண்டைமுகத்தில் விடு

வதுபோலும் குதிரையேறத் தெரியாதவனைக் கடிவாளமில்லாத துஷ்டக்குதிரைமேலேற்றித் தூரத்துவதுபோலுமிருக்கின்றது.

சிறுபிராயத்தில் தாய்தகப்பன்மார்கள் அடக்கி நன்மார்க்கத்திற்கொண்டு வந்ததினாலே நற்குணங்களிற் சிறந்த ஒரு ஐரோப்பிய ஸ்திரீயினுடைய குணாதிசயங்களை விவரிப்போம் அவள் புண்ணியம் பொக்கிஷம் பொறுமைக்கிருப்பிடம் ஞானக்களஞ்சியம் நற்குணபாத்திரம் கற்பலங்காரி கனவுபகாரி அற்புதசுந்தரி அரிவிலே மந்திர விற்பனவிதரணி விசயசம்பூரணி அவள் வாடாதபுஷ்பம் மங்காததீபம் ஆடாத மாபயில் அலையாத மாங்குயில் ஓடாதபுள்ளிமான் ஊறுதலைபைங்கிளி மாற்றில்லாத்தங்கம் மாசில்லாமாணிக்கம் கோதில்லாக்கரும்பு குறையில்லாச் சந்திரன் அவளைப் பார்த்தாலும் பசிதீரும் கண்டாலும் கலி நீங்கும் அவள் பிராணன் போனாலும் ஒருபொய் சொல்லத் துணியாள் பாவமென்றால் பாம்பைக் கண்டதுபோல் நடுங்குவாள் அவள் எந்த வேலை செய்தாலுங் கடவுளுடைய தியானத்தைமறவாள் அவள் எந்த உயிரையும் சொந்த உயிர்போல் எண்ணி உபகாரஞ் செய்வாள் கணவனுக்கு அற்பவருத்தமுமில்லாமல் குடும்பபாரங்களை யெல்லாம் தானே வாங்கிக்கொள்வாள் குடும்பத்திற்கு வேண்டிய பண்டபதார்த்தங்களையெல்லாம் தக்ககாலததில் சேகரித்து வைத்துக்கொள்வாள் வருத்தமானத்துக்கு மிஞ்சின செலவுசெய்யாள் தன்னுடைய அந்தஸ்த்துக்குத் தகுந்த காரியங்களில் யாதொரு குறைவும் செய்யாள் தன்வீட்டுக் காரியங்களை வெளியிலேபேசாள் பிறர்மேல் நிந்தையான வார்த்தைகளைத் தானும்பேசாள் பிறர்பேசவும் இடங்கொடாள்.

அவளுடைய உள்ளமெப்படி நிர்மலமோ அப்படியே யவளுடையதேகமும் ஆடையும் எப்போதும் பரிசுத்தமாயிருக்கும் அவளுடைய வீடு பாத்திர முதலியவைகளைத் துலக்கி எப்போதும் கண்ணாடிபோல் வைத்திருப்பாள் யசுத்தமென்பது மருந்துக்கு வேண்டுமானாலும் அவள் வீட்டில் யகப்படாது அவளுடைய குடித்தனப்பாங்கும் மேரை மரியாதையும் அற்புதம் யற்புதம் என்று யாவரும் மெச்சுவார்கள் அந்தத்தர்ம தேவதைமேல் தோஷப்நினைத்தால் தலைவெடிக்குமென்று பயந்து காமாதுரர்களும்அவளுடைய கற்புக்குத் தீங்கு நினையார்கள் அவள் வேலைக்காரர்களை பிரீதியாகவும் விவேகமாகவும் நடப்பிக்கும் தன்மையினால் அவர்கள் சகல வேலைகளையும் தாங்களே மனோற்சாகத்துடன் செய்துமுடிப்பார்கள்.

அவளுடைய கைப்பாகத்துக்கு நளபாகமும் ஈடல்ல அவள் கைபட்டால் வேம்பும் கரும்பாகும் அவள் சமைத்தால் பிடிசாதம் இறங்காதவர்களும் படிசாதம் உண்ணுவார்கள் அன்னத்துவேஷமுள்ளவர்களும் போஜனப் பிரயராவார்கள் தீராதரோகிகளும் ஸ்வஸ்தமடைந்து அரோகதிடகாத்திரராவார்கள் அவள் ஆக்கும் கறி கமகமவென்று வீடெல்லாம் மணக்கும் அதைத்தொட்ட கையும்மணக்கும உண்டவாயும் மணக்கும் அதைக்கழுவிய நீரெல்லாம் மணக்கும் பின்னும் ஊரெல்லாம் மணக்கும் அவள் வீட்டில் சாப்பிடககூடாத சைவர்களும் அவளுடைய சமையலுக்கு வாயூறுவார்கள் அவள் வீட்டு வேலைகளையெல்லாம் குறைவரச்செய்து முடித்த பின்பு நல்ல புஸ்தகங்களை யெடுத்து வாசிப்பாள் சிலநேரம் வீணை வாசிப்பாள் சிலநேரம் தையல் முதலிய சித்திர வேலைகளைச் செய்வாள்.

கணவனே அவளுக்குக் கதி கணவனே அவளுக்கு நிதி பர்த்தாவுடன் கூடிவாழ்வதே அவளுக்குப் பரமானந்தம் பர்த்தா இருக்கும் யிடம் காடாயிருந்தாலும் அது அவளுக்கு ராஜதானிக்குச் சமானம் பட்டணமாயிருந்தாலும் பர்த்தா இல்லாத இடமேபாழ் கணவனுடைய பக்ஷமே அவளுக்கு லக்ஷாந்திரம்அவளுக்கு என்ன துன்பம் வந்தாலும கணவனுடைய கிருபாநோக்கம் பட்டால் அவளுடைய கஷ்டமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும் அவளுக்கு எவ்வளவு பாக்கியமிருந்தாலும் கணவனுடைய கிருபைமட்டும் நீங்கினல் ஜலத்தைவிட்டு நீங்கிய தாமரைபோலவும் நிலத்தை விட்டு நீங்கிய பயிர்போலவும் வாடுவாள் கணவனுடைய மனமும் அவளுடைய மனமும் ஒன்றுயிருப்பதால் கணவனுக்கு எதில் விருப்பமோ அதிலே அவளுக்கும் விருப்பம் கணவனுக்கு எதில் வெறுப்போ அதிலே அவளுக்கும் வெறுப்பு கணவன் புசித்தால் அவளுக்குப் பசிதீரும் கணவன் சந்தோஷித்தால் அவளுக்கும் சந்தோஷமுண்டாகும் கணவனுடைய துக்கமே அவளுக்கும் துக்கம புருஷனுக்கு ஆபத்துவரும் காலத்தில் அவளேபடைக்கலம், புருஷன் துக்கப்படுங் காலத்தில் அவளேசுகம் அவன் வியாதிபடுங்காலததில் அவளே பரமசஞ்சீவி, தரித்திர காலத்தில் அவளே சௌபாக்கியம்.

கணவன் அழகில் ஆயிரம் அமாவாசைக்குச் சமானமானவனுயிருந்தாலும் அவனை அதிரூபசௌந்திரிய முள்ளவனுகப் பாவிப்பாள் அவன்தரித்திரனு யிருந்தாலும் குபேரசம்பத்துடையவனுக எண்ணுவாள் தான் துரைமகளாயிருந்தாலும் புருஷனுக்குத்

தன்னை ஊழியக்காரியாக நினைப்பாள் கல்லானாலும் கணவன் பில்லானாலும் புருஷன் மரமானாலும் மணவாளன் ஆதலால் புருஷனுக்கு எப்போதும் ராஜோபசாரம் செய்வாள். புருஷன் ஒன்றுந் தெரியாத ஜடனாயிருந்தாலும் அவனுடைய வாக்கை வேதவாக்கியம்போலெண்ணுவாள் ஒரு விஷயத்திலும் கணவனுக்குக் கோபம் வரும்படி நடவாள் கணவன் நிர்நிமித்தமாய்க்கோபித்தாலும் பொருமையுடனே சகித்துக் கொண்டு சமயம் பார்த்து அமிர்தவருஷம் போல இன்பமான வார்த்தைகளைப்பேசி கணவன் கோபத்தைத் தணிப்பாள்.

அந்தக் குணவதியை வேறொரு ஸ்திரீ நோக்கி உன்னுடைய தகப்பனோ தேசமாளுகிற அரசன் உன்னுடைய தாயோ அரசி, இப்படிப்பட்ட தந்தை தாய்களையும் சகோதரர்களையும் அரண்மனையையும் விட்டு நீங்கி ஒரு ஏழையை விவாகஞ் செய்துகொண்டு அவனுடைய சிறுமனையில் வசிக்கும்படி உனக்குலபித்ததே என்று அநுதாபம்பட்டாள் அதைக்கேட்ட அந்த புண்ணியவதி என்னுடைய கணவர் வீடு சிறுவீடானதால் நான் எப்போதும் அவருக்கு சமீபத்திலிருக்கும்படி பாக்கியம் பெற்றேன் அவர் ஏழையானதால் அவருடைய ஊழியங்கள்யாவும் என்னுடைய கையால் செய்யும்படியான அதிர்ஷ்டமும் எனக்குக் கிடைத்தது விஸ்தாரமான பல அரண்மனைகளும் பல ஊழியக்காரர்களுமுள்ள என்னுடைய தாய் தந்தையருக்கு இப்படிப்பட்ட பாக்கியம் இல்லாமையால் அவர்களுடைய செல்வம்பரந்தது பின்னும் என்னுடைய புருஷரே எனக்கு அரசர் அவருடைய சிறுகுடிலே எனக்கு அரண்மனை அந்த அரசருக்கு நானேகுடி அவருடைய அன்பே எனக்குச்செல்வம் என்னுடைய கற்பே அவருக்கு நான் கொடுக்கும் கடமை என்று மொழிந்ததாக.

நீதிநூல்புருடபாரியல்பு

கஈ, வது கஅ, வது பாடல்களில் சொல்லப்படுகின்றது.

ஏந்தலாந் தந்தையைத்தாய் சகியர்கோ
யிலைவிட்டோரெளியர்சிற்றிற்
சார்ந்தனனென்றிகழுமின்னே சிற்றில்லா
லவராரு கேதங்கப் பெற்றேன்
சேர்ந்தமிடியாலவர்தம் பணியாவுமெனது
கையாற் செய்யப்பெற்றேன்
பார்ந்தவமீதின்றி யெந்தையன்
னையவருக்கு நிதியாழ்த்ததன்றே.

மிடியுளார் செல்வரென்றுரைத்த மின்னனாய்
கடிநகர் சிறுகுடில் காந்தர்வேந்தரா
மடியனை குடியவான பெண்செல்வமாங்
குடியிறை யென்னிறை குறையுண்டோசொலாய்,

பணம், நகை முதலியவைகளின்மேல் அவளுக்கு எவ்வளவும் அபேக்ஷையில்லை, அவள் புருஷனபார்க்கத்தன்னை அலங்கரித்துக் கொளவதே அல்லாமமற்றவர்கள் பார்க்கத்தன்னை அலங்கரித்துக் கொள்ளாள், புருஷனஊரிலில்லாதகாலத்தில் தன்னை அலஙகரிக்க வந்த தோழியைநோக்கி "நான் உண்ணுவதும் புஷ்பம்சூடிக் கொள்வதும் சநதோஷிப்பதும் அலங்கரிததுக்கொள்வதும் என்னுடையகணவர் பார்ப்பதறகாகவேயன்றி மற்றப்படியல்லவே. இபபோது என்கணவர் ஊரில் இல்லையென்பது உனக்குத் தெரிந்திருந்தும் என்னை நீ அலஙகரிக்கவந்தது பேதைமைத்தனம்" எனறுள.

(நீதிநூல் புருடபாரியல்பு கசு, வது, பாடல்).

உண்ணல்பூச்சூடனெஞ்சுவத்தலொப்பனை
பண்ணலெல்லாமவர்பார்க்கவேயன்றோ
அண்ணதன்பிரிவினையறிந்துந்தோழிநீ
மண்ணவந்தனையிதுமடமையாகுமே.

அவள் அன்னியபுருஷரை அரியாமலிருக்கிற அரியாமையை பற்றி வேறு அறியாமை அவளிடத்தில்இல்லை, தான் புண்ணியவதியாயிருக்கத் தன்னைப் பாவியென்று அவள் சொல்லுகிறபொய்யைத்தவிர வேறுபொய் சொல்லியறியாள், பாவத்தின்மேல் அவளுக்கும்பகையேதவிர வேறொருவரிடத்திலும் அவளுக்குப் பகையில்லை சிஷ்டர்கள்பார்த்து அவர்களைப்போல் அபாரயோக்கியதை நமககில்லையேயென்று அவளுக்குண்டாகிற பொறாமையைத் தவிர வேறுபொறாமை அவளிடததில் இல்லை, இவளைப்போலுண்டாவென்று சகலஜனங்களும் சொல்லுகிற புகழ்ச்சிகளை அவள் சர்வகொள்ளையடிப்பதேயல்லாது வேறுதிருட்டு அவளிடத்தில் இல்லை பாத்ரமறியாமல் பிக்ஷையிடுகிற விஷயத்தில் அவள்செய்கிற லோபமே அல்லாமல் பாத்திரமறிநது பிக்ஷையிடுவதில எவ்வளவும், லோபமில்லை, அவளும் அவளுடைய குடும்பததாரும் தர்மம்செய்வதில் ஒருவரை யொருவர முந்திக்கொள்ளப் பிரயாசப்பட்டுத் தர்மகிமத்தம்செய்து கொள்ளுகிறசண்டையே தவிர வேறுசண்டை, மனஸதாபம், குரோதம், வர்வம் முதலிய துர்க்குணங்கள் அவர்களிடத்தில்இலலை ஜெகதீசனுடைய பாதாரவிநதத்தை அடைவதில் அவளுககுப் பேராசையேதவிர வேறுபேராசை அவர்களிடத்தில்

இல்லை அவளுடைய வீட்டுக்குவருகிற ஈக்களும், எறும்புகளும், அசுத்தம் அகப்படாமல் பட்டினியாயிருக்குமேயல்லாது அவளி டத்திற்குவருகிற ஏழைகள் பட்டினியாயிருப்பதில்லை-தன்கையில் இல்லாதகாலத்திலும் தான் உண்ணும் அன்னத்தை ஏழைக்கிட்டுத் தன்வயிற்றுக்கு அவள்செய்யும் துரோகத்தைத்தவிர வேறுதுரோ கம் அவள்செய்வதில்லை. பாவத்தைச் செய்யாம லிருப்பதுமன்றி அதை நெஞ்சிலும் நினையாமல் மனோவாக்குக் கிரியை மூன்றும் ஒரே தன்மையாயிருப்பாள்-பாவஞ்செய்யாமற் புண்ணியஞ்செய்ய வேண்டுமென்பது சர்வலோகநாயகனுடைய வேதவாக்கியமான தாலும், அந்த வாக்கியத்தை அசித்திசெய்யப் புருஷனுக்கு அதி காரம் இல்லாமையினாலும் பாவஞ்செய்யும்படி புருஷன் கட்டளை யிட்டால் அந்தக் கட்டளையைமட்டும் நிராகரிப்பாளேயல்லாது, மற்றவிஷயங்களிலெல்லாம் புருஷவாக்கிய பரிபாலனஞ் செய்யத்த வறாள்.

தெய்வபக்தியுள்ளவர்கள் தெய்வத்திற்குரிய ஆலயம் பூஜா பீடம் முதலியவைகளிடத்திலும் சிரத்தையுள்ளவர்களாயிருப்பது போல் புருஷபக்தியுள்ள அந்தச் சீமாட்டி தன்கணவனைப் பெற்ற தாய் தந்தைகளை தன்னுடைய தாய்தந்தைகளிலும் அதிகமாயெ ண்ணி அவர்களுக்குப் பாதம்பணிந்து பணிவிடைசெய்வாள். வார் த்திகதசையில் சரீரமெலிவினால் கோபம்வருவது சிலருக்குச் சகஜ மானதால் தன்னுடைய மாமன் மாமிமுதலானவர்கள் அகாரண மாய்த்தன்னைக்கோபித்தாலும் அதைப்பாராட்டாமல் மதுரமாய்ப் பேசி அவர்களுடைய கோபத்தைச் சாந்தப்படுத்துவாள் அவர் கள் 'எங்கள் மருமகள்போலுண்டா, இவளே எங்கள் கண்மணி இவளே பெண்மணி, இவளே எங்களைப் பெற்றவள் இவளே எங் களை வளர்க்கிறவள், இவளே எங்களைக்கரையேற்றுகிறவள், இவள் தேடக்கிடையாத் திரவியம், காணக்கிடையாக் கற்பகம்" என்று மகிழும்படி உபசரிப்பாள், கொழுந்தன்மார், நாத்தனார் முதலிய வர்களைத் தன்னுடைய சகோதரர்களிலும் அதிகமாயெண்ணி அவர்களுடைய காலில்பட்டது தன்கண்ணிற்பட்டதாக நினைத்துப் பூர்ணபக்ஷங் காட்டுவாள், அவளும் அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும நடக்கிற ஒழுங்கையும், மரியாதையும், அவர் களுக்குள்ளிருக்கும் நித்தியசமாதானத்தையும். மாறாத பக்ஷத்தை யும, அதனாலுண்டாகிற ஆநந்தத்தையும யோசிக்கு மிடத்தில் அவளுடைய வீட்டை பூலோகமோக்ஷமென்று சொல்லத் தடை யில்லை.

அவளுக்கு எப்போதும் பரோபகாரசிந்தையேதவிர வேறு சிந்தையில்லை அன்னமில்லார்க்கு அன்னம்படைப்பாள், வஸ்திரமில்லார்க்கு வஸ்திரமதருவாள், தாயில்லாப்பிள்ளைகளைத்தாய்போலத்தாங்குவாள், துக்கமுள்ளவரைத் தேற்றுவாள், அழுவாரோடு அழுது ஆறுதல்செய்வாள், வியாதிக்காரரை அடிக்கடி விசாரித்து வேண்டியபக்குவங்கள் செய்வாள், புத்தியில்லார்க்குப் புத்திபோதிப்பாள். பக்தியில்லார்க்குப் பக்தியைப் படிப்பிப்பாள், வைவாரையும் வாழ்த்துவாள், வாழ்த்துவார்முன்னே தன்னைத்தாழ்த்திக்கொள்வாள், தின்மைசெய்வோர்க்கு நன்மை செய்வாள், ஏழைகளுக்குத் தன்னாற் கூடியமட்டும் உதவிசெய்வாள், திரவியசகாயஞ்செய்யத்தன்னால் ஏலாதபோது வாக்குச்சகாயமாயினுஞ் செய்வாள், பிறர்துன்பத்தை நீக்கத்தன்னால் முடியாதபோது அழுது இரங்கிக்கடவுளைப் பிரார்த்திப்பாள். இன்னும் அவளுடைய மங்கள குணங்களைச் சொல்லப்புகின் யளவின்றி விரியு மாதலால் இம்மட்டில் நிறுத்தினோம்.

கலியாணகாலங்களில் பெண்களுக்குக்கற்புள்ள அருந்ததியைக் காட்டிற்கற்பிழந்து கல்லாச்சமைந்த அகலியையும் அம்மிமிதிக்கிற சடங்கு மூலமாகக்காட்டுவது போல், தாய்தந்தையருடைய முயற்சிக் குறைவினாலும் கெட்ட பழக்கத்தினாலும் அகிருத்தியங்களைக் கற்றுக்கொண்ட ஒரு துஷ்டையினுடையதுர்சரித்திரத்தை அடியில் எழுதுகின்றோம்.

பாவங்களுக்கெல்லாம் அவள் பண்டகசாலை, நன்மையெல்லாம் அவளுக்குநஞ்சு, தின்மையெல்லாம் அவளுக்குத்தேவாமிர்தம், தப்புகளெல்லாம் அவளுக்குச் சர்வமானியம், வம்புவார்த்தைகளெல்லாமவளுக்கு வாய்ப்பாடம், பொய்யிலேயவள் பூரணம், உண்மைபேசுவதிலவள் ஊமை, புண்ணியமென்றால் போராட்டம், குற்றங்களென்றால் கொண்டாட்டம், சுயகுற்றங்களைப் பார்ப்பதிலவள் சுத்தக்குருடி, அந்நியர் குற்றங்களைப் பார்ப்பதிலவளுக்கு ஆயிரங்கண் ஏழைகளுக்குமவளுக்கும் ஏழாம்பொருத்தம், பிக்ஷை கேட்டவரைச் சிக்ஷை செய்வாள், தானம பரிதானமேயல்லாமல் வேறுதானமில்லை, தியாகம்பிராணத்தியாகமே யல்லாமல் வேறு தியாகமில்லை எச்சிற்கையாலுங் காகமோட்டா ளறுத்தகைக்குஞ் சுண்ணாம்புகொடாள், பிள்ளைகள் ஆத்திச்சுவடி படிக்கும்பொழுது "தா" என்றுபடித்தாலு மவள் சண்டைக்கு வருவா ளவள் முன்னே யாராவது ஈயைப்பார்த்து ஈயென்று சொன்னாலும் கோபிப்பா ளவளுக்கோவிலில்லை - குருவில்லை பூஜையில்லை, புனஸ்கார

யில்லை பணமேதெய்வம்-பணமேகுரு-பணமேஜீவனம் பணமேபாவனம்-கண்ணாடியில் தன்முகந்தெரிவதுபோலவள் யாரைப்பார்த்தாலும்தன்மயமாகத் தோன்றுவதால் தன் குற்றத்தைப் பிறர்மேலேற்றி அவதூறுபேசுவதே அவளுடைய சுபாவகுணம்மவள் திருடியானதால எல்லாரையுந்திருடிகளென்று சொல்வாளவள் பொய்பேசுகிறவளானதால் எல்லாரையும் பொய்யரென்று நினைப்பாள். அவள் வஞ்சகியானதால் எல்லாரையும் வஞ்சிகளென்று தூஷிப்பாள் ளவளுடைய வாய்க்குப்பூட்டுப் போட்டாலு மவள் தூஷணை பேசாமலிரா ளவள் காதுகளைத் தைத்துவைத்தாலும் கோள்வார்த்தைகளைக் கேளாமலிரா ளவள் கைகளைக் கட்டிவைத்தாலும் திருடாமலிரா ளவள் கால்களில்விலங்கிட்டு வைத்தாலும் யண்டைவீடுகள்போய்ச் சண்டை செய்யாமலிருக்கமாட்டா ளவளுக்கும் அவள் புருஷனுக்கும் ஜென்மப்பகை - புருஷன் ஒன்றுசொன்னால் அவள் ஒன்பதுசொல்வாள். யவன்வேண்டுமென்பதை யிவள் வேண்டாமென்பாள் அவன்தெற்கென்றால் இவள் வடக்கென்பாள் அவன் கறுப்பென்பதை யிவள் வெளுப்பென்பாள் புருஷனுக்கு எது இஷ்டமோ அது அவளுக்கு அநிஷ்டம் புருஷனுக்குயார் மித்திரர்களோ அவர்களெல்லாரும் அவளுக்குச்சத்துருக்கள் புருஷனுக்குயார்பகைவர்களோ அவர்களெல்லோரும் அவளுக்கு இஷ்டர்கள். புருஷனை அவளுக்கு விஷமாயிருக்கும்போது புருஷனுடையபந்துக்களை அவள் எப்படிமதிப்பாள் மாமிசுமங்கலியாயிருப்பதைத்தான் அமங்கலியாயிருப்பது போலெண்ணுவாள் மாமிக்குத் தலைவலித்தால் இவளுக்குத் தலையில்கிரீடந்தரித்ததுபோல் நாத்தனாருக்குப் பிள்ளைபிறந்தால் இவளுக்கு ஒருபிள்ளை இறந்ததுபோல் ஓரகத்திக்கு ஒரு சுகம் உண்டானால் இவளுக்குத் துக்கம்சம்பவித்ததுபோல் அவள் கழுத்திலதாலியிருப்பது இவள் கழுத்தில் தாலியில்லாததுபோல் அவளுக்கும் அவளுடையபிள்ளைகளுக்கும் ஓயாதபெரும்பகைபிள்ளைகளை அவளுநேசிக்கிறதில்லை அவளைப் பிள்ளைகளும்நேசிக்கிறதில்லை, பிள்ளைகள் இஷ்டப்படி அவளும் நடவாள் அவளிஷ்டப்படி பிள்ளைகளும் நடவார்கள கலியாணவீட்டில் கட்டிக்கொண்டழுகிறவள் இழவுவீட்டில் என்ன செய்யமாட்டாள், தனபுருஷனையும் பிள்ளைகளையுமேபகைக்கிறவளந்நியர்களைப் பகைக்காமலிருப்பாளா. அவளுக்கு ஊரெல்லாம்பகை ஊரெல்லாளபாக்கியாதி எல்லாருமவளுடைய கேட்டை விரும்புகிறவர்களோ தவிர யவளுடைய க்ஷேமத்தைப் பிரார்த்திக்கிறவர்கள் ஒரு

வருமில்லை. அவளுடையமன அசுத்தமெப்படியோ அப்படியே சரீர அசுத்தமும் உள்ளவளாயிருக்கிறாள் அவளுடைய தேகத்தில் எந்தக்காலத்திலாயினும் ஜலம்பட்டிருக்குமோ என்னமோ அறியோம் மவள் தேகத்தின் யழுக்கைத்திரட்டினால் பலவண்டிப்பாரம் ஏற்றலாம் யவளுடைய துணி நெருப்பிலே போட்டாலும் வேகாது யவளுடைய தேகத்தில் புஷ்பம்பட்டால் தேகநாற்றத்தை புஷ்பம் வாங்கிக் கொள்வதே யல்லாது புஷ்பவாசனை தேகத்தில் சாருகிறதில்லை யவளுடைய தேகம்போலவே யவளுடையவீடும் யசுத்தங்களுக்கு ஆலயமாயிருக்கின்றது யசுத்தத்தில் ஜனிக்கிற யலபூச்சிகளுடனே க்ஷேமமாய் வாழ்ந்துக்கொண்டிருக்கும் மவளுடைய வீட்டின் யசுத்தங்களையும் யவளுடைய துன்மார்க்கத்தால் யவளுக்கு வருகிற பலதுன்பங்களையும், யவளுக்கும் மவளுடைய குடும்பத்தாருக்கும் நடக்கிற ஓயாத சண்டைகளையும் கலகங்களையும், வியாஜியங்களையும் விரோதங்களையும் பார்க்குமிடத்தில்யவளுடைய வீட்டை பூலோகநரகமென்று சத்தியமாகச் சொல்லலாம்.

ஷை ஸ்திரீ துர்மார்க்கவதியாய்க் கெட்டுப்போனதற்கு யவளுடைய தாய்தகப்பன்மார்களின் யஜாக்கிரதையே முக்கியகாரணமானதால் ஸ்திரீகளுக்குப் பாலசிக்ஷை செய்வது யத்யாவசியம்மாயிருக்கின்றது தெய்வபக்தியே சகல புண்ணியங்களுக்கும் யஸ்திபாரமாயும் சிகரமாயும் இருப்பதால் தெய்வபக்தியை முந்திப்போதிக்கவேண்டும தெய்வநேசம் உண்டாவதற்குத் தெய்வசொரூப நிர்த்தாரணஞ்செய்வது யவசியமாகையால், யண்டகோளங்களை யணுவில் யடைக்கபத்தனித்ததுபோலும், ஆகாயத்துக்குமையம் காட்டுவதுபோலும், நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்ப்பதுப்போலும், மானசகாக்ஷியாயும் சர்வாக்ஷியாயும் விளங்காநின்ற கடவுளுடைய யநந்தகலியாண குணங்களில் சிலவற்றைப் புல்லறிவுடையோனாகிய நான் எனக்குத் தெரிந்தமட்டில் ஒருவாறெடுத்துரைக்கத்துணிவுற்றேன்.

கடவுள் ஆணுமல்ல, பெண்ணுமல்ல, யலியுமல்ல. யவருக்கு ஊருமில்லை, பேருமில்லை, யாருமில்லை, நேருமில்லை, யவருக்குத் தாயுமில்லை, தந்தையுமில்லை, தாரமுமில்லை, தநயருமில்லை.யவருக்கு ஒப்புமில்லை, தப்புமில்லை யவர் பூதமுமல்ல, நாதமுமல்ல, சரமுமலல, யசரமுமல்ல காணப்பட்ட ஒருபொருளுமல்ல பஞ்சேந்திரியங்க

ளுக்கு யவிஷயமானவர் ஞானேந்திரியங்களுக்கு எட்டாத துரியா தீதர் ரவர் மகாபிரபு மண்டலாதிபதி, ஏகசக்கிரவர்த்தி தேவாதி தேவர், இராஜாதிராஜர் யவர்சர்வஞ்ஞர்சர்வசக்தர்சர்வேசுரர் சர்வ காரணர் சர்வகற்பிதா. சர்வநியந்தா சர்வாநதரியாமி. யவாபிதா. நாம் பிள்ளைகள் ளவாகுரு நாம சிஷர்கள்யவர் இராஜா நாம் குடி கள் ளவர் ஆண்டவர் நாமடிமை டவரன்னதாதா. நாம்யாசகர் ரவர் செல்வர் நாம் தரித்திரர் யவர்தர்மாத்மா. நாம்கர்மாத்மா. ரவர்நித் தியர். நாம் யனித்தியர். ரவரரூபி நாம் குரூபியவர் தீனகிருபாகரர் சீலமஞ்ஞோகமர் ஞானதிவாகரர். நற்குணசாகரர்பரமபவித்திரர் பக் தர்கள் மித்திரர் தர்மசமுத்திரர் சகலவிசிததிரர் யகிலநிர்வாகரர் ஆனந்தபோகர் இகபரத்தியாகர் இன்பப்பிரவாசகர் மோக்ஷதாதா. மூலவேதா. சாக்ஷாத்மாதா. சர்வஞாதா ஆதிமத்தியாந்தரகிதர். சோதிநித்தியர் சந்தசகிதா. வேதசித்தாந்தவிகிதர் போதவிர்த்தாந் தவிகிதர். கபடநாடகசூத்திரர் தபனகோடிகாத்திரர். உபஞான நேத்திரர். யபயமோக்ஷ க்ஷேத்திரர் பாவநாசர். ஜீவநேசர். தேவ ராசர், மாவிலாசர் இப்படிப்பட்ட யதியகோசரசரீர யகண்டாகார யபார உதாரநிர்விகார மஞ்ஞோகரகுணாகர சராசர தராதர பூரணபர வஸ்துவினுடைய யங்கியதிருசியமான மகோன்னதப் பிரதாபந் தெரிவதற்கு யவரால் வகுக்கப்பட்டயகில் புவனசராயரங்களின் தன்மையை ஸ்தூலமாயேனும் யறிந்துக் கொள்ள வேண்டிவது யவசியம்.

இந்தப்பூமி எவ்வளவு பெரிதென்பதை நாமெல்லாரும் காக்ஷி ப்பிரமாணமா யறிந்திருக்கிறோம் இந்தப்பூமியிலும் சூரியன் 13, லட்சம் பங்கு யதிகப்பெரிதாயிருக்கின்றது யந்தச் சூரியனைப்போ ல யநேககோடி சூரியர்களும் சந்திரர்களும் ஆகாயவிரிவில் நக்ஷத் திரவடிவமாக நமக்குக் காணப்படுகின்றன நாம் பார்க்கிற நக்ஷத் திரங்களைத்தவிர நம்முடைய பார்வைக்கு எட்டாத தூரத்திலும் யதற்குமேலுங்கீழும் எந்தப்பக்கங்களிலும் யடுக்கடுக்காக எண்ணி கையில்லாத நக்ஷத்திரக் கூட்டங்களிருக்கின்றனயவைகள் ஒன்றுக் கொன்று சமீபம்போல நமக்குக் காணப்பட்டாலும் யவைகளுக் கும் இந்த பூமிக்கும் எப்படித் தூரமோ யப்படியே யவைகள ஒ ன்றுககொனறு தூரமுள்ளவைகளா யிருக்கின்றன இந்தச் சூரிய னைச் சுற்றிப் பூமி முதலிய பலகிரகங்கள் ஓடுவனபோல் நக்ஷத்திர மாகிய ஒவ்வொரு சூரியனையும் பலபுவனங்கள் சுற்றியோடுகின்ற ன யப்படியானுல் கடவுளால் சிர்ஷ்டிக்கப்பட்ட சந்திர சூரியர்க

ளையும் புவனகோடிகளையும் எண்ணத்தொலையுமா? ஏட்டில்யடங்குமா? யந்தப்பிர்ம்மாண்டகோடிகளுக்குள் இந்தப்பூமி ஒரு யணுவுக்கும் சமானமல்ல சகலபுவனங்களையுந் தாங்கிப் படியளக்கிற கர்த்தாவுக்குச் சிறிது கோபம் ஜனித்தாயண்ட யடுக்குகள் குலைந்து ஒன்றோடொன்று மோதிச் சூரியமண்டலம் சந்திரமண்டலத்தின் மேலும் சந்திரமண்டலம் பூமண்டலத்தின்மேலும் விழுந்துசின்ன பின்னமாய்ச் சிதறுண்டு போமென்பது சந்தேகமா? பல யண்டகோடிகளும் பரமேசனுடைய பாதத்துகள் சூரியன் யக்கினி முதலிய சுடர்கள் கடவுளினுடைய திவ்வியப்பிரகாசமேனியிலிருந்து சிதறிய சிருபொறிகள் சமுத்திரங்களும் மேகங்களுமவருடைய கிருபாசமுத்திரத்திலிருந்து தெறித்த சிறுதுளிகள். பிரசண்டமாருதம் அவருடைய சிருவிரலின் அசைவு உன்னதபர்வதங்கள் அவர் விளையாடும்பந்துகள் அவருடைய பிள்ளைகளாகிய நமக்காக அவரால் நியமிக்கப்பட்ட ஊழியக்காரர்களே பஞ்சபூதாதிகள் கற்பகோடிகாலங்கள். அவருக்குக்கணப்பொழுது தமக்குத் தேகமில்லாமலிருந்தும் சகல ஜீவர்களுக்கும் தேகங்களைக்கொடுப்பவர் அவரே தாம் உண்ணாமல்மற்ற உயிர்களுக்கு உணவளிப்பவரவரே தாம் நித்திரைசெய்யாமல் மன்னுயிர்களைத் தூங்கவைத்துக் காவலாயிருப்பவர் அவரே தாம் நடவாமல் திரியாமல் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருப்பவர் அவரேதாம் கைவேலை செய்யாமல் நினைத்தமாத்திரத்தில் அண்டகோடிகளை யுண்டாக்கி ரக்ஷிப்பவருமவரே அந்த அண்டகோடிகளைச் சாட்டியில்லாப் பம்பரம்போல் ஆட்டுகின்றவரும் அவரே, கண்ணாயிருந்து பொருள்களைக்காட்டுகின்றவரும் அவரே, இந்திரியானந்தங்களை யெல்லாம் நமக்கு ஊட்டுகின்றவரும் அவரே கிருபாநேத்திரத்தால் நம்மைப்பார்ப்பாரும் அவரே துஷ்டசத்துருக்கள் மேல்க்ஷாத்திரம் செய்கிற க்ஷத்திரியரும் மவரே பத்தர்களுக்கு மோக்ஷவியாபாரம் செய்கிறவைசியரும் அவரே அண்டங்களை ஆட்டுகிற சூத்திரரும் அவரே ஜீவகோடிகளுக்கு வேளாண்மை செய்கிறவேளாளரும் அவரே சர்வலோக நாயகரும் அவரே யண்டவீடுகளைக் கட்டிய தெய்வத் தச்சனுமவரே, தேககடங்களைச்செய்கிறகுலாலனும் அவரேதாசர் வார்த்தையைத் தட்டாதவருமவரே ஒரு சிறியவத்தைக்கொண்டு பெரிய விஷயங்களையும், சுக்கில சோணிதங்கலந்த சிறுதுளியைக்கொண்டு பெரிய உடல்களையும் ஒருதானியத்தைக் கொண்டு கோடிதானியங்களையும் செய்கிற ஜாலவித்தைக் காரரும்

மவரே மநுஷர்களுக்கும், விலங்குகளுக்கும் பக்ஷிகளுக்கும் புஷ்பங்களுக்கும் பலவர்ணங்களையும், மலங்காரங்களையும், யமைத்தெழுதிய சித்திரக்காரரும் மவரே ஆத்துமயரசன் குடியிருக்கும் பொருட்டு, இரண்டுகால்நாட்டி இரத்தமாகிய நீர்சேர்த்து மாம்ஸச்சுவரெழுப்பி, எலும்புக்கழிகளைப்பரப்பி நரம்புக்கயிறுகளாற்கட்டித் தோலாகிய கூரைமேய்ந்து ஒன்பது வாயில்விட்டுச், சரீரவீட்டைச்செய்த கொத்தனரும் மவரே யந்தவீடு பிராணவாயுவால் சஞ்சரிக்கச்செய்த மந்திரவாதியும் மவரே நமக்குத்தெரியாமல நம்முடையசித்தங்களில் வசிக்கிற சித்தரும் யவரே தேகவீடுதானே வளரவும்-நிமிரவும்-குனியவும்-நடக்கவும்-ஓடவும்-இருக்கவும்-படுக்கவும்-தூங்கவும்-பலவேலைகளைச்செய்யவும் - உண்ணவும் - உண்ணுகின்றபதார்த்தங்கள் ஜீரணித்து உடலெங்கும் பரவவும்-மனமானது சஞ்சரிக்கவும்-நினைக்கவும்-ஆலோசிக்கவும் - சுகிக்கவும்- துக்கிக்கவும்-பஞ்சேந்திரியங்கள் பல இன்பங்களை யநுபவிக்கவும்-நம்முடையஸ்வாதீனமில்லாமல் சுவாசந்தானே ஓயாமல் நடந்துகொண்டிருக்கவும் செய்த பரமதயாநிதியுமவரே.

இந்தபூமியைக் கடவுள் உண்டாக்கி எத்தனையோகாலமாகியும் என்றும் புதிதாயும் வளப்பமாயும் செழிப்பாயு மிருக்கின்றது ஒருபொருளை நாம்வீட்டில் வைத்திருந்தால் எத்தனை காலமானலும் அந்தப்பொருள்மட்டு மிருக்குமேயல்லாமல் அது பலபொருள்களை உண்டாக்காது பூமியோவென்றால் ஒன்று கோடியாகச்செய்கின்றது ஒருநெல்லைவிதைத்தால் எண்ணமுடியாத அநேகநெற்கள் உண்டாகின்றது ஒருமரக்கால் தானியத்தை இருபதுமரக்காலாகவும் பத்துமரக்கால் தானியத்தை இருநூறுமரக்காலாகவும் பூமிவிளைவிக்கின்றது கடவுளுடைய ஆக்ஞையினல் பூமிமுதலிய பஞ்சபூதங்களும் சகலவஸ்துக்களும் மனுஷர்களுக்கு ஊழியக்காரர்கள்போல் வேலைசெய்கின்றன வென்பதை அடியில்விவரித்துக்காட்டுவோம்.

பூமியானது சகலசராசரப்பொருள்களும் அடங்கியபண்டகசாலையா யிருப்பதுமன்றி பயிரிடுகிறகுடியானவன்போல நவதானியங்களையும் இதரபோஜன பதார்த்தங்களையும் நமக்குவிளைவித்துக்கொடுக்கின்றது யப்புஜலக்காரியைப்போல ஸ்நாநபானதிகளுக்கு உதவுகின்றது காற்று ஆலவட்டக்காரன்போல நமக்குச் சாமரைபோடுகிறது. நெருப்பு சமையற் காரனைப்போல நளபாகம் செய்

கின்றது ஆகாசம் தீபம் ஏந்துகிறவன் போலச் சந்திர சூரிய நக்ஷத்திரமுதலிய தீபங்களைத்தாங்கிக் கொண்டிருக்கின்றது மேக ங்கள் ஜலமிறைக்கிற பெண்களுக்குச் சமானமாயிருக்கின்றன நதி, ஏரி, குளம், முதலியவைகள் ஜலம்வைக்கிற கடாரங்களாயிருக் கின்றன. விருக்ஷசாதிகளும், பயிர்பூண்டு முதலியவைகளும் பல சரக்குக் கடைக்காரர்கள்போல இலை, பூ, காய், கனி, கிழங்கு தானியமுதலிய பலசம்பாரங்களைக் கொடுக்கின்றன. மலைகளும், கடல்களும், ரத்னவியாபாரிகள்போல நவரத்நமுதலிய பலதிரவி யங்களைக் கொடுக்கின்றன பூச்செடிகள் பூவிறைக்கிற பெண்களா யிருக்கின்றன, பலமூலிகைகள் மருந்துகொடுக்கிற வைத்தியர் களாயிருக்கின்றன, பூஞ்சோலைகள், நாடகசாலைக்குச்சமானமா யி ருக்கின்றன, மயில், அன்னம், கோழி, கொக்கு, முதலியபக்ஷிகள் நாட்டியப்பெண்கள்போல நடனஞ்செய்கின்றன. குயில், கிளி, பூவை, வானம்பாடி, முதலிய பக்ஷிகள் பாடகர்கள் போலச்சங்கீதம் பாடுகின்றன. காகம், பருந்து, கோழிமுதலிய பறவைகளும் பல்லி, அரணை, முதலியவைகளும் விடுசுத்தஞ் செய்கிற பெண்கள் போலப் பல பூச்சிகளையும் இறந்துபோன பலஜந்துக்களையும் அசுத்தங் களையும் பக்ஷிக்கின்றன. பருத்திச்செடி, பட்டுபூச்சி முதலியவை கள் நமக்கு வஸ்திரவியாபாரிகளாயும், நாய், ஆடு, புலி, கரடி, முதலியவைகள் சால்வை, போர்வை கம்பளம் இவைகளைக்கொடு க்கிறவர்த்தகர்களாயு மிருக்கின்றன தேனீக்கள்தேன் கொடுக்கின் றன பசு, எருமை, ஆடு முதலியவைகள் பாற்காரிபோல நமக்குப் பால் கொடுக்கின்றன. காளை குதிரை, யானை, ஒட்டகம் முதலிய வைகள் வாகனங்களாய் நம்மைச் சுமப்பதுமன்றி, இன்னும்பல வேலைகளுக்கும் உதவுகின்றன. அந்த மிருகங்களுக்குப் புல், வைக் கோல் முதலியவைகள் ஆகாரங்களாயிருக்கின்றன. எறும்பு முத லியவைகள் விடு பெருக்குகிறவள்போலப் பலவிதமாய்ச் சிந்திக் கிடக்கிற வஸ்துக்களைப் புசித்து வீட்டைச் சுத்தம்செய்கின்றன, நாய்கள் காவற்காரரைப்போல் வீடு காக்கின்றன கழுதையும் நம க்காகப் பலபாரங்களைச் சுமக்கின்றன. சேவல்களும், செம்போத் துகளும். காகங்களும் நமக்குச் சூரியராஜன் வருகையைக்காட்டு கிற கட்டியக்காரர்களா யிருக்கின்றன. சிங்கம், புலி, கரடி முதலி ய துஷ்டமிருகங்களும், பாம்பு, தேள்முதலிய விஷஜந்துக்களும், தெய்வபயத்தைப்போதிக்கிற குருவுக்குச்சமானமா யிருக்கின்றன

நயமும் பயமும் காட்டிப் பிள்ளைகளை வளர்க்கும் தாய்போலக் காருண்ணிய மூர்த்தியாகிய கடவுள் அந்தத் துஷ்டஜந்துக்களையும் இடி, பெருங்காற்று, பூகம்பம், க்ஷாமம் யாதிமுதலிய துன்பங்களையும், நமக்குத் தெய்வபயமும், பக்தியும் நற்குணங்களும் உண்டாவதற்காகச் சிருஷ்டித்திருக்கிறாரென்பது நிச்சயமே. ஆயினும் அந்தத் துஷ்டஜந்துகளாலும் துன்பங்களாலும், நமக்கு அடிக்கடி உபத்திரவம் உண்டாகாதபடி அவைகளையடக்கி வைத்திருக்கிறாரென்பது அபரோக்ஷம் அல்லவா? எலிகள் மிஞ்சாதபடி பூமிகளையும் பாம்புகள் மிஞ்சாதபடி கீரிமயில் முதலியவைகளையும் அப்படியே இதர துஷ்டமிருகங்களுக்கு வெவ்வேறு சத்துருக்களையும் சுவாமி, உண்டுபண்ணியிருக்கிறார். மேலே நாம் விவரித்தபடி உலகத்திற் காணப்பட்ட பொருள்களில் ஒன்றேனும் நமக்கு உபயோகமற்றதாயிருக்கவில்லை,

மேற்சொன்ன வஸ்துக்களுமன்றி பூமண்டலத்தில் உள்ள சகல மனுஷர்களும் ஒருவர்க்கொருவர் சகாயமாயிருக்கும்படி சுவாமி செய்திருக்கிற விசித்திரம் அதிசயிக்கத்தக்கதாயிருக்கின்றது. ஒரு குடும்பத்திலுள்ள பலபேர்கள் பலதொழில்களைச்செய்து அந்தக் குடும்பத்தைத் தாங்குவதுபோல உலகமாகிய பெரியகுடும்ப சம்ரக்ஷணார்த்தமாகச் சகலஜனங்களும் பிரயாசப்படுகிறார்கள், ஒருவன் மகாராஜனாயிருந்தாலும், ஏழையானாலும், அவன் ஒருநாள் ஜீவிக்கிறதற்குப் எத்தனையோஜனங்களுடைய உதவி வேண்டியதாயிருக்கிறது நமக்குப் போஜனங் கிடைப்பதற்காக நிலத்தைவெட்டித் திருத்துகிறவர்களும். உழுகிறவர்களும், பயிரிடுகிறவர்களும், ஜலம் பாய்ச்சுகிறவர்களும், களைபிடுங்குகிறவர்களும் காவல் காக்கிறவர்களும், அறுத்துக் களஞ்சேர்க்கிறவர்களும், தானியங்களைக் குத்தி, அரிசியாக்கி, விற்கிறவர்களும் இவ்வகையாக அதிற்சம்பந்தப் பட்டவர்கள் இத்தனைபேரென்று கணக்கிடக்கூடுமா? அப்படியே உப்புமுதல் கர்ப்பூரம். வரையில் உள்ள சகலசாமக்கிரிகளும் காய்கறிகளும் நமக்குக்கிடைப்பதற்காக எண்ணிக்கையில்லாத ஜனங்கள் பலவிடங்களில் பலவிதமாகப் பாடுபடுகிறார்கள் வஸ்திரம் நமக்குக்கிடைப்பதற்காகப் பருத்தி விதைத்தெடுத்துப், பஞ்சாக்கிக் கொட்டி, நூற்றுச், சாயந்தோய்த்து நெய்து, வஸ்திரமாகிறவரையில் தேகப்பிரயாசப் பட்டவர்களுக்குக் கணக்குண்டா? சமையலுக்கு வேண்டிய விறகும் நீருங்கிடைப்பதற்காக

யநேகர் விறகுவெட்டி விற்கிறார்கள். யநேகர்நதி, ஏரிகுள முதலியவைகளை வெட்டுகிறார்கள், யநேகர் நமக்கு நடக்கப்பாதை சொப்பனிடுகிறார்கள். நமக்குவீடுகட்ட யநேகர் செங்கல் ஓடு சுண்ணாம்பு முதலியவைகள் செய்கிறார்கள். யநேகர் மரங்கள்வெட்டி யறுத்துப்பலகையாக்குகிறார்கள் அரசர்கள், மந்திரிகள், படைவீரர்கள், நியாயாதிபதிகள் முதலானவர்கள் நமக்குச்சத்துருபயமில்லாமலும் யநியாயம் நடவாமலும், சர்வஜாக்கிரதையாகப்பாது காக்கிறார்கள் குருமார், உபாத்தியாயர் முதலியோர் நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் ஞானோபதேசம் செய்கிறார்கள், வைத்தியர்கள் தச்சர் கொல்லர் தட்டார் வண்ணார். நாவிதர் செக்கார்சேணியர் முதலானவர்கள் நமக்காகப் பலதொழில்கள் செய்கிறார்கள்.

ஒரு தேசத்தார் பிழைப்பதற்காக அந்தத்தேசத்து ஜனங்கள் மட்டுமல்ல, பூமண்டலத்திலுள்ள சகலஜனங்களும் உழைக்கிறார்கள் நம்முடைய ஸ்திரீகள் பாதாதிகேச பரியந்தம் வஸ்திரபூஷணாலங்காரம்செய்து கொள்வதற்காகப் பலதேசங்களிலிருந்து பலவர்ணமான வஸ்திரங்களையும் நவரத்னங்களையும் தங்கம்வெள்ளி முதலிய பஞ்சலோகங்களையும் எடுத்துக்கொண்டு கடல்வழியாயும்கரைவழியாயும் எண்ணிக்கையில்லாத ஜனங்கள் வருகிறார்கள் அந்தநவரத்நங்களும் பஞ்சலோகங்களும் கிரகோபகரணமான பலபாத்திரங்களும் சாமான்களும் நமக்குக்கிடைப்பதற்காக மலைகளிலும் கடல்களிலும் பொற்சுரங்கங்களிலும், காடுகளிலும் லக்ஷாதி லக்ஷம் ஜனங்கள் கைசலிக்க, கால்சலிக்க தேகமெலியு நெற்றித்தண்ணீர் நிலத்தில் வீழப்படாதபாடுகளெல்லாம்படுகிறார்கள் இவ்வகையாக ஒவ்வொருவனும் ஜீவிக்கிறதற்கு உலகத்திலுள்ள எல்லா ஜனங்களும் பிரயாசைப்படும்படி ஐபன செய்திருக்கிற விநோதத்தையார் அளவிடக்கூடும் ?

உலகமுழுவதும் ஒருகுடும்பமென்பதற்கும் ஒரேவர்க்கமென்பதற்கும இன்னும் அநேக பிரத்தியக்ஷப் பிரமாணங்கள் உண்டு பூகோளத்தைச்சேர்ந்த சகலகண்டங்களிலும் வசிக்கிற சர்வஜனங்களுக்கும் தேகங்களும், அவயவங்களும் குணாகுணங்களும் இன்பத்துன்பங்களும், சாவுவாழ்வுகளும் எவ்வளவும் வித்தியாசமில்லாமல் ஒரே தன்மையாயிருக்கின்றன சகலபாஷைகளிலும் உள்ள இலக்கணம் இலக்கியம் கணிதம் நியாயம் தர்க்கமுதலிய நூல்களும் வித்வான்களுடைய கற்பனைகளும் வாரம் மாதம் ஆண்டுமுதலிய கண

க்குகளும் சகலதேசத்தாருக்கும் சற்றேறக்குறைய ஒரேவகையாயிருக்கின்றன பூமிசாரத்தினாலும் அந்தந்த தேசங்களுக்குரிய சீதோஷ்ணபேதங்களினாலும் ஆகாரவித்தியாசங்களாலும் சிலதேசத்தார்வெளுப்பாயும் சிலதேசத்தார் கருப்பாயு மிருக்கிறார்களேயன்றி வேறுகாரணமல்லவே ஒரு தேசத்திலுள்ள நகரவாசிகளுக்கும் கிராமவாசிகளுக்கும், பேச்சுமுதலிய சிலவிஷயங்களில் சிறிதுபேதம் உண்டாயிருப்பது சகவாசகாரணமேயல்லாமல் இயற்கைக்காரணயல்லவே ஒருபிராமணன் வீட்டுக்குழந்தையைப் பாலப்பருவத்தில் ஒருதாழ்ந்த ஜாதியான் தன்வீட்டில்கொண்டுபோய் வளர்த்தால் அந்தத்தாழ்ந்த ஜாதியார்போலவே பேசவும் நடக்கவும் கற்றுக்கொள்ளும் ஒரு பறையன் வீட்டுப்பிள்ளையைப்பிராமணன்கொண்டுபோய் வளர்த்தால் பிராமணனைப்போல வார்த்தையும் நடைபாவனைகளும் உண்டாகும் இதுவேசேர்க்கைக் காரணமென்பதைக்காட்டுகின்றது பிராமணப்பிள்ளை பூணூல், விபூதி, ருத்திராக்ஷத்துடன் பிறக்கவில்லை பறையன்வீட்டுப்பிள்ளை, மாடுமேய்க்கிற கால், குடுவை, கந்தையுடன் பிறககவில்லை, ராஜபுத்திரர்கள் தலையில் கிரீடமும் கையில்செங்கோலும் பீதாம்பரமும் தரித்துக்கொண்டு கனகவிக்கிரகம்போல் அதிசுந்தரமாய்ப்பிறக்கவில்லை, ஏழைப்பிள்ளை இரந்து குடிக்கும் ஓட்டுடன் கோவண்டியாய்க்குருபியாய்ப்பிறக்கவில்லை அரசன் வீட்டுப்பிள்ளையாயிருந்தாலும் ஏழைவீடுப்பிள்ளையாயிருந்தாலும், எல்லாப்பிள்ளைகளும் ஒருகோவணத்துக்கும் கதியில்லாமல்சுத்த நிர்வாணத்துடனும் நிராதரவாயும் துர்ப்பலமாயும் பிறக்கின்றன பிறந்தபிற்பாடு எந்த ஜாதிபிள்ளையாயிருந்தாலும் படித்தாலும் புத்திமானாயும் படியாவிட்டால் புத்தியில உலககைக்கொழுநதாயும் பிரவர்த்திக்கிறானென்பது யாவர்க்கும் ஸ்வாநுபோகமா யிருக்கின்றது சகலமன்னுயிர்களுக்குங் ஏகபிதாவாகிய கடவுள் எல்லாருக்கும் பொதுவில்மழைபெய்யவும் எல்லாருக்கும் சந்திரசூரிய நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கவும் எல்லாருக்கும் சமானமாகப் பஞ்சபூதங்கள்வேலை செய்யவும் ஆக்ஞாபித்திருக்கிறார் அபேதமாக எலலாமனுஷர்களும் வியாதி முதலியதுன்பங்களால் பீடிக்கப்பட்டு அந்தியகாலத்தில் தங்களோடு கூட ஒன்றுங் கொண்டுபோகாமல் பிறந்தகோலமாயிறந்து போகிறார்கள் இப்படிப்பட்ட பலமுகாந்திரங்களால் உலகமெல்லாம் ஒருகுடும்பமென்பதும் ஓரே ஜாதியென்பதும், நிதர்சனமாயிருக்கின்றது.

ஒருசிறிய குடும்பகாரியம் நடப்பதற்குப்பெரியர் சிறியரென்கிற அந்தஸ்துக்கிரமமிருக்கவேண்டியது எப்படி அவசியமோ. அப்படியே உலகமாகிய பெரியகுடும்பம் உஜ்ஜீவிப்பதற்கு அரசரென்றும் குடிகளென்றும், மேலோரென்றும், கீழோரென்றும் தனவான்களென்றும், தரித்திரர்களென்றும் பல அந்தஸ்துகளிருக்கவேண்டியது முக்கியம் அப்படிப்பட்ட தாரதம்மியமில்லாமல் சகலரும் சமானஸ்கந்தர்களாயிருந்தால் தலைக்குத்தலை மூப்பாய் ராஜநீதியும் பலதொழில்களும் நடவாமல் விபரீதம் உண்டாருமென்பது நிச்சயமே மேலான அந்தஸ்துள்ளவர்களுக்கு அந்த அந்தஸ்துக்குத்தக்க சிரமங்களும் கவலைகளும் சத்துருபயமும் ரோகங்களும் அதிகமாயிருக்கின்றன அவ்வளவு கஷ்டங்கள் தாழ்ந்த பதவியில் இருப்பவர்களுக்கு இல்லை, அவர்கள்படும் சரீர பிரயாசமானது அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் மனோரம்மியத்தையும் பரமசந்தோஷத்தையும் கொடுக்கின்றது தாங்கள் குடியிருக்கிற வீடுகள் அசைந்தாலும் தாங்கள் அசையாமல் சோம்பலை மேற்கொண்டிருக்கிற தனவான்களுக்குச்சரீரசுகமும், மனோதிருப்தியும் குறைவாயிருக்கின்றன. பலதேசங்களைப்பிடித்தால் ஒரு அரசனுக்கு எவ்வளவு சந்தோஷம் உண்டாகுமோ அவ்வளவுசந்தோஷம் கூலிவேலை செய்து செற்பப்பொருளைச்சம்பாதிக்கிற ஏழைக்கும் உண்டாகின்றது இவ்விதமாக ஒரு விஷயத்தில் குறைவுள்ளவர்களை வேறொருவிஷயத்தில் அதிகப்படுத்திச் சகலரையும் சமானமாக ரக்ஷிக்கிற கிருபாசமுத்திரமாகிய கடவுளை அநவரதமுந் தியானிக்கும்படி ஸ்திரீகளுக்குப்போதிக்கவேண்டும்.

தெய்வத்தையடைவதற்குப் புண்ணியமே வழியாயிருப்பதால் ஸ்திரீகளுக்குப் புண்ணியோபதேசஞ்செய்வது முக்கியமா யிருக்கின்றது புண்ணியத்திற்குப் புண்ணியமே சமானமல்லாது அதற்கு உபமானஞ் சொல்ல வேறொரு பொருளுமில்லை புண்ணியமே புத்தி புண்ணியமேசித்தி, புண்ணியமேசக்தி, புண்ணியேமுக்தி புண்ணியமேவேதாந்தம், புண்ணியமேபோதாந்தம், புண்ணியமே சித்தாந்தம், சகலசாஸ்திரங்களும் வேதங்களும் வேதாகமங்களும் இதிகாசபுராணாதிகளும் ஸ்தோத்தரிப்பது புண்ணியத்தையேவே தாந்திகளும் சித்தாந்திகளும், ரிஷீசுரர்களும் வித்தியாபாரகரும், சதாநேசிப்பதும், பூசிப்பதும், உபதேசிப்பதும் புண்ணியமே, சந்நியாசிகளும் தபோதனர்களும் சர்வசங்கப்பரித்தியாகஞ் செய்வது

புண்ணியத்திற்காகவே, உன்மதம், என்மதமென்று தன்மதமாகச் சம்வாதஞ்செய்கிற சகலசமயவாதிகளும் புண்ணியம் ஒன்றையே அவிரோதமாக அங்கீகரிக்கிறார்கள். பராபரவஸ்து நராவதாரஞ் செய்ததும் பாபத்தைநீக்கிப் புண்ணியத்தை நிலைநிறுத்தும் பொருட்டே. ஆதியில் அநேகமகாத்மாக்கள் தலைகொடுத்து நிலைநிறுத்தினதும் புண்ணியமே. இல்லறம் துறவறமென்று சொல்லப்பட்ட இரண்டறங்களும் புண்ணியமே பக்தர்களைச் சுத்தர்களாக்குவதும் புண்ணியமே சுத்தர்களை முக்தர்களாக்குவதும் புண்ணியமே சகல இகபரார்த்தங்களைக் கொடுப்பதும் புண்ணியமே மானுஷிகத்தைத் தெய்வீகமாக்குவதும் புண்ணியம்.

மோட்சத்திற்கும் நரகத்திற்கும் எப்படிப்பேதமோ அப்படியே சிஷ்டர்களும் துஷ்டர்களும் பரஸ்பரவித்தியாசமுள்ளவர்களாயிருக்கிறார்கள் இந்த உலகத்திலும் புண்ணியவான்களுக்கு பூஷணையும் துஷ்டர்களுக்கு தூஷணையுமுண்டாகின்றன சிஷ்டர்களுக்கு எங்கும் பிரக்கியாதி துஷ்டர்களுக்கு எங்கும் அபக்கியாதி சிஷ்டர்கள் சர்வஜனமித்திரர்கள் துஷ்டர்கள் சர்வலோகவிரோதிகள், அரசர்களும் நியாயாதிபதிகளும் சிஷ்டானுக்கிரகமும் துஷ்டநிக்கிரகமும் செய்கிறார்கள், தேசாதிபதிகள் கூடியவரையில் யோக்கியர்களையே தேடி தகுந்த உத்தியோகங்களைக் கொடுக்கிறார்கள் தெரியாமையினாலும் பக்ஷபாதம்முதலிய காரணங்களாலும் அயோக்கியர்கள் உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டாலும் அவர்களுடைய அயோக்கியதை வெளியானமாத்திரத்தில் அவர்களை உத்தியோகங்களிலிருந்து தள்ளியாவரும் வழிதேடுகிறார்கள் பெற்றதாய்தந்தைகளும் நல்லபிள்ளைகளை நேசித்து கெட்டபிள்ளைகளை துவேஷிக்கிறார்கள் நல்லவன் ஏகசாட்சியாயிருந்தாலும் அவனுடைய வார்த்தையை பிரமாணமாகக்கொண்டு அசத்தியவான்கள்பலராயிருந்தாலும் அவர்களுடைய சாக்ஷியங்களைத்தள்ளி நியாயசபையார் தீர்மானிக்கிறார்கள் கூடியமட்டும் நல்லவர்களையேதேடி அவர்களிடத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யயாவரும் விரும்புகிறார்கள் நாணயமுள்ள வர்த்தகர்களிடத்திலே யாவரும் சரக்குகளைக் கொள்ள அபேக்ஷிக்கிறார்கள் பெண்வீட்டுக்காரர்கள் நற்குணமுள்ள புருஷர்களையும் பிள்ளைவீட்டுக்காரர்கள் நற்குணமுள்ள பெண்களையுந்தேடிவிவாகஞ்செய்வது பெரும்பாலும் வழக்கமாயிருக்கின்றயஜமான் துஷ்டனாயிருந்தாலும் அவன் நல்லவர்களையே தேடித்தனக்குள் வேலைக்காராகளாக வைத்துக்கொள்ளுகிறான்,

சிஷ்டர்களால் ஒருவருக்கும் துன்பமில்லாதபடியால் சிஷ்டர்களை துஷ்டர்களும்பூஷிக்கிறார்கள் துஷ்டர்களால் யாவருக்கும் உபத்திரவமானபடியால் துஷ்டர்களை துஷ்டர்களும் தூஷிக்கிறார்கள் துஷ்டனைத் துஷ்டனென்றுசொன்னால் அவனுக்கேகோபம்வரும் அவனைச்சிஷ்டனென்றுசொன்னால் அவனுக்குச்சந்தோஷம் உண்டாகும் துஷ்டனை அவனுடைய பெண்சாதியும் பிள்ளைகளுமே நம்பார்கள் துஷ்டர்களும் வாசாகைங்கரியமாய் தாங்கள் நல்லவர்களென்றுபகிர்வேஷம் பூண்டுகொண்டால்மட்டும் அவர்களிந்த உலகத்தில் ஜீவிக்கலாமேயொழிய வேறுவகையில் ஜீவிக்கமார்க்கமில்லை, இந்தக்காரணத்தைப் பற்றியே உலகத்தில் கள்ளஞானிகள் விஸ்தாரமாயிருக்கிறார்கள். ஒருவனுக்கு அழகும் தனமும் வித்தையும் இல்லாதிருந்தாலும் அவன் நல்லவனாயிருப்பானானால் அவனிடத்தில் யாவருக்கும கௌரவமும் அவனைப் பார்க்கப்பார்க்கப்பிரியமும்சந்துஷ்டியும் உண்டாகின்றது வடிவில் மன்மதனும் திரவியவானுமிருந்தாலும் அவன் துஷ்டனாயிருப்பானானால் அவனிடத்தில் யாவருக்கும் அருவருப்பும் அவமதிப்பும் உண்டாகின்றது. சிறுபிள்ளைகளுந் துஷ்டர்களை வெறுக்கிறார்களென்பதற்கு மழையில்லாத காலங்களில் சிறுபிள்ளைகள் கொடும்பாவி கட்டியடிக்கிற வழக்கமே சாக்ஷியமாயிருக்கிறது ஊருக்கு ஒருநல்ல அதிகாரிவந்தால் அவனையெல்லாரும் கொண்டாடிக்கொண்டு அவனுடைய க்ஷேமத்தைப் பிரார்த்திக்கிறார்கள் அவன் பரமதுஷ்டனாயிருந்தானால் அவனால் துன்பமடைந்தவர்கள், துன்பமடையாதவர்கள் எல்லோரும் ஏகோபித்துச் சமயம் வரும்போது அவனைக்கெடுக்கக் கங்கணம் கட்டிக்கொள்ளுகிறார்கள். வீடுகளிலும் வீதிகளிலும் பலபேர்பேசுகிற வார்த்தைகளைக் கவனித்தால் இன்னான் நல்லவன் இன்னான் கெட்டவன் என்கிறவார்த்தை கலவரமலிராது விவரந்தெரியாத குழந்தைகளும், நல்லவர்களிடத்திற் பிரியத்தையும் துஷ்டர்களிடத்தில் அப்பிரியத்தையுங் காட்டுகின்றன.

சத்தியம், பொறுமை சாந்தநிதயை, தாக்ஷிண்யம், இரக்கம் உபகாரம் நிகர்வம், நீதிமுதலிய நற்குணங்களை மெச்சாதவர்கள் யார்? அந்த நற்செய்கைகளைத் தங்களுக்கு யாவருஞ்செய்யவேண்டுமென்று விரும்பாதவர்கள்யார்? அகங்காரம் பொய் சூது வஞ்சகம் களவு கொலை கோபம் லோபம் மோகம் குரோதம் மதம் மாற்சரியம் கொடுமை அநீதி முதலிய துர்ச்செய்கைகளைப் பிறரிடத்

திற்கண்டால் அவைகளைவெறுக்காதவர்கள்யார்? அந்தச்செய்கைகளைத் தங்களுக்கு ஒருவரும் செய்யக்கூடாதென்று அபேக்ஷியாதவர்கள் யார்? ஒரு உபகாரியைக்கண்டால் அவனைப்பிரியமாக உபசரிக்காதவர்கள்யார்? ஒருவன் தாங்கக்கூடாததுன்பத்தை யநுபவித்தால் அவனுக்காக இரங்காதவர்கள்யார்? ஒருவன் மற்றொருவனை அநியாயமாக உபத்திரவஞ்செய்தால், அந்தக்கொடியனைக் கோபிக்காதவர்கள் யார்? ஒருவனுடைய கண்ணில் வேறொருவன் குத்துவதை நாம்பார்த்தால் நம்முடையகண்களும் நோகின்றன ஒருவன் வேறொருவனை அடித்தால் அதைப்பார்க்கிற நம்முடைய தேகமும் வலிப்பதுபோ லிருக்கின்றது தங்களுடைய சொந்தத் துக்கத்துக்காக அழாதவர்களும் பிறர்துக்கத்துக்காக அழுகிறார்கள். துர்மார்க்கத்திற் பழகிப்பழகிக் கல்லைப்போன்ற கடினசித்தங்கொண்டிருக்கிறவர்களைத் தவிர மற்றயாவரும் துன்பப்படுகிற புண்ணியவானைக்கண்டால் இரங்காமலிரார்கள்.

கதைகளிற் சொல்லப்படுகிற சாதுக்களைக் கூடப்பூஜிப்பதும் அவர்களுக்கு விரோதிகளான அசாதுக்களை நிந்திப்பதும் யாவருக்கும் சகஜமாயிருக்கின்றன இராவணன் இராமத் துரோகஞ்செய்தானே யல்லாமல் நமக்கென்ன துரோகஞ்செய்தான் துரியோதனன் தர்மபுத்திராதிகளுக்கு தாயாதியேயல்லாமல் நமக்குத் தாயாதியல்லவே, அரிச்சந்திரன் நமக்கென்ன உபகாரம் செய்தான் நக்ஷத்திரையன் நமக்கென்ன அபகாரம்செய்தான் இராமாயணத்தில் இராமர் தமது பத்தினியைப்பிரிந்து அழுகிற இடத்தை நாம்வாசிக்கும்பொழுது சீதையுடனே நம்முடைய பத்தினிகளும் போய்விட்டதுபோல் நாமும்கூட அழுகிறோம் அவருடைய படைகளாகிய குரங்குகளுடனே நாமும்கூடிக்கொண்டு இராவணாதிகளுடனே மனோயுத்தம்செய்கிறோம் அந்தக்குரங்குப்படைகளுக்குத் திரணச்சேதம் வந்தாலும் நமக்குப் பிராணச்சேதம் வந்ததுபோல் வாடுகிறோம் இராமபாணத்தால் இராக்ஷதப்பிணங்கள் மலைமலையாய் குவியும்போது நமக்கு இராமர்கனகாபிஷேகம் செய்ததுபோல நாம் ஆநந்தபரிதராகிறோம. தர்மன் முதலிய பஞ்சபாண்டவர்களும் அரிச்சந்திரனும் இராஜ்ஜியங்களையிழந்து பரிதபிக்கும்பொழுது நம்முடைய இராஜ்ஜியங்களும் போய்விட்டது போல நாமும் அநுதாபப்படுகிறோம்பின்பு அவர்களுக்குப்பட்டாபிஷேகமானவுடனே நமக்கும் பட்டாபிஷேகமானதுபோல் மகிழ்ந்து அவர்களுடனே நாமும் மனோராச்சியஞ்செய்கிறோம் இவைமுதலியகாரணங்களால்

புண்ணியத்தின் மேல்பிரியத்தையும் பாபத்தின்மேல் வெறுப்பையும் மனுஷருக்குச் சுபாவகுணமாக ஸ்வாமி கொடுத்திருக்கிறாரென்பது பிரத்தியக்ஷப் பிரமாணமா யிருக்கின்றது.

புண்ணியம் செய்வது பிரயாசமென்று சிலர் நினைப்பார்கள் அப்படி நினைப்பதுதப்பு சாண்வயிறுவளர்ப்பதற்காக சமுத்திரயாத்திரை செய்தும், மலைகள் ஏறியும், ஆரணியங்களை கடந்தும், தேசாதிதேசங்களெல்லாந் திரிந்தும் பலதொழில்களைச் செய்கிறார்கள் யுத்தகளத்திற் போய்ச்சண்டைசெய்து பிராணனைக்கொடுக்கிறார்கள் மனுஷனுடைய செய்கையோ தேவதாநிர்மாணமோவென்று பிரமிக்கும்படியான சிற்பவேலைகள் சித்திரவேலைகள், நீராவியந்திரங்கள் இரும்புவண்டிகள், தந்தித்தபால் முதலிய அருமையான வேலைகளைச்செய்கிறார்கள். யநேகமாய் பிரயாசப்பட்டு பலசாஸ்திரங்களையும் பலதொழில்களும, கற்றுக்கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டயதிசயமான காரியங்களைச் செய்கிற மனுஷர்களுக்கு உண்மை, சாந்தம், பொறுமை, முதலியபுண்ணியங்களைச் செய்வது மஹாத்பிரயாசமா? அவைகளைச்செய்ய அலையவேண்டுமா? தேகப்பிரயாசப்படவேண்டுமா? இல்லையே.

பாவஞ்செய்வது கஷ்டமே தவிரப் புண்ணியஞ்செய்வது கஷ்டமல்ல, உள்ளகாரியததை உள்ளபடி சொல்லுவதுதானே உண்மை நடந்தகாரியத்தைக் கூட்டாமற் குறைக்காமல் நடந்தபடியே சொல்வது எவ்வளவு எளிதானகாரியம். நடவாதகாரியத்தை நடந்தது போலப் பொய்சொல்லுகிரதாயிருந்தால் முன்னுக்குப் பின்விரோதமில்லாமல் முந்தியே ஆலோசித்துக் கற்பித்துக் கொண்டு ஆகாசமாளிகை கட்டுவதுபோலப் பொய் கோட்டைகட்டுவது எவ்வளவு வருத்தமா யிருக்கின்றது அஸ்திபாரமில்லாத சுவருக்கு ஆயிரம் முட்டுக் கொடுப்பதுபோல ஒரு பொய்யை ஸ்தாபிக்க அநேகம் பொய்களைச் சொல்லியும் பிரயோஜனமில்லாமல் "வெட்டிக்காரன் புளுகு எட்டு நாளையிலதெரியு" மென்பதுபோல எப்படியும் பொய் வெளியாகின்றது வொலை. களவு, மோசம். வஞ்சகம், பரஸ்ரீகமனம முதலியகொடிய செய்கைகளைச் செய்வதற்குத் தகுந்தசமயங்களும், ஆயுதங்களும், சகாயங்களும் தேடிக்கொண்டு அந்தச்செய்கைகளைச செய்வது எவ்வளவு கஷ்டமும் வருத்தமும் அச்சமும் பிராணசங்கடமுமா யிருக்கின்றன. அந்தச் செய்கைகளுக்கு விரோதமான புண்ணியங்களைச்செய்வது எவ்வளவு யிலேசாயிருககினறது.

சர்வசாட்சியாகிய கடவுள் பாபபுண்ணியங்கள் தெரியும்படி மனோசாக்ஷியாகிய தீபத்தை ஒவ்வொருவருடைய உள்ளத்திலும்

ஏற்றிவைத்திருக்கிறாரென்பது சத்தியமே, விபரந்தெரியாத பாலர்களும், சித்த ஸ்வாதீனமில்லாத வைத்தியக்காரர்களும் தவிரமற்ற யாவரும் படித்தவர்களாயிருந்தாலும், படியாதவர்களாயிருந்தாலும், நன்மை, தீமை தெரியாதவர்களொருவருமில்லை படியாத மூடர்களுக்குத் தானதர்மங்களைச் சேர்ந்த சில நுட்பமானவிஷயங்கள் தெரியாமலிருந்தாலும் ஸ்தூலமாய் தர்மமின்னது, அதர்மமின்னது என்பதுயாவருக்கும் தற்சுபாவமாக தெரிந்திருக்கின்றது ஆனதுபற்றியே "நெஞ்சையொளித்தொருவஞ்சகமில்லை" என்றும், தன்னெஞ்சறியாத பொய்யில்லைதாயறியாதசூலில்லை, என்றும் "தன்னையறியாத சன்னதமில்லை" என்றும் பெரியோர்களுடைய வாக்கியங்களிருக்கின்றன மனோசாட்சியாகிய தீபம் பாப புண்ணியங்களை நமக்குக்காட்டுகிறதுந்தவிர நாம் பாவஞ் செய்யும்பொழுது நம்மைச் சுடுகின்றது. புண்ணியம் செய்யும்பொழுது நம்மைப்புகழ்ந்து சந்தோஷிக்கின்றது. ஆகையால் மனோசாட்க்ஷிக்கு விரோதமில்லாமல் நடக்கிறவர்களே புண்ணியாத்மர்கள்.

கண்ணாடியில் தோன்றுகிற நம்முடைய பிரதிபிம்பம் நாம் செய்வதையெல்லாம் தானுஞ்செய்து காட்டுவதுபோல் நமக்குப் பிரதிபிம்பமாகிய உலகம நாம்செய்வதையே நமக்குச் செய்கிறது நாம் ஒருவனைப்புகழ்ந்தால் அவனும நம்மைப் புகழ்கிறான் நாம் ஒருவனை இகழ்ந்தால் அவனும நம்மை இகழ்கிறான நாம் ஒருவனுக்கு உபகாரம்செய்தால் அவனும நமக்கு உபகாரஞ்செய்கிறான். நாம் அபகாரஞ் செய்தால் அவனும் நமக்கு அபகாரஞ்செய்கிறான், ஒருவன் ஏழையாயிருந்தாலும், அவனுக்கு நாம தீங்குசெய்தால் அவனும் ஒருசமயத்தில நமக்குத் தீங்குசெய்வது கூடாகாரியமல்ல. கொசுகும்யானையைச்சாடுகின்றது குப்பையுயர்ந்துகோபுரத்தையுமூடுகின்றது. பெரியபொருள்களைச் சிறிய செல்லும் பக்ஷித்து நாசமாக்குகின்றன. நாம் எதை விதைக்கிறோமோ அதிலே நமக்கும் பலிதமாகும். வேம்பை விதைத்தவனுக்கு வேம்பேயல்லாமல் கரும்புகிடைக்குமா? பாம்பை வளர்த்தவனுக்கு விஷமேயல்லாமல் அமிர்தங்கிடைக்குமா? அப்படியே நாம் நன்மை செய்தால் நன்மையும் தீமைசெய்தால தீமையும் நமக்கேலபிக்கிறபடியால் தீமையைவிட்டு நன்மையைப் பிடித்துக கொள்வது வேகவாயும் நம்முடைய சுயப்பிரயோஜனமாகவும் இருக்கின்றது.

துஷ்டர்களுக்கு அவர்களுடைய துர்மார்க்கங்களே அவர்களைத்தண்டிக்கிற ஆயுதங்களாயிருக்கின்றன, பேருண்டி, சோம்பல் முதலிய துர்க்குணங்களை மேற்கொண்டவர்களுக்கு அஜீர்ணம் வியாதி

ஆயுசுனஷ்டம் முதலியபலதுன்பங்கள் வளர்கின்றன. மதுபானஞ் செய்கிறவர்கள் பணத்தைகொடுத்துப் பைத்தியத்தை விலைக்குவாங் குவதுபோல பலதுன்பங்களுக்கு ஆளாகிறார்கள். அவர்களுடைய குடியே குடியைக்கெடுக்கின்றது தாயென்றும் தாரமென்றும் மேதகியமென்றும் அமேத்தியமென்றும் பேதந்தெரியாமல் வீட் டைவிற்று மாட்டைவிற்று உடைமைகளைவிற்று, மானங்கெட்டு மரியாதைகெட்டு, மதிகெட்டு, விதிகெட்டுப் பெண்சாதி யொரு பக்கம் பிள்ளைகளொருபக்கம் தாங்களொருபக்கமாகத் திரிகிறகுடி யர்களுடைய பெருமையை என்னென்று சொல்லலாம் கள்ளின் கடையே அவர்களுக்குக்காணியாக்ஷிருப்பைமேடே அவர்களுக்குக் குடியிருப்பு புழுதியே அவர்களுக்குப் போர்வை, சாம்பலே அவர் களுக்குச் சம்பிரமஞ்சம் சாணியே அவர்களுக்குத்தலையணை ஆகா சமே அவர்களுக்கு ஆடை, கள்ளே அவர்களுக்கு ஸ்நாநபாநம் துன்பங்களே அவர்களுக்குத்துணை, கள்ளைவாயில் விட்டவுடனே தங்களுடைய சரித்திரங்களைத் தாங்களே சொல்லிக்கொள்ளுகிற வர்களாதலால் நாம்விஸ்தரித்துச்சொல்லவேண்டுவதில்லை.

காமாதுரர் கடுங்கஷ்டங்களுக்கு அவர்களுடைய தேகங்களே சாட்சியாகையால் வேறுசாக்ஷி அநாவசியம் ஈ, எறும்பு, கிருமி முதலியவைகளுக்கு மகோற்சவங்கொண்டாடுவதுபோல அவர்கள் சரீரங்களில் புண்களும், கட்டிகளும் பலவியாதிகளும் கொண்டு வேப்பிலையுங் கையுமாகத் திரிகிறார்கள்.

வெண்பா.

“ மேகங்கள் யாவுமுயர்விண்ணீங்கிவேசையர்தம்
தேகங்களில்வாசஞ் செய்கையால்—மாகமிசை
ஆசைக்குங்கார்காணுமவ்வேசையர்கொடுப்பர்
காசைக்கொடுப்பவர்க்கேகாண்.”

“ மேகங்களெல்லாம் ஆகாசத்தை விட்டுத் தாசிகளுடைய சரீரங்களில் வசிக்கிறபடியால், சிலசமயங்களில் ஆசைக்குப்பார்க்க வேண்டுமானாலும் ஆகாயத்தில் மேகசஞ்சார மில்லாமலிருக்கின் றது தாசிகளுக்கு யார்காசு கொடுக்கிறார்களோ அவர்களுக்கே தாசிகள் மேகங்களைக்கொடுப்பார்கள்” ஆகையால் காமுகர்கள் மேகமுதலிய பலவியாதிகொண்டு, அற்பாயுசாய் மாண்டுபோவத ற்கு அவர்களுடைய விடமார்க்கமே காரணமாயிருக்கின்றது.

பொறாமை, கோபம் பகை குரோதம் முதலிய துர்க்குணங்களை உடையவர்கள் பாம்புகளையும், தேள்களையும் பிடித்துத் தங்கள் மேலேவிட்டுக் கொள்ளுகிறவர்களுக்கு எவ்வளவு உபத்திரவமோ அவ்வளவு உபத்திரங்களைத் தாங்களே அடைகிறார்கள் அவர்கள் தங்களுக்குத் தாங்களே செய்துகொள்ளுகிற துன்பங்களை அவர்களுடைய விரோதிகளுஞ்செய்யத் துணியார்கள் தான் சேர்ந்த பொருளைச்சுட்டு நாசமாக்குகிற நெருப்புப்போலப் பொறாமை, பகைமுதலிய துர்க்குணங்களுக்கு யார் இடங்கொடுக்கிறார்களோ அவர்களை உபாதிப்பிக்கிறபடியால் அவர்களுக்குவேறு தண்டனை வேண்டுவதில்லை அந்நியர்களுக்கு உண்டாகிற சுகமெல்லாம் பொருமையுள்ளவனுக்குத் துக்கமாய்முடிவதால் அவனுக்கு ஓயாத துக்கமுஞ் சஞ்சலமும் வளர்கின்றன கோபாவேசங்கொண்டவனோ வென்றால் நெருப்புப்பற்றி யெரிகிறவீட்டிற் குடியிருப்பவன்போல் தானே பலதுன்பங்களை அநுபவிக்கிறான் இத்தன்மையாகக் குமாரர்களுக்கு அவர்களுடைய துர்க்குணமே தண்டனையா யிருக்கும்படி தேவாதி தேவன் செய்திருக்கிறவேடிக்கை ஆச்சரியமாயிருக்கின்றது.

தீயர்களுக்குத் தெய்வதண்டனையையும் தவிர இந்த உலகத்தில் ராஜதண்டனையும் விதிக்கப்படுகின்றதே கால்விலங்குகளும் குட்டை மரங்களும், தூக்குமரங்களும், விலங்குக்கூடங்களும் பிரங்கிகளும் குண்டுகளும் மருந்துகளும் கத்திமுதலிய ஆயுதங்களும் துஷ்டர்களுக்காக உண்டாயிருக்கின்றனவே யொழிய மற்றைப்படி யல்லவே, அரசர்களும் மந்திரிகளும் நியாயாதிபதிகளும், போலீசுச் சேவர்களும் படைவீரர்களும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதற்காக யிருக்கிறார்களே யல்லாது வேறல்லவே? துஷ்டர்கள் இல்லாவிட்டால் அந்த உத்தியோகஸ்தர்களுக்குப் பிழைப்பேது.

தீயர்களுக்கு அவர்களுடைய தீமையே தண்டனையாயிருப்பது போலப் புண்ணியவான்களுக்குப் புண்ணியமே சம்மானமாயிருக்கின்றது, அவர்கள் சர்வஜனமித்திரர்களாகையால் அவர்களுக்கு எல்லாரும் மித்திரர்களாகவேயிருக்கிறார்கள் அவர்கள் ஒருவரையும் விரோதியானபடியால் அவர்களுக்குப்பகைவர்கள் ஒருவருமில்லை சர்வலோகசமாதானமும், புண்ணியத்தினாலுண்டாகிறமனோபாக்கியமும், நிர்மலமான ஆத்மாநந்தமும உள்ளவர்களாயிருக்கிறார்கள் தகப்பன பிள்ளைகளையடித்துப்புத்தி கற்பிப்பதுபோல சாதுக்களை சோதிப்பதற்காகவும், அவர்கள் ஞானத்தினுடைய புண்ணி

யத்திலும் அதிகரிப்பதற்காகவும் அவர்களுக்கு சில சமயங்களில் கடவுள் துன்பத்தை கொடுப்பதுமுண்டு அதற்காகச்சாதுக்கள் பின்வாங்கமாட்டார்கள் துன்பமே ஞானத்தின்பாடசாலையாயிருக்கின்றது உலகத்தில் துன்பங்கலவாதசுகமில்லை பிரசவவேதனைக்குப் பயந்தால் புத்திரபாக்கியம்கிடைக்குமா? மருந்து கசப்பென்று உண்ணப்பயந்தால் சரீரசுகம் உண்டாகுமா? குளிருக்குப்பயந்தால் குளிப்பதெப்படி? அதுபோலத் துன்பத்துக்குபயந்தால் இன்பமில்லையாதலால் சுடச்சுடப்பிரகாசிக்கும் பொன்னைப்போலவும் சாணைக்கல்லில்வைத்து தேய்க்கத்தேய்க்க ஒளிமிகும்மணிகள் போலவும் என்னதுன்பம் வந்தாலும் பின்னிடாமல் புண்ணியத்தில் அதிகரிப்பவர்களே உத்தமர்கள் இந்த உலகம் பரலோகப்பிரயாணத்திற்கு மார்க்கமேயல்லாமல் இது நமக்குச் சொந்தமல்லவே ஒரு ஊருக்குப் பிரயாணமாய்ப் போகிறவர்கள் வழியில்படுகிற கஷ்டங்களை மதியாமல் அந்த ஊரின்மேலே நோக்கமாய்ப்போவதுபோல். பரலோகயாத்திரைக்காரர்களாகிய நாம் மார்க்கமாகிய இந்த உலகத்தில் வருகிற துன்பங்களுக்கு அஞ்சாமல் அந்த யாத்திரையின் மேலே திர்ஷ்டியாயிருக்கவேண்டும்.

தாட்டோட்டகாரனுக்குத் தயிருஞ்சாதமும், விசுவாசக்காரனுக்கு வெந்நீரும் பருக்கையும், என்பதுபோலப் புண்ணியவான்கள் டாம்பீகரமாய்த் தங்களுடைய பெருமையைத்தாங்களே சொல்லிக்கொள்ளார்களாகையால அவர்களைச் சிலசமயங்களில் உலகத்தார் அறியாமலும் அவர்களுக்குத்தகுந்த சம்மானஞ் செய்யாமலுமிருப்பார்கள் அதற்காக புண்ணியவான்கள் அற்பமும் கலைக்கிறதில்லை அனித்தியமான இகலோக பாக்கியத்தை அவர்களே நிஷேதிப்பதால் அவர்களுக்கு அந்த பாக்கியமிலலாமற்போவது குறைவல்ல.

பூலோக பாக்கியமெல்லாங்கூடி மண்ணும் கல்லும் மயிரும் பஞ்சும மலாதிகளுமேயன்றி வேறல்லவே பொன்னும் வெள்ளியும் ஒருவகையான மண்ணேயன்றி வேறொன்றுமல்லவே நவரத்தினங்கள் பலவகைக் கற்களே கம்பளம் போர்வை சால்வை முதலியவைகள் நாய்-புலி-கரடி-ஆடு முதலிய மிருகங்களின்மயிர்களேபட்டுகள் பட்டுப்பூச்சியின்வாய் நுரையே வஸ்திரங்கள் பருத்திநூலே புனுகு சவ்வாது, கஸ்தூரிமுதலியவைகள் பூனைமலமே. தேனென்பது தேனீக்களின உச்சிட்டமே இப்படிப்பட்ட அகசியமான பதா

ர்த்தங்கள் புண்ணிடத்திற்குப் பிரதிப்பிரயோஜனமாகுமா ? அந்தப் பொருள்கள் எவ்வளவிருந்தாலும் மனுஷனுடைய ஆசையடங்காமலிருப்பதால் அந்தப்பொருள்கள் மனுஷனுக்குத்திருப்தியையும் சந்தோஷத்தையும் உண்டுபண்ணத்தக்கவைகளல்லவெனபது நிதர்சனமாயிருக்கின்றன.

உலகத்தில் நம்முடைய ஆசைக்கு அளவில்லை அலெக்சான்றர் என்கிற அரசனுக்கு சைதியர் என்கிற ஜாதியார் சொன்னதைப்போல நம்முடைய பேராசை எவ்வளவு பெரிதோ அவ்வளவு பெரியசரீரம்நமக்கிருக்குமானால் நம்முடைய தலைகள் அண்டமுகட்டைமுட்டி அப்பாற்செல்லும் பாதங்கள் பாதாளலோகமட்டும் பாயும் வலதுகை பூமியின் வடதிசைச் சுவரைஊடுருவும் இடதுகை தென்றிசைகோடிமட்டும் செல்லும், பூலோகமெல்லாம் பிடித்தபின்பு தேவர்களுடனே யுத்தஞ்செய்த தேவலோகத்தையும் பிடிக்க ஆரம்பிப்போம் இன்னுஞ்சில லோகங்களிருந்தால் அவைகளையும் பிடிக்கத் துவசங்கட்டுவோம் இப்படியாக நம்முடைய ஆசை அளவற்றதாயிருப்பதால் பூலோக பாக்கியம் சுத்த அபர்த்தமென்றும் பரலோகபாக்கியமே சிலாக்கியமென்றும் பரிஷ்காரமாய் விளங்குகின்றது.

பிள்ளை வரத்துக்குப் போய் புருஷனைச சாகக்கொடுத்தது போலும், வட்டிக்காசைப்பட்டுமுதலையிழந்ததுபோலும், குளிக்கபோயும் சேற்றைப்பூசிக்கொண்டதுபோலும். சிலர் புண்ணியவேடந்தரித்துக்கொண்டு பாவத்தைக்கட்டிக் கொள்ளுகிறார்கள் வாயிலே தேனும், வாலிலேகொடுக்குமுள்ள தேனீக்கள்போல உதட்டிலே உறவும் உள்ளத்திலேபகையும் கையிலே ஜெபமாலையும்கக்கத்திலே கன்னக்கோலும் கழுத்திலே தாழ்வடமும் கருத்திலே கரவடமுமாய் வேளைக்குத் தகுந்தவேஷம் பூண்டுகொண்டு வாசாஞானிகளாய்த் திரியாமல் உள்ளும் புறம்பும் ஒத்திருக்கவேண்டும்.

யுவதி பதிவிரதையாயிருப்பது கற்பேயன்றி விர்த்தநாரிபதிவிரதையிருப்பது விசேஷமா ? பலவான அடங்கியிருப்பது அடக்கமேயன்றிப் பலமில்லாதவன் அடங்கியிருப்பது அரிதா ? சகல சாஸ்திர சம்பன்னன் வித்தியாகர்வமில்லாமலிருப்பது பெருமையேயன்றிப் படியாதமூடன் நிகர்வியாயிருப்பது ஆச்சரியமா ? பெண்டு பிள்ளை பண்டபதார்த்தங்களை யுடையவன் துறவியாவது துறவேயன்றி ஒன்றுமில்லாதவன் துறவியாவது அபாவவிரக்திதானே

அப்படியே நம்முடைய இளமைப்பருவத்தில் ஆரோக்கிய சரீரிகளாயிருக்கும்பொழுதே தெய்வபக்தியும், புண்ணியாப்பியாசமும் நமக்கிருக்கவேண்டுமேயல்லாமல் சாகுங்காலத்தில் புண்ணியம்செய்யலாமென்று நினைப்பது பசியெடுத்தபின்பு நெல் விதைப்பதுப் போலும் தாகமெடுத்தபின்பு நதிவெட்டுவதும்போலும் கப்பலேறின பின்புமாலுமி சாஸ்திரங்கற்றுக்கொள்வது போலுமிருக்கின்றது.

பலநாள் பிரயாசப்பட்டுக் கற்றுக்கொள்ளாமல் எந்தத்தொழிலையும் நிறைவேற்றமுடியாது அப்படியே புண்ணியத்தொழிலும் முன்னமேபழக்கமின்றி நிர்ணயத்தசையில் சித்திக்குமா? மரம்சாய்ந்தபக்கத்தில் விழுவதுபோல ஒருவனுக்கு எப்பொழுது அப்பியாசம்எதுவோ அதுவேயவனை அந்தியகாலத்திலும் விடாதுமேலும் சாகிறகாலமும் சமயமும் ஒருவருக்கும் முன்னறிந்து தெரியாதே இன்றோ நாளையோ இந்த நிமிஷமோ மறுநிமிஷமோ, காலையோ மாலையோ பகலோ இரவோ இருக்கும்பொழுதோ நடக்கும்பொழுதோ, உண்ணும்பொழுதோ பிறக்கும்பொழுதோ, வேலைசெய்யும்பொழுதோ இப்பொழுதோ, அப்பொழுதோ, எப்பொழுதோ, மரணம்வருமென்பது நிச்சயமில்லாமலிருப்பதால் ஆரியக் கூத்தாடினாலுங்காரியத்திற் கண்ணாயிருப்பவர்கள் போல் சதா ஈசுவரத்தியானம் புண்ணிய சிந்தனையும் உள்ளவனாயிருக்கவேண்டும்,

காலம் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கின்றது, அதன் ஓட்டத்தைப்பிடிக்க ஒருவராலும் ஏலாது அந்தகாலத்துக்கு நாம் என்ன கொடுமைசெய்தோம் அதன் செய்கையெல்லாம் விபரீதமாயிருக்கின்றது. அது தன்பாட்டிற்போகாமல் நம்முடைய ஆயுசையும் நிமிஷந்தோறும் திருடிக்கொண்டுபோகின்றது மூலையிலிருப்பவர்களை முற்றத்தில் இழுத்து விடுவதுபோல நடுவீட்டிலிருக்கிற நம்மைத் தினந்தோறும் இடுகாட்டிற்குச்சமீபத்தில் இழுத்துக்கொண்டுபோகின்றது சிறுகுழந்தைகளைப்பாலர்களாகவும் பாலர்களைக் குமாரர்களாகவும், குமாரர்களைக்கிழவர்களாகவும் செய்கின்றது, கல்லைப்போன்ற உடலைவில்லைப்போல் வளைக்கின்றது கன்னங்கறுத்த மயிரைப்பின்னமாக்கிக் கொக்குபோல் வெளுக்கச்செய்கின்றது. இரண்டுகாலுள்ளவர்களை மூன்றுகாலராக்குவதுபோல விருத்தாப்பியரைக்கோலூன்றி நடக்கப்பண்ணுகின்றது காந்திமேனியை ஓந்திமேனியாக்கி சுந்தரமுகத்தை அந்தரமாக்கி மீன்விழியை ஊன்விழியாக்கி முத்தைப்பழித்தபல்லை சொத்தைப்பல்லாக்கி, கட்டி

போல் மொழியைஎட்டிபோலாக்கி ஸ்ரீதேவிபோலிருந்தவளை மூதேவியாக்கி அநர்த்தஞ்செய்கின்றது இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமோ என்பதுபோல அசையாமல் ஆயுதமில்லாமல இருந்துகொண்டு கோட்டைகொத்தளங்கள், மாடகூடங்கள் முதலியவைகளையெல்லாம் நாள்வட்டத்தில் இடித்துத் தகர்த்து நாசஞ்செய்கின்றது இந்த கொடியகாலத்தை நம்பக்கூடாதாகையால் எப்பொழுது சர்வஜாக்கிறதையுடன் புண்ணியத்தையே அவலம்பிக்கவேண்டும்.

இந்தப்பிரபஞ்சமே ஒருபெரிய நாடகமாயிருக்கின்றது கூத்தாடிகள் இராவேஷக்காரர்களாயிருக்கிறார்கள் நாமெல்லாரும் பகல்வேஷக்காரர்களாயிருக்கிறோம் உலகத்தில் அரசர்கள் தரிக்கிற கிரீடங்களும் பீதாம்பரங்களும் பல உத்தியோகஸ்தர்கள் தரிக்கிற சட்டை தலைப்பாகை முதலியவைகளும், வேஷங்களே யல்லாமல வேறல்லவே. கூத்தாடிகளுடைய நாடகத்தில் அரசர் முதலியபல வேஷங்களைத்தரித்துக்கொள்வதுபோல் இந்தப்பிரபஞ்ச நாடகத்தில் அரசரென்றும், குடிகளென்றும், பெரியரென்றும், சிறியரென்றும், பெற்றவரென்றும், பிள்ளைகளென்றும், புருஷனென்றும், பெண்சாதியென்றும், நாம்பலவேஷங்களைப்பூண்டு கொள்ளுகிறோம் அந்தவேஷங்களுக்குரிய தொழில்களை நாம்குறைவற நிறைவேற்றினால் பிரபஞ்சநாடகத்தலைவனாகிய கடவுள் நமக்கு நித்தியானந்த வெகுமானத்தை அளிப்பாரென்பது சத்தியமே நாடகமுடிந்து போவதைப்போல் உலகமெல்லாம் அழிந்துபோகும் நாம் பூண்டு கொண்ட வேஷங்களும், நாம்படித்த சாஸ்திரங்களும், வித்தைகளும் சம்பாதித்ததிரவியங்களும் கீர்த்திகளும் பட்டங்களும் பெருமைகளும் மின்னல்போல மறைந்துபோகும், புண்ணியம் ஒன்றே சதாசர்வகாலமும் நம்மைப்பிரியாமல் பரலோகத்திலும் நம்மைத் தொடர்ந்துவந்து ஜகதீசனுடைய பாதாரவிந்தத்தில் சேர்க்குமாதலால் புண்ணியத்தைப்போல் நமக்கு உற்றதுணைவேறொன்றுமில்லையே.

புண்ணியம் நமக்குப் பொருளாயிருப்பதுபோலவே பாவம் நமக்குப்பகையாயிருக்கின்றது பாவம்பாம்பினுங்கொடிது தீயினுங்கடிது. நஞ்சினும்பெரிது. நமனினும் வலிதுபாம்பு கடித்தாற் கொல்லும் நெருப்புதொட்டவர்களைச்சுடும், விஷம் உண்டவர்களை கொல்லும் நமன் ஆயுசுமுடித்தவர்களைக் கொல்வான் பாவமோ வென்றால் நினைத்தமாத்திரத்திற் கொல்லுந் தன்மையுடையதாயிரு

க்கின்றது, ஒரு அந்நியஸ்திரீயை நாம் சேராமலிருந்தாலும் அவளை ஆசையோடு நாம் மனதில் நினைத்தமாத்திரத்தில் அவளைச் சேர்ந்ததற்குச் சமானமான பாவிகளாகிறோம் பிறர் பொருளைப் பார்த்து நாம் பொருமைகொண்டால் உடனே அந்தப் பொருளைத் திருடினவர்களைப்போல் தோஷத்திரஸ்தராகிறோம் பிறர் கெட்டுப்போகவேண்டுமென்று மனதில் நினைத்தால் உடனே அவர்களைக் கொலை செய்ததுபோல தோஷாரூடராகிறோம், இப்படியே "உண்ணாமல் தின்னாமல் ஊரம்பலமானே" என்பதுபோல் யாதொரு பிரயோசனமுமில்லாமல் மனதினால் பல பாவங்களைக் கட்டிக் கொள்ளுகிறோம் இன்னும் வாக்கினாலும் கிரியையினாலும் நாம் செய்கிற பாவங்களுக்கு கணக்குண்டா? ஒரு அற்பமனுஷன் நம்முடன் கூடயிருந்தால் அவன் முன்பாகத் துன்மார்க்கஞ் செய்யாமல் சர்வஜாக்கிரதையாயிருக்கிறோம். தேவாதிதேவனும், அரசர்க்கரசனும், அகண்டபரிபூரணமாயெங்கும் நிறைந்திருப்பவனுமான கடவுள் எப்பொழுதும் நம்முடன்கூட இருப்பதை நினையாமல், நாம்பிரபஞ்சமாகிய மாயாந்தகாரத்தில் மதிமயங்கிப், பலபாவங்களைச் செய்வது தகுமா?

ஒருகனவான் ஒரு பழத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஒரு சிறுபாலனைக் கூப்பிட்டு "குழந்தாய் கடவுளிருக்கிற இடத்தை நீ சொன்னால் உனக்கொரு பழந்தருவேன்" என்றுசொல்ல, அதற்கு அந்தப்பையன் "கடவுள் இல்லாத இடத்தை நீர் சொல்வீரானால் உமக்கு இரண்டுபழந்தருவேன்" என்று பிரதியுத்தரம் சொன்னான். அதுபோலக் கடவுள் இல்லாத இடமில்லையே, அவருக்கு மறைவான விஷயங்களு மில்லையே, நமக்குக் கண்களைக்கொடுத்த கடவுளுக்கு நம்முடைய செய்கைகளைப் பார்க்கக் கண்கள் இல்லாமலிருக்குமோ? நமக்குக் காதுகளைக்கொடுத்த கர்த்தாவுக்கு நாம் பேசும்வார்த்தைகளைக் கேட்கக் காதுகள் இல்லாமலிருக்குமோ? நமது மனங்களில் வசிக்கிற மனோதயனுக்கு நம்முடைய நினைவுகள் தெரியாமலிருக்கக்கூடுமோ? வேத சொரூபியராகிய கடவுள் வேதவிதிகளை அநுசரியாதவர்களைத் தண்டிக்காமல் விடுவாரோ? பாபரஹிதன் பாபிஷ்டர்களை உபேக்ஷிக்காமலிருப்பாரோ? ஆகையால் நாம் எப்போதும் தெய்வ சந்நிதானத்தில் இருப்பதை அடிக்கடி நினைவுற்று நம்முடைய ஆசாபாசங்களையும் மனோவிகாரங்களையும் அடக்கிச் சுகிர்தசாலிகளாய் விளங்கவேண்டும். கோட்டைக்

குள் சத்துருக்கள் பிரவேசியாதபடி அரசர்கள் கோட்டைவாசலில் காவல் வைப்பதுபோல, காமக்குரோத மோகலோபமதமாற்சரியங்களாகிய சத்துருக்கள் பஞ்சேந்திரியங்களின்வழியே நம்முடைய மனக்கோட்டைக்குள் நுழையாதபடி ஞானத்தையும், விவேகத்தையும் காவலவைத்து அந்தச் சத்துருக்களை ஜெயிக்க நாம் எப்போதும் யுத்தசன்னத்தர்களாயிருக்கவேண்டும்.

ஸ்திரீகளுக்குப் பதிவிரதா தர்மத்தையும் படிப்பிக்கவேண்டும் இந்த விஷயத்தைக்குறித்து நீதிநூலிலும், பெண்மதிமாலையிலும், இந்த வசனகாவியத்திற் பலவிடங்களிலும், நாம் பிரஸ்தாபம் செய்திருப்பதால் அதைப்புநருக்திசெய்யாமல் அதற்குச்சம்பந்தமான சிலவிஷயங்களை மட்டும் சங்க்ஷேபமாக எடுத்துரைப்பது போதுமென்றெண்ணுகிறோம் ஆதிமனுஷர் பாவஞ்செய்யாமல் பரிசுத்தராயிருக்கும்பொழுது கலியாணம் கடவுளால் நியமிக்கப்பட்டதானதையால் உலகத்தில் நடக்கிற சகலகாரியங்களிலும் கலியாணம் சர்வசிரேஷ்டமாயிருக்கின்றது, உலகத்தில் ஜனஸங்கம் விருத்தியாகும்பொருட்டும், ஒருவர்க்கொருவர் உதவியாயிருக்கும்பொருட்டு, ஆதியில் ஆணையும் பெண்ணையும் சர்வேசுரர் உண்டுபண்ணித் தம்முடைய திருக்கையால அவர்களுக்கு விவாககர்த்தம நிறைவேற்றி வைத்தபடியால் கலியாணம் எவ்வளவோ சிறப்புள்ளதாயிருக்கின்றது ஸ்திரீயும் புருஷனும் ஒரே தேகமானதால அவர்கள் யாவத்ஜீவபரியந்தம் கூடி வாழக்கடவர்களென்றும், அவர்கள் ஒருவரொருவரை அதிகப்பிரியமாக நேசிக்கவேண்டுமென்றும் வேதம் ஆக்ஞாபிக்கின்றது வேதவாக்கியங்களின்படி புருஷனுடைய பூரணபக்ஷத்திற்கு பத்தினியும பத்தினியினுடைய பூரணபக்ஷத்திற்கு பர்த்தாவும் பாத்தியஸ்தராயிருக்கிறார்கள். பர்த்தாவை மனப்பூர்வமாக நேசிப்பதோடுகூட அவனுக்குக்கீழ்ப்படிந்து அவனுடைய சொற்படி நடக்கவும ஸ்திரீ விசேஷமாகப் பாத்தியப்பட்டிருக்கிறாள், ஆயினும புருஷனைத்தெய்வமாகப் பாவிக்கவேண்டுமென்கிற இந்தத்தேசத்தாருடைய கொள்கை கேவலம அஸந்தாப்பமாயிருக்கின்றது. கடவுளே ஆண்டவர், நாமடிமை. அவரெஜமானர். நாம் ஊழியக்காரர், அவர்சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரகர்த்தர். அவரால் நாம் ஆக்கப்படுகிறவர்களும் காக்கப்படுகிறவர்களும் நீக்கப்படுகிறவர்களுமாயிருக்கிறோம் அவர் சூத்திரதாரி நாம் அவரால் ஆட்டப்படுகிற சூத்திரப்பிரதிமை இப்படிப்பட்ட கடவுளுக்குச் சமான

மாகப் புருஷனைப் பத்தினி பாவிக்க வேண்டுமென்கிற விதியானது கனமான தெய்வதூஷணையாயிருக்கின்றது. பின்னும் இந்தக்கொள்கையானது சகலபொருள்களுக்கும்மேலாகவும் ஹிருதயபூர்வமாகவும் கடவுளை நேசிக்கவேண்டுமென்கிற வேதவாக்கியத்திற்குப் பிரத்தியக்ஷ விரோதமாயுமிருக்கின்றது.

தெய்வபக்திக்குப் பின்பு புருஷபக்தி விசேஷமென்பதும், ஸ்திரீக்குச் சகலபாந்தவ்வியங்களினும் புருஷபாந்தவ்வியம் அதி உத்திருஷ்டமென்பதும் சித்தமே இதற்குத் திருஷ்டாந்தமாகக் கலியாணமானவுடனே ஸ்திரீ தன்னுடைய தாய் தந்தை சகோதரர் முதலியவர்களையும் பிதுராராஜிதங்களையும் விட்டுவிட்டு புருஷனுக்கும் அவனுடைய திரவியங்களுக்கும் உரியவளாவதே போதுமான சாக்ஷியமாயிருக்கின்றது ஆகையால் பர்த்தாவிடத்தில் பரிபூரண நேசம் வைக்கவேண்டியது பத்தினியினுடைய மாறாத கடமையாயிருக்கின்றது பர்த்தாவுக்குக் கீழ்ப்படிந்து அவனுடைய இஷ்டப்பிரகாரம் நடக்கிற பத்தினிக்குச் சர்வாபீஷ்டமும் நிரவிக்கமாய்ச்சித்திக்குமென்பது சத்தியமே. உலகம் ஒன்றைக்கொடுத்து மற்றொன்றை வாங்குகிற வர்த்தகர்களுக்குச் சமானமாயிருப்பதால் நமக்குமரியாதை வேண்டுமானால் நாம் மரியாதையைக்கொடுத்து மரியாதையை வாங்கவேண்டும். நமக்கு ஒருவனுடைய பிரியமவேண்டுமானால் நாம்பிரியத்தை கொடுத்து பிரியத்தை வாங்கவேண்டும் அப்படியே ஒரு ஸ்திரீ புருஷனிடத்தில் எவ்வளவு விசுவாசம் வைக்கிறாளோ அவ்வளவு விசுவாசம் புருஷனிடத்திலிருந்து அவளுக்குக் கிடைக்கும் கிரமமான சகலவிஷயங்களிலும் புருஷனுடைய அபீஷ்டப்பிரகாரம் பெண்சாதி நடந்தால் அவளுடைய அபீஷ்டப்பிரகாரம் புருஷனும் நடப்பான் ஆகையால் குடும்பத்துக்கும் புருஷயஜமானனாயிருந்தாலும், அவனுக்குப் பிரியமாகநடக்கிற பெண்சாதியின் சொற்படி புருஷன் கேட்பானதலால் அப்படிப்பட்ட பெண்சாதி ஒரு பக்ஷத்தில் புருஷனுக்கு எஜமானியாயிருக்கிறாள் இது ஸ்திரீயினுடைய வணக்கத்தினாலும் இணக்கத்தினாலும் வருகிறமேன்மையல்லவா? சிலசமயங்களில் நிஷ்காரணமாய்ப் பெண்சாதியைப்புருஷன் கோபித்துக் கொண்டாலும் அதற்குப் பிரதிபாகப் புருஷனைப் பெண்சாதி கோபிக்க எவ்வளவும் அதிகாரமில்லை. பெண்சாதி எப்போதும் வீட்டுக்குள் இருப்பவளாதலாலும் அவளுக்குப் புருஷனைத்தவிர வேறே யஜமானன் இல்லாதபடியாலும் அவள் அந்த ஒருயஜ

மானனுக்குத் திருப்தியாக நடப்பது எளிதாயிருக்கின்றது புருஷன் எப்படிப்பட்ட அந்தஸ்துடையவனாயிருந்தாலும் அவன் பலயஜமான்களும் பலபேருடைய விரோதங்களும் பலகஷ்டமான தொழில்களும் உடையவனானகையால் தன்னை அறியாமல் அவனுக்குக் கோபம வரக்காரணமிருக்கின்றது. அந்தச்சமயம் அறிந்து பத்தினி ஒதுங்க வேண்டியது கிரமம் பிரசண்டமாருதம் ஓங்கிவீசும பொழுதும் அதிவேகமாய் ஜலப்பிரவாகம் வரும்பொழுதும வளையாமல் எதிர்த்து நிற்கிறபெரிய விருக்ஷங்கள் வேரோடே சாய்ந்து விழுகின்றன அந்தச் சமயத்தில் நிமிராமல் வளைந்து கொடுக்கிறசிறிய செடிகளுக்கு ஒரு அபாயமுமில்லை அப்படியே ஸ்திரீகளும் புருஷர்களுக்கு கோபம் வரும்பொழுது எதிர்த்து உத்தரம்சொல்லாமல் சமயாநுகுணமாக ஒதுங்குவதே விவேகம் ஸ்திரீகள் எவ்வளவு நன்மையாக நடந்தாலும் அதற்குத் தநுசாரமாக நடவாமல் ஸ்திரீகளுக்கு கொடுமைசெய்கிற சிலபுருஷர்களும் உண்டு இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமான ஸ்திரீகளுக்குத் தெய்வம் சகாயம் செய்யவேண்டுமே யல்லாமல் வேறுசகாயமில்லை கைவிரலே கண்ணைக் குத்தினால் கையை என்னசெய்யலாம்? நம்முடைய பல்லே நம்முடைய நாவைக்கடித்தால பல்லைவுடைக்கலாமா? கப்பலேறினபின்பு கடல் யாத்திரைக்கு பயந்து காரியமென்ன? ஸ்திரீக்கும் புருஷனைத்தவிர வேறுகதியில்லாதபடியால் தன்னால் கூடியவரையில் புருஷனுக்குத் திருப்தியாக நடக்க வேண்டியது ஸ்திரீயினுடைய கடமையாயிருக்கின்றது புருஷன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தெய்வபக்தியும் சாந்தமும்-பொறுமையும்--உண்மையும்--அடக்கமும் -வணக்கமும் கற்புநெறியும்-உள்ள ஸ்திரீகளுக்கு ஒருநாளும் குறைவில்லை.

எண்சாணுடம்பிற்கும் சிரசேபிரதானமாயிருப்பதுபோல் ஸ்திரீகளுக்கு சகலகுணங்களிலும் கற்புநிலையே முக்கியாபரணமாயிருக்கின்றது கற்புநிலைதவறாதவளுக்கு முக அழகு இல்லாமலிருந்தாலும், கலியாணவீட்டுப் பூமாலைபோல அவளை யாவராலும் கனப்படுத்தப்படுவாள கற்புநிலைகெட்டவள் அதிசுந்தரியாயிருந்தாலும் அவள் சுடுகாட்டு மாலையைப்போல யாவராலும இகழப்படுவாள உலகத்தில ஒருவனுக்கு தீங்குசெய்கிறவன் அவனுக்கு மட்டுந் துரோகியாகிறான அன்னியபுருஷனைச்சேருகிற ஸ்திரீயோவெனறால் பலபேர்களுக்குத் துரோகஞ்செய்கிறாள் அவள் தனனையுங்கெடுத்து அந்த அந்நியபுருஷனையுங்கெடுத்துத் தனனுடைய சொந்தப் புருஷனுக்கும் துரோகியாகி அந்த அந்நியபுருஷனுடைய பத்தினிக்

கும்பெரிய துரோகியாகிறன் அவளுடைய துர்மார்க்கத்தால் அவ
ளுடைய புருஷனுக்கும் அந்நிய புருஷனுடைய பத்தினிக்கும் உண்
டாகிறசஞ்சலமும் பொறாமையும் கஷ்தியும், துக்கமும் அபரிமித
மல்லவா? அன்றியுங் கோடாலிக்காம்பு குலத்துக் கீனமென்பது
போல கற்புநிலைகெட்டவள் தன்னுடைய உற்றார், பெற்றார், முதலி
யவர்களுக்கும தன்னுடையபுருஷன் வழிசசுற்றத்தாருக்கும் மா
றாத அவமானத்தையும, இழிவையும், நிந்தையையும் உண்டுபண்
ணுகிறாள் இந்த அநியாயமான உலகமானது அவள் செய்தகுற்றத்
திற்காக அவளுடைய புருஷனையும பிள்ளைகளையும் அவமானப்படு
த்தி நிரபராதிகளான அவர்களையும் தண்டிக்கின்றது மற்றகுற்றங்
களெல்லாம் சிலகாலத்தில் மறைந்துபோகும் விபசாரதோஷமோ
வெனறால் உலகமுள்ளமட்டும் மறையாது அந்த விபசாரி இறந்தா
லும் அவளுடைய அபகீர்த்தி இறவாமல் என்றும் சிரஞ்சீவிப்
பட்டம்பெற்றுக்கொண்டிருக்கும் மற்றக்குற்றங்களுக்கெல்லாம் ஒ
வ்வொரு பிராயச்சித்தமுண்டு ஒருவனுடைய பொருளைத்திருடி
னால் அதற்குச்சரியான பொருளைக் கொடுத்துத் திருப்தி செய்ய
லாம் அப்படியே நமக்குண்டாகிற நஷ்டங்களுக்கும் நாம் பிறருக்கு
ச்செய்கிறதீங்குகளுக்கும் தகுந்தபரிகாரங்களைச்செய்யலாம் பதிவி
ரதாபங்கததிற்கு ஒரு பிராயச்சித்தமும் இல்லையே கெட்டுப்போன
கற்பு எட்டுநாள் அழுதாலும்வருமா? அரைக்காசுக்கழிந்தகற்பு
ஆயிரம் பொன் கொடுத்தாலும்வருமா? என்று பழமொழியும்
இருக்கின்றதே ஸ்திரீகளுக்குககாவலாகிய நாணத்தையும் மானத்
தையும் விட்டு ஒருஸ்திரீ பரபுருஷ ஸம்போகததுக்கு எப்போது
உடன்பட்டாளோ அப்போதே அவள் எப்படிப்பட்ட அக்கிரமங்
களுக்கும் பின்வாங்கமாட்டாள் பாதிவிரத்தியலோபம் பலபாவங்
களை விளைவிக்கிற வித்தாயிருக்கின்றது எபபடியெனில் பரபுருஷ
னைச் சேருகிறஸ்திரீ அந்தக் குற்றத்தை மறைப்பதற்காகப் பலதந்
திரங்களையும், பொய்களையும கபடமார்க்கங்களையும் உபயோகிப்
பாள் அந்நிய புருஷனால் உண்டாகிற கர்ப்பத்தை அழிப்பதற்காக
அவள் பலமருந்துகளை உண்டுகொலைபாதகத்தையும் கட்டிக்கொள்
வாளவள் சிலசமயங்களில் தன் புருஷனைக்கொலலவும் வழிதேடு
வாள் காமவிகாரத்தைத் தூண்டிவிடுவதற்காக மதுமுதலியலாகிரி
வஸ்துக்களையும் அருந்துவாள்-அந்தவஸ்துக்களையும் விலைக்குவாங்
கவும் பரபுருஷர்கள் பார்க்கத்தன்னை அலங்கரிததுக்கொள்ளவும்
கையிற்பொருளில்லாவிட்டால திருடவும் ஆரம்பிப்பாள் ஒருபர
புருஷன்போலப் பலபுருஷர்களைச்சேர்ந்து பொருள் சம்பாதிக்கவும்

துணிவாள் கருடன்காலிற் கெச்சைகட்டினதுபோல் வியபசார தோஷம எப்படியும் பகிரங்கமாய்விடும் அந்தக்குற்றத்தை மறைக்கயத்தனிப்பது ஆகாசத்தைப்படல்கொண்டு மூடுவதற்கும் பூனை தன் கண்ணைமூடிககொண்டு பாலைக்குடிப்பதற்கும் சமானமாயிருக்கின்றது.

புருஷனும் பெண்சாதியும் ஜீவியகாலம்வரையில் அந்நியர்முகம் பார்க்கிறதில்லையென்று கலியாணகாலத்தில் தெய்வசந்நிதியில பிரமாண பூர்வமாகச் சங்கற்பஞ்செய்து கொள்ளுகிறார்களே அந்தப்பிரமாணத்தை உல்லங்கனஞ்செய்து அந்நியசம்போகம் பண்ணுவது மகாகொடியபாவமாகையால அப்படிப்பட்ட பாவிகள் மோக்ஷத்தை இழந்து அவியாத அக்கினியில் பூதபசாசகணங்களால் உபாதிக்கப்படுவார்களென்று வேதசாஸ்திரத்திற் பலவிடங்களிற் சொல்லப்படுகின்றது இந்த உலகத்திலும் வியபசாரிகள் சகலராலும் கைவிடப்பட்டு சோரநாயகனாலுங கைவிடப்பட்டு தரித்திரமும் பலவியாதிகளும் துன்பங்களுங்கொண்டு சந்துசிரிக்கத திரிகிறதை நாமகண்ணாறப்பார்க்கிறோம் பின்னும் இந்த உலகத்தில் நடக்கிறகொலைகளுக்கும் சண்டைகளுக்கும கலகங்களுக்கும, இந்த அகம்மியாக மனமேபிரதான காரணமாயிருக்கின்றது இந்தக் குற்றத்தினிமித்தம் சோதங்கொமோராமுதலிய பட்டணங்களைக் கடவுள் நிர்மூலஞ்செய்ததும் யாவர்க்குந்தெரிந்த விஷயந்தானே.

கள்ளப்புணர்ச்சியினால் உண்டாகிற இன்பம் அதி அற்பமாயிருக்கின்றது அந்தக்கிஞ்சித் போகத்தினால் உண்டாகிற ஆபத்துகளும், பாவங்களும், பழிகளும் அபாரமாயிருக்கின்றன ஒருவனை மதங்கொண்டயானை பின்னேதுரத்த முன்னேபுலிவநதுபாய அவன் அந்த ஆபத்துக்குப்பயந்து ஆற்றிலேகுதிக்க ஆற்றிலேபலமுதலைகள் அவனைப்பிடித்துவிழுஙக இப்படிப்பட்ட ஸதிதியிலிருககிறவன் தாகத்துக்கு ஜலத்தை அள்ளிக்குடித்துச் சந்தோஷித்தால் எப்படியோ அப்படியே கள்ளப்புணர்ச்சி செய்கிறவர்களுடைய நெஞ்சில் ஓயாதபயமும் நடுக்கமும் துன்பமும் குடிகொண்டிருக்குமே இவ்வளவு அச்சத்தோடு அவர்களடையும் இன்பம், துன்பமேயல்லாமல் வேறல்லவே இந்த அற்பசுகத்தைவிரும்பி மலைபோலேபாவங்களையும் பழிகளையும் துன்பங்களையும் சம்பாதித்துக் கொள்ளுகிற ஸ்திரீ எவ்வளவு மதிகெட்டவளாயிருக்கிறாள்.

ஒரு ஸ்திரீபரபுருஷனுக்குப் பெறுகிறபிள்ளை அவள் தன் சொந்தப்புருஷனுடைய ஆஸ்திகளுக்குப் பாத்தியஸ்தர்களாக்கு

வது இவ்வளவு பெரிய அநியாயம் ஸ்திரீபுருஷர்கள் ஒருவர்க்கொருவர் உதவியாயிருக்கும்பொருட்டும் அவர்கள் பிள்ளைகளைப்பெற்று நன்மார்க்கத்தில் கொண்டுவரும்பொருட்டும் கலியாணத்தை கடவுள் நியமித்தருளினார் அந்த விதிக்கு விரோதமாக உலகத்தில் விபசார தோஷங்கள் அதிகரிக்குமானால் புருஷனைப் பெண்சாதி மதியாமலும் பெண்சாதி புருஷனை விரும்பாமலும் பிள்ளைகளைத் தாய் தகப்பன்மார்கள் பராமரிக்காமலும் தாய் தந்தைகளைப் பிள்ளைகள் பேணாமலும், கிரகஸ்தாச்சிரம தர்மங்கள் சரியாக நடவாமலும் உலகத்திற்குப் பெரிய விபரீதம் உண்டாகும் ஆகையால் ஸ்திரீகள் கற்புநிலையை கைவிடாது காக்கவேண்டும் இதரயுத்தங்களில் சத்துருவுக்குப் பின்வாங்காமல் எதிர்த்து நிற்பவர்களே ஜெயமடைவார்கள் காமயுத்தத்திலோவென்றால் எதிர்த்து நில்லாமல் ஓடுகிறவர்களே ஜெயங்கொள்வார்களாகையால் பெண்டுகள் அந்நியபுருஷர்களுடன் பேசாமலும் அவர்களைச் சொப்பனத்திலும் நினையாமலும் காமநூல்களையும் கெட்டகதைகளையும் படியாமலும், மேனாமலும் நிர்மலமாயிருக்கவேண்டும்.

உலகத்தில் அநேகஸ்திரீகளைக்கெடுக்க உபாயஞ்செய்கிற புருஷர்களும் இருக்கின்றார்களாகையால், ஸ்திரீகள் தகுந்த துணையில்லாமல் ஒருபோதும் தனிமையாயிருக்கத் தக்கவர்களல்ல புருஷன் வீட்டில் இல்லாதபோதும் அவர்கள் நற்குணமுள்ள பெண்டுகளைத் துணைதேடிவைத்துக் கொள்ளவேண்டும் அவர்கள் பிராணன்போனாலும் கற்புநிலை தவறுகிறதில்லையென்கிற வைராக்கியசித்தம் உடையவர்களாயிருக்க வேண்டும் ஒரு அரசனுடைய கெட்ட எண்ணத்துக்கு ஒரு உத்தமி இணங்காமல் நிராகரித்தபொழுது அவன் வாளை உருவிக்கொண்டு 'என்னை நீ சேராதிருப்பாயானால் உன்னை வெட்டிக்கொல்லுவேன், என்று கோபத்தோடுமொழிய அதைக்கேட்டபதிவிரதை அந்த யரசனைநோக்கி' நரபதி நீயானாலு நண்பரின்பாதந்தாங்குஞ் சிரமகுட நிகராமோ சேர்கிலையேற் கொல்வெனன, காவாளை யுருவிநின்றாய் கற்பினுக்கோர் குறைவின்றித்தரமா நீயெனைக்கொல்லிற் றந்தைதாய்க்குநீயே, ஓ துஷ்டா நீ யரசனானும் எனது பர்த்தாவினுடைய திருப்பாதத்திலே ஒட்டிய தூசிக்கு உன்னுடைய தலையிலிருக்கிற கிரீடமும் சமானமாகுமா? உன்னைச் சேராவிட்டாற் கொல்வேனென்று கைவாளை உருவி நின்றாய் என்னுடைய கற்புக்குமட்டும் பங்கமின்றி என்னை நீ கொன்று

விடுவாயானால் எனக்குத் தாயுந்தந்தையும் குருவும் நீயே யென்று பிரத்தியுத்தரங்கூறினாள் (நீதிநூல் புருடபாரியலபு-செய்யுள் ௬௰) மானத்திற்குமுன் பிராணனைத் திரணப்பிராயமாக எண்ணிகற்பை காப்பாற்றின அந்த உத்தமியைமற்றஸ்திரீகள் குருபீடமாககொள்ளவேண்டும் அந்நியபுருஷனைச் சேருகிற ஸ்திரீக்கும் அந்த அந்நிய புருஷனுக்கும் தோஷம் துல்லியமாயிருந்தாலும் ஸ்திரீக்கு அந்நிய புருஷனால் கர்ப்பந்தரிப்பது முதலான தர்மசங்கடங்கள் சம்பவிக்க இடமிருப்பதால் அவளுடைய குற்றத்தை உலகத்தார் பெரிதாக எண்ணுகிறார்கள். சில தருணங்களில் நிர்த்தோஷமான ஸ்திரீகளுக்கும் தோஷம் கற்பித்து அவர்கள் விபசாரிகளென்று அபாண்டமான பொய்யைக்கட்டிவிடுகிற உலகமானது வாஸ்தவத்தில் கெட்டுப்போனவளுடைய செய்கையை வெளிப்படுத்தாமலிருக்குமா? திரங்கள்கலவாத ஸ்திரீகளையும் கலந்ததுபோல பெருமையாகப்பொய்பேசுகிற புருஷர்களும் உலகத்தி லிருக்கிறார்களே இப்படிப்பட்ட புருஷர்கள் தாங்கள் வாஸ்தவமாகச்சேர்ந்த பெண்களுடையபழியை ஊரெங்கும் பறைசாற்றாமல் விடுவார்களா? ஆகையால் லந்நிய புருஷர்களுடைய காற்றும் தங்கள்மேல் வீசாமல ஸ்திரீகள் சுத்தமனோ நிர்மலமாயிருக்கவேண்டும்.

தெய்வபக்திக்குப்பின்பு ஜிவகாருண்ணியம் சகல புண்ணியங்களுக்கும் ஆதியாகையால் ஜீவகாருண்ணியத்தையும் ஸ்திரீகளுக்கு உபதேசிக்கவேண்டும் ‘ தன்னைப்போற் பிறரை நேசிக்கவேண்டும், என்கிற தேவவாக்கியமானது சகலவேதசாஸ்திரங்களின் சாரசங்கிரகமாயிருக்கின்றது மனுஷரால்செய்யப்பட்டிருக்கிற சட்டங்களும் சாஸ்திரங்களும் விஸ்தாரமாயும் புதை பொருளாயும் பலவியாக்கியான கர்த்தர்களை யபேட்சிக்கின்றன வாயுமிருக்கின்றனயந்த வியாக்கியான கர்த்தர்கள் ஒருவருக்கொருவர் பரஸ்பரவிரோதமாக ஒருவாக்கியத்துக்குப் பல வியாக்கியானங்களைச் செய்கிறார்கள் ‘ தன்னைப்போற்பிறரை நேசிக்கவேண்டும், என்கிறவேதவாக்கியமானது மலைமேல்வைத்ததீபம்போல் யாவர்க்கும் எளிதிற்பயன விளங்கத் தக்கதாயிருபபதா லதற்கு வியாக்கியாதாவேண்டுவதில்லையே, நியாயமான விஷயங்களில எதை நமக்குப் பிறர்செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ மதைநாமவாகளுக்குச்செய்வதும், எதை யவர்கள் நமக்குச் செய்யகூடாதென்று நினைக்கிறோமோ யதையவர்களுக்கு நாம் செய்யாலிருப்பதுமே இநத வேதவாக்கியத்தின் பொருளாயிருக்கின்றது நாம் பசித்திருக்கும்போது

ஆகாரத்தை அபேக்ஷிக்கிறோமாகையால் நாமும் பசித்தவர்களுக்கு ஆகாரங்கொடுக்கவேண்டும் நாம் தாகமாயிருக்கும் பொழுது ஜலத்தை வேண்டுகிறோமாகையால் நாமுந்தாகமாயிருக்கிறவர்களுக்கு ஜலத்தை கொடுக்க வேண்டும் நாம் வஸ்திரமில்லாத போது வஸ்திரம்விரும்புகிறோமாகையால் நாமும் வஸ்திரமில்லாதவர்களுக்கு வஸ்திரம் அளிக்கவேண்டும் நாம் துக்கமாயிருக்கும்பொழுது ஆறுதலை அபேக்ஷிக்கிறோமாகையால நாமும் துக்கமுள்ளவர்களைத் தேற்றவேண்டும். எல்லாரும் நமக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்றும், ஒருவரும் நமக்குத்தீங்கு செய்யக்கூடாதென்றும் நாம் விரும்புகிறபடியால், நாமும் ஒருவருக்குந்தீங்கு செய்யாமல் உபகாரமேசெய்யவேண்டும். இவ்வாராக இந்த வேதவாக்கியத்தில் அடங்காத நீதி ஒன்றுமில்லை. "கடவுளைச் சகல பொருள்களுக்கு மேலாக உணணி அவரிடத்தில் முழுமனதோடு அந்தக்கரணபக்தி செய்யவேண்டும், என்றும், தன்னைப்போற் பிறரை நேசிக்கவேண்டும்" என்றும் குருமூர்த்தியாகியவதரித்த கடவுள் திருவாய் மலர்ந்தருளிய இரண்டுவாக்கியங்களும் எவ்வளவு பரமார்புதமாயிருக்கின்றன, கடுகுக்குள்,கடலையுங், அணுவுக்குள் மலையையும் அடைத்ததுபோலக் கடவுள் விஷயமாகவும், பிரர்விஷயமாகவும் நம்முடைய சொந்தவிஷயமாகவும் நாம் அநுஷ்டிக்கவேண்டிய சகல நெறிகளையும் அந்த இரண்டுவாக்கியங்களில அடக்கிய ஞானுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம் தன்னைப்போற்பிறரை நேசிக்க வேண்டும்" என்கிற விதியை நல விஷயங்களுக்கு மட்டும் உபயோகப்படுத்த வேண்டுமேயல்லாமல் துர்விஷயங்களில் உபயோகப் படுத்தக்கூடாது, சில சமயங்களில் நாம் துர்ம்மார்க்கம் செய்ய விரும்புவோமாகையால் அந்தக காரணத்தைகொண்டு பிறருடைய துர்மார்க்கத்துக்கு நாம் இடங்கொடுக்ககூடாது இப்படிப்பட்ட துர்விஷயம் நீங்கலாகமற்ற விஷயங்கள்லெல்லாம் "தன்னைப்போற் பிறரை நேசிக்கவேண்டும்" என்கிற விதியை நாம் சரியாக அநுசரிப்போமானால் உலகத்தில் தரித்திரமென்பது தலைக்காட்டுமா? குற்றமென்பது குடியிருக்குமா? வஞ்சகமென்பது வாழ்ந்திருக்குமா? இந்த விதியை அநுசரியாத காரணத்தால் உலகத்தில் தீதுக்களும் சூதுகளும், வாதுகளும், தரித்திரங்களும, கஷ்டங்களும நிலைகொண்டிருக்கின்றன, பூமியில கோடாநுகோடி ஏழைகள் படுங்கஷ்டங்களை நாம விபரிப்போமானால கல்லான மனமும கரையாதிருக்குமோ? இருப்பானமனமும இளகாதிருக்குமோ.

உண்ணச்சோறில்லாமலும், உடுக்க உடையில்லாமலும், இருக்க வீடில்லாமலும், படுக்கப்பாயில்லாமலும் தங்களுடைய இடுப்பிலிருக்கிற பழங்கந்தையும் கையிலிருக்கிற ஓடுந்தவிர வேறொன்றியில்லாமலும், உதராக்கினியுள்ளே சுட, வெயிலிலே மேலே சுட மழையினாலே நனைந்தும், பனியினாலே மெலிந்தும், காற்றினாலே கலங்கியும் நொந்து கொண்டே திரிகிற ஏழைகளுக்குக் கணக்குண்டா? வீடுவீடாகத் திரிந்தும் அன்னம் அகப்படாமல் பசியினாலே வாய்வறண்டு, கண் இருண்டு, காதடைத்து, கைசோர்ந்து மெய்தளர்ந்து எலும்புகளெல்லாம் எண்ணும்படி துரும்புபோல இளைத்துக் களைத்துப் பரிதவிக்கிற ஏழைகள் இலக்ஷோபலக்ஷம் அல்லவா? அநேக குருடர்களும், செவிடர்களும், ஊமைகளும், சப்பாணிகளும், கிழவர்களும், அலைந்து திரிந்து பிச்சையெடுக்கச் சக்தியில்லாமலும், அவர்களை விசாரிக்க ஒருவருமில்லாமலும் இருந்த இடத்திலேயே கிடந்து மடிந்து போகிறார்கள், தனவான்களாயிருந்து தரித்திர தசையடைந்த மானிகள் கைப்பாடுபடத் தெரியாமலும், வெட்கத்தினாலே வெளியே போய்ப் பிச்சையெடுக்கத் துணியாமலும், வீட்டிற்குள்ளிருந்துகொண்டு பசியினாலே தாய்முகத்தைப்பிள்ளைகள் பார்க்க புருஷன் முகத்தைப் பெண்சாதிபார்க்கப் பெண்சாதி முகத்தைப் புருஷன் பார்க்க, அவர்களுடைய முகத்தைப்பார்க்க ஒருவருமில்லாமல் பல நாள் பட்டினியாயிருந்து வருந்துகிறார்கள் அநேக பதிவிரதைகள் தாங்கள் சாப்பிடாமலிருக்கச் சாப்பிட்டதுபோல புருஷருக்கு பொய்சொல்லி, அகப்பட்ட அன்னத்தையெல்லாம் புருஷர்களுக்கும் புத்திரர்களுக்கும் படைத்துவிட்டுத் தாங்கள் நித்திய உபவாசராயிருந்து சாகிறார்கள், பிள்ளைகள் விளையாடும் பொழுது தனவான்கள் வீட்டுப்பிள்ளைகள் பக்ஷணம் சாப்பிட்டோமென்று சொல்ல ஏழைவீட்டுப் பிள்ளைகளுக்குப் பக்ஷணமென்பது இன்னதென்று தெரியாமல் தாய்மாரை அதைக்கேட்க அதைக்கொடுத் தேம்பி அழுகிற எளியதாய்மார்களும் அநந்தமே, அநேக ஏழைகள் இரவும் பகலும் ஓயாமல் கைப்பாடுபட்டும் அவர்களுக்குக் கிடைக்கிற கூலி அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் கால்வயிறு நிறைக்கப் போதாமல் கஷ்டப்படுகிறார்கள், பாதி உடல் வெளியிலும் பாதி உடல் உள்ளுமாயிருக்க நிமிர்ந்தால் தலையிலும், குனிந்தால் முதுகிலும் இடிக்கும்படி குருவிக்கூடுபோல அநேக சிறிய குடிசைகளைக் கட்டிக்கொண்டு அநேக குடிசைகளில் அநதிரகுரியர்கள் வசிக்க, அடுப்பையிட்டு "அக்கினி" அவர்களுடைய

வயிறுகளில் வசிப்பதுபோல் உதராக்கினி பற்றியெரிய. "வருணன், அவர்களுடைய கண்களில் வசிப்பதுபோல தாரைதாரையாகக் கண்ணீர்சொரிய, "வாயு" அவர்களுடைய வாயிலும் மூக்கிலும் வசிப்பதுபோல ஓயாமல் பெருமூச்சுவிட, இவ்வகையாகத் துன்பப்படுகிறார்களே அன்னமென்பது இன்னதென்று தெரியாதவர்களாய்க் கீரைகளையும் இலைகளையும், இலுப்பைப்பூ, அல்லிக்கிழங்கு முதலியவைகளையும் பிடுங்கி அவித்துக்கால் வயிறு சாப்பிட்டுமுக்கால்வயிற்றைத் தண்ணீரால் நிரப்புகிறவர்களும் பலர், உண்ணுவதற்குப் பழக்கூழும் அகப்படாமல நண்டுகளையும் நத்தைமுதலியவைகளையும் வேகவைத்துச் சாப்பிட்டு, அந்த ஜெந்துக்களுக்கு இயமசொரூபமாய்க் காலங்கழிக்கிற பள்ளர்களும் பறையர்களும் அனந்தமே புலிக்குப் பயப்படாதவர்களும் கருப்புக்குப்பயந்து பல நாட்பசியை தாங்கமாட்டாமல் திருட்டுகளையும் புரட்டுகளையு கற்றுக்கொள்ளுகிறவர்களும் தங்களுக்கு பிராணயதமான பிள்ளைகளையும் விற்கத்துணிகிறவர்களும்பலர் பிக்ஷைக்காரன் சோற்றிலே சனீசுரன் புகுந்ததுபோல் எலிவளைகளையும் எறும்பு வளைகளையும், தோண்டி அவைகளிலிருக்கிற தானியங்களை யெடுத்தும், களங்களிலும் மார்க்கங்களிலும் சிந்திக்கிடக்கிற தானியங்களை ஒவ்வொன்றாகப் பொருக்கியும் பாதிநெல்லும் பாதிகல்லும் பாதி உமியுமாய் கஞ்சிகாய்ச்சிக் குடித்து அகன்ஸியாஸி காலக்ஷேபஞ் செய்கிறவர்களும் அநேகர் அநேக ஏழைகளுக்கு கொஞ்சம் கஞ்சி அகப்பட்டாலும் அந்தகஞ்சிச்சட்டியை ஒருபிள்ளை ஒருபக்கத்திற் பிடித்திழுக்க மற்றொருபக்கத்தை மற்றொருபிள்ளை பிடித்திழுக்க அதில் சிந்துகிற கஞ்சிக்குப பல பிள்ளைகள் கைநீட்ட இவ்வகையாகக் கஞ்சியை யெல்லாம பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டுத் தாங்கள் நித்தியவிரதமாயிருக்கிற தாய்தந்தைமார்களும் சதகோடியே.

ஒருநாள் ஒரு எளிய ஸ்திரீ ஒருபிள்ளையை இடுப்பிலவைத்துகொண்டு ஒருபிள்ளையைத் தோளில எடுத்துக்கொண்டு சில பிள்ளைகளைக் கையிற்பிடித்து நடத்திக்கொண்டு மிகுந்த பசிதாகத்துடனே வந்து பிக்ஷைகேட்டாள் அவள் பசியினால வாடிமெலிந்து பேசவும் சக்தியில்லாமலிருந்தால் அவள் முந்திச்சாப்பிடும்படி ஒரு இலை போட்டு அன்னம்படைக்கப்பட்டது அவள உட்கார்ந்து ஒரு பிடி சாதம எடுத்து வாயில்வைத்தவுடனே இரண்டு பிள்ளைகள ஓடி அவளுடைய இரண்டுகைகளையும் பிடித்துக்கொண்டன ஒருபிள்ளை

அவளுடைய தோளிலேறி அவளுடைய வாயிலிருந்த சாதத்தைப் பலவந்தமாகப்பிடுங்கித் தன்வாயிற்போட்டுக்கொண்டது மற்றப் பிள்ளைகள் இலையிலிருந்தசாதத்தை அள்ளியள்ளிச்சாப்பிட்டு ஒரு நிமிஷத்தில் சாதமிருந்த வாழையிலையை வெற்றிலையாக்கிவிட்டன மலைத்துப்போய்ப் பேசாமலிருந்த அந்த ஸ்திரீ மாலைமாலையாக் கண்ணீர்விட்டுக்கொண்டு " ஐயா ? இப்படியே தினந்தோறும் இந்தப்பிள்ளைகளால் நான் பட்டினியாயிருக்கிறேன்" என்றுசொல்லி உடனே பசிகளையினால் மூர்ச்சையானாள் அப்போது கூட இருந்தவர்கள் ஒருவராவது இதைக்கண்டு அழாமலிருக்கவில்லை இப்படியே எண்ணிக்கையில்லாத ஜனங்கள் படுங்கஷ்டங்களைக் கண்கொண்டுபார்க்கக்கூடுமா? காதினால் கேட்கக்கூடுமா ? ஐயையோ இந்தன்னபரிதாபம், அந்த ஏழைகளும் கடவுளுடைய பிள்ளைகள் அல்லவா? அவர்களுக்காகவும் மழை பெய்யவில்லையா? அவர்களுக்காககவும் பூமிவிளையவில்லையா? கடவுளால் கொடுக்கப்பட்ட சகலபொருள்களிலும் அவர்களுக்கும் பாகமில்லையா ? இந்தப் பூமியில் விளையப்பட்ட தானியங்களையும் மற்றப்பொருள்களையும் சகல மனுஷர்களுக்கும் சமபாகமாகப் பிரித்துக்கொடுத்தால் இந்த உலகத்துக்கும்கொடுத்து இன்னம் சில உலகங்களுக்குந் தானங்கொடுக்கலாமே அப்படியிருக்க கோடானுகோடிஏழைகள் கஷ்டப்படக்காரணமென்ன ? அதற்குத் தனவான்களுடைய பேராசையும்லோபகுணமுமே காரணமாயிருக்கின்றன, பூமியும், பூமியிலடங்கிய மற்றப் பொருள்களும் சகலருக்கும் சமுதாயமே தவிர அவைகள் தனவான்களுக்குமட்டும் சொந்தமென்று அவர்கள் கடவுளிடத்தில் சிலாசாசனம் பெற்றுக் கொள்ளவில்லையே பஞ்சபூதங்களில் பூமி தவிர மற்றப் பூதங்களையும் சந்திரசூரிய நட்சத்திரங்களின் பிரகாசத்தையும் யாவரும் பொதுவாகவே அநுபவிக்கிறார்கள் அப்படியே பூமியையும் பூமியில் உற்பத்தியாகிற தனதானியங்களையும் சகலரும் பொதுவில் அநுபவிக்க வேண்டியது நியாயமாயிருக்க, அவைகளை சிலசிலவர்கள் மட்டும் கட்டிக்கொண்டு மற்றவர்களுக்குப் பாகம் கொடாமையினால் அநேகர் தரித்திரப்படவேதுவாயிருக்கின்றது ஒருபுண்ணியவான் தர்மசத்திரங்கட்டி அதற்குக் கிராமங்கள் விட்டு, அந்த கிராமங்களில் வரும்படியைக்கொண்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்யும்படி காரியஸ்தர்களையும் கணக்கர்களையும் உக்கிராணக்காரர்களையும் நியமிப்பதுபோல பரமகிருபா மூர்த்தியாகிய கடவுள் உலகமாகிய அன்னசத்திரத்தைக்கட்டி திரவியவான்

கணக்காரியஸ்தர்களாகவும் பொக்கிஷக்காரர்களாகவும் நியமித்து அவர்கள் மூலமாகத்தர்மம் நடக்கும்படி அவர்களிடத்தில பொருள்களைக் கொடுத்தருளினார். தர்ம விசாரணைக்கர்த்தர்கள் சத்திரத்தின் வருமபடியில் தங்களுக்குள்ள பாசாந்தரவேதனங்களை யெடுத்துக்கொண்டு மற்றதை ஏழைகளுக்கு உபயோகப்படுத்துவதுப் போல் செல்வர்கள் தங்களுக்கும் தங்களுடைய குடும்பங்களுக்கும் வேண்டியமட்டில் வைத்துக்கொண்டு சேஷத்தை ஏழைகளுக்கு விநியோகஞ் செய்யவேண்டுமென்பது கடவுளுடைய திருவுளமாயிருக்கின்றது அந்தப்படி சத்விநியோகம் செய்யாத பரமலோபிகள் ஏழைகளுடைய சொத்தை அபகரிக்கிறவர்களாகையால் அவர்களைத் தீனபந்துவாகிய தெய்வம் சிக்ஷியாமல்விடுமா? உலகத்தில் கோடீசுரர்களும் லக்ஷாதிபதிகளும் அனேகர் இருக்கிறார்களே அவர்களுடைய கைவசமாயிருக்கிற பொருள்களைப்பாகித்தால் எண்ணிறந்த ஏழைகளுக்குக்கொடுக்கலாமே சாதாரணமாகத் தனித்தனியே ஆயிரவேலிநிலமுடைய பூபாலர்கள் அநேகர் இருக்கிறார்கள் ஒரு எளிய குடும்பத்தின் சர்வ ஜீவகாலக்ஷேபத்திற்கு ஒருவேலி நிலம்போதுமாகையால் ஆயிரம்வேலி நிலம் ஆயிரங்குடும்பங்களின் ஜீவனத்திற்குப்போதுமே அவ்வளவு நிலங்களை ஒருவன் வைத்துக்கொண்டு மற்றவர்களைப் பறக்கவிடுவது தர்மமா? சீமான்கள் வீட்டு ஸ்திரீகள் விசேஷ காலங்களில் வெளியில் புறப்படும்போது தரித்திருக்கிற ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் மதிப்பிட்டால் ஒவ்வொருத்திக்கு லக்ஷரூபாய்க் குறையாமல் இருக்கின்றனவே குடும்பம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் பிரித்துக்கொடுத்தாலும் லக்ஷரூபாயை ஆயிரம் குடும்பங்களுக்குக் கொடுக்கலாமே ஆயிரம் குடும்பங்களுடைய அன்னத்தை ஒரு துர்ப்பலமுள்ள ஸ்திரீதன்னுடைய தேகத்தின் மேலே தூக்கிக்கொண்டு திரிவது எவ்வளவு பெரிய அநியாயம் இன்னும தனவான்கள் வீட்டிலிருக்கிற சர்வாபரணங்களும் பலதிரவியங்களும் வஸ்திரங்களும் துர்விஷயங்களிலும் டம்பவிஷயங்களிலும் அவர்கள் விருதாவிரயம் செய்கிற தனங்களும அநாவசியமாக அவர்கள் வைத்திருக்கிற பண்டம்பாடி முதலிய பாத்திரக்கோடிகளும் இவ்வளவென்று கணிதம் செய்யக்கூடுமோ? அந்தப் பொருள்களையெல்லாம் பணமாக்கி, வட்டிக்கு விட்டு வட்டிவரும்படியில அந்தச் செல்வர்களுடைய குடும்பங்களுக்கு தற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் வேண்டியமட்டும் வைத்துக்கொண்டு, மிச்சத்தை ஏழைகளுக்குக் கொடுத்தால் அவர்களுடைய

கஷ்டம்விடியாதா? பூமியைப்பார்த்து, 'பூமியே? உனக்குப் பொன் எனக்குமண், என்றுச் சொல்வதுபோல பூமியைத் தோண்டித் தோண்டி மண்ணைத் தங்களிடம் இழுத்துக்கொண்டு பொன்னைப பூமியில் புதைக்கிற செல்வர்கள் அந்தப்பொருளைத் தாங்களும் அநுபவியாமல் ஏழைகளுக்குங் கொடாமல் மண்ணுக்குத் தத்தஞ்செய்வது மார்க்கமா? அண்டையிலும் அயலிலும் எண்ணிக்கையில்லாத ஜனங்கள் கொட்டைப்பாக்களவு அன்னமும் அகப்படாமல்கஷ்டப்படும்பொழுது, மிராசுதார்கள் களஞ்சியங்கள்தோறும் மலைமலையாகத் தானியங்களைக் கட்டிவைத்துக் கொண்டு அதிக விலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கலாமா? அநேக ஏழைகளுடைய வயிறுகள் வறுமையினால் வெறுமையாயிருக்கும்பொழுது நெற்கோட்டைகள் போல் பொற்கோட்டைகளை கட்டிவைத்திருக்கிற மகதைசுவரியவான்கள் வெள்ளிக் கிண்ணியிலே பாலும் தங்கக்கிண்ணியிலேசோறும்வைத்துக்கொண்டு தங்களுடைய வயிறுகளைமட்டும நிரப்பலாமா? அநேக ஏழைகள் வஸ்திரமில்லாமல் திகம்பரர்களாய்த் திரியும்பொழுது, பிரபுக்கள் பலவண்ணார் வீடுகளை விலைக்கு வாங்கினதுபோல மூட்டை மூட்டையாகவும் அடுக்கடுக்காகவும் வஸ்திரங்களை வைத்துக்கொண்டு சும்மா இருக்கலாமா.

பரோபகார மில்லாத ஜன்மமேபாழ் ஒருவன் சகலசாஸ்திரசம் பன்னனும் அசகாயசூரனும் ஜெகப்பிரக்கியாதி உள்ளவனும் இருந்தாலும் அவன்பரோபகார சூனியனாயிருப்பானானால் அவனுடைய ஜன்மம் வியர்த்தமே. 'நரசுரா முதலிய சகலருடைய நாவுகளினால் நாம் பேசினாலும பரோபகாரமட்டும் நம்மிடத்தில் இல்லாதிருக்குமானால் நம்முடைய வாசாலகம் அர்த்தமில்லாத வெண்கல ஓசைக்குச் சமானமே, கடவுள் நம்மை நேசித்ததுபோல் நாம் ஒருவரொருவரை நேசிக்கவேண்டும் அப்போது தான அந்தச் சர்வலோக குருவுக்கு நாம் சிஷர்களென்று சகலமனுஷர்களும அறிவார்கள். கடவுளே உபகார சொரூபியாயிருக்கிறார், நாம் பூமியை பார்த்தாலும் வானத்தைப்பார்த்தாலும் எந்தப் பொருளைப்பார்த்தாலும் நம்மை நாம் பார்த்தாலும் சகலமும் அவருடைய உபகாரமயமேயன்றி வேறில்லையே அநதப்பரம தயாளுபோல் நாம் ஒருவரொருவரை நேசிப்போமானால் கடவுள் நம்மிடத்தில் வசிப்பார் அவருடைய கிருபையையும் நம்மிடத்தில் பூர்ணமாயிருக்கும் சகலரும்தயாபரனுடைய பிள்ளைகளாதலால் நாம் ஒருவர்கொருவர் சகோதரர்களாயிருக்கிறோம் 'ஒருவன கடவுளை நேசிப்பதாகச்சொல

கிகொண்டு தன்னுடைய சகோதரனைப் பகைப்பானானால் அவன் பொய்யனே ஏனெனில தன்கண்ணாற்பார்க்கிற சகோதரனை நேசியாதவன் தன்கண்ணாற் பாராதகடவுளை யெப்படி நேசிப்பான் இம்மைச்செல்வத்தை உடையவன் தன்னுடைய சகோதரன் தரித்திரப்படுவதைக்கண்டும் இரங்காதிருப்பானானால் அவனிடத்தில் தெய்வபக்தியெப்படி குடிகொண்டிருக்கும்' கடவுளை ஏழைவேஷங்கொண்டு வருகிறதலால் ஏழைகளுக்கு கொடுக்கிறவர்கள் கடவுளுக்கேகொடுக்கிறார்கள் ஏழைகளுக்கு 'இல்லை' என்கிறவர்கள் கடவுளுக்கே 'இல்லை. என்றார்கள் இதர விஷயங்களில நாம் செலவிடுகிற அர்த்தங்களெல்லாம் வியர்த்தமாய்ப்போகின்றன தர்மவிஷயங்களிற் செலவிடுகிற பொருள்மட்டும் அழியாமல் பரலோக ஆஸ்தியாகச்சேருகின்றது நாம் அனுபவிக்கும் காயிக சுகங்களெல்லாம் அற்பமாயும் பின்பு துன்பங்களை விளைவிக்கத்தக்கவைகளாயுமிருக்கின்றன நாம் பிறருக்கு உபகாரஞ்செய்து அந்த உபகாரபலனை அவர்கள் அனுபவிக்கும்பொழுது நமக்கு உண்டாகிற ஆநந்தம் பிரமாநந்தமல்லவா ? ஆகையால் பரோபகாரத்துக்குச்சமானமான இகபரபாக்கியம் வேறில்லையே.

ஒவ்வொருவரும் தங்களுடைய அந்தஸ்துக்குத் தக்கப்படி பரோபகாரம்செய்வது பாரமல்ல, தனவான்கள் தரித்திரர்களுக்கு அன்னவஸ்திர தானங்களைச்செய்யலாம் வித்வான்கள் எளிய பிள்ளைகளுக்கு வித்தியாதானஞ்செய்யலாம் பலவான்கள் துர்ப்பலமுள்ளவர்களுக்குத் துணைசெய்யலாம் துக்கமுள்ளவர்களுக்கு யாரும் ஹிதவசனங்களைச் சொல்லித் துக்கநிவர்த்திசெய்யலாம் வியாதிக்காரர்களை ஆரோக்கியமுள்ளவர்கள் அடிக்கடி விசாரித்து வேண்டிய பரிகாரங்களைச்செய்யலாம் புத்தியுள்ளவர்கள் புத்தியில்லாதவர்களுக்குச் சமயம்பார்த்துத் தகுந்தபுத்திமதிகளைச் சொல்லித் திருத்தலாம் ஏழைகளும் தங்களுடையதேகம் வருத்தப்பிரயாசப்பட்டாயினும் பிறருக்கு உதவிசெய்யலாம் இவ்வாறே ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய சக்திக்குத்தக்கபடி பரோபகாரஞ்செய்தால் ஏழைகளுக்கெல்லாம் தரித்திரம்ஹதமாகுமே கோடைவெயிலைத் தான் தாங்கிக்கொண்டு மற்றவர்களுக்கு நிழலைகொடுக்கிற விருக்ஷம்போல தங்களுக்குவருகிற துன்பங்களைப்பாராட்டாமல் பிறருக்கு உபகாரஞ்செய்கிறவர்களே குணத்தமர்கள்.

கையிலே பொருளை வைத்துக்கொண்டு தரித்திரர்கள் போல் பிக்ஷைக்குவருகிற மாயப்பிரட்டர்களுக்கும் பாடுபடத்தக்க அரோகதிடகாத்திரர்களுக்கும் தப்புஸ்தோத்திரஞ் செய்பவர்களுக்கும் பிக்ஷைகொடுப்பது துர்விநியோகமாயும் அவர்களிடத்தில் பொருளாசை - சோம்பல் - பொய்முதலிய துர்க்குணங்களை விளைவிக்கத் தக்கதாயு மிருப்பதால் பாத்திரமறிந்து பிக்ஷையிடுவதே தகுதியாயிருக்கின்றது ஆருமற்ற அகதேசி பரதேசிகளும் பாடுபடச்சக்தியில்லாத-குருடர்-முடவர்-முதலிய அங்கஹீநர்களும்வியாதியஸ்தர்களும் விர்த்தாப்பியர்களும் தாய்தகப்பன் அற்றபிள்ளைகளும் அநாதவிதந்துக்களும் வாழ்ந்து வறியோரானவர்களும் நம்முடைய உபகாரத்துக்குப் பாத்திரர்களா யிருக்கிறார்கள் அவர்கள் எந்த ஜாதியாராயிருந்தாலும், எந்த சமயிகளாயிருந்தாலும் எந்தத்தேசத்தாராயிருந்தாலும் எவ்வளவும் வித்தியாசம் பாராமல் அவர்களுக்கு உபகாரஞ்செய்வதே பரமசுகிர்தம் சகலருக்கும் பிதாவாகிய கடவுள் நல்லவர்களுக்கும் பொல்லாதவர்களுக்கும் சரியாகச் சூரியன் பிரகாசிக்கவும் நீதிமான்களுக்கும் அநியாயக்காரர்களுக்கும் சமானமாக மழைபெய்யவும் செய்கிறாராதலால் அவருக்குப்பிள்ளைகளாகிய நாம் நம்முடைய பகைவர்களையும் நேசிக்கவும் வைவாரை வாழ்த்தவும் நம்மைப்பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யவும் நமக்குத் துன்பஞ் செய்கிறவர்களுக்கு க்ஷேமமுண்டாகும்படி பிரார்த்திக்கவும், வேதவாக்கியங்களின்படி நாம் பாத்தியப்பட்டிருக்கிறோம், (இன்னாசெய்தாரைபொறுத்த லவர்நாணநன்னஞ்செய்து விடல்) என்று திருவள்ளுவரும் செப்புகின்றாரே.

பெற்றதாய் பசித்திருக்கப் பிராணபோசனஞ் செய்வதுபோல் சிலர்தங்களுடைய சொந்த குடும்பங்களைத்தவிக்க விட்டுவிட்டு சொத்துக்களைப் பராதீனஞ்செய்கிறார்கள் இதுமனுநீதிக்கும் பிரகிருதிநியாயப் பிரமாணத்துக்கும் பொருந்தாததா யிருக்கின்றது நம்முடைய மனைவி, பிள்ளைகள் தாய்தந்தை சகோதரர் சகோதரிகள் முதலியவர்களை நம்முடையவசத்தில் கடவுள் ஒப்புவித்திருப்பதால அவர்களை முந்திச்சம்ரக்ஷிக்க வேண்டியது நம்முடையபொறுப்பாயிருக்கின்றது அப்படியே எளைகளான நம்முடைய சுயபந்துக்களையும் நமக்குச் சமீபத்திலிருக்கிற தரித்திரர்களையும் ஆதரிக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது ஒருவனுடைய பொருளைத்திருடி வேறொருவனுக்குத்தானஞ் செய்வதுபோல் சிலர் வாங்கின கடனை கொடாமல் தங்களுடைய ஆஸ்திகளையெல்லாம் தர்மவிஷயத்தில விரயஞ்செய்கிறார்கள் இப்படிப்பட்ட தியாகிகள் திரு

டர்களாயும் அவர்களிடத்தில் தானம் வாங்குகிறவர்கள் திருட்டுச் சொத்தை வாங்குகிறவர்களாயும் இருக்கிறார்களாகையால்தானங் கொடுப்பதற்கு முன்கடன்களை தீர்ப்பதே நியாயமுறைமையாயிருக்கின்றது.

வியாதியில்லாதவர்களுக்கு ஔஷதங்கொடுப்பதுபோலும்வெள்ளத்தின்மேலேபெய்யும் மழையைப்போலும் சிலர்தனவான்களைக்கண்டால் விருந்துமுதலிய ஷோடசோபகாரஞ்செய்கிறார்கள் தரித்திரர்களைக்கண்டால் தடியெடுத்துத் துரத்துகிறார்கள் இதுமாக தோஷமாயிருக்கின்றது முகங்கோணாமலும் கைம்மாறு வேண்டாமலும் உள்ளன்போடு பிக்ஷையிடுவதே பெரியபுண்ணியம் ஏழைகளுடைய திட்டுக்கும் அலட்டுக்கும் பயந்து அசமாதானத்தோடும் அசந்துஷ்டியோடும் ஐயங்கொடுப்பதானது கொடுங்கோல் அரசர்களுடைய ஆக்ஞைக்குப்பயந்து கடமைகொடுப்பதுபோலும், திருடர்களுடைய தடியடிக்குப்பயந்து அவர்கள் கையில் பொருளை வாரிக்கொடுப்பது போலுமிருக்கின்றது யாதொரு பிரதிப்பிரயோஜனத்தை கருதிப் பிக்ஷையிடுகிறவர்களைத் தாதாக்களென்று சொல்லுகிறதாயிருந்தால் உலகத்தில் சகலரையுந் தாதாக்களென்று சொல்லலாம் கடைக்காரர்களிடத்தில் சரக்குகளை வாங்கிக்கொண்டு அவர்களுக்கு விலைகொடுக்கிறவர்களும் தாதாக்களே கிரயம் வாங்கிக்கொண்டு சரக்குகளைக் கொடுக்கிற வர்த்தகர்களும் தியாகிகளே வேலைக்காரர்களிடத்தில் வேலைவாங்கிக்கொண்டு அவர்களுக்குக் கூலிகொடுக்கிறவர்களும் தாதாக்களே சம்பளம்வாங்கிக்கொண்டு சமையல் செய்துக்கொடுக்கிற சுயம்பாகிகளும் அன்னதாதாக்களே வீடுகள்தோறும் வஸ்திரம் வெளுத்துக் கொடுக்கிற வண்ணார்களும் வஸ்திரதாதாக்களே தாசிகளுக்குப் பொருள் கொடுக்கிற காமாதுரர்களும் கொடையாளிகளே அந்தக்காமாதுரர்களுக்குப் புண்களையும் வியாதிகளையும் கொடுக்கிற தாசிகளும் தியாகிகளே இப்படிப்பட்ட தானம் அதானமாகையால்பிரதிபலன் வேண்டாதுபிக்ஷையிடுவதேபெருமை மனுஷர்கள் பார்க்க அவர்கள் முன்பாக ஏழைகளுக்குப் பிக்ஷைகொடுக்கிறவர்களுக்குமோக்ஷவாசனுடைய தயாப்பிரசாதங்கிடைக்க மாட்டாதாகையால் ஒருவருக்குந்தெரியாமலும் நரஸ்துதியை விரும்பாமலும், அந்தரங்கமாகச் செய்கிறதானமே பிரதானம் புஷ்பம்மறைவாயிருந்தாலும் அது வாசனையானது காட்டிவிடுவதுபோல அநாதபோஷகர்களை அவர்களுடைய ஔதாரியம் எப்படியும் காட்டிவிடும பரோபகாரிகள்

இறந்தும் இறவாமல் என்றும் பிரகாசிக்கிறார்கள் பரமலோபிகள் பிறந்தும் பிறவாதவர்களாயும் இருந்தும் இல்லாதவர்களாயும் இருக்கிறார்கள் தர்மிஷ்டர்களுக்கு ஒரு துன்பம்வந்தால் சகலருந் தங்களுக்கு வந்ததுபோல் எண்ணி அந்தத்துன்பம் நீங்கவேண்டுமென்று கோயில்கள் தோறும் கும்பிடுகிறார்கள் கிருபண சிரோமணிகளுக்குத் துன்பம் வந்தால் அவர்களை நினைப்பாருமில்லை அவர்களுக்கு இரங்குவாருமில்லை அசுதிகளை ஆதரிப்பது ஒவ்வொருவருக்குந் தனித்தனியே கடனாயிருப்பதுமன்றி சர்வஜனோபகாரமாக அன்னசத்திரங்கள், பாடசாலைகள் ஔஷதசாலைகள் ஆதுலர்சாலைகள் தண்ணீர் பந்தல்கள் முதலிய சாசுவதமான தர்மங்களை ஏற்படுத்துவது பெருஞ்செல்வருக்கு கடமையாயிருக்கின்றது.

தன்னுயிர்போல மன்னுயிரை யோம்புகிற பரஸ்நேகம் இல்லாமையினால் சில அரசர்கள் தங்களுடைய சுயநலத்திற்காகவும் நிஷ்காரணமாகவும் எண்ணிக்கையில்லா ரதகஜதுரகபதாதிகளைச் சேர்த்துக்கொண்டு ரணபேரிகை முழங்க, யுத்தசன்னத்துடன் புறப்பட்டு அந்நியதேசாதிபதிகளுடனே சண்டைதொடுக்கிறார்கள் அந்த இரண்டு சேனாசமுத்திரங்களும் கலந்து அஷ்டதிக்குகளும் நடுங்கும்படி அட்டகாசஞ்செய்துக்கொண்டு ஆலகால விஷம்போல சீறிக்கொண்டு கோடையிடிபோல் கர்ஜித்துக்கொண்டு வடவாமுகாக்கினிபோல் கண்களில் தீப்பொறிகள் பறக்க ஒருவரையொருவர் பிடித்து-கடித்து-அடித்து இடித்து-மடித்து-முடித்து விடுகிறார்களே இப்போது சிரமற்று உரமற்று கரமற்று காலற்று விழுகிற முண்டங்களும் துண்டங்களும் கண்டங்களும் அண்டங்களைப்போய் முட்டுகின்றனவே ஒவ்வொரு யுத்தத்திலும் குவிகிற சவமலைகள் நவமலைகளாகுமே சோரிப்பிரவாகம் வாரிப்பிரவாகத்திலும் அதிகமே புலிக்குப் பயந்தவர்கள் எல்லாரும் என் மேலே படுத்துக்கொள்ளுங்கள், என்பதுபோல் அந்த அரசர்கள் தாங்கள் வெளியேபுறப்படாமல் மூலையில் பதுங்கிக்கொண்டு ஏழைகளைச் சண்டைக்குவிட்டு வேடிக்கைபார்க்கிறார்கள் புத்தியிலும், யுக்தியிலும் சக்தியிலும் அதிமேதாவிகளென்றும், தர்மிஷ்டர்களென்றும் பெயர்கொண்ட 'அலெக்சாண்டர், போனபார்த்து செசார் முதலிய சுத்த வீரர்கள் செய்தகொலைகளுக்கு கணக்குண்டா? அவர்களுக்குந் தர்மிஷ்டர்களென்றும் பெயரா? இந்தத்தர்மிஷ்டர்களைப்போல பின்னுஞ் சில தர்மிஷ்டர்கள் உலகத்தில் இருந்திருப்பார்களானால் யுகாந்த காலப் பிரளயம்போல் உலகத்தில் மனுஷ பூண்டில்லாமல் சர்வநாசஞ்செய்திருப்பார்களே நம்முடைய பிதாக்கள் பிரபிதாக்கள் ஒருவரும் இருந்திருக்கமாட்டார்கள் இந்தப் புஸ்தகத்தை யெழுத நாமும் இருக்கமாட்டோம்.

சாந்தம் தயை தாக்ஷிண்ணியம் பொறுமை அடக்கம் வணக்கம் முதலிய நற்குணங்களைப் போதிக்கிற சத்திய வேதத்தினின்று பிரிந்த பலசமயத்தார் அந்தவேதத்தை வியாஜ்யமாகவைத்துக்கொண்டு யூரோப்பில் ஒருவரோடொருவர் சண்டைசெய்து அந்த சண்டையில் மடிந்தஜனங்களும் வடிந்த உதிரங்களும் ஒடிந்த கைகால்களும் இடிந்த ஆலயங்களும் பொடிந்தமடங்களும் முடிந்த பொருள்களும் படிந்ததுன்பங்களும் இவ்வளவென்று சொல்லக்கூடுமா? இந்தத் தேசத்திலும் ஒவ்வொருமதஸ்தாபனமாகும்போது நடந்தசண்டைகளும் கலகங்களும் பிராணவதைகளும் அபாரமே ஒருசமயத்தார் மற்றொரு சமயத்தை தூஷித்தும் ஒரு வித்வான் மற்றொருவித்வானை நிந்தித்தும் செய்திருக்கிறகிரந்தங்கள் அபத்த பஞ்சமாயும் அசப்பிய வார்த்தைகளுக்கு அகராதிகளாயுமிருக்கின்றன அவைகளைப் படித்தால் நம்முடையவாயுங் கசக்கின்றது நினைத்தால் மனமுங் கசக்கின்றது தென்றல்முற்றிப்பெருங்காற்றுவதுபோல் சிலசமயங்களில் எடுத்துச் சண்டையிலிருந்து கழுத்துச்சண்டையிலும் வாய்ச்சண்டையிலும் கைச்சண்டையிலும் பிரவேசஞ்செய்கிறார்கள் இவ்வளவு விபரீதங்களுக்கும்தன்னைப் போற்பிறரை எண்ணாதகுணமே காரணமாயிருக்கின்றது.

பின்னும் பரநேசமில்லாமையினால் உலகத்திருட்டுகளும், புரட்டுகளும், அக்கிரமங்களும் நிறைந்திருக்கின்றன? திருடர்கள், இரவில் எப்போதாவது அமாவாசை இருட்டில் திருடுகிறார்கள் பிரதிதினமும் பட்டப்பகலில் சகலரும் அறிய நடக்கிற திருட்டுகளுக்கு அளவில்லையே பொருளாசையினால் பொய்ச்சத்தியம் பண்ணுகிறவர்களும் பொய் சாக்ஷிசொல்லுகிறவரும் பொய்ச் சீட்டு உண்டுபண்ணுகிறவரும பொய்வழக்குச் செய்கிறவரும் அவருடைய சக்திக்கு மேற்பட்டகடன் வாங்குகிறவரும் வாங்கினகடனைக் கொடாதவரும் அநியாயவட்டிவாங்குகிறவரும் அடைக்கலமாக வைத்தபொருளை அபகரிக்கிறவரும் வேலைசெய்யாமற் கூலிவாங்குகிறவரும ஏழைகளிடத்தில் வேலைவாங்கிக்கொண்டு கூலிகொடாதவர்களும் செல்லாப்பணத்தைச் செலுத்துகிறவர்களும் அளவிலும் நிறையிலும் வித்தியாசஞ் செய்கிறவர்களும் சரக்குகளுக்கு அதிக விலைவாங்குகிறவர்களும நல்லசரக்குக்குக் கிரயம்வாங்கிக்கொண்டு கெட்ட சரக்குகளைக் கொடுக்கிறவர்களும் சூதாடிப்பொருள் சம்பாதிக்கிறவர்களும், கண்டெடுத்தபொருளைச் சொந்தக்காரரைத்

தேடிக்கொடாதவரும் பிறர் பொருளைப் பார்த்துப் பொறாமை கொள்ளுகிறவர்களும் திருட்டுப்பொருளை வாங்குகிறவர்களும திருட்டுக்குச் சகாயஞ் செய்கிறவர்களும் திருடும்படி பிறருக்குப் போதிக்கிறவர்களும், கையில்பொருளைவைத்துக்கொண்டு ஏழைகளுக்கு ஐயம் இடாதவர்களும் மாப்ஸக்கிரயம்வாங்கிக்கொண்டு பெண் கொடுக்கிறவர்களும் பட்டப்பகலில் கொள்ளையடிக்கிற திருடர்களை அன்றியும் ஏழைகள் தாங்கக்கூடாத நாட்டுவரி காட்டுவரி வீட்டுவரி மாட்டுவரி ஆட்டுவரி ஏட்டுவரி சீட்டுவரி கூட்டுவரி பாட்டுவரி மேட்டுவரி தீட்டுவரி ரோட்டுவரி கோட்டுவரி ஈட்டுவரி சாட்டுவரி முதலிய கேட்டுவரிகளைச்சுமத்தி அநியாயஞ்செய்த பூர்வீக அதிகாரர்கள் சதிகாரர்களை பரிதானம்வாங்கிக்கொண்டு பக்ஷபாதஞ்செய்கிறசிலநியாயாதிபதிகள் அநியாயாதிபதிகளை எங்கே கொலைநடக்கும் எங்கே களவு நடக்கும் எப்போது நமக்குப்பணம் வருமென்று சதா எதிர்ப்பார்த்துக் கொண்டு குற்றவாளிகளை விட்டுவிட்டு குற்றமில்லாதவர்களைப்பிடித்து உபத்திரவஞ் செய்கிற சில போலீஸ்வீரர்கள் சோரர்களை எப்போது குடும்பங்களிற் கலகம் உண்டாகும் எப்போது வியாஜ்ஜியம்வருமென்று சித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிற சில நியாயவாதிகள் அநியாயவாதிகளை யாருக்குச்சுரமவரும் யாருக்குப்பேதிவரும் யாருக்குத்தலை உடையும் யாருக்குக் கைகால் ஒடியும் என்று பிரார்த்தித்துக்கொண்டு தங்களுடைய பிழைப்புக்காகப் பிள்ளைவளர்ப்பதுபோல் வியாதியை வளர்த்துவிட்டுக்கொண்டு ஜீவிக்கிற சிலவைத்தியர்கள் தைத்தியர்களை பிள்ளைகள்படித்துக்கொண்டால் தங்களுடைய பிழைப்புக்கு மோசம்வருமென்று கருதிக் கிர்ஷ்ணபக்ஷத்துச் சந்திரன் போல் பிள்ளைகளுடைய அறிவை நாளுக்கு நாள் குறைக்கிற சில போதகர்களும் பாதகர்களை மேற்சொல்லிய உத்தியோகஸ்தர்களில் அநேகர் சர்வோர்த்தமர்களா யிருக்கிறர்களாகையால் அப்படியில்லாத சிலரைப்பற்றிமட்டும் நாமபிரஸ்தாபித்தோம்,

அன்றியும் 'தன்னைப்போற்பிறரை எண்ணவேண்டும்' என்கிற விதியைச்சகலரும் அநுஷ்டித்தால் சாமித்துரோகிகளும குருத்ரோகிகளும பிதுர்த்துரோகிகளும் மாதுர்த்துரோகிகளும், புத்திரத்துரோகிளும் சகோதரத்துரோகிகளும் புருஷத் துரோகிகளும், பத்தினித்துரோகிகளும் பரதாரத்துரோகிகளும், பரபுருஷத்துரோகிகளும பொய்யர்களும வெய்யர்களும் கொலைஞர்களும்

புலைஞர்களும் கொடியர்களும் குடியர்களும் கோபிகளும் லோபிகளும பாபிகளும் உலத்தில் இருப்பார்களா? இரார்களே ஆகையால் பரோபகாரப்பூததயை, பச்சாதாபம் முதலிய சுகுணங்களை ஸ்திரீகளுக்கு ஓயாமல் உபதேசிக்கவேண்டும்.

மிருகங்கள் பட்சிகள் ஊர்வன நீர்வாழ்வன முதலியசகல ஜீவராசிகளிடத்திலும் கிருபையாயிருப்பதே ஜீவகாருண்ணிய மென்று சொல்லப்படுகின்றது மனுஷருக்கு உபகாரார்த்தமாகவே சமஸ்த ஜீவகோடிகளையும் கடவுள் சிருஷ்டித்தருளினாரென்று நாம் முன்னமே விவரித்திருக்கிறோம் சிலஜெந்துக்கள் நமக்குநேரே உபயோகமாயிராவிட்டாலும் நமக்கு உபயோகமான வேறே சிலஜெந்துக்களுக்கு அவைகள் ஆகாரமாய் உபயோகப் படுகிறபடியால் பூமியில் ஒரு அற்பஜெந்துவேனும் நமக்கு அநுபயோகமாயிருக்கவில்லை விலங்கு பறவை முதலியவைகள் ஞானமில்லாத அசேதன வஸ்துக்களாயிருந்தாலும் நம்மைப்போலவே அவைகளுக்கும் தேகமும் பிராணனும் பஞ்சேந்திரியங்களும் சுகதுக்கங்களும் யறிவில் உணர்வும் உண்டாயிருக்கிறபடியால் அவைகளுக்குப் பரிச்சேதம் உபத்திரவம்செய்யக்கூடாது அவைகளுக்கு ஞானத்தை குறைத்ததற்காக வேறு சிலவிஷயங்களில் கடவுள் அவைகளுக்கு அநுகூலம்செய்திருக்கிறார் மனுஷன் ஞானாத்மாவானதாகபலமானவீடு போர்வை, முதலியவைகளைச்செய்துக்கொண்டு, உஷ்ணம், குளிர் முதலிய துன்பங்களைத் தடுத்துக்கொள்வனென்பதைக் கடவுள், எண்ணியே அவனுக்கு மிருதுவானதோலையும் நிர்வாணமானதேகத்தையுங் கொடுத்திருக்கிறார் அப்படிப்பட்ட ஞானம் விலங்குகளுக்கும் பக்ஷிகளுக்கும் இல்லாதபடியால் அவைகளுக்குத்தடிப்பானதோலும் திரளான மயிருமுள்ள தேகங்களைக் கொடுத்திருக்கிறார் சத்துருபய நிவர்த்திக்குத்தகுந்த ஆயுதங்களைச்செய்து கொள்ளமனுஷன் தெரிந்தவனாகையால் அவனுடைய தேகம் ஆயுதமல்லாமல நிராயுதமாயிருக்கின்றது ஆயுதஞ்செய்யத்தெரியாத அசேதன ஜெந்துக்களுக்குக்கொம்புகள்கூர மூக்குகள் நகங்கள் தந்தங்கள் வால்கள் கால்கள் முதலிய ஆயுதங்களை அவைகளுடைய தேகங்களிலே கடவுள் அமைத்துவைத் திருக்கின்றார் மிருகங்களும் பக்ஷிகளும் தங்களுடைய கருத்துகளை ஒன்றுகொன்று தெரிவித்துக்கொள்ளும்படி ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு பாஷையை கடவுள் கற்பித்திருககிறாரென்பது அநுபவசித்தமாயத் தெரிகின்றது மனுஷர்குழந்தைகள் பிறந்து வெகுகாலம்வரையில் தங்களைத்

தாங்களே சம்ரக்ஷணை செய்துகொள்ளத்தெரியாமல் பெரியவர்களுடைய உதவியை அபேக்ஷிக்கின்றன மிருகங்களின் குட்டிகளும் பக்ஷிகளின் குஞ்சுகளும் பிறந்த உடனேயும் அல்லது பிறந்துசில தினங்களுக்குள்ளாகவும்தங்களுடைய ஆகாராதிகளைத் தாங்களே தேடிக்கொள்ளவும் வளை கூடு முதலிய இருப்பிடங்களைச் செய்து கொள்ளவும் சுபாவமாகவே தெரிந்துக்கொள்ளுகின்றனவே மிருகங்கள். தகுந்த இடந்தேடி குட்டிகளைப்பெற்று வளர்க்கிற அருமையும் பறவைகள் ஊர்வன முதலியவைகள் கூடுகளில் முட்டையிட்டு நெடுநாள் அடைகாத்துக்குஞ்சுபொருத்துக் குஞ்சுகளைவளர்க்கிற அருமையும் மனுஷரும் அதிசயிக்கத்தக்கதாயிருக்கின்றதே நாம் வஸ்திர பூஷணாதிகளைத் தரித்துக்கொள்ளாமல் பிறந்தஸ்வரூபமாயிருப்போமானால்நம்முடையதேகங்களை பார்க்கநமக்கே அருவருப்பாயிருக்கும்பக்ஷிகளுக்கும்விலங்குகளுக்கும் இயல்பாகவேசர்வங் காலங் காரங்களும்பொருந்தியிருப்பதால் அவைகளைப் பார்க்கப் பார்க்க நமக்குநேத்திரோற்சவம் செய்வதுபோலிருக்கின்றதே திவ்யரூபவிசித்திராலங் காரமுள்ள மயில் பஞ்சவர்ணக்கிளி முதலிய பக்ஷிகளுக்கு நவரத்ன கசிதமான சர்பூஷணங்களேயும் கனகாம்பரங்களையுந் தரித்துக்கொண்டிருக்கிறராஜஸ்திரீகளும் அழகில்சமானமாவார்களா? சிலபக்ஷிகள் சித்திரம்போல் தேகம் அசையாமலிருந்துக்கொண்டு ஆரோகண அவரோகணக்கிரமம் தப்பாமலும் அபஸ்வரம் இல்லாமலும் கேட்பவர்கள் சிரவணானந்தங்கொண்டு தேகபரவசமாகும்படி அதிமாதுரியமாய்ப்பாடுகின்றன கரத்தை நீட்டுக்கொண்டும் சிரத்தை ஆட்டிக்கொண்டு சுரத்தைக் கூட்டிக்கொண்டும் பல்லைக்காட்டிக்கொண்டும் பாடுகிற நம்முடைய சங்கீத வித்வான்கள் அந்தப் பக்ஷிகளுக்குச்சமானமாவார்களா? நாம் அலக்ஷியமாக எண்ணுகிற ஈக்கள் எறும்புகள் முதலிய பூச்சிகளேயும் பூதகண்ணாடியிற் பார்த்தால் அவைகளுடைய தேகங்களில் பல வகையான அழகியவர்னங்களும் புள்ளிகளும் தோன்றுகின்றனவே அகடிதகடன சாமார்த்தியமுள்ள கடவுள் இவ்வளவு அருமையாகச் செய்திருக்கிற ஜீவஜெந்துக்களை நாம் உபத்திரவம செய்வதும் நிர்நிமித்தமாய்க் கொல்லுவதும் நீதியா? ஒருவன் எழுதிய சித்திரத்தை வேறொருவன்கலைத்துப் பழுதுபடச் செய்தால் அந்த சித்திரக்காரனுக்கு எவ்வளவு கோபம் ஜனிக்கும்? அதுபோல் சர்வஜீவநிர்மாண கர்த்தாவாகிய கடவுளுக்கு ஜீவஹிம்சை செய்கிறவர்கள் மேல் கோபம் வாரமலிருக்குமோ.

பசு-காளை-எருமை-ஆடு-குதிரை-நாய்-பூனை-கழுதை ஒட்டகம்-முதலிய மிருகங்கள் மனுஷருக்கு எவ்வளவோ உதவியுள்ளவைகளாயிருக்கின்றன அவைகள் இல்லாவிட்டால் மனுஷருடைய சுகங்களில் பாதிச்சுகங்கள் போய்விடுமென்பது சந்தேகமா? எஜமான் எவ்வளவு அடித்தாலும் அந்த அடியையும்பட்டுக்கொண்டு அவன் தீனிபோட்டாலும் போடாவிட்டாலும் வெளியேயாவது போய்வயிறுவளர்த்துக்கொண்டு வீட்டுக்குவந்து எசமானுக்குச் சகல ஊழியங்களும்செய்கிற அந்தமிருகங்களுடைய பொறுமையும் சாந்தமும் விசுவாசமும் மனுஷருக்குவருமா? குரங்கின்கையிற் பூமாலை அகப்பட்டதுபோல் சிலர்கையில் அந்த மிருகங்கள் அகப்பட்டுக்கொண்டு படுகிறவருத்தம் சாமானியமல்லவே திருவையாற்றான் குதிரைவளர்த்த கதைபோல் அனேகர் மாடு-குதிரை-கழுதை முதலிய மிருகங்களிடத்தில் சகலவேலைகளையும் வாங்கிக்கொண்டு அவைகளுக்குத் தகுந்த தீனிபோடாமல் கொல்லுகிறார்கள் குருவின் தலையில் பனங்காயைகட்டுவதுபோல அவைகள் தாங்கக்கூடாத சுமைகளையும் பாரங்களையும் சுமத்தி நடத்துகிறார்கள் அவைகள் நடக்கமாட்டாமல் தத்தளுக்கும்போது சாட்டியினாலும் கழிகளினாலும் ஓங்கி ஓங்கி அடித்தும் இரத்தம் பீரிட்டு ஒழுகும்படிதாறுகோலால் தாறுமாறாகக்குத்தியும் கொடுமைசெய்கிறார்கள் சிலர்பசுவுக்கு ஜேஷ்ட புத்திரர்போல் பாலையெல்லாம் கறந்துக்கொண்டு கன்றுக்குத் துரோகமசெய்கிறார்கள் அவர்கள் கன்றுக்குச்சகோதரர்களாயிருக்கிற பட்சத்திலும் அவர்களோடு கூடக்கன்றுக்கும் சமபாகம் உண்டே? அப்படியிருக்க எவ்வளவு கன்றுக்குப் பால் விடாமல் ஒட்டக்கறந்துவிடுவது எவ்வளவு அநியாயம் தம்பாட்டில் மேய்ந்துகொண்டிருக்கிற கழுதை முதலியவைகளைச் சிலர் நிஷ்காரணமாய் கல்லாலெறிந்தும் கழியாலடித்தும அவைகளுடன் யுத்தஞ்செய்து அந்தக்கழுதைகள் கொடுக்கும் உதைகளையும்வாங்கிகொள்ளுகிறார்கள் சிலபிள்ளைகள்-ஈ-எறும்பு-முதலிய பூச்சிகளைப் பிடித்துககொல்லுகிறதும் குருவி கூண்டுகளை கலைத்து குருவிகளுக்கும் குஞ்சுகளுக்கும் உபத்திரவம்செய்கிறதுமே வேலையாயிருக்கிறார்கள் இவ்வகையாக வாயில்லாப் பிராணிகளுக்குத் துன்பம் செய்து கைபழகுகிறவர்கள் மனுஷரையும் உபத்திரவம் செய்ய கற்றுக்கொள்வார்களென்பது சந்தேகமா? மிருகங்களுக்கும் பக்ஷிகளுக்கும் சந்தோஷம் உண்டாகும்போது அவைகள எவ்வளவோ ஆநந்தமாக குதித்து கூத்தாடி விளையாடுகின்றன அவைகளுக்குத்

துன்பம் உண்டாகும்போது கூக்குரலிட்டு அழுது பிரலாபிக்கின்றனவே இப்படியாக மனுஷரைப்போலவே சுகதுக்கங்களை உணருகிற மிருகாதிகளுக்குத் தீங்குசெய்கிறவர்கள பரமசண்டாளாகளே ஆனால் மனுஷர்களில் துஷ்டர்களா யிருப்பவர்களைத் தண்டிப்பது எப்படிமுறையோ அப்படியே - சிங்கம - புலி-கரடி - முதலிய துஷ்டமிருகங்களையும் பாம்பு-தேள்முதலிய விஷஜெந்துக்களையும் கொல்வது தோஷமல்ல மிருகாதிகளிடத்தில் மனுஷரும் கற்று கொள்ளும்படியான சிலநற்குணங்களுமிருக்கின்றன மாடு-ஆடு-குதிரை-கழுதை-முதலியமிருகங்களும் காக்கை முதலிய பக்ஷிகளும் தங்களுடைய இனத்துடன்சேர்ந்து இரையெடுக்கப் பிரியப்படுகின்றன கூட்டத்துடன்சேர்ந்து மேய்ந்துகொண்டிருக்கிற ஒரு ஆட்டையாவது மாட்டையாவது பிடித்துத் தனியே நல்லபுல்லிருக்கிற இடத்திலே கொண்டுபோய்விட்டாலும் அந்தஇடத்தைவிட்டு கூட்டங்கள் மேய்கிர இடம்நல்லபுல்லில்லா இடமாயிருந்தாலும் அந்தயிடத்தைபோநாடுகின்றது ஒரு ஜாதியைச் சேர்ந்த மிருகங்கள் இல்லாத பக்ஷத்தில் பலஜாதிமிருகங்களும் ஒன்றுக்கொன்றுகூட்டுரவாயிருக்கின்றன எப்படியென்றால் ஒரு வீட்டில் ஒரு குதிரையும் கோழியும்மட்டும் இருந்தால் அவைகள் ஒன்றுக்கொன்று சமிரமாயும் சக்கியமாயுமிருக்கப் பிரியப்படுகின்றன சாதுவானமிருகங்களும் அவைகளுக்கு பிராணசத்துருக்களான துஷ்டமிருகங்களும் பழக்கத்தினால் ஒரு கூண்டில் விரோதமில்லாமல் ஸ்நேகமாயிருப்பதை அநேகர் பார்த்திருக்கிறார்கள், ஆனைசிங்கம் புலி, கரடி முதலிய கொடியமிருகங்களையும் மனுஷன் பிடித்துத்தன்னுடைய இஷ்டப்படிநடக்கக் கற்பிக்கிறானென்பது யாருக்குத்தான் தெரியாது. ஏகாந்தச்சிறையில் வைக்கப்பட்ட சிலர் தாங்கள் தனியாயிருக்க மனம் சகியாமல் தங்களுக்குச் சமீபத்தில் வரப்பட்ட எலி முதலியவைகளுக்கு இரைகொடுத்து அவைகளுடன் ஸ்நேகஞ்செய்து கொண்டதாகவும் அந்த ஜந்துக்களும் அவர்களிடத்தில் அதிகப்பிரியமாயிருந்ததாகவும் சிலர் புஸ்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். பின்னும நாம் மேலே விவரித்தபடிநாய், மாடுமுதலிய வீட்டு மிருகங்கள் எஜமான் என்னதுன்பம்செய்தாலும் அதை யெல்லாம் சகித்துக்கொண்டு அவனைவிட்டுப் பிரியாமல் அவனுக்குச் சகல ஊழியங்களும் செய்கின்றனவே, இப்படிப்பட்ட பலவகை மிருகாதிகளிடத்தில் பரஸ்நேகம் பரோபகாரம், நன்றிமறவாமை அடக்கம், பொறுமைமுதலிய சத்குணங்களை மனுஷர் கற்றுக் கொள்வது உசிதமா யிருக்கின்றது.

சைவவைஷ்ணவர்களுடைய மதசித்தாந்தப்படி மாம்ஸம்புசிப்பது தோஷமாயும் கிறீஸ்து மதசித்தாந்தப்படி நிர்தோஷமாயுமிருக்கின்றது லோகாசாரத்தைப் பார்க்குமிடத்தில் மாம்ஸ பக்ஷணிகள் அநேகராயும் அதைப் புசியாதிருப்பவர்கள் சிலராயுமிருக்கிறார்கள் கிறீஸ்து மதமுறைமைப்படி மாம்ஸம் புசிப்பது தோஷாஹிதமாயிருந்தாலும் தபசுகாலத்திலும் விரதத்தினங்களிலும் மாம்ஸத்தைத்தள்ளிச் சுத்தபோஜனமாகச் சாப்பிடுவது புண்ணியமென்று கிறீஸ்தவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள் அப்படிப்பட்ட சிலகாலங்களில் மாம்ஸங்களைத்தள்ளுவது புண்ணியமாயிருக்குமானால் எக்காலத்திலும் அதைத்தள்ளிவிடுவது விசேஷபுண்ணியந்தானே ஆதிமனுஷன் பூங்காவனத்திலிருக்கும்பொழுது மாம்ஸம் புசிக்கும்படி அவனுக்கு உத்தரவுகொடுக்கப்படவில்லை ஜலப்பிரளயத்துக்குமுன் உலகத்தில் சகல அக்கிரமங்களும் நிறைந்திருந்தாலும் மாம்ஸம் சாப்பிடுகிறவழக்கம் அப்போது இருந்ததாக ஒருகிரந்தத்திலும் தெரியவில்லை ஜலப்பிரளயகாலத்துக்குப் பிற்பாடு மாம்ஸம் அருந்தும்படி அநுமதிகொடுக்கப் பட்டதைக் கொண்டே மாம்ஸபக்ஷணம் மனுஷனுடைய பாவ அந்தஸ்துக்கு உரிய தேதவிரப் புண்ணிய அந்தஸ்துக்கு உரியதல்லவென்று பரிஷ்காரமாய் விளங்குகின்றது. ஆகையால் கூடியமட்டும் கொஞ்சங் கொஞ்சமாய் மாம்ஸ உணவை நிக்கிரகஞ்செய்து சர்வோத்தமமென்று நமக்குத்தோன்றுகின்றது மாம்ஸம்புசிப்பது பாபாஹிதமாய்மட்டுமிருக்கிறதேதவிர அது புண்ணியசகிதமென்று ஒருவரும் சொல்லத்துணியார்கள் கலியாணஞ்செய்துக்கொள்ளவது சாஸ்திரோக்கையாயிருந்தாலும் ஒருவன்தன்னை முழுவதும் தெய்வ ஊழியத்துக்கே ஒப்பிவித்து கலியாணமில்லாமல் நித்தியபிரம சாரியாயிருப்பானானால் அதுபுண்ணியந்தானே ஒருவன்பாவஞ்செய்தாலும் பிற்பாடு மனஸ்தாபப்பட்டுத் தகுந்தபிராயச்சித்தஞ்செய்து கொள்வானானால் அவனுக்கு பாவவிமோசனமாகுமென்று வேதத்தில்விதிக்கப்பட்டிருப்பதைக் கொண்டு மனுஷன் பாவஞ்செய்யும்படி கடவுள் உத்திரவுகொடுத்ததாகச் சொல்லலாமா? பாவஞ்செய்வது பிராயச்சித்தஞ் செய்துக்கொள்ளுவதைப்பார்க்கிலும் ஒவ்வொருவனும் கூடியவரையில் பாவமேசெய்யாதிருக்கப் பிரயாசப்ப[டுவது] நன்மை தானே அப்படியே மாம்ஸம் புசிப்பதுவே [...] யிருந்தாலும் அதுஜீவவதைக்கு ஹேதுவாயும் இரக்கம் ஜீவகாரு

ண்ணியம்முதலிய புண்ணியங்களுக்கு விரோதமாயும் இருப்பதால் அப்படிப்பட்ட ஜீவவதைசெய்வதைப் பார்க்கிலும் செய்யாமலே இருப்பது அதிக உத்தமந்தானே ஆடு கோழி முதலியவைகளை பிடித்துக்கொல்லும்பொழுது அவைகள்படுகிறபாடும் துடிக்கிறதுடிப்பும் இடுகிறகூக்குரலும்பகிரமரணாவஸ்தையும் இவ்வளவென்று சொல்லக்கூடுமா? ஒரு பிராணிக்கு இவ்வளவு துன்பஞ்செய்து மாம்ஸம் புசிப்பதைப்பார்க்கிலும் மாம்ஸமே புசியாமல் விட்டுவிடுவது சர்வோத்தமம் என்பதையார் தாம் ஒப்புக்கொள்வார்களா உலகத்தில் மாம்ஸத்தைப்போல் அசுசியும் அருவருப்பும் உள்ள பதார்த்தம் வேறொன்றுமில்லையே மாமஸத்தை மனுஷியன் பார்த்து சகிக்கமாட்டான் என்பதைக்கடவுள் எண்ணியே அதைத்தோலினால்மூடி மறைத்துவைத்தார் மூக்கைக்கையால் மூடிக்கொள்ளாமலிருப்போமானால் மாமஸத்தினுடைய துர்நாற்றமும் வீசும் தலைமண்டையிலேறி மூளையையும்குழப்பிவிடுமே அசுத்தத்தைச் சுத்தஞ்செய்வதுபோல் பலவாஸனாவஸ்துக்களைச் சேர்த்துச்சமைத்தும் மாம்ஸத்தின் துர்நாற்றம் நீங்காமல் சாப்பிட்டவாகளுடைய வாய்நாறிக் கைநாறி உடம்பெல்லாம்நாறி ஊரெல்லாம் நாறுகின்றதே ஐயையோ? இப்படிப்பட்ட அசஹ்யமான பதார்த்தத்தைச் சாப்பிடவும் தலைவிதியா? ஆத்மசுத்தத்துக்கும் தேகசுத்தத்துக்கும் விசேஷம் பந்தமிருப்பதால ஆத்மசுத்தத்தை அபேக்ஷிக்கிறவர்கள் அசுத்தங்களுக்கெல்லாம் ஆலயமான மாம்ஸ உணவை நிஷேமாகத்தள்ளிவிடவேண்டும் மாம்ஸத்தைத்தள்ளினால் அதற்குத் தோழனும் மதுபானமும் தொலைந்துவிடும் மதுபானந்தொலைந்தால் அதற்குத் தோழர்களான சகல குற்றங்களும் தொலைந்துவிடுமென்பது வாஸ்தமே.

இந்த வசனகாவியத்தில் பெண்கல்வியைப்பற்றின இந்தப்பாகத்தை முடிப்பதற்குமுன் சிறுவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்கிறபோதர்களுக்கு ஒருவிஞ்ஞாபனஞ் செய்யவிருமபுகிறோம என்னவெனில் தெய்வபக்தியையும் பரோபகாரம் முதலிய புண்ணியங்களையும் பிறருக்கு உபதேசஞ்செய்கிறவர்கள் தாங்களே நன் மார்க்கத்தில் நடந்து வழிகாட்டவேண்டும் 'உபதேசத்தைப்பார்க்கிலும் நடந்துவழிகாட்டுவது அதி உத்தமம்' என்று இங்கிலீஷில் ஒருபழமொழியுமிருக்கின்றது மார்க்கங்களில் சகலருக்கும் வழிகாட்டித்தான் ஒரு அடியேனும் எடுத்துவையாமலிருக்கிற கைகாட்டி

மரம்போலவும் ஜெபஞ்செய்வதற்காக மற்றவர்களைக் கோயிலுக்கு வரும்படி கூப்பிட்டுத் தான்ஜெபஞ்செய்யாமலிருக்கிற கோயில மணிபோலவும் தாங்கள் உபதேசஞ்செய்கிறபடி அநுஷ்டானஞ் செய்யாதவர்கள் ஸகலராலும் இகழப்படுவார்கள் அவர்களுடைய உபதேசத்தையும் ஒருவரும் அங்கீகரியார்கள் 'பசியாமல்மருந்து கொடுக்கிறேன் பழஞ்சோறிருந்தால் போடுங்கள், என்று ஒருவன் சொன்னால் அவன்வார்த்தையை யார்நம்புவார்கள் ? வைத்தியனே வியாதியஸ்தனாயிருந்தால் அவன் வைத்தியத்தையார் ஏற்றுக்கொள்வார்கள் ? மதுபானஞ்செய்வது தோஷமென்று குடியன் பிரசங்கத்தால் அவனுடைய உபந்நியாஸத்தையார் கேட்பார்கள் ? அக்கினி தேவனுக்கு அபிஷேகம்செய்ததுபோல் கோபாவேசங் கொண்டிருக்கிற ஒருவன் அந்தச்சமயத்தில் 'கோபம் பாவம், என்று உபந்நியாசித்தால் அந்த உபந்நியாஸத்துக்கு யார்காது கொடுப்பார்கள் ஒருபெரியவர் பிரசங்காசனத்தில் இருந்துக்கொண்டு கடவுளை மட்டும் ஸ்துதிக்கவேணடுமென்றும் நரஸ்துதிசெய்யக்கூடாதென்றும் பிரசங்கித்துக்கொண்டிருந்தார் அந்தப் பிரசங்கத்தின் மத்தியில் அவரே ஒரு பிரபுவை ஸ்துதிசெய்யத்தொடங்கி அந்தப்பிரபுவினுடைய குணாதிசயங்களை யோசிக்குமிடத்தில் அவரைப்பூலோகத்தில் ராஜராஜர்கள் மத்தியில் ரத்நபீடத்தில் வைக்கலாமா ? பக்தர்களுக்குச் சிரோபூஷணமாக வைக்கலாமா ? தேவலோகத்தில் தேவசபைக்கு நடுநாயகமாகவைக்கலாமா? அல்லது கடவுளுடைய மடியில்வைக்கலாமா ? என்று இவ்வகையாகத் திருப்பித் திருப்பி பலதரம்சொல்லிப் பிரசங்கித்தார் அதைக்கேட்டுக்கொண்டிருந்த ஒரு கனவான் திடீரென்று தன்னுடைய நாற்காலியைவிட்டு எழுந்து 'ஓ பெரியவரே ? நீர் சொல்லும் பிரபுவைவைக்க இடமில்லாமல் ஏன் அவஸ்தைப்படுறீர் என்னுடைய நாற்காலியில்வைத்து விடும் நான் வீட்டுக்குப் போகிறேன்' என்றுசொல்லிக்கொண்டு புறப்பட்டுப்போய்விட்டான் மற்றவர்களும் கைகொட்டிப்பரிகாசஞ் செய்துக்கொண்டு பிரசங்கம்முடிவதற்குமுன் வீட்டுக்குப்போய் விட்டார்கள் இப்படியேவார்த்தை ஒரு விதமாகவும் அநுஷ்டானம் ஒரு விதமாகவும் இருக்கிறவர்களை உலகம் பழிக்குமாதலால் ஆடல் பாடல் கற்பிக்கிறவர்கள் தாங்களே ஆடியும் பாடியும் மற்றவர்களுக்குக்கற்பிப்பதுபோலும் சிறுபிள்ளையினுடையகையைத் தாய்பிடித்துக்கொண்டு தான்முன்னே நடந்து பிள்ளைக்கு நடைப்பழக்கு

வதுபோலும் தர்மோபதேசஞ்செய்கிறவர்கள் தாங்களே தர்மாத்
மாக்களாய்ப் பரிமளிக்கவேண்டும் அப்போது தர்மம் அவர்களு
க்குத் துணைசெய்யுமென்பது சத்தியமே வானத்திலிருக்கிற சூரிய
ன்பிரகாசித்தால் உலகமும்பிரகாசிக்கும் சூரியன் அப்பிரகாசமா
யிருந்தால் உலகமும் அப்பிரகாசமாயிருக்கும் அதுபோல் பெரிய
வர்களும் கல்விமான்களும் எப்படி நடக்கிறார்களோ அப்படியே
சிரியவர்களும் அவிவேகிகளும் நடப்பது சகஜம் துர்வழியில்நடக்
கிறபெரியோர்கள் தாங்கள்கெட்டுப்போவது மன்றி மற்றவர்கள்
கெட்டுப்போகவும் ஆஸ்பதமாயிருப்பதால் அவர்களுக்கு இரண்டு
விதமான தோஷங்கள் ஸம்பவிக்கின்றன தெரியாதவர்களுடைய
அஞ்ஞான கிருத்தியங்களைப்பார்க்கிலும் தெரிந்தவர்களுடைய து
ஷ்கிருத்தியங்கள் அதிகதண்டனைக்குப் பாத்திரமாயிருக்கின்றன.
எந்தச்சாதியாராயிருந்தாலும் எந்த அந்தஸ்து உடையவர்களாயி
ருந்தாலும் நற்குணநற்செய்கைகளை உடையவர்கள்மட்டும் பெரிய
வர்களேயன்றி நற்குணங்களில்லாமல் தனத்தினாலும் கனத்தினா
லும் இனத்தினாலும், வயதினாலும், வித்தியாபட்டங்களினாலும் மட்
டும் ஒருவனைப்பெரியவனென்று சொல்வது எத்தன்மையதென்றால்
ஒருவன் குட்டிச்சுவரின்மேல் ஏறி நின்றுக்கொண்டு தான்மற்ற
வர்களுக்குப் பெரியவனென்று சொல்வதுபோலும் சிருபிள்ளைகள்
தகப்பனுடைய தோளின்மேலேறிக்கொண்டு தாங்கள் தகப்பனி
லும் பெரியவர்களென்று சொல்வதுபோலும் காலையும்மாலையும்
நீண்டநிழல் உள்ளவர்களை உயர்ந்தவர்களென்று சொல்வதுபோ
லும் இறுக்கின்றது ஆகையால் மேலானபதவியுடையவர்கள் சுகுண
சாலிகளாய் ஜொலிக்கக்கடவார்கள்,

பெண்கல்வி முற்றிற்று.

# பெண்மானம்.

ஸ்திரீகளுக்குக் கல்விபோதிக்கவேண்டியது முக்கியமென்று பல உதாரணங்களைக்கொண்டு நாம் நிரூபணம் செய்தோமாகையால் இனிவேறொரு முக்கியமான விஷயத்தைக்குறித்து அடியிற் பேச ஆரம்பிக்கிறோம அதைச்சகலரும் கிருபைகூர்ந்து சிரத்தையுடன் வாசிப்பார்களென்று நம்புகிறோம,

இந்தத்தேசத்தில் பெண்களை அடிமைகளைப்போலவும் மிருகங்களைப்போலவும் நடப்பிப்பது மிகவும் பரதபிக்கத்தக்கவிஷயமாயிருக்கின்றது ஜாதியும் செல்வமும் எவ்வளவு உயர்வோ அவ்வளவுக்கு ஸ்திரீகளுடைய நிர்ப்பாக்கியம் பெரிதாயிருக்கின்றது உயர்ந்த குலத்தராகிய பிராமணர் முதலானவர்கள் ஸ்திரீகளைவிலைக்கு வாங்குவதுபோலவாங்கி நிஷ்டூரமாக நடத்துகிறார்கள். நாயே, பேயே, கழுதையே, மாடே, என்கிற பேச்சைததவிர, வேறே ஒரு பேச்சும் ஸ்திரீகளிடத்தில் புருஷர்கள் பேசுகிறதில்லை ஒதைப்பிரயோகந்தவிர, ஹிதப்பிரயோகமில்லை.

சிலகுடும்பங்களில் மாமியாருடைய உத்தரவில்லாமல் புருஷனுக்கும் பெண்சாதிக்கும் பேட்டியேகிடையாது அவர்கள்சந்தித்தாலும் கல்லுந்தேங்காயும் சந்திப்பதுபோலும், எலியும பூனையும் சந்திப்பது போலுமேயல்லாமல் குளிர்ந்ததரிசினமில்லை ஸ்வர்க்கத்துக்குப்போயும் சோற்றுப்பிச்சை யெடுப்பதுபோல அநேகர்கலியாணஞ்செய்தும் நித்தியசந்நியாசிகளாயிருக்கிறார்கள் அத்திபூத்ததுபோல் தப்பித்தவறிப்புருஷர்கள் ஸ்திரீகளிடத்தில் ஒருமதுரமான வார்த்தையைப் பேசிட்டாலோ மாமிக்குகடுப்பு, மாமனாருக்குமனஸ்தாபம், நாற்றிக்குவயிற்றெறிச்சல், ஊரெல்லாம் ஓமல் மகன் செத்தாலும் சாகட்டும் மறுமகள் தாலியறுத்தால் போதுமென்றுநினைக்கிற நல்லகுணமுள்ள மாமிமார்களும் அநேகரிருக்கிறார்கள் புருஷன் பெண்சாதியைத்திட்டியடித்தால் மாமியாருக்கு இறந்துபோன தன்புருஷன் மறுபடியும் பிழைத்துவந்ததுபோல உற்சாகம் உண்டாகும், 'மாமியாருடைத்தால் மண்கலம், 'மருமகளுடைத்தால் வெண்கலம, என்பதுபோல் மருமகள் மேலே மாமியார் தோஷஞ்சொல்லாத நேரமில்லை மாமிக்கு கொடுமைசெய்கிற மறுமக்கள் மாருஞ்சிலருண்டு.

நாய்-பசு-மாடு முதலிய மிருகங்களை எவ்வளவோ தயையாக நடத்துகிறார்கள் அவ்வளவு பக்ஷங்கூட ஸ்திரீகளிடத்தில் காட்டுகிறதில்லை கஷ்ட நிஷ்டூரமெல்லாம் ஸ்திரீகளுடைய பாகமாகவும், சுகங்களெல்லாம் புருஷர்களுடைய பாகமாவும் இருக்கின்றன ஒரு ஸ்திரீக்கு எவ்வளவுதான் வயிறுபசித்தாலும் புருஷன் மாமன் மாமி முதலானவர்களெல்லாரும் சாப்பிட்டு எல்லாவேலைகளும் முடிந்த பிற்பாடு புருஷனுடைய எச்சிலுக்காகப் பெண்சாதிகாத்திருக்கவேண்டியதேயல்லாமல் அவள் முந்திச்சாப்பிடக்கூடாதாம் இது எவ்வளவுபெரிய அநீதி, 'தாயும்பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு, என்பதுபோல ஸ்திரீக்குப் பசித்தபோது அவள் முந்திப் புசித்தால் குற்றமென்ன ?

புருஷன்பாதி பெண்சாதிபாதி ஆக இருவரும்கூடி ஒருதேகமென்பது சகலமத சம்மதமாயிருக்கின்றது சில மதஸ்தர்களுடைய கலியாணம் இகலோகமட்டும் சம்மந்தமாயிருக்கின்றது சைவ வைஷ்ணவர்களுடைய கலியாணங்கள் இகபரமிரண்டுக்கும் சம்பந்தமாயிருக்கின்றன ஏனென்றால் புருஷனுக்குப்புத்தென்கிற நரக நிவர்த்தியாவதற்குப் புத்திரன் அவசியமானமையினாலும் ஸ்திரீயில்லாமல் புத்திர உற்பத்திக்கு மார்க்கமில்லாமையினாலும் புருஷர்கள் இகபரசாதம் அடைவதற்கு ஸ்திரீகள்முக்கியமென்று தர்மசாஸ்திரம் முறையிடுகின்றது அல்லாமலும் பெண்சாதியில்லாதவன் 'ஔபாசனம், 'வைசுவதேவம் முதலான நித்தியாகர்மங்கள் செய்யக்கூடாதென்றும் பிரமசாரியும் விதுரனும் புத்திரஸ்வீகாரமும் யாகாதிகளும் செய்யக்கூடாதென்றும் புருஷனுடைய பாப புண்ணியங்கள் ஸ்திரீயையும் ஸ்திரீயினுடையபாப புண்ணியங்கள் புருஷனையும்சேருமென்றும் இந்துசாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது ஒருவருடைய பாபபுண்ணியங்கள் மற்றொருவரைச்சேருமென்கிறவிதியை நாம்தலைபோனாலும் அங்கீகரியோம் இது நிற்க, இந்துசாஸ்திரம் பெண்கள்பட்சத்தில் இருக்கிறதென்பதற்கு மேற்கண்ட விதிகளே பிரத்தியக்ஷ நிதரிசனங்களாயிருக்கின்றன.

சாஸ்திரத்தையுந் தவிர உலகத்தில் நடக்கிற அநுஷ்டானங்களும் பெண்களுக்கு அனுகூலமாகவேயிருக்கின்றன எப்படியென்றால் ஒருபெண்ணை ஒருவன் பாணிக்கிரகணஞ் செய்யும் பொழுது ஊருக்கெல்லாம் தாம்பூலம்வைத்தும் பந்துக்கள்முதலிய சகல

ஜனங்களையும் வரவழைத்துப் பந்தல் அலங்கரித்து மகர தோரணங்கள் கட்டி வாழைகமுகுகள் நாட்டி சங்கீத மேளவாத்தியங்கள் சமுத்திரம் போலக்கோஷிக்க அநேக சூரியர்கள் போல் தீபதொடிகளை பிரகாசிக்க அன்னதானம் சொன்னதானம் பூதானம் கோதானம் எல்லாம் வாங்கிசுகந்த புஷ்பம் சந்தனம் முதலான வாசனைதிரவியங்கள் பரிமளிக்க பெரியவாகளாசிக்கூறப் பெண்கள் சுபசோபனங்கள்பாடவெகுசப்பிரயத்துடன் கலியாணமஹோற்சவம் நடக்கின்றதல்லவா? ஒரு ஏழையினுடைய கலியாணமாயிருந்தாலும் எவ்வளவோ விருந்துகளும் சிறப்புகளும் வேடிக்கை விநோதங்களும் நடக்கின்றன இராசகிரகங்களிற்கூட கலியாணத்தைத்தவிர வேறெந்தச்சமயங்களிலும இவ்வளவு ஆடம்பரங்களும் ஆநந்தமும் குதூகலமும் இல்லையே மேலும் கலியாணகாலத்தில் ஸ்திரீக்கும் புருஷனுக்கும் யாதொருபேதமுமில்லாமல் ஏகாசனமும சமான உபசாரமரியாதைகளும் நடப்பதுமன்றிப் பெண்ணினுடையகாலைப் புருஷன்தூக்கி அம்மிமேலவைக்கிறதும் வழக்கமாயிருக்கின்றது காரியமாகிறவரையிற் காலைப்பிடித்துப் பிற்பாடு குடுமியைப்பிடிப்பதுபோலக் கலியாணமுடிந்தபின்பு ஸ்திரீகளுக்கு நடக்கிற மரியாதை யெல்லாம் அவமரியாதையே மானமெல்லாம் அவமானமே உபசாரமெல்லாம் அபசாரமே? இது ஏறவிட்டு ஏணியைவாங்குவதற்குச் சமானமல்லவா?

கலியாணமில்லாத பிரமசாரியானவன் கச்சம்வைத்து வேஷ்டி கட்டக்கூடாது தோளில் அங்கவஸ்திரம் போடக்கூடாது தாம்பூலம் - புட்பம - சந்தனம் இவைகளைத்தரிக்கக்கூடாது ஒற்றைப் பூணூல்தரித்துகொண்டு பிட்சை எடுக்கவேண்டும் என்கிற தர்ம சாஸ்திரப்படிபிரமசாரிகள் அனுஷ்டித்துவருகிறார்கள் அவன் ஒரு ஸ்திரீயைவிவாகஞ்செய்த பினபு நலலவேஷ்டிகட்டியறியாத இடுப்புக்கு நல்லவேஷ்டியும் புழுதிபடிந்த உடம்புக்குப் புஷ்பச்சந்தனாதிகளும் நாரிகிடந்தவாய்க்குத் தாம்பூலமும் இன்னும் அநேகசுகங்களும உண்டாகின்றன அதைப்பற்றியே பாககுககொடுத்த பாக்கியவதி, புஷ்பங்கொடுத்த புண்ணியவதி, சந்தனங்கொடுத்த சரஸ்வதி, என்று பலவாதப் பிராமணர்களுடைய கலியாணங்களில் பெணகளை வாழ்த்துவது வழக்கமாயிருக்கின்றது அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடுவதுபோலத் தங்களுக்குச் சகல சுகங்களையுங் கொணடுவந்த ஸ்திரீகளைப் புருஷர்கள் அலக்ஷியஞ்செய்வது எவ்வளவு அநியாயம்.

பாக்கியம்-ஞானம்-கல்வி-வீரம்-முதலியவைகளைப் பெண்பாலாக ப்பேசுவது சகல பாஷைகளிலும் வழக்கமாயிருப்பது போலவே இந்துக்களும் - லக்ஷ்மி - சரஸ்வதி - முதலானவர்களை பாக்கியம சௌரியம் கல்வி முதலியவைகளுக்குத் தெய்வங்களென்று சொல்லுகிறார்கள். சகலபிராணிகளையும் தாய்போலத்தாங்குகிற பூமிதேவியும்பெண்ணாயிருக்கிறாள் பூமியைவிட்டுத் திக்குகளிற பறப்போமென்றாலோ திக்குகளும்பெண்களாம் ஆறுகளிற் குதிப்போமென்றாலோ கங்கை-காவேரி-கிருஷ்ணை-கோதாவரி - பெண்ணை—முதலிய நதிகளும் பெண்களாயிருக்கின்றன இவ்விதமாக புருஷர்களுடைய வாழ்வுகளெல்லாம் பெண் மூலமாகக்கிடைத்திருக்க புருஷர்கள் பெண்டுகளை அவமானப்படுத்துவது கிரமமா ?

பூர்வீகராசர்களும் வித்துவான்களும் ரிஷிகள் முதலானவர்களும் தங்களுடையபத்தினிகளை எவ்வளவோ கௌரவமாகநடத்தினார்களென்றும் ஸ்திரீகளுடைய வார்த்தைகளை அவர்கள் ஒருக்காலும் தட்டினதில்லையென்றும் இராமாயணம் பாரதம் நைடதம் முதலிய காவியங்களால் தெரியவருகிறதுமன்றி இந்துக்களுடைய தேவர்கள் தங்களுடைய ஸ்திரீகளைக் கீழேவிடமனமில்லாமல் தங்களுடைய தேகங்களில் வைத்துக்கொண்டதாகவும் புராணாதிகளில் சொல்லப்படுகின்றது சிவன் தனது பாரியைப்பாகத்திலும் மற்றொரு பெண்ணைத் தலையிலும்வைத்துக்கொண்டதாகவும் விஷ்ணு மார்பிலும் பிரம்மா நாவிலும் இந்திரன் தொடையிலும் தங்களுடைய பத்தினிகளை வைத்துக் கொண்டதாகவும் சொலலுகிறார்கள் குதிரை எட்டடிபாய்ந்தால், குட்டிபதினாறடி பாயுமென்கிற, பழமொழிப்படி இந்துக்கள் அவர்களுடைய தேவர்களையும் இராசர்களையும் பார்க்கத் தங்களுடைய ஸ்திரீகள்மேல் அதிகபட்சம் பாராட்டவேண்டியதாயிருக்க அவர்களை அடிமை போலநடத்துவது பெரிய பெண்துரோகமல்லவா ?

பிரபலமான கவீசுரர்களும் பக்தர்களும் தங்களைநாயகிகளாகவும் கடவுளைநாயகனாகவும் பாவித்து ஸ்தோத்திரங்கள் செய்கிறது சர்வத்திர சாதாரணமாயிருக்கின்றது புருஷர்கள் தெய்வத்தை அடைவதற்குக் கூடப்பெண்ஸ்வரூபம் காரணமாயிருக்கப் பெண்களைப்புருஷர்கள் நிகிர்ஷடம் செய்வது தெய்வசம்மதமாகுமா.

மனுஷாவதாரஞ் செய்தகடவுளை ஈன்றெடுத்த உலகமாதாவும் பெண்தானே இப்போதிந்தத் தேசமெல்லாம் ஆளுகிறவிக்டோரியா

என்கிற மகாராணியவர்களும் ஸ்திரீதானே இதுவுமன்றி நம்மை பத்துமாதம் உதரத்தில் சுமந்துபெற்றெடுத்துபாலூட்டிதாலாட்டி சீராட்டி வளர்த்த தாய்மார்களும் பெண்களல்லவோ? இரவெல்லாங்கண்விழித்து அடிக்கடி பால்கொடுத்து மருந்துகொடுத்து தாங்களும் மருந்துண்டு பத்தியம்பிடித்து பிள்ளைகளுடைய மலஜலாதிகளையெல்லாம்சகித்து தங்களுடைய பிராணனெல்லாம் பிள்ளைகள் மேல்வைத்து வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிப் பிள்ளைகளைவளர்ப்பதற்காகத் தாய்மார்கள் படுங்கஷ்டம் இவ்வளவென்று சொல்லிமுடியுமா.

நாம் கலியாணமாகிறவரையில் தாய், தமக்கை, முதலானவர்கள்கைகளில் வளருகிறதுந்தவிர, தாய்க்குப்பின் தாரமாதலால் விவாகமானபின்பு பத்தினிகளால் சகல சம்ரக்ஷணையு மடைகிறோமல்லவா? திரவியமும, கீர்த்தியும், சம்பாதிப்பதில் நாம் நம்முடைய எண்ணமெல்லாஞ் செலுத்துகிறோம். தாய், சகோதரி, பத்தினி முதலானவர்கள் நம்முடைய சுகத்தையும், பிரியத்தையும் தேடுவதில் அவர்களுடைய நினைவுகளையெல்லாம் வைக்கிறார்கள், நாம் அவர்களுடைய க்ஷேமத்தைக் கருதுவது மிகவுமரிது. அவர்கள்நம்முடைய க்ஷேமத்தை நினையாத நேரமில்லை. அவர்களுடைய பேச்செல்லாம் நம்முடையபேச்சே அவர்களுடைய நினைவெல்லாம் நம்முடைய நினைவே, அவர்கள்செய்யுந் தேவதாப்பிரார்த்தனைகளெல்லாம்நமக்காகவே அன்றியும் நாம்நம்முடைய ஊரையும் வீட்டையும்விட்டுச் சிலநாள் பிரிகிறதாயிருந்தால், எவ்வளவோ மனஸ்தாபப்படுகிறோம், நம்முடைய பத்தினிகள் பிறந்த ஊரையும் வீட்டையும் தாய் தந்தை சகோதரர்முதலான பந்துக்களையும், விட்டு நம்மை நம்பிவருகிறபடியால், அவர்களை மிகவும் பிரீதியாய் நடத்த வேண்டியது நம்முடைய கடமையல்லவா.

பெண்களுக்கு, இயற்கையாயுள்ள மாதவிடாய், கர்ப்பம், பிரசவம், பிள்ளைவளர்த்தல, பாகஞ்செய்தல், புருஷன், மாமன், மாமி, முதலியோரை உபசரித்தல், விருந்தோம்பல், முதலாகிய கஷ்டங்களையும் துன்பங்களையும் சற்று நினைத்தால், மண்ணும் இரங்கும், மலையும் உருகுமே அதைப்பற்றியே பெண்ணென்றால் பேயுமிரங்கும் என்று சொல்லுகிறார்கள், மழை, பனி, வெயில், காற்று, முதலியவைகளைத் தன்மேல் தாங்கிக்கொண்டு, குஞ்சுகளைச் சிர

குக்குள் வைத்தணைக்கும்பக்ஷிபோல், சகலகஷ்ட நிஷ்டூரங்களையும் ஸ்திரீகள் தாங்கிக்கொண்டு, சுகங்களைமட்டும் நமக்குக் கொடுக்கிறார்கள். புருஷர்கள் எவ்வளவுதான் படித்தாலும், ஸ்திரீகளுக்குள்ள அடக்கமும் பொறுமையும் சாந்தமும் உண்மையான விசுவாசமும் புருஷர்களுக்கு வருமா? இறந்துபோன பெண்சாதியின் பிரேதத்தை வெளியிலெடுத்துக்கொண்டு போவதற்குமுன்னமே, நாம் வேறே பெண்விசாரித்துப் புனர்விவாகத்திற்கு அடிபோடுகிறோம். புருஷவியோகமான ஸ்திரீகள் வேறுகலியாணமில்லாமல் ஆயுசு நாளெல்லாம் போக்குகிறார்களே. சிலபெண்கள் புருஷனோடு உடன் கட்டையேறவும் சம்மதிக்கிறார்கள். சிலபெண்கள் புருஷர்களிறந்துபோன துக்கத்தைச் சகிக்கமாட்டாமல், அந்த ஏக்கமாயிருந்து சிலநாளைக்குள் இறந்து, புருஷர்களைப் பின்பற்றுகிறார்கள். மேலே நாம்சொல்லியபடி, கல்வியில்லாமையாலும், சுபாவ துர்க்குணத்தினாலும், துஷ்டஸ்திரீகளும் உலகத்திலிருக்கிறார்க ளென்பது வாஸ்தவமே. ஆயினும், நல்லஸ்திரீகளையும் கெட்ட ஸ்திரீகளையும் எண்ணிப்பார்க்குமிடத்தில், நல்ல ஸ்திரீகளுடைய தொகை அதிகமாயிருக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

அந்நிய புருஷர்களுடைய தந்திரங்களால் ஸ்திரீகள்விபசாரிகளாகிறார்க ளென்பதற்கு திருஷ்டாந்தமாக "இந்தியன் பினல் கோட்" என்கிற ஆக்கினைப் பிரமாணசட்டமானது அந்நியஸ்திரீயுடன் சேருகிற புருஷனுக்கு மட்டும் தண்டனைசொல்லி, ஸ்திரீகளுக்குத் தண்டனை சொல்லாமலிருக்கிறது. இது நியாய விரோதமாயிருந்தாலும், சட்ட சாஸ்திரங்களெல்லாம் ஸ்திரீகளுக்கு அனுகூலமா யிருக்கிற தென்பது ஸ்பஷ்டமா யிருக்கின்றது.

ஸ்திரீகளுக்கு உள்ள மற்ற கௌரவங்களோடு கூட, அவர்களுடைய தேக சௌந்தரியமும் அவர்களுக்கு விசேஷ யோக்கியதையை யுண்டுபண்ணுகின்றது. மிருகங்களும் பெண்பக்ஷிகளும் அழகில்லாமலிருக்க, ஆண் மிருகங்களையும், ஆண்பக்ஷிகளையும், அழகாகப் படைத்த ஸ்வாமி, மனுஷர்களுக்குள் புருஷர்களைப்பார்க்கிலும் பெண்களை அதிக ரூபவதிகளாகப் படைத்திருக்கிறாரென்பது கண்ணுள்ள யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விஷயமே. ஸ்திரீகள் சுகுமாரதேகமும், மிருதுவாக்கியமும், துர்ப்பலமும், நாணமும், அச்சமும், உடையவர்களானதால் கண்முதலியமிருதுவான அவயவங்களை அதிக ஜாக்கிரதையுடனே பாதுகாப்பதுபோல,

அவர்களிடத்திலும் அதிககிருபை பாராட்ட வேண்டியது புருஷர்கள் மேல விழுந்தபாரமா யிருக்கின்றது.

உலகத்தில் நடக்கிற சகலசுபசோபனங்களிலும்கலியாணமே சர்வசிலாக்கியம் என்பதை யாவரும் நிராடம்பகமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆயிரம், பதினாயிரம், லட்சமபொன் கொடுக்கல் வாங்கல் செய்கிறார்கள். விஸ்தாரமான காணி, பூமி, முதலியவைகளைக் கிரயத்துக்கு வாங்குகிறார்கள். அந்தச செய்கைகளெல்லாம ஒரு சாக்ஷி அல்லது இரண்டு சாட்சிகள் முன்பாக நடக்கின்றன. கலியாணமோவென்றால தெய்வ சாட்சியாகவும், குருசாக்ஷிபாகவும் சமஸ்தஜன சாக்ஷிபாகவும நடப்பதினால், கலியாணம் எவ்வளவோ உத்கிரிஷ்டமென்று விசிதமாகின்றது கலியாண சம்பிரமததுக்கு முக்கியகாரணமான ஸ்திரீயைப் பிற்பாடு அப்பிரியமாகவும் அசிரத்தையாகவும் நடத்துவது தர்மமா.

ஸ்திரீயும் புருஷனும் உடலும் உயிரும்போல் மாறாதநேசத்துடன் யெப்பொழுதும் ஒத்து வாழ்கிறதென்று கலியாணகாலத்தில பிரமாண பூர்வமாக உடம்படிக்கையும் செய்துக்கொள்ளுகிறார்கள், ஒருசாக்ஷி அல்லது இரண்டுசாக்ஷிகள் முனபாக நடக்கிறகிரய விக்கிரயமுதலிய நிபந்தனைகள் எவவளவோ ஊர்ஜிதமாயிருக்கதெய்வம் அறிய, குரு அறிய சகலஜனங்களும அறிய வானம பூமி அறிய ஸ்திரீபுருஷர்கள செய்துக் கொண்ட கலியாண உடம்படிக்கையை மீறிகிரியும், பாம்பும் போல அவர்களடிததுக்கொள்ளவும் புருஷர்கள பரஸ்திரீகமனம், தாசிகமனம, செய்வதும் பரமபாதகமல்லவா? ஒரு புண்ணியவானை ஒரு தாசி விருமபி அவனைத் தனவலையில மாட்டப் பிரயத்தனம் செய்தபொழுது அந்த மகாபுருஷன் அவளை நோக்கி.

“ இந்தவுடலுள மைம்பொறி
யினனுயிராவு மனஞ்செயும்
அநதநனனுளிலெள னிலலவட்
கனபொடளித்தனன யான பொதுப்
பைநதொலிய, யுனைச் சோநதிடப்
பாரிலெனக்குடல் வேறில,
சிந்தைபுலனைகளும வேறிலை,
சீவனம வேறிலை, செலவையே,

பச்சை வளைபல்களை யணிந்த பொதுமாதே என்னுடைய உடல்-மனம்-பஞ்சேந்திரியங்கள்-உயிர் முதலிய யாவையும் கலியா

ணகாலத்தில் என்னுடைய மனைவிக்குக்கொடுத்துவிட்டேன் இப்பொழுது உன்னைச்சேர வேறுதேகமுமில்லை, வேறுமனமுமில்லை வேறுபுலன்களும் உயிருமில்லை என்று வசனித்ததாக நீதிநூல-௧௧-ஆவது அதிகாரம் 'புருடபாரியல்பு' 23-வது பாடலில் சொல்லப்படுகின்றது அந்த உத்தமனைப்போல், காம நிக்கிரகம் செய்து சேர்ந்த ஸ்திரீகளையே சிரேஷ்டமாக மதிப்பவர்களே புருஷசிரேஷ்டர்கள் அவர்களே புருஷோத்தமர்கள்.

சில புருஷர்களுக்கு தாசிகமனம் தண்ணீர் குடிக்கபாடமாயிருக்கின்றது அதில் சங்கோசமுமில்லை அவமானமுமில்லை பொக்கைவாயன் பொரிமாவை மெச்சிக்கொள்வதுபோலவும் கோழி கொப்பையை மெச்சுவதுபோலவும் ஈக்கள் அசுத்தத்தைச் கிலாக்கிப்பது போலவும் தாசிகமனஞ் செய்வதைத் தஙகளுக்குக் கௌரவமாக எண்ணுகிற ஞானசூனியர்களும் அநேகர் இருககிறார்கள் இது பெரிய பத்திநிதுரோகமல்லவா.

ஒன்றுந்தெரியாத மூடாத்மாவாயேனும் அல்லது புருஷன் மேல் உண்மையான விசுவாசமில்லாதவளாயேனும் இருக்கிற பெண்சாதி புருஷன் எக்கேடுகெட்டாலும் நமக்கென்னவென்று அவிஷயமாயிருப்பாள் உத்தமஸ்திரீயோ எந்தத்துன்பத்தைச் சகித்தாலும் புருஷனுடைய பரஸ்திரீபோகத்தை மாத்திரம் ஒருநாளும் சகிக்கமாட்டாள் உத்தமஸ்திரீயானவள் தனக்குச் சகலபாக்கியமும் கணவனேயென்று நினைப்பதினால் அவ்விதமாகவே புருஷனுந் தன்னை நேசிக்கவேண்டுமென்றும் புருஷனுடைய தயைக்குத்தவிர வேறொருத்தியும் பாகஸ்தியாயிருக்ககூடாதென்றும் எண்ணமுள்ளவளாயிருப்பாள் அன்றியும் பரஸ்திரீ சம்பந்தத்தால் புருஷனுக்குண்டாகிற சௌக்கிய நஷ்டம், ஆயுசுநஷ்டம கீர்த்திநஷ்டம இகபர நஷ்டம் பொருள் நஷ்டம் முதலியவைகளையும் நினைதது நினைத்து மனம் வருந்துவாள்.

புருஷனுடைய துர்மார்க்கத்தை வெளியிலும் சொல்லாமல் அவனையுங்கோபியாமல் அல்லும்பகலும் ஓயாதவிசனமும் துக்கமும, பொறுமையுங்கொண்டு சரியான ஆகாரம் நித்திரையிலலாமல மனம்புண்ணாகி மடிவாளென்பது நிச்சயமே சித்திரக்காரர் சுவரிலெழுதும் சித்திரங்களை வந்து பார்க்கும்படி ஒருபுருஷன் தனபத்தினியையழைக்க அவள் ஆண்சித்திரமாயிருந்தால நான்பார்க்க

மாட்டேன் பெண்சித்திரமாயிருந்தால் நீரும்பார்க்கச் சம்மதிக்க மாட்டேனென்று உத்தரம்சொன்னதாக நீதிநூல்-கக, -ம் அதிகாரம், புருடபாரியல்பு, உஎ-வது பாடலில் சொலலப்படுகின்றது.

ஓவியர்நீள் சுவரெழுது
  மோவியத்தைக் கண்ணுறுவான்
தேவியையா னழைத்திடவான்
  சித்திரமே நான்பாரேன்
பாவையர்தம் முருவெனினீர்
  பார்க்கமனம் பொறேனென்றாள்
காவிவிழி மங்கையிவள்
  கற்புவெற்பின் வற்புளதாள்.

சித்திரத்திற்கூட பெண்ருபத்தைப் புருஷர்கள் பார்க்கக்கூடாதென்கிற தீர்க்கவைராக்கியமுள்ள பதிவிரதாசிரோமணிகள் தம்முடைய புருஷர்கள் அந்நியஸ்திரீகளைக்கூடிச்செய்யும் அக்கிரமங்களை எப்படிச்சகிப்பார் ஆகையால் தாசிகள் முதலிய ஸ்திரீகளைபுருஷர்கள் சொப்பனத்திலும் நினைக்காமலிருப்பது சர்வோத்தமம்.

புருஷர்கள் வெளிவியாபாரங்களும் பலவேலைகளுமுள்ளவர்களாகையால் அவர்களுக்கு யாதொரு விசனம்வந்தாலும் சீக்கிரத்தில் மாரிப்போகும் எப்போதும் மனோவியாபாரமும் இளகினசித்தமும் உள்ள ஸ்திரீகளுக்கு உண்டாகிற வியாகூலம் சாமானியமல்லவே அவர்களுடைய மனோவியாதி புருஷனுடைய கிருபையென்கிற ஔஷதப்பிரயோகத்தினல் தீருமேயொழிய வேறொன்றினுந்தீரமாட்டாது கர்ப்பம் பிரசவம் முதலிய பிராண சங்கடமான துன்பங்களில் தருந்துகிறதற்குறிய ஸ்திரீகளை நாமும் உபத்திரவப்படுத்தாமல் அவர்களுடைய துக்கம் நம்முடைய துக்கமாகவும் அவர்களுடைய சந்தோஷம் நம்முடைய சநதோஷமாகவும் நினைத்து அன்புபாராட்டவேண்டியது நம்முடைய கடமையாயிருக்கின்றது.

சொந்தஸ்திரீகளை வெறுத்துவிட்டு, பரஸ்திரீ நேசஞ்செய்கிற புருஷர்கள் தங்களுடைய பத்திரிகைகளையும், சகோதரிகளையும், அவர்களுடைய புருஷர்கள்கைவிட்டு மேற்சொன்ன துர்வியாபாரத்தில் திரிந்தால், தங்களுக்கு எவ்வளவு மனோவியாகுலம் உண்டாகும்? அதைச் சற்றுநினைக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

இல்லறம்-குடும்பம்-சமுசாரம்-என்று-பெருமையாகப் பேசிக் கொள்வதெல்லாம் ஸ்திரீயைப்பற்றியேயொழிய புருஷனைப்பற்றியல்லவே உலகத்தார் கலியாணமில்லாத ஏகாங்கிக்குச் செய்கிற உபதாரத்தைப்பார்க்கிலும் ஒருவன் குடும்பியாயும் சமுசாரியாயுமிருந்து கஷ்டப்பட்டால் அவன விஷயத்தில் அதிக பச்சாத்தாபமும் இரக்கமும் வைத்து உபகரிக்கிறார்களே இதுவும் ஸ்திரீகளால் வருகிற நன்மைத்தானே.

அகராதி-திவாகரம்-நிகண்டு முதலிய புஸ்தகங்களில் பெண் சாதிக்குச் சொல்லப்பட்ட பலபெயர்களாலும அவளுடைய அருமையும் பெருமையும் விளங்குகின்றன. வீட்டுக்கு உடையவளானதால் இல், இல்லாள், மனையாள், மனைவி, கிரகினியென்றும், புருஷனுக்குப்பிரியமும் நேசமுமுள்ளவளானதால் காதலி, பிரியை என்றும், சகலபந்துவர்க்கங்களைப் பார்க்கினும் புருஷனுக்கு அதிக உரிமையுள்ளவளானதால், உரிமை கிழத்தியென்றும் குடும்பப்பிரதிஷ்டைசெய்பவளானதால் குடும்பினியென்றும் குடும்ப பாரங்களை யெல்லாம் வகிப்பவளாதலால் பாரியென்றும் வீட்டுக்கு எஜமானியானதால தலைவி, நாயகியென்றும் பதிவிரதையானதால், பத்தினியென்றும், இகபரம் இரண்டிலும் புருஷனுக்குத்துணை செய்பவளானதால் துணைவி, வாழ்க்கைத்துணை யென்றும் பத்தினிக்குப் பலநாமங்கள் உண்டாயிருக்கின்றன.

அப்படியே புருஷனுக்குப் பெண்சாதி மேலிருக்க வேண்டிய அன்பையும் ஆசையையும் நேசத்தையும் காட்டவேண்டியதற்காக அன்பன் ஆர்வலன் உரியோன் காதலன் நேசன் பிரியனென்று புருஷனுக்குப் பலபெயர்கள் உண்டாயிருக்கின்றன அவலக்ஷணமேயவதரித்ததுபோலிருக்கிறவர்களுக்கு அழகம்மை யென்றும் அதர்மத்துக்கு ஆலயமானவனுக்கு தர்மராயனென்றும் பெயர் கொடுத்ததுபோல பிரியமென்கிற பிரசக்தியேயில்லாத ஸ்திரீ புருஷர்களுக்கு மேற்கண்ட பெயர்கள் பொருந்துமா? புருஷபாரியர் என்கிற அபிமானமில்லாதவர்களுக்கு பிரியன்-பிரியை யென்கிறபெயரை மாற்றி அப்பிரியன்-அப்பிரியை யென்கிற பெயர்களைக்கொடுப்பது உசிதமாயிருக்கின்றது.

ஜனங்களுடைய நன்மைக்காக இராஜா மந்திரி முதலானவர்களுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிருப்பதினால் அந்தவிஷயந் தவிர மற்றவிஷயங்களிலெல்லாம் இராஜா-மந்திரி-முதலான அதிகாரிகளும் மற்றஜனங்களும் ஸமானஸ்தர்கள் தாமே அப்படியே குடும்ப நன்மைக்காக புருஷனுக்கு எஜமான்பட்டங் கொடுக்கப்ப

ட்டிருப்பதினால் அந்த விஷயந்தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் புருஷனும் பெண்சாதியும் சமானஸ்தர்களாயிருக்கிறார்கள் நாடகத்தில் இராசாவைப்போலப் பட்டந்தரித்துக்கொண்டவனுடைய அதிகாரம் வேறெங்கேயாவது செல்லுமா? அவனுடைய பட்டம் பைத்தியக்காரப்பட்டந்தானே தேசநன்மைக்காக இராசாதிகாரம பெற்றுக்கொண்டவன் தேசநன்மையில் தவிர வேறு துர்விஷயங்களில் அவனுடைய அதிகாரத்தை எப்படிச்செலுத்தக்கூடாதோ அபபடியே குடும்பநன்மைக்காக நாயகப்பட்டந்தரித்துக்கொண்ட கணவன் குடும்பினிக்குக் கொடுமை செய்வதில் முற்றும் அதிகாரியாயிருக்கின்றான்.

ஸ்திரீகளைப்பிரீதியாக ஆதரணைசெய்யவேண்டியது புருஷர்களுக்கு எப்படிக்கடமையோ அப்படியே ஸ்திரீகளுக்கு நல்லபுத்தி கற்பிக்கவேண்டியதும் புருஷர்களுடைய முக்கியகடமையாயிருக்கின்றது இந்தத்தேசத்தில் அதிபாலியத்தில் பெண்களுக்குக்கலியாணமாய்ப் புருஷர்களுடைய வீட்டிற்குவருகிறபடியால் அவர்களுக்கு ஹிதோபதேசஞ்செய்து திருத்துவது புருஷர்களுக்கு பிரயாசமாயிராது-ஆனை-குதிரை-மாடு-முதலிய மிருகங்களையும் மனுஷன் திருத்தித் தன்னுடைய இஷ்டப்படி நடக்கக்கற்பிக்கிறானே சூக்ஷும புத்தியும் ஞானமுமுள்ள ஸ்திரீகள் விஷயத்தில் புருஷன் கொஞ்சம் சம்சிரமம் எடுத்துக்கொண்டால் அவர்களைத் திருத்துவது அதிக சுலபமே.

முக்கியமாகப் புருஷர்கள் தாங்களும் சன்மார்க்கத்தில் நடந்து ஸ்திரீகளுக்கும் நல்லவழி காட்டவேண்டுமே குரு ஒரு குற்றஞ் செய்தால் சிஷர்கள் ஒன்பதுகுற்றஞ்செய்யத்துணிவதுபோல வயதில் மூத்தவர்களும் படித்தவர்களுமான புருஷர்கள் துர்மார்க்கஞ்செய்தால் ஒன்றுந்தெரியாத சிறுபிராயமுள்ள ஸ்திரீகளும் அந்தப்படியே நடக்க ஆரம்பிப்பார்களல்லவா?

வீட்டுக்குவெளியில் அந்நியர்முன்பாக ஒருவரும் தங்களுடைய துர்க்குணங்களைக் காட்டுகிறதில்லை வெளியில் தங்களுக்குமேற்பட்டவர்களும் சமானமானவர்களும் அநேகரிருப்பதினால் தேகத்தைச் சட்டை போர்வைமுதலானவைகளால் மூடிக்கொண்டு புறத்தில்சஞ்சரிப்பதுபோலத் தங்களுடைய சுபாவகுணங்களை மறைந்துக்கொண்டு கோபமின்மை இன்சொல் முகமலர்ச்சி அறங்கூறல்

முதலிய தர்மவேஷந்தரித்துக்கொண்டு திரிகிறார்கள் வீட்டில்வந்த உடனே புருஷர்கள் தேகத்தின் வெளிவேஷத்தைக் களைத்துப் போடுவதுபோல உள்வேஷத்தையுங் களைத்துத் தங்களுடையயதார்த்தசொரூபத்தை ஏழைப்பெண்சாதியிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் காட்ட ஆரம்பிக்கிறபடியால் புருஷர்களுடைய துர்க்குணங்கள் பெண்சாதி பிள்ளைகளையுஞ் சேருகின்றனவே யதாராஜா ததாப்பிரஜா, ராஜா எப்படியோ அப்படியேகுடிகளும்என்பதுபோல பெரும்பாலும் புருஷன் மாமன் மாமி எப்படியோ அப்படியே பெண்சாதியும் பரிணமிக்கிறாளென்பது நம்மெல்லோருக்கும் சகஜமாயும் அநுபோகசித்தமாயுமிருக்கின்றது.

பக்ஷி ஆகாசமெல்லாம் பறந்துதிரிந்தாலும் கடைசியில் கூடுகளிலும்-மரம்-செடிகளிலும் வந்துசேர்ந்து ஆறுதலடைவதுபோல புருஷர்கள் வெளியில்படுகிற கஷ்டங்கள் சிரமங்களெல்லாம் வீடுகளில் பெண்சாதிகளால் நிவர்த்தியாகி அவர்களால் சுகமடையவேண்டியவர்களாதலால் பெண்சாதிமார்களை அதற்குப் பாத்திரர்களாகவும் விவேகிகளாகவும் புண்ணியவதிகளாகவும் ஆக்கிக்கொள்ளவேண்டியது புருஷர்களுடைய சொந்தப் பிரயோஜன-மாகவும் அப்படிச் செய்துக்கொள்ளாமலிருப்பது தங்களுடைய ஸ்வயங்கிருத அபராதமாகவுமிருக்கின்றன.

புருஷர்கள் ஸ்திரீகளுக்கு எப்போதுங் கொடுமைசெய்வதனால் நல்லஸ்திரீகள் கூட மனம்வெறுத்துக்கெட்டுப்போவதற்கு இடமுண்டாகிறது நம்மைநேசிப்பவர்களை நேசிக்கிறதும் விரோதிப்பவர்களை விரோதிக்கிறதும் மனுஷசுபாவமாயிருக்கிறது புருஷர்களுக்கு ஸ்திரீகளிடத்தில் பிரியமில்லாவிட்டால் ஸ்திரீகளுக்குமட்டும் புருஷர்கள்மேல் எப்படிப்பிரீதியுண்டாகும்? நிரபராதிகளான ஸ்திரீகளை நிஷ்காரணமாய் துஷ்டையென்றும் விபசாரியென்றும் நாயே-பேயே-யென்றும் புருஷர்கள் தூஷிப்பதனால் ‘ பிராமண உள்வாக்குப் பலித்தது என்பதுபோல புருஷர்களுடைய வாக்குப் பலித்து நல்லஸ்திரீகளும் துஷ்டைகளாய் விடுகிறார்கள்.

ஸ்திரீகளை புருஷர்கள் கைதீண்டி அடிப்பது மகாகொடியவழக்கமாயிருக்கிறது அணுவை மலை எதிர்த்ததுபோலவும் எலியை புலி எதிர்த்ததுபோலவும், துர்ப்பலமுள்ள ஸ்திரீகளைப் புருஷர்கள் திட்டியடிப்பதனால் புருஷர்களுக்கே அவமானமல்லாமல் மற்றைப்

படியல்லவே சண்டைக்குப் போய்த் திரும்பின சிப்பாய்களில் ஒருவன் எதிரியினுடைய காலைத் தான்வெட்டினதாக வீரம்பேசிக் கொண்டானும் அதைக் கேட்ட புத்திமானொருவன் எதிரியினு டைய தலையைவெட்டுவதல்லவோ வீரம் காலைவெட்டவேண்டியதே ன்னவென்று கேட்க அதற்கு மேற்படி சிப்பாய் நானென்னசெய் வேன் ? எதிரியின் தலையைவேறொருவன் முதல்நாளே வெட்டிக் கொண்டுபோய்விட்டான் நான் மறுநாள் காலைவெட்டினேனென்று சொன்னான். பிரேதத்துடனே சண்டைசெய்தமேற்படிசுத்தவீரன் போலவும் செத்தபாம்பைத் துணிந்துபிடிக்கும் தைரியசாலிகள் போலவும் ஸ்திரீகளைப் புருஷர்கள் திட்டியடித்துச்செய்கிற வாத மெல்லாம் அபவாதமே. அதனாலுண்டாகிற ஜயமெல்லாம் அபஜ யமே கீர்த்தியெல்லாம் அபகீர்த்தியே.

பக்ஷிகள் மிருகங்கள் கூடப்பெண்ணுக்காக ஆணும் ஆணும் அடித்துக்கொள்ளுகிறதேயல்லாது பெண்ணையடித்து உபத்திரவஞ் செய்கிற ஆண்பக்ஷியையாவது மிருகத்தையாவது நாம் கண்ட துமில்லை உண்டெனக்கேட்டதுமில்லை ஸ்திரீகளையடிக்கிற புருஷர் கள் பக்ஷிமிருகங்களையாவது குருவாகவைத்துக்கொண்டு அவை களிடத்தில் ஞானோபதேசம் பெற்றுக்கொள்ளவேண்டியது கிரமம் ஏழையைக்கண்டால் மோழையும்பாயும் என்பதுபோல ஸ்திரீகளி டத்தில் கைபின்பலத்தைக் காட்டுகிறதுமல்லாமல், அவர்களிட த்தில தங்களுடைய கவிச்சாதுரியத்தைக்காட்டுகிற மஹாவித்து வான்களும் அநேகருண்டு ஸ்திரீகளெல்லாம் கெட்டவர்களென்றும் நமன்வடிவமென்றும் அவர்களை நம்பக்கூடாதென்றும் வாய்கூசா மல் சமஸ்கிருதத்திலும் தமிழிலும் அநேக வித்வான்கள் பாடியிரு க்கிறார்கள்.

ஊமையனிடத்தில் உளறுவாயன் தர்க்கத்துக்கு ஆரம்பித்தது போலவும் செவிடனிடத்தில் தெருதினப்பாட்டுககாரன் சங்கீத சாமர்த்தியத்தைக் காட்டுவதுபோலவும், கவியென்கிற நாமதேயத் தைக் கனவிலுங் கேட்டறியாத ஸ்திரீகளைத் தூஷித்துக்கவிபாடு வதினால் என்னபிரயோஜனம் ? சகவாசதோஷத்தினாலோ அல்லது வேறென்ன காரணத்தினாலோ சாரதாபீடமாகிய ஔவை கூடப் பெண்ணென்கிற மானமில்லாமல் ' தையலசொற்கேளேல், பெண் வார்த்தையைக்கேளாதே என்று ஆத்திச்சூடியில சொலலியிருக்கி

ருள் பெண்கள் நல்ல புத்திசொல்லுகிற பட்சத்தில் அதைக்கேட்டால் பாதகமென்ன? பெண்கள் படித்தால் ஔவையைப்போல விவேகிகளாவார்களென்பதற்கு ஔவையே சாக்ஷியல்லவா? ஔவையினுடைய நீதிநூல்களைப்படித்துப் பயனடையாத புருஷர்களுண்டா? இல்லையே. ஆகையால் இந்த விஷயத்தில் ஔவைசொல்வது அநுசிதமானதால பெண்வார்த்தையைக கேளாதேயெனனும் ஔவையின்வாக்கியத்தை ஔவைக்கே உபயோகப்படுத்தி இந்த விஷயத்தில் அவள்சொல்லும் வார்த்தையைத்தள்ளி பெண்கள் சமயத்தில நல்லபுத்திசொன்னால் கேட்போமாக.

இந்தத்தேசத்தார் ஸ்திரீகளைமானமாகவும் விசுவாசமாகவும் நடத்தவேண்டுமென்பதற்கு வேறொருமுக்கிய காரணமுமிருக்கின்றது யூரோப்முதலான தேசங்களில் விருஷவியோகமாகிற ஸ்திரீகளுக்குப் புநர்விவாகஞ்செய்ய விதியிருப்பதுபோல இந்தத்தேசத்தில் இல்லாமையினாலும் அதிபாலவியததில கலியாணஞ்செய்கிற வழக்கமிருப்பதினாலும எண்ணிக்கையில்லாத ஸ்திரீகள் பாலவிதந்துகளாய்ப் போய் அன்னவஸ்திரத்திற்கு மார்க்கமில்லாமல் நிராதாவாய்க் கஷ்டப்படும்படி சம்பவிக்கின்றது ஆகையால் புருஷன் உள்ளவரையில் ஸ்திரீயை அன்பாக ஆதரிக்கவேண்டியதும் தனக்குப் பிறகாலம் அவளும் அவளுடைய பிள்ளைகளும் தெருவில் அலையாதபடி சீவனத்துக்குத தகுந்தமார்க்கம் செய்யவேண்டியதும் புருஷனுடைய பிரதான கடமையாயிருக்கின்றது.

புருஷனுக்குப்பாதியுடலாயும் துணைவியாயும் கிரகநாயகியாயும் அவனுடைய பிள்ளைகளுக்கு மாதாவாயும் குல விளககாயும், புருஷனுக்குபபுத்திர சந்தானமும் பெயரும் பிரபலமுங் கொடுப்பவளாயும் இகபரசாதகியாயுமிருக்கிறபத்நியைப் புருஷன எவ்வளவு கண்ணியப்படுத்துகிறானோ அவ்வளவு புருஷனுககுக கண்ணியம் அவளை எவ்வளவு தாழ்த்துகிறானோ அவ்வளவு தன்னையுந் தாழ்த்திக்கொண்டதற்குச்சமானம்.

கடவுள் ஒருவர்மட்டும் மாசற்றவரேதவிர மனுஷராகிய நாமெல்லாரும பாபாத்துமாக்களாயிருககிறோம் நாம் ஒருவர் மற்றொருவருடைய குற்றங்களைப்பொறுக்காவிட்டால் நமமுடைய குற்றங்களைக்கடவுள் எப்படிப்பொறுப்பார்? ஸ்திரீகள் தெரிந்தும்

தெரியாமலும் யாதொரு பிழைசெய்தாலும் அதைப் புருஷர்கள் பொறுத்துக்கொண்டு சாந்தமாகவும் நயமாகவும் ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லித் திருத்தவேண்டுமேதவிர கோபங்கொண்டு கொடுமைசெய்யக்கூடாது கோபமவந்தபோது மூக்கையறுத்துவிட்டு சந்தோஷம்வந்தபோது அறுந்தமூக்கை ஒட்டிக்கொள்ளச்சொன்னால் ஒட்டுமா.

கடவுள் அவருடைய அடியார்சபையை நேசிப்பதுபோலவும் ஒவ்வொருவனும் தன்னைத்தான் நேசிப்பதுபோலவும் தன்னுடையபத்தினியை நேசிக்கவேண்டுமென்றும் ஒருவனும் தன்னுடைய பத்தினியிடத்தில் விரோதமாயிருக்கக்கூடாதென்றும் வேதம்விதிக்கின்றது தன்னுடைய பத்தினியைப் பிரியமாக நேசிப்பதாகக் கலியாணகாலத்தில் புருஷன்முந்திவாக்குத் தத்தஞ் செய்கிறபடியால் அந்தவாக்கை நிறைவேற்றவேண்டியது அவனுடைய முந்தின கடமையாயிருக்கின்றது ஒருவன் கலியாணம் செய்துகொள்ளுவதும் செய்துகொள்ளாமலிருப்பதும் அவனுடைய இஸ்டமேயன்றி கலியாணஞ்செய்துக் கொள்வது அகத்தியம் அல்ல கலியாணம் செய்துக்கொள்ளாம லிருப்பதுதோஷமுமல்ல ஆனால் கலியாணம் செயதுக்கொண்டவன் மேற்படி வேதவாக்கியங்களின்படி பெண்சாதியைப் பிரியமாக நேசிக்கப் பாத்தியப்பட்டிருக்கிறான் தன்னைத் தான்நேசிப்பதுபோலத் தன்னுடைய பததினியை நேசிக்கிறவன் பத்தினிக்கு ஹிதமானகாரியம் எதுவோ அதைமட்டும் செய்வான் அவளுக்கு அஹிதமானகாரியங்களை ஒருநாளும செய்யமாட்டான் தான் எப்படி சுயகாரிய துரந்தரனாயிருக்கிறானோ அப்படியே பெண்சாதியினுடைய காரியங்களிலும ஸர்வஜாக்கிரதை யுள்ளவனாயிருப்பான் ஒருவன் தன்பெண்சாதியை எவ்வளவு பிரியமாக நேசிக்கிறானோ அவ்வளவு பிரியமாகப் பெண்சாதியும் புருஷனை நேசிப்பாளாகையால் பெண்சாதியை நேசிக்கிற புருஷன் தன்னைத் தானே நேசிக்கிறவனாயிருக்கிறான் இப்படியாக ஒருவரையொருவர் பிரியமாகநேசிக்கிற புருஷனும் பெண்சாதியும் மகாபாக்கியசாலிகளாயிருக்கிறார்கள் அவர்களுக்கு ஒருதுக்கம் நேரிட்டாலும் அந்தத்துக்கத்தை இருவரும் சமபாகமாகத் தாங்கிக்கொளவதினால் அந்தத்துக்கத்தினுடைய பாரம்குறைந்துபோகின்றது அவர்களில் ஒவ்வொருவருக்கும் உண்டாகிற சந்தோஷத்தை இருவரும் சம

மாக அநுபவிப்பதால் அவர்களுடைய சந்தோஷம் இரட்டிப்பா கின்றது துக்கரூபமாகிய இந்தப்பிரபஞ்சத்தில் பல ஆபத்துகளும் கவலைகளும் துன்பங்களும் நேரிடுகிறபடியால் அந்தச்சமயத்தில் நமக்குத் திடஞ்சொல்லித் தேற்றவும் சந்தோஷகாலத்தில் கூட இருந்துசுகிக்கவும் பெண்சாதியைப்போல நமக்கு உற்றதுணையார் இருக்கிறார்கள்? ஸ்திரீயும் புருஷனும் ஒருவரை யொருவர் எவ் வளவு நேசிக்கிறார்களோ அவ்வளவுபிறராலும் அவர்கள் மதிக்கப் படுவார்கள் அவர்கள் ஒருவரையொருவர் நேசியாவிட்டால் அவர் களைபிறர் மதியார்கள் அவர்களுடைய பிள்ளைகளும் அவர்களை மதியாமலும் அவர்களுடைய சொற்படி நடவாலும் தன்னரசு நாடுபோற் கெட்டுப்போவார்களென்பது சந்தேகமா.

ஒருநாளல்ல இரண்டுநாளல்ல அநேகவருஷகாலம் ஸ்திரீயும் புருஷனும் கூடிவாழ்ந்து வம்சவிர்த்தியும் குடும்பப்பிரதிஷ்டையும் செய்ய வேண்டியவர்களானதால் அவர்கள் தரித்திரர்களாயிருந் தாலும் அவர்கள் மனமொத்துக்கலந்து வாழ்வதே பெரியபாக்கியம் அந்தப் பாக்கியமில்லாவிட்டால் மற்றவகைப் பாக்கியமெல்லாம் அபாக்கியம் ஆகையால் உடலும் உயிரும்போலவும் நகமும் சதை யும் போலவும் மணியும் ஒளியும்போலவும பூவும் வாசமும்போல வும் கரும்பும்ரசமும்போலவும் ஸ்திரீபுருஷர்கள் அந்நியோந்நிய மாய்க்கூடிவாழக்கடவார்கள் அப்படி வாழ்ந்தால் இகபரசுகங்களை அடைவார்களென்பது நிச்சயமே.

புருஷர்கள் தத்தமக்குரிய பலதொழில்களைக் கற்றுக்கொண்டு சரீரப்பிரயாசப்பட்டு பெண்சாதிபிள்ளைகள முதலிய குடும்ப விசி ஷ்டத்தையும் தகுந்தபடி சம்ரக்ஷணைசெய்யக்கடமைப் பட்டிருக்கி றார்கள் நாம் மேற்சொல்லியபடி இந்தத் தேசத்தில் அனேக ஜாதி யார்களுக்குள் விதந்துக்களுக்கு மறுவிவாஹஞ் செய்கிற வழக்க மில்லாதபடியால் புருஷர்கள் தாங்கள் சம்பாதிக்கிற பொருள்களை டம்பம் காமம் குடி சூது முதலிய துர்விஷயங்களில் வீணே செல வழிக்காமல் ஸ்திரீகளுக்குப் பொருள்சேர்த்துவைக்க வேண்டியது அகத்தியமாயிருக்கின்றது அப்படிசெய்வது சாஸ்திர சம்மதமாயு மிருக்கின்றது எப்படியென்றால் ஒருஸ்திரீக்கு அவளுடைய தாய் தந்தை புருஷன் முதலியவர்களால், கொடுக்கப்போகிற தனமே, 'ஸ்திரீதனம்', அல்லது 'சௌதாயகம்', என்றும் அந்தச்சொத்துக்கு

அவளை பூர்ணசுதந்தரை யென்றும் பிரமாதமானகுடும்ப நிர்ப்பந்தங்களை நிவர்த்திசெய்யும்பொருட்டு பெண்சாதியினுடைய ஸ்திரீ தனத்தை புருஷன் உபயோகப்படுத்திக் கொள்ளுகிற பக்ஷத்தில் பிறபாடு முதலும்வட்டியுமாகப் பெண்சாதிக்கு அவன் உத்தரிக்கக்கடவானென்றும் மிதாக்ஷரம் ஸ்மிருதிசெந்திரிகை சரஸ்வதிவிலாஸம் வியவகாரம்யூகம் முதலிய தர்மசாஸ்திர புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன ஸ்திரீகளுக்குப் பிற்காலத்தில் உதவும்படிக்குப்பிரத்தியேகமாய் பொருள்வைக்கவேண்டியது அகத்தியமென்பதற்கு மேற்கண்டசாஸ்திரங்களைத் தவிர வேறே சாக்ஷியும் வேண்டுமா? அந்தச்சாஸ்திரவிதியைச் சர்வசாதாரணமாக இந்த தேசத்தார் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவராமலிருப்பது ஸ்திரீகளுடைய தௌர்பாக்கியமா யிருக்கின்றது.

யூரோப்பியர்களும் மகமதுமதஸ்தர்களும் கலியாணகாலத்திலாவது அதற்குமுன்னாவது பின்னாவது ஸ்திரீதனத்தைப்பற்றித் தப்பாமல் வியவஸ்தைசெய்து கொள்ளுகிறார்கள் விதந்துக்களுக்கு மறுவிவாகஞ்செய்கிற சம்பிரதாயமுள்ள யூரோப்பியர்களும் மகமதுமதஸ்தர்களுமே ஸ்திரீதனத்தைப்பற்றி ஏற்பாடுசெய்துகொள்ளுவார்களானால் ஸ்திரீகளுக்கு மறுவிவாகஞ்செய்கிற சம்பிரதாயமில்லாத இந்தத்தேசத்துப்பிராமணர்கள் வேளாளர்கள் முதலிகள் செட்டிகள் முதலாகியவர்கள் ஸ்திரீதனத்தைப்பற்றி நிபந்தனை செய்துக்கொள்ளவேண்டியது. எவ்வளவு அகத்தியமென்பதை நாம்சொல்லவும் வேண்டுமா? வெகுகாலத்துக்குப் பிற்பாடு நடக்கவேண்டிய காரியங்களையெல்லாம் முன்னமே சீரிட்டுக்கொள்ளுகிறார்கள் நிலம் மனைமுதலியவைகளை வாங்குகிறவர்கள். பிற்பாடு எந்தக்காலத்திலும் ஆக்ஷேபம் உண்டாகாதபடி தகுந்த சாஸனங்களையும் பட்டையங்களையும் பெற்றுக்கொள்ளுகிறார்கள் அவர்கள் மறுநாள் இறக்கிறவர்களாயிருந்தாலும் சந்திரசூரியர்களும் கல்லுங் காவேரியும் புல்லும்பூமியும் உள்ளவரையில் சொத்துகளை அநுபவிக்கிறதென்று சங்கேதஞ் செய்துகொள்ளுகிறார்கள் அநேக வருஷங்களுக்குப்பிற்பாடு உபயோகமாகவேண்டிய பொருள்களை முன்னமே சேகரஞ் செய்துவைத்துக்கொள்ளுகிறார்கள்.

கலியாணத்துக்கு வெகுகாலத்துக்குமுன்னமே இன்னான்மாப்பிள்ளை இன்னான்பெண்ணென்றுநிர்ச்சியதார்த்தஞ்செய்துக்கொள்

ளுகிறார்கள் வியாதியில்லாமல் திடகாத்திரர்களாயிருக்கிறவர்களும் தங்களுக்குப் பிற்காலம் தங்களுடைய தனருணங்களுக்கு இன்னார் பாத்தியஸ்தர்கள் என்பதையும், தங்களுடைய கர்மங்களும் தர்மங்களும் நடக்கவேண்டிய கிரமத்தையும லிகிதரூபமாகப் பதிந்து வைத்துக்கொள்ளுகிறார்கள் இவ்வண்ணமாகப் பின்பு நடக்கவேண்டிய விஷயங்களெல்லாம் முன்னமே ஆலோசித்து நிச்சயஞ்செய்துக்கொள்ளுகிறவர்கள் தங்களுடைய பத்தினிகளைமட்டும் நினைக்கிறதில்லை பத்தினி ஜீவவதியாயிருக்கும்பொழுது புருஷன் யாதொரு வியவருதையும் செய்யாமல் இரந்துபோனால் அவள் என்ன செய்வாள்? எங்கேபோவாள்? எப்படி ஜீவிப்பாள்? அனேக இடங்களில் இறந்துபோன தனவான்களுடைய ஆஸ்திகளை அவர்களுடைய தாயாதி முதலானவர்கள் கட்டிக்கொண்டு அந்தத்தனவான்களுடைய பத்தினிகளை அந்தரத்தில் விடுவதை நாம் பார்க்கவில்லையா? கதாசித்து புத்திரர்களும் சகோதரர்களும் தாயாதிகளும் இல்லாமல் இறந்துபோகிறவனுடைய சொத்துக்குமட்டும் பத்தினி பாத்தியஸ்தியாகிறாள் அப்படியில்லாமல் அபாத்தியஸ்தியாய்ப் போகிறவளுடைய கதி அதோகதிதானே பெற்ற தாய்க்குச் சோறு போடாபிள்ளைகளும் அனேகர் இருக்கிறார்களே பிள்ளைகளுடைய நிலவரமே இப்படியிருக்கும் பொழுது தாயாதிகளுடைய தன்மையைச் சொல்லவும் வேண்டுமா?

பாகம்பிரியாமல் ஏகபோகக்ஷேமமாயிருக்கிற சகோதரர்களில் ஒருவன் இறந்து போகிறபக்ஷத்தில் அவனுடைய பாரியையானவள் கொழுந்தன்மார்களிடத்திலும் அவர்களுடைய பத்தினிகளிடத்திலும் அன்ன வஸ்திரத்துக்காகக் கையேந்திக்கொண்டு அவர்கள் செய்கிற சகலகொடுமைகளையும் ஸஹிக்கும்படி சம்பவிக்கின்றது அவளந்தக் கொடுமைகளைச் சகிக்கமாட்டாமல் கொழுந்தன் மேல்ஜீவனும்சவியாஜ்ஜியம் தொடர்ந்தால் அவள் வியபிசாரியென்றும் தான் விபக்தனென்றும் சொத்துகள் தன்ஸ்வார்ஜிதமென்றும் கொழுந்தன் ஸர்வாபத்தமான தூர்க்கக்ஷிகளைப்பேசி அவளுடைய ஜீவனும்சத்தைக் கெடுக்க முயற்சிசெய்கிறான் அவள் பகீரதப் பிரயத்தினஞ்செய்து ஜயபத்திரிகை பெற்றுக்கொண்டாலும் அது நிறைவேறாதபடி கொழுந்தன்செய்கிற தந்திரங்கள் அநந்தமே நாம் நியாயாதிபதியாகையால் நாம் சொல்வது உண்மை யென்பதற்கு

நாமேசாக்ஷியாயிருக்கிறோம் புருஷனையிழந்து நிர்க்கதியாய்ப்போன ஸ்திரீ சகோதரர்கள் வீட்டுக்குப்போனால் அங்கே அண்ணியார் செய்கிறகொடுமை எண்ணிமுடியாது நாத்தனாரைக்கண்டால் நாய்போல்விழுகிற அண்ணியார்கள் அநேகரிருக்கிறார்கள். ‘பிக்ஷைபோட்டதுபோதும் நாயைப்பிடித்துக்கட்டு, என்பதுபோல் அண்ணியாரிடத்தில் அரை நாழிகையிருப்பதைப்பார்க்கிலும் மண்ணையள்ளி வாயிலே போட்டுக்கொள்ளலாமே இப்படியாக அண்டயிடமில்லாமல் அகதியாய்ப்போகிற ஸ்திரீ என்னசெய்வாள்? அவள் வேலைசெய்யத் தெரிந்தவளாயிருந்தால் கைப்பாடுபட்டாயினும் பிழைப்பாள் மரியாதையுள்ள குடும்பத்தைச்சேர்ந்த ஸ்திரீகள் என்னசெய்வார்கள்? பல்லக்கேறித்திரிந்தவர்கள் பாடுபட அறிவார்களா? பூமுடித்ததலை புல்லெடுக்க அறியுமா? தங்கவளையலிட்டகை சாணந்தட்ட அறியுமா? தண்டையிட்டகால் சகதிமிதிக்க அறியுமா? உசிதமான வலக்கை உலக்கைபிடிக்க அறியுமா? இப்படிப்பட்ட ஸ்திரீகளுக்குச் சிறுபிள்ளைகளும் இருந்துவிட்டால் அவர்களுடைய கஷ்டத்துக்குமட்டும் பிரமாணமுண்டா? விதந்துகளில் அநேகர் கெட்டுப்போவதற்குத் தரித்திரமே முக்கியகாரணமாயிருப்பதால் புருஷர்கள் எப்படியாவது பிரயாசப்பட்டு தங்களுடைய பத்தினிகளுக்குப் பிரத்தியேகமாகப் பொருள்வைக்கவேண்டும் அப்படிச்செய்வது நாம் முன்னமே விவரித்தபடி சாஸ்திர சம்மதமாயிருக்கின்றது புருஷன் முன்னேயிறந்தால் பெண்சாதிக்கும் பெண்சாதிமுன்னே யிறந்தால் புருஷனுக்கும் அந்தச்சௌதாயகம் உபயோகமாகுமே.

இந்தத்தேசத்தில் விதந்துக்களுடைய ஸ்திதி அதி நிர்ப்பாக்கியமாயும் இரக்கத்துக்குரியதாயும் இருக்கின்றது விதவையென்கிற பதமேதூஷியமாயிருக்கின்றது ஒருவனைப்பார்த்து மற்றொருவன் ‘விதவா, என்றுச்சொன்னால் அவனுக்கு ரௌத்திராகாரமாய்க்கோபம் ஜநிக்கின்றது. ஒருவிதவையைப் பார்த்து ‘விதவை, என்றுசொன்னால் அவளுக்கும் மனஸ்தாபமுண்டாகின்றது, அவள் புருஷனோடுகூடச் சகலசுகங்களையும் இழந்துபோகிறாள். சிவப்புச்சேலை வெள்ளைச்சேலையாகவும் இருகாலபோஜனம் ஒருகாலபோஜனமாயும் மயிர்த்தலைமொட்டைத்தலையாயும் சுகமெல்லாந் துக்கமாயும்மாறுகின்றன அவளுக்குநகையுமில்லை தொகையுமில்லை வகை

யுமில்லை அவளுக்கு அலங்காரமில்லை ஆதிக்கமில்லை யாதொன்றுமில்லை 'கூலியில்லாவிட்டாலும் வேலைக்குக் குறைவில்லை' என்பதுபோல் வீட்டிலுள்ள கஷ்டமான வேலைகளுக்கெல்லாம் அவளே உத்திரவாதியாகிறாள் கலியாணக்காரர்கள் அவளைக்கண்ணால் பார்க்கக்கூடாதாம் அவள் சந்தோஷங்களுக்கெல்லாம் தள்ளுபடியாகிறாள் துக்கங்களுக்கெல்லாம் சொந்தக்காரியாகிறாள் துர்க்குறிக்கெல்லாம் முற்குறியென்று அவளை வீணே தூஷிப்பார்கள். ஒருவன் வெளியே போகும்பொழுது விதவை எதிரேவந்தால் துர்நிமித்தமென்று நிர்நிமித்தமாக அவளைக்கோபிக்கிறான் 'கைப்பெண்டாட்டியே கழிபட்டஜன்மம்' என்று அவளையாவரும் அநியாயமாக இகழுகிறார்கள் 'ஊருக்கிளைத்தவன் பிள்ளையார்கோயிலாண்டி' என்பதுபோலச் சகலப்பிரதிகூலங்களுக்கும் அவளே காரணமென்றுச்சொல்லுகிறார்கள் குதிரைதூக்குப்போட்டதுமல்லாமல் மேலேயேயும் மிதித்ததுபோல் கணவனையிழந்து கதியற்று நிற்கிற விதந்துவைச்சகலரும் கூடித்துன்பப்படுத்துவது தர்மமல்லவே பர்த்தா இருக்கமாட்டாமல் பரலோகம்போனால் அதற்குப் பத்தினி என்னசெய்வாள் ? ஆகையால் விதந்துக்களைக் கண்ணியமாகநடத்துகிறவர்களே புண்ணியபுருஷர்கள்.

ஸ்திரீகள்பட்சத்தில் எழுதத்தொடங்கிய நாமின்னும் இரண்டொரு விஷயங்களைப்பற்றி எழுதாமல் விட்டுவிடுவோமானால் இந்தவசனகாவியம் குறையுள்ளதாயிருக்குமாகையால் அந்த விஷயங்களையும் எடுத்துரைக்க அபேட்சிக்கின்றோம்.

பிராமணர்களுக்குள் பெண்வீட்டுக்காரர்கள் புருஷன் வீட்டுக்காரர்களிடத்தில் பெண்ணுக்கிரயம் வாங்கிக்கொண்டு பெண்ணை கொடுப்பது பெரும்பாலும் வழக்கமாயிருக்கின்றது இது துர்வழக்காயும் அசாஸ்திரீயமாயுமிருக்கின்றது எட்டுவகைக் கலியாணங்களில் பிராம்மியம் தெய்வம் ஆரிஷம் பிராஜாபாத்தியம் என்கிற நான்குவகைக் கலியாணங்கள் மட்டும் சாஸ்திரப்படி பிராமணர்களுக்குரியவைகளாயும் மற்ற நான்குவகைக் கலியாணங்களும் மற்றவர்ணத்தார்களுக்கு உரியவைகளாயுமிருக்கின்றன புருஷனிடத்தில் யாதொருபொருளும் வாங்காமல் அக்கினிசாக்ஷியாக அவனுக்குக் கன்னிகையைக்கொடுப்பதே பிராமணர்களுக்குரிய ஷை நான்குவகை விவாகங்களின் தாற்பரியமென்று தர்மசாஸ்திரம் விதி

க்கின்றது பொருள்வாங்கிக்கொண்டு பெண்ணைக்கொடுப்பது ஆசுரவிவாகமாயும் அதுசாஸ்திரப்படி வைசியர்களுக்கும் சூத்திரர்களுக்கும் மட்டும உரியதாயும் இருக்கின்றது வைசியர்களும் சூத்திரர்களும் ஆசுரவிவாகம் அக்கிறமமென்றுதள்ளிப் பிராம்மிய விவாகம செய்கிறார்கள் அபபடியிருக்கப் பிராமணர்கள் தங்களுக்குச் சம்பந்தமிலலாத ஆசுரவிவாகததைக் கைப்பற்றிக்கொண்டு புருஷன் இனததாரிடத்தில் கன்னியாசுலக்கம்வாங்குவது சுத்த அக்கிரமமாயும் சாஸ்திர விரோதமாயுமிருக்கின்றது பொருள் வாங்கிக்கொண்டு பெண்கொடுக்கிறவர்களும் கலியாணகாலங்களில் கன்னிகாதனத்துக்கு உரியமந்திரஙகளையும அநுஷ்டானங்களையும் அநுசரிக்கிறார்கள் இது பிரத்தியக்ஷமான மோசமல்லவா மாம்ஸவிக்கிரயஞ்செய்கிற தூவழக்கத்தினால் பல தீஙகுகள்விளைகின்றன பெண்வீட்டுக்காரர்கள தங்களுக்கு அதிகபணம்வருகிற வழியைப்பார்க்கிறார்களே தவிரப் பெண்ணினுடைய சேஷ்மலாபத்தை எவ்வளவும யோசிக்கிறதில்லை பரிதானம்வாங்குகிற நியாயாதிபதிகள் யுக்தாயுக்தங்களையும் கிரமாக்கிரமங்களையும் பாராமல் உபயகக்ஷிககாரர்களில் எவன் அதிகப்பொருள்கொடுக்கிறானோ அவன் பக்ஷமாய்த்தீர்மானம்செய்வது போலவும் ஒரு சொத்தை ஏலங்கூறுகிறவன் யார் அதிகக்கிரயம் கொடுக்கிறார்களோ அவர்களுக்குக்கிரயம் செய்வதுபோலவும் மாம்சவிக்கிரயம் செய்கிறவர்கள் கொள்ளுகிறவனுடைய யோக்கியதையையாவது வயதையாவது அந்தஸ்தையாவது யோசியாமல் எவன் அதிகத்தொகை கொடுக்கிறானோ அவனுக்கே பெண்ணைக் கொடுக்கிறார்கள் ஒருவன் யௌவன புருஷனும் குலத்திலும் குணங்களிலும் சிறந்தவனுமிருந்தாலும் அவனைப் பார்க்கிலும ஒரு விர்ததாப்பியன் அதிகப்பணம் கொடுக்கிறபட்சத்தில் அவன் அயோககியனும் ரோகஸ்தனும் இருந்தாலும் அவனுக்கே பெண்ணைக்கொடுககிறார்கள் ௬-௫-௬ வயதுள்ள பெண்ணை அவளுக்குத தகப்பனும் பாட்டனும் சிலவிசை முப்பாட்டனும் இருககத்தக்க பிராயமுள்ள ஒரு கிழவனுக்குக் கொடுக்கிறார்கள் அதிகவாதுள்ளவர்களும் அயோககியர்களுமே அதிகப்பணம் கொடுக்கச் சமமதிககிறபடியால் அவர்களுக்கே சிறுபிராயமுள்ள பெண்கள்கிடைக்கிறார்கள் அக்காரணத்தைப்பற்றியே அமயாள் தெருளுவதற்குமுன ஐயர் உருளுவார், என்கிற உலகவாக்கிய முண்டாயிருக்கின்றது பிராமணர்களில் பெண்கள் ருதுவாகி

றதற்குமுன் அவர்களுக்கு விவாகம்செய்யவேண்டுமென்றும் விவாகம் செய்வதற்குமுன் ருதுவாகிற ஸ்திரீஜாதிப் பிரஷ்டையென்றும் தர்மசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கச் சிலர் அந்தச்சாஸ்திரத்தைக்கட்டித் தூரத்தில் எறிந்துவிட்டு அதிகவயதுள்ள பெண்களுக்கு அதிகப்பணம் வாங்குதற்காக ௧௪-௧௫-வயது வரையில் கலியாணமில்லாமல் வைத்துக்கொண்டு அவர்களுடைய வயதையும் குறைத்துச்சொல்லிக்கொண்டு பெண்களை ஏலங்கூறிக்கொண்டிருப்பது மன்றி பெண்கள் ருதுவாகாதபடி ஆகாராதிகளைக்குறைத்து அவர்களைச் சகல அசௌக்கியங்களுக்கும் உட்படுத்துகிறார்கள் அவர்கள் தாம் பணத்துக்காகக்காத்திருக்கிறார்கள் ருதுகாலமும் அவர்களுக்காகக் காத்திருக்குமா? காத்திராததினால் அநேகசமயங்களில் பெண்கள் கலியாணத்திற்குமுன் ருதுவாய்விடுகிறார்கள் அந்த வெட்கக்கேடுவெளியாகாதபடி பகிஷ்டையான பெண்ணை அப்புறப்படுத்தாமல் வீட்டுடனே வைத்துக்கொண்டு தங்களுடையவர்ணாசாரத்தைக் கெடுக்கிறார்கள் அநேகர்சீக்கிரத்தில் பெண்ணைக் கொடுத்துப் பணம்வாங்குவதற்காக அதிபால்லியத்தில் பெண்களுக்குக் கலியாணம்செய்கிறார்கள் புருஷன் எப்படிப் பட்டவனென்று பாராமலும் அவனிடத்தில பெண்கள் க்ஷேமமாயிருக்குமோ அல்லது வருத்தப்படுமோ என்பதை நினையாமலும் தாய்தகப்பன்மார்கள் தங்களுடையவருமானத்தை மட்டும் பெரிதாயெண்ணிப் பெண்களைப்பலியிடுவது எவ்வளவுபெரிய அநியாயம்.

ஒருவன் ஏழையாயிருந்தாலும் கன்னியாசுல்கம் கலியாணச்செலவு முதலியவைகளுக்காக சுமார் ௱-௩௱-வரையில் அவனுக்கு செலவாகிறபடியால் அதினால் அவனுடைய குடிமுழுகிப்போகின்றது அப்படிப்பட்டவனுக்கு வாழ்க்கைபடுகிற பெண்ணுக்கு என்ன சுகம் உண்டு? ‘அஷ்டதரித்திரம் ஆத்தாள்வீடு அதிலும தரித்திரம் மாமியார்வீடு,’ என்பதுபோல் புருஷன் சௌக்கியமாயிருந்த காலத்தில் அவனிடத்திலிராமல் எளியதாய் தகப்பன்மார்களோடு கூடக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பெண் அவர்களுக்குத் தன் மூலமாக சௌக்கியம் உண்டாகுங்காலத்தில் அவர்களைவிட்டு நீங்கி இனிமேல் கஷ்டப்படப்போகிற புருஷனுக்கு அவள் வாழ்க்கைப்படுவது எவ்வளவு நிர்ப்பாக்கியம்? புருஷன் பொன்னைக்கொடுத்துப் பெண்டாட்டிக்கொண்டு திண்டாட்டப்பட்டதை நினைத்து நி

னைத்து அவளை எப்போதும் சீறுமாறுக நடப்பிக்கிறான் அவளுடை
யமாமனார் மாமியார் நாத்தனார் முதலானவர்களும் சமயம் வரும்
போதெல்லாம் 'அடியே எங்களுடைய குடியைக்கெடுத்தவளே,
என்றுசொல்லிச் சொல்லி அவளைஓயாமல் வசுகிறார்கள் இப்படி
யாக ஸ்திரீகளுக்குண்டாகிற பலதுன்பங்களுக்கும் மாம்ஸவிக்கிரய
மே காரணமாயிருக்கின்றது

பொருள்கொடுத்து பெண்கொள்வதினால் புருஷனுக்குண்டா
கிறகஷ்டங்களும் அமிதமே உலகத்தில் பணங்கொடுக்க நிர்வாக
மில்லாத ஏழைகளே அதிகமாயிருப்பதால பிள்ளையாருக்குப்பெண்
அகப்படாமலும் அநேகருக்குப்பெண்கிடைக்காமல் ஆயுசுகாலம்
முழுமையும் பிரமசாரிகளாகவே யிருந்துவிடுகிறார்கள் பிற்பாடு
ஒருக்கால அவர்களுக்கு பொருளகபபடாலும விர்த்தாப்பியம்
மேலிட்டு ஸம்ஸாரகதுக்குத் தகாதவர்களாய்ப்போகிறாகள் அ
நேகர் வீட்டைவிற்று - நிலத்தைவிற்று - கைப்பொருளையெல்லாம்
கலியாணத்துக்குக்கொடுத்துவிட்டு சுத்த ஏழைகளாய் போகிறார்
கள் பலபிள்ளைகளை உடைய ஒருவன் தனிகனாயிருநதாலும் ஒவ்
வொரு பிள்ளைக்கும் தனித்தனியே பணமகொடுத்து கலியாணம்
செய்வதில் அவனுடைய ஆஸ்தி முழுவதும் தோறறுவிடுகிறான் ஒரு
வனுககு ௪-பெண்கள்பிறந்தால அவன சீமானாகிறான் ஒருவனுக்கு
௪-ஆண்பிள்ளைகள் பிறந்தால் அவன் தரித்திரனாய்ப்போகிறான் தன
வானகளுக்கு கன்னிகாதானமாயாவது அல்லது சொற்பப்பொருளை
வாஙகிக்கொண்டாவது சிலர்பெண் கொடுககிறார்கள் ஏழைகளிட
த்தில்மட்டும் அதிகப்பணம்கேடகிறார்கள் வீடுமாடுநிலம் முதலிய
சொத்துக்களுக்கெல்லாம் கிரயம் நிஷ்கரிஷிக்கப்பட்டிருக்கின்றது
கன்னியா சுல்ககத்துக்கோகணக்கில்லை ஒவ்வொருவனும் தனனு
டைய இஷ்டப்படி வாய்கொண்டமட்டும் பணம்கேட்கிறான் நாளு
க்கு நாள் பெண்களுக்குக்கிரயம அதிகரித்து வருவதாகச் சகலரும்
முறையிடுகிறாகள் பிரதமதாரம் கொள்ளுகிறவனிடத்தில வாங்கு
கிற பணத்தைப்பார்க்கிலும் இரண்டாந்தரம் கொளளுகிறவனிட
த்தில் அதிகப்பணம் வாங்குகிறார்கள் மூன்றாந்தாரக்காரனிடத்தில்
அதிலும அதிகப்பணம்வாஙகுகிறார்கள் இபபடியே தாராதிக்கரிக்கப்
பணமும் அதிகரிக்கினறது,

கடைவியாபாரிகள் எவ்வளவு சரக்குவேண்டுமானாலும் கடனு
கக்கொடுக்கிறார்கள் பெண்வியாபாரிகளோ என்றால் மாம்ஸவிககிர

யப்பணத்தை பூரணமாகக்கையில் வாங்கிக்கொள்ளாமல் பெண்
கொடுக்கிறதில்லை கடன்பத்திரம் பந்தகம் பிணை முதலியவைகளை
அவர்கள் அங்கீகரிக்கிறதேயில்லை நாளைக்குப்பெண்போய் வாழ
வேண்டிய இடம் என்பதையோசியாமல் அஸ்தரொக்கமாகப் பண
த்தை வாங்கிக்கொண்டு தான் பிற்பாடு பெண்ணைக்கொடுக்கிறார்
கள் இவ்வளவு நிர்த்தாக்ஷிண்ணியமாகப் பெண்ணுக்கிரயம்வாங்கு
வதற்கு நியாயமின்னதென்றுதெரியவில்லை கலியாணம் ஆணுக்கு
எப்படியவசியமோ அப்படியே பெண்ணுக்கும் அவசியந்தானே,
பெண்ணுக்குக்கிரயம்வாங்குவது நியாயமாயிருந்தால் ஆணுக்காக
வும் பெண்வீட்டுக்காரனிடத்தில் கிரயம்வாங்குவது நியாயந்தானே
கலியாணமானது புருஷனைப்பார்க்கிலும் பெண்ணுக்கு அகத்திய
மாயும் அநிவாயமாயுமிருக்கின்றது ஏனென்றால் புருஷன் கலியாண
மில்லாமல் எப்போதும் பிரமசாரியாயிருந்துவிடலாம் பிராமணஸ்
திரீகள் கலியாணமில்லாமலிருப்பது முறையல்லவே ஆகையால் பு
ருஷர்களெல்லாரும் கட்டுப்பாடுபண்ணிக்கொண்டு பெண்களுக்கு
கிரயமே கொடுக்கிறதில்லையென்று நிராகரணஞ்செய்தால் பெண்
களுடைய தாய்தகப்பன்மார்கள் பெண்களைவைத்துக்கொண்டு எ
ன்னசெய்வார்கள்? அவர்களே புருஷர்களுடைய கால்களில்விழுந்
து பெண்களைக் கன்னிகாதானமாகக்கொடுக்க துரிதப்படுவார்க
ளல்லவா? பிராமணர்களைத்தவிர வேறெந்தஜாதியிலும் எந்தத்தே
சத்திலும் மாம்ஸவிக்கிரயம்செய்கிறவழக்கமேயில்லை முன்னே நாம்
தெரிவித்தபடி ஆசுரவிவாகத்துக்கு உரியவர்களான வைசியர்களும்
சூத்திரர்களுமே அந்த விவாகத்தை நிஷேதித்துதள்ளியிருக்கத்
தாங்கள் குலசிரேஷ்டர்களென்று சொல்லிக்கொள்ளுகிற பிராம
ணர்கள் மற்றஜாதியாரால் நிஷித்தம்செய்யப்பட்ட அந்தயதிகார
த்தை அநுஷ்டிக்கலாமா? புருஷப்பிரஜைப்போல் பெண்ணுக்குத்
தகப்பனுடைய ஆஸ்தியில் பாகம் இல்லாமையால் அவளுக்கு ஸ்
திரீதனம் கொடுப்பது தேசாசாரமாயும் சாஸ்திரசம்மதமாயுமிரு
க்க அப்படிச்செய்யாமல் பெண்ணைவிற்று தாய் தகப்பன்மார்கள்
பணம்சம்பாதிப்பது நியாயமா? உடுப்பு வேண்டாம் கையைவிட்டா
ற்போதும், என்பதுபோல் அவர்கள் ஸ்திரீதனம் கொடாவிட்டா
லும் பெண்ணை விக்கிரயப்படுத்தாமல் சும்மாகொடுத்துவிட்டாற்
போதுமே.

பெண்களுக்கு அதிபால்லியத்தில் கலியாணம்செய்கிற ஆசா

ரம் துராசாரமாயிருக்கின்றது ஸ்திரீகளுக்கு விவாகம்செய்யத்தக்க பருவம் '௮-வது வயது, என்று தருமசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்க அதற்கு விரோதமாக-௧-௨-பிராயமுள்ள பெண்களுக்கும விவாகம்செய்கிறார்கள் அப்படிச்செய்வதினால் தாய்தந்தைகளுக்கு மாம்ஸவிக்கிரயப்பணம் சீக்கிரத்தில்கிடைக்கிற பிரயோஜனத்தை தவிரப் பெண்ணுக்காவது புருஷனுக்காவது என்னசாதகமிருக்கின்றது அதனாலுண்டாகிற பாதகமட்டும் பெரிதாயிருக்கின்றது பாலப்பருவமே அம்மைமுதலியவியாதிகளுக்கு உரியகாலமாகையால் அதிபால்லியத்தில் கலியாணமாகிறபெண்கள் அந்த வியாதிகளுக்கெல்லாம் தப்பியிருப்பார்களென்பது நிச்சயமல்லவே ௨-வயதுள்ளப்பெண்ணை ஒருவன் கலியாணம்செய்தால் பெண்புஷ்பவதியாகிப் புருஷன்வீட்டுக்குப்போக குறைந்தபக்ஷம் ௧௨-வருஷம்கிரமிக்கவேண்டுமே அவ்வளவுகாலத்திற்குள்ளாகப் ஸ்திரீக்கும் புருஷனுக்கும் எவ்வளவோ ஆபத்துகளும் சம்பத்துகளும் சம்பவிக்கும்படியாயிருக்குமே அந்த ஆபத்துகளுக்கெல்லாந் தப்பிப்புருஷன் வீட்டுக்குப்பெண்சாதிபோனாலும் புருஷன் முதிர்ந்தவயதுள்ளவனாயிருக்கிறபட்சத்தில் ஆயிசுவிஷயத்திலும் மற்றவிஷயங்களிலும் அவர்கள் ஒருவர்க்கொருவர் சமானமாயிராமல் நபும்ஸகன்கையில் அரம்பையகப்பட்டகதையாய் முடிகின்றதே இப்படிப்பட்ட அநேகமுகாந்தரங்களால் பிராமணர்களுக்குள் விதந்துகளும் விதுரர்களும் அதிகமாயிருக்கிறார்கள் சில சமயங்களில் சற்றேறக்குறையச் சமானவயதுள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் கலியாணம் செய்கிற பட்சத்தில் ஸ்திரீகள் சீக்கிரத்தில் வளர்ந்துவிடுவார்கள் புருஷர்களுக்கு பக்குவகாலம் வரத்தாமசப்படுகிறபடியால் அது வரையில் ருதுவான பெண்கள் காத்திருக்கும்படி ஸம்பவிக்கின்றது.

இத்தன்மையான பலவிபரீதங்களுக்கு அதிபால்லியவிவாகமே காரணமாயிருக்கின்றது பால்குடிக்கிற பிள்ளைகளைப்பிடித்து மணவறையில் வைத்துப்பல அலங்காரங்கள் செய்யும்பொழுது அவர்கள் சகிக்கமாட்டாமல் போடுகிறகூக்குரல் ஊரெல்லாம் எதிரொலியாகின்றது கலியாண ஆரம்பமுதல் முடிவுவரையில் அந்தக்குழந்தைகள் அழுதவண்ணமாயிருக்கின்றன அழுகையைநிறுத்துவதற்காக அந்தப்பெண் குழந்தைகளைத் தாய்மார்கள் மடியில்வைத்துப் பால் கொடுத்துக்கொண்டு மணவறையில் உட்காருகிறார்கள் மாப்பிள்ளையும் சிறுபிள்ளையானதால் மங்கிலியத்தை மணவறையிலிருக்

கிற குழந்தைக்குக்கட்டுகிறதென்றும் அதன் தாய்க்குக்கட்டுகிறதென்றும் விவரந்தெரியாமல் சிலசமயங்களில் தாய் கழுத்திலே கட்டிவிடுகின்றது மாப்பிள்ளை மாமியாருக்குத்தாலிகட்டின அதிசயத்தைப்பார்த்து யாவரும் சிரித்தாலும் அந்தப் பெண்குழந்தைமட்டும் சிரியாமல் அழுதுகொண்டேயிருக்கின்றது பிள்ளையார்பிடிக்கக் குறங்காய் முடிந்தகதைபோல் கலியாணசம்பிரமத்துக் ஆரம்பித்து அழுகைக்குரலாய் முடிவது வேடிக்கையல்லா? ஆகையால் அதிபால்ய விவாஹம் அநுசிதமாயிருக்கின்றது.

இங்கிலீஷ் முதலிய பாஷாந்தரகிரந்தங்கள் புருஷர்களுக்கு ஸ்திரீகள் நடக்கவேண்டிய கிரமங்களையும் அப்படியே ஸ்திரீகளுக்குப் புருஷர்கள் நடக்கவேண்டிய கிரமங்களையும் நிஷ்பக்ஷபாதமாக எடுத்து காட்டுகின்றன திராவிடபாஷாரூபமான கிரந்தங்களோ புருஷர்களால் செய்யப்பட்டனவாதலால் அக்கிரந்தகர்த்தர்கள் புருஷர்கள் விஷயத்தில் ஸ்திரீகள் அநுசரிக்க வேண்டியவிதிகளை மட்டும் நிர்த்தாக்ஷிண்ணியமாசச் சொல்லி ஸ்திரீகள் விஷயத்தில் புருஷர்கள் அவலம்பிக்கவேண்டிய நெறிகளைச்சொல்லாமல் விட்டுவிட்டார்கள் அந்தக்குறைவை நிவர்த்திக்கும்பொருட்டு வசனரூபமான இந்தக்கிரந்தத்தை நாம் செய்தலே ஒழிய ஸ்திரீகளிடத்தில் பரிதானம்வாங்கிக்கொண்டு அவர்களுக்கு நாம் வக்கீலாகத் தீக்ஷித்துக்கொண்டு புறப்படவில்லை.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய புத்திரிகள் சகோதரிகள் முதலானவர்களை அவரவர்களுடைய புருஷர்கள் பிரியமாக நடத்த வேண்டுமென்று விரும்புவார்களே தவிர துன்பப்பட நடத்த ஒருவரும் சம்மதிக்கமாட்டார்கள் அந்த விஷயத்தையே நாம் ஸவிஸ்தாரமாக எழுதியிருப்பதினால் அதற்காக நம்மைக்கோபிக்கிறவர்களுளராயின், அவர்கள் தங்களுடைய தாய்மார்கள் சகோதரிகள், புத்திரிகள் பத்திரிகள் முதலானவர்களைக் கோபிக்கிறவர்களேயன்றி நம்மைக் கோபிக்கிறவர்களல்லரெனத் துணிகிறோம் ஆகையால் இந்த விஷயங்களையெல்லாம் புத்திமான்கள் தீர்க்காலோசனைசெய்து இதிலுள்ளகுற்றங்களை நீக்கிக் குணத்தைமாத்திரம் கிரகித்துக் கொள்வார்களென்பதற்கு சந்தேகமில்லையெனவும் நம்புகிறோம்.

பெண்மதிமாலையும் பெண்கல்வியும், பெண்மானமும்,

முற்றும்.